# அழகப்பா பல்கலைக்கழகம்


தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் A+(CGPA: 3.64) தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப் பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது

காரைக்குடி - 630003

## தொலைநிலைக்கல்வி இயக்ககம்

எம்.ஏ. [வரலாறு]

**321 12**



# கி.பி 1336 ஆண்டு வரையிலான தமிழக வரலாறும் பண்பாடும்

முதற் பருவம்

# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் A+(CGPA: 3.64) தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப்
பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது)

காரைக்குடி - 630003

## தொலைநிலைக்கல்வி இயக்ககம்


எம்.ஏ. (வரலாறு)

முதற் பருவம்

321 12

# கி.பி 1336 ஆண்டு வரையிலான தமிழக வரலாறும் பண்பாடும்

fm.indd 1 3/1/2019 8:32:00 AM

**Authors**

**Narasimhan C.Sekar,** *Former Visiting Faculty for Bankers' Quotient at Coimbatore and Columnist & Article Writer for Leading Newspapers*

**Units:** (1-9, 11-14)

**Vikas Publishing House: Unit:** (10)

"The copyright shall be vested with Alagappa University"

All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.

Information contained in this book has been published by VIKAS® Publishing House Pvt. Ltd. and has been obtained by its Authors from sources believed to be reliable and are correct to the best of their knowledge. However, the Alagappa University, Publisher and its Authors shall in no event be liable for any errors, omissions or damages arising out of use of this information and specifically disclaim any implied warranties or merchantability or fitness for any particular use.

VIKAS®

Vikas® is the registered trademark of Vikas® Publishing House Pvt. Ltd.

VIKAS® PUBLISHING HOUSE PVT. LTD.
E-28, Sector-8, Noida - 201301 (UP)
Phone: 0120-4078900 • Fax: 0120-4078999
Regd. Office: 7361, Ravindra Mansion, Ram Nagar, New Delhi 110 055
• Website: www.vikaspublishing.com • Email: helpline@vikaspublishing.com

**Work Order No. AU/DDE/DE1-238/Preparation and Printing of Course Materials/2018 Dated 30.08.2018 Copies - 500**

# ஏம்.ஏ (வரலாறு)
# முதல் அரையாண்டு
# 321 12

## பாடத்திட்டம்

| அலகு எண் | பாடத்திட்டம் | அலகில் விபரம் |
|---|---|---|
| **தொகுதி 1 வரலாற்றுக்கு முந்தைய காலம்** | | |
| அலகு 1 | பண்டைய தமிழகத்தின் புவியியல் கூறுகள்-சான்றுகள்-தொல்பொருள் சான்றுகள்-இலக்கிய சான்றுகள்-வெளிநாட்டவர்பயணக் குறிப்புக்கள் | தமிழர் வரலாற்றிற்கான தொல்பொருள் மற்றும் இலக்கியச் சான்றுகள் |
| அலகு 2 | பழைய கற்காலம்-புதிய கற்காலம்-பெருங்கற்காலம் | தமிழர் கலாச்சாரம் |
| அலகு 3 | சங்க காலம்- பண்டைய இலக்கியங்கள்-சங்ககாலத் தமிழ் அரசுகள்-சமூக பொருளாதார நிலை | சங்ககாலம் மற்றும் தொன்மை வாய்ந்த இலக்கியங்கள் |
| அலகு 4 | களப்பிரர் காலம்-சான்றுகள் செய்திகள்-பௌத்தம் சமணத்தின் வளர்ச்சி-களப்பிரரின் பங்களிப்பு | களப்பிரர்கள் |
| **தொகுதி 2 பேரரசுகளின் தொடக்க காலம்** | | |
| அலகு 5 | பல்லவர்களின் தோற்றம்-சான்றுகள் மற்றும் செய்திகள்-முற்காலப் பல்லவர்கள்- சமூக பொருளாதார நிலை-கலை மற்றும் கட்டிடக்கலை நுட்பம் | பல்லவர்கள் |
| அலகு 6 | பல்லவர்களின் எழுச்சி- சமூக பொருளாதார நிலை-கலை மற்றும் கட்டிடக்கலை நுட்பம் | பல்லவர் வம்சாவளியின் எழுச்சியும் வளர்ச்சியும் |
| அலகு 7 | பக்தி இயக்கம்-தொடக்கம்-காரணிகள்-பக்தி முனிவர்கள்- சைவம்-63 நாயன்மார்கள்-அப்பர்-சம்பந்தர் சுந்தரர் மாணிக்கவாசகர்-தேவாரம்-திருவாசகம் | பக்தி இயக்கம் |
| அலகு 8 | வைணவம்-பன்னிரண்டு ஆழ்வார்கள்-நாலாயிர திவ்வியப்பிரபந்தம்-திருப்பாவை-சைவசித்தாந்த ஆகமங்கள் | வைணவம் |

| அலகு எண் | பாடத்திட்டம் | அலகில் விபரம் |
|---|---|---|
| **தொகுதி 3 பிற்காலப் பேரரசுகள் வெளி நாட்டுப் பயணிகளின் வருகை** | | |
| அலகு 9 | மதுரைப் பாண்டியர்கள்-முற்காலப் பாண்டியர்கள் சமூக பொருளாதார நிலை-பங்களிப்பு | மதுரைப் பாண்டியர்கள் |
| அலகு 10 | சோழப் பேரரசுகளின் தோற்றம்-முதலாம் பராந்தகன்-முதலாம் இராஜராஜன்-முதலாம் இராஜேந்திரன்-முதலாம் குலோத்துங்கன்- சமூக பொருளாதார நிலை- சமய நிலை- கலை மற்றும் கட்டிடக்கலை | சோழ சாம்ராஜ்யம் |
| அலகு 11 | பிற்காலப் பாண்டியர்களின் தோற்றம்-முதலாம் ஜாதவர்ம சுந்தரபாண்டியன்-மாறவர்ம குலசேகர பாண்டியன்-மார்க்கோபோலோவின் வருகை- சமூக பொருளாதார நிலை- சமய நிலை-கலை மற்றும் கட்டிடக்கலை | பிற்காலப் பாண்டியர்கள் |
| **தொகுதி 4 மதுரை சுல்தானியம் அமைப்பும் கலாச்சார பண்பாடு விகிதாச்சாரமும்** | | |
| அலகு 12 | மதுரை சுல்தானியத்தின் தோற்றம்-சமூக பொருளாதார நிலை- சமய நிலை-கலை மற்றும் கட்டிடக்கலை | மதுரை சுல்தானியம் |
| அலகு 13 | கலாச்சார பண்பாட்டு மையங்கள்-மாமல்லபுரம் காஞ்சிபுரம் தஞ்சாவூர் தாராசுரம் | கலாச்சார பண்பாட்டு மையங்கள் 1 |
| அலகு 14 | கங்கை கொண்ட சோழபுரம் சித்தன்னவாசல் பிள்ளையார்பட்டி குடுமியான்மலை மதுரை இராமேஸ்வரம் | கலாச்சார பண்பாட்டு மையங்கள் 2 |

# பொருளடக்கம்

*அறிமுகம்* *vi*

தொகுதி 1 வரலாற்றுக்கு முற்பட்ட காலம்

அலகு 1 தமிழர் வரலாற்றிற்கான தொல்பொருள் மற்றும் இலக்கியச் சான்றுகள் 1-16

அலகு 2 தமிழர் கலாச்சாரம் 17-24

அலகு 3 சங்ககாலம் மற்றும் தொன்மை வாய்ந்த இலக்கியங்கள் 25-44

அலகு 4 களப்பிரர்கள் 45-58

தொகுதி 2 சாம்ராஜ்யங்களின் காலம்

அலகு 5 பல்லவர்கள் 59-77

அலகு 6 பல்லவர் வம்சாவளியின் எழுச்சியும் வளர்ச்சியும் 78-96

அலகு 7 பக்தி இயக்கம் 97-114

அலகு 8 வைணவம் 115-123

தொகுதி 3 பின்னாள் சாம்ராஜ்யங்கள் மற்றும் வருகை
புரிந்த அயல் நாட்டுப் பயணிகள்

அலகு 9 மதுரைப் பாண்டியர்கள் 124-132

அலகு 10 சோழ சாம்ராஜ்யம் 133-153

அலகு 11 பிற்காலப் பாண்டியர்கள் 154-162

தொகுதி 4 மதுரை சுல்தானியம் அமைப்பும்
கலாச்சார பண்பாடு விகிதாச்சாரமும்

அலகு- 12 மதுரை சுல்தானியம் 163-175

அலகு- 13 கலாச்சார பண்பாட்டு மையங்கள் 1 176-188

அலகு- 14 கலாச்சார பண்பாட்டு மையங்கள் 2 189-200

# அறிமுகம்

இந்தியாவின் தென் பாகத்தின் பெயர் தமிழகம் அல்லது தமிழ் நாடு. இது கலாச்சாரத்திலும் பண்பாட்டிலும் மிகவும் தொன்மையானது. திராவிடர்கள் எனப்படும் தமிழ் மக்கள் உலகத்தின் மிக மிகப் பழமையான நாகரிகத்தைச் சேர்ந்தவர்கள். தமிழர் தம் மொழியின் மீதும் கலாச்சாரத்தின் மீதும் பண்பாட்டின் மீதும் ஆழ்ந்த அபிமானம் கொண்டவர்கள். பண்டைய தமிழக வரலாற்றின் பால் அவருக்கு மிக்க மரியாதையும் பெருமையும் உண்டு. இதனால் அவர்கள் தமிழர் பண்பாட்டை எத் தருணத்திலும் விட்டுக கொடுக்காமல் கட்டிக் காப்பாற்ற தம் உயிரையே கொடுக்கவும் தயங்காத வீர மரவர்கள் ஆவர். தமிழகத்தில் சேர சோழ பாண்டிய பல்லவர்கள் ஆட்சி புரிந்துள்ளனர். இவர்கள் விட்டுச் சென்ற கலை இலக்கியம் கலாச்சாரம் மற்றும் கலைச்சின்னங்கள் கட்டிடக் கலை நுட்பங்கள் போன்றவை இன்றும் அழியாப் புகழ் பெற்றவை ஆகும். இவை தமிழகத்தின் கலாச்சாரம் மற்றும் பண்பாட்டைப் பறைசாற்றும் வகையில் அமைந்துள்ளன.

இந்தப் புத்தகம் ‘கி.பி. 1336 வரையில்லான தமிழர் நாகரிகம் மற்றும் பண்பாடு’ என்னும் தலைப்பில் தமிழக வரலாறும் பண்பாடும் குறித்த வரலாற்று விளக்கமாகும். இதில் வரலாற்று விளக்கங்கள் 14 அலகுகளில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது சுயபோதனை அம்சத்தை மையம் கொண்டு தயாரிக்கப் பட்ட புத்தகமாகும். பாடத்திட்டதில் கண்ட விளக்கங்கள் அனைத்தும் படிப் படியாக உங்கள் கருத்தைக் கவரவும் எளிதில் விளங்கவும் பதிவுகள் செய்யப் பட்டுள்ளன. ஒவ்வொரு அலகிலும் அந்த அலகிற்கு சம்பந்தப்பட்ட எளிய பரிசோதனை வினாக்கள் எழுப்பப் பட்டுள்ளன. அவற்றிற்கான விடைகளும் பின்னர் தரப் பட்டுள்ளன. உரைச் சுருக்கமும் ஒவ்வோர் அலகின் இறுதியிலும் தரப்பட்டுள்ளன. இதைத் தொடர்ந்து குறுகிய விடைகளுக்கான வினாக்களும் விரிவான விடைகளுக்கான வினாக்களும் அலகின் இறுதியில் இடம் பெற்றுள்ளன.

இந்தப் புத்தகத்தை நன்றாகப் பயன்படுத்தி வரப்போகும் பல்கலைக்கழக தேர்வுகளில் நீங்கள் நல்ல ம்திப்பெண்களைப் பெற எங்கள் அன்பான வாழ்த்துக்கள்.

ஆசிரியர்

தொகுதி 1 வரலாற்றுக்கு முற்பட்ட காலம்

# அலகு 1 தமிழர் வரலாற்றிற்கான தொல்பொருள் மற்றும் இலக்கியச் சான்றுகள்

குறிப்பு

**அமைப்பு**

1.0 அறிமுகம்
1.1 நோக்கங்கள்
1.2 தமிழ் நாட்டின் புவியியல் கூறுகள்
1.3 தமிழ் நாட்டின் வரலாற்றிற்கான ஆதாரங்கள்
1.4 திறன் அடைவிற்கான பரிசோதனைக் கேள்விகள்
1.5 உரைச் சுருக்கம்
1.6 முக்கிய சொற்கள்
1.7 சுய பரிசோதனை- கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
1.8 மேலும் படிக்க

## 1.0 அறிமுகம்

வரலாற்றை ஆராயும் போது அறிஞர்கள் இரண்டு விதமான சரித்திரச் சான்றுகளைச் கருத்தில் கொள்வர். இவை முதன்மையான மற்றும் இரண்டாம் நிலையிலான சான்றுகள் ஆகும்.முதன்மைச் சான்று சரித்திரத்திலிருந்து தோன்றிய நேரிட்ட ஆதாரங்கள் எனப்படும். இவை கலைப் பொருட்களாகவும் மட்பானைகளாகவும் நாணயங்களாகவும் இருக்கக் கூடும். இரண்டாம் நிலையிலான சான்றுகள் என்பவை அக் காலத்தைக் குறித்து எடுக்கப் பட்ட குறிப்புக்கள் நூல்களில் காணப்படும் மேற்கோள்கள் கட்டுரைகள் செய்திகள் போன்றவை ஆகும். வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் வரலாற்றை ஆராயும் போது இலக்கியம் தொல்பொருள் கல்வெட்டுக் குறிப்புக்கள் சாசனங்கள் மற்றும் நாணயங்கள் இவற்றைச் சான்றுகளாகக் கருதுகின்றனர். தமிழ் நாட்டின் வரலாற்று ஆராய்ச்சிகள் அனைத்தும் சங்க கால இலக்கியங்களையே முதன்மையான சான்றாகக் கொள்கின்றன. இந்த ஆதாரங்கள் கி.மு நூ ற்றாண்டின் இறுதியிலும் கி.பி நூற்றாண்டின் தொடக்கத்திலுமாக ஏற்பட்டவை என்பதால் இவை தொன்மை மிக்கவை என்று ஒப்புக் கொள்ளப் படுகிறது. இந்த அலகில் நாம் விவரமாகப் பார்க்கப் போவது தமிழ் நாட்டின் புவியியல் ரீதியிலான அம்சங்களாகும்.



ncs_t.indb 1 3/1/2019 8:35:24 AM

## 1.1 நோக்கங்கள்

**இந்த அலகினைப் படித்து முடித்த பின்னர் உங்களால்:**

குறிப்பு

- தமிழ் நாட்டின் பூகோள (புவியியல்) கூறுகளை விவரிக்க இயலும்
- தமிழ் வரலாற்றின் தொல்பொருள் மற்றும் இலக்கியச் சான்றுகளை ஆராய முடியும்.

## 1.2 தமிழ் நாட்டின் புவியியல் கூறுகள்

புவியியல் மற்றும் வரலாறு ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை ஆகும். ஒரு நாட்டின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் இணையாகச் செல்லும் இவை பிரிக்கமுடியாதவை என்றால் அது மிகையாகாது. புவியியல் காரணிகளைப் படித்தால் மட்டுமே வரலாற்றைப் படிப்பதில் பூரணத்துவம் காண இயலும்.

புவியியல் கூறுகள் கலாச்சார வளர்ச்சிக்கும் முக்கியமான ஒரு காரணி. வரலாறு மற்றும் புவியியல் ஒன்றை மற்றொன்று தாங்கிச் செல்லும் பயணத்தில் புவியியலின் செழிப்பு வளர்ச்சி வரலாற்றையும் வரலாற்றின் நன்மை வன்மை புவியியலைக் கைகோர்த்து நிற்கச்செய்யும் கட்டாயம் உண்டு. தமிழ் நாட்டின் அரசியல் வரலாறு தென் இந்தியாவின் பூகோள அமைப்பு மற்றும் இயற்கையின் கொடைகளைப் பொறுத்து அமைவதாகும். இவை நம் புரிதலையும் அதிகப் படுத்தும் எனலாம்.

புவியியல் கூறுகள்: நாட்டின் எல்லைகள் இயற்கையின் செல்வங்கள் வளங்கள் நீர் நிலைகளின் அமைப்பு மலைத்தொடர்களின் அரண்கள் கடற்கரை மற்றும் மணற்பரப்புக்களின் அமைப்பு மண்ணின் வகைகள் பாசனம் பயிர் செய்யும் வழிமுறைகள் இவை பொதுவாக புவியியல் கூறுகளாகும். அக்காலத் தமிழ் நாடு இன்றைய கேரளம் மற்றும் மேற்குக் கடற்கரை வரையில் பரந்து இருந்தது.

### வட இந்தியா- தென் இந்தியா

விந்திய சாத்பூர மலைத்தொடர்களின் தெற்கில் அமைந்துள்ளது தென் இந்தியா எனப் பட்டது. அதன் மேல் அமைந்தது எல்லாம் வட இந்தியாவாகக் கொள்ளப் பட்டது.

**தமிழ் நாடு- தென் இந்தியா:** தென் இந்திய தீபகர்ப்பம் எனப் படும் தமிழ் நாடு முக்கோண வடிவில் கடல்களால் சூழப்பட்ட தென் பகுதியாகும். கிழக்கே வங்காள விரிகுடா மேற்கே அரபிக்கடல் மற்றும் தெற்கே இந்து மாக் கடல் இவை தென் இந்திய தீபகர்ப்பத்தின் அமைப்பு.

தமிழ் நாட்டின் எல்லைகள்: வடக்கே அரண்களாக விந்தியா சாத்பூரா மலைத்தொடர்கள் அமைந்துள்ளன. இது இந்தியாவின் வடக்கே அமைந்துள்ள

இயற்கை அரணான இமய மலைத் தொடர் போலக் கருதப் படுகின்றது. இந்த மலைத்தொடரின் இயற்கை அரண் தமிழ் நாட்டின் மீது வடக்கே இருந்து அதிக அளவில் படையெடுப்புக்கள் நடக்க முடியாமல் போனதற்குக் காரணம் எனலாம். தமிழ்ப் பாரம்பரியமும் தமிழ் கலாச்சாரமும் மாசுபடாமல் காப்பாற்றப் பட்டதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம் என்று கூறப் படுகிறது.

## பண்டைய தமிழகத்தின் எல்லைகள்

| திசை | தமிழக எல்லையின் பெயர் |
|---|---|
| கிழக்கு | வங்காள விரிகுடா |
| மேற்கு | அரபிக் கடல் |
| வடக்கு | விந்தியா சாத்பூரா மலைத்தொடர்கள் |
| தெற்கு | இந்து மாக் கடல் |

மேற்கில் கேரளத்தையும் வட மேற்கில் மைசூர் பீடபூமியின் பகுதிகளையும் உள்ளடக்கியது பண்டைய தமிழ் நாடு.

**தக்காணப் பீடபூமி:** கிழக்கே உயரத்தில் குறைவாகவும் மேற்கே அதிகமாகவும் அமைந்துள்ள தக்காணப் பீடபூமி யின் தெற்கே அமைந்துள்ளது தமிழ் நாடு. தக்காணப் பீடபூமியின் பின்னால் அமைந்துள்ளது மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடர்.

மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடர்: வடக்கில் காம்பே முனையில் தொடங்கி தெற்கில் ஆரல்வாய்மொழியில் முடிவடையும் இந்த மலைத்தொடர் இயற்கையின் அரணாக அமைந்துள்ளது. இதன் காரணமாக மேற்குக் கடற்கரைப் பகுதி மக்கள் வரலாற்றளவில் தென் இந்தியாவிலும் குறிப்பாக தமிழ் நாட்டிலும் அதிக அளவில் தீவிரப் பங்கேற்கவில்லை என்பது தெளிவு.

தமிழகத்தின் வடக்கும் தெற்கும்: வடக்கில் வட வேங்கடம் எல்லையும் தெற்கில் குமரியும் எல்லைகளாகத் தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படுகின்றது. இந்தக் குமரி கன்னியாகுமரியைக் குறிப்பதா அல்லது லெமூரியா என்ற கண்டத்திலிருந்த தென் தமிழ் நாட்டைக் குறிக்கின்றதா என்பது இன்னும் ஆராய்ச்சியாளர்களின் விவாதங்களில் இருந்து வருகிறது. ஒரு பிரளயத்தில் குமரி (லெமூரியா) இந்துமாக் கடலில் மூழ்கியதாக சிலப்பதிகாரம் தெரிவிக்கிறது.

## புவியியல் வாரியாக தமிழ் அரசுகளின் ஆட்சி எல்லைகள்:

காவிரி நதியின் தெற்கே பாண்டிய நாடு எனப்பட்டது. தற்போதைய கேரளம் மற்றும் கோயம்புத்தூர் சேர்ந்த பகுதி சேர நாடாகும். வெள்ளாறின் வடக்கே சோழ நாடாகும்.வேங்கிட மலையின் தெற்கேயும் பவள மலையின் மேற்கேயும் அமைந்த பகுதி தொண்டை நாடாகும். இவை தவிர வேளிர் குலம் மற்றும் கடையேழு வள்ளல்கள் ஆண்ட குறு நிலமன்னர் ஆட்சி தமிழ் நாட்டின்

எல்லைகளுக்குள் இருந்து வந்தது. சிலா் தனித்துவத்துடன் இருந்தனா். சிலா் சேர சோழ பாண்டியா்களின் கீழ் ஆட்சி புரிந்து வந்தனா்.

## தமிழ் நாட்டின் மலைத் தொடா்கள்:

குறிப்பு

தமிழ் நாட்டின் மலைகள் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப் பட்டுள்ளன:

**மேற்குத் தொடா்ச்சி மலைகள்:** குடகுமலை பொதிகை மலை ஆனைமலை குதிரைமலை எல்லாம் இதைச் சோ்ந்தவை. மேற்குத் தொடா்ச்சி மலைகளின் சீரான அமைப்பும் இடைவளியற்ற தொடா்ச்சியும் சிறப்பாக இருக்கின்றன.

(அ) பயிா்முறை: காபி தேயிலை மௌகு ஏலக்காய் போன்றவை இங்கே பயிரிடப் படுகின்றன. இக் காடுகளில் தரமான தேக்கு சந்தனம் போன்ற சிறப்பான மரங்கள் வளா்க்கப் படுகின்றன.

ஆதிவாசிகள் மலை வாழ் மக்கள்: காடா் இருளா் புலையா் முதுவா் என்பவா்கள் இங்கு வாழும் மலை வாழ் மக்களாகக் கருதப் படுகின்றனா்.

(ஆ) கிழக்கத்திய மலைகள்: கல்வராயன் மலை சோ்வராயன் மலை ஜவ்வாது மலை கொல்லி மலை கஞ்ச மலை இவைகள் கிழ்க்கிலுள்ள மலைத் தொடா்களாகும். ஆனால் மேற்குத் தொடா்களைப் போலல்லாமல் கிழக்கு மலைகள் தனித்தனிப் பிரிவுகளாக உயரம் குறைந்த நிலையில் நிற்கின்றன. சீரான அமைப்பும் மலைத் தொடா்ச்சியும் அவ்வளவாக இல்லை எனலாம். புவியியல் ஆராய்ச்சியாளா்களின் கூற்றுப்படி இவை மேற்குத்தொடரைக் காட்டிலும் பழமையானவை என்று கொள்ளலாம்.

(இ) நீலமலைத் தொடா்: கொங்கு வளையம் எனப்படும் இந்த நீல மலைப் பிரதேசம் மேற்குத் தொடரும் கிழக்குத் தொடரும் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ளது. உதகமண்டலம் கோத்தகிரி கூடலூா் இவை அனைத்தும் நீல மலையில் உள்ளன. 2677 மீட்டா் உயரத்தில் உள்ள தொட்டபெட்டா சிகரம் இந்த மலைத் தொடரில் உள்ளது. கொடைக்கானல் மற்றும் ஏலமலையும் இதன் தொடா்ச்சிகளாகவே கருதப் படுகின்றன.

## மலைத்தொடா்களின் கொடை:

- இவை தமிழ் நாட்டின் அரணாக இருந்து வருகின்றன
- தென் மேற்குப் பருவக் காற்றின் பயனாக ஏற்படும் மழை
- கிழக்கு மேற்கு மலைகளிலிருந்து வரும் நீா்ச் செல்வம்
- காபி தேயிலைத் தோட்டங்கள் ஏலக்காய் யூகலிப்டஸ் பயிரிடுதல் இங்கே அதிகம்.

- சிறப்பு மரங்களான சந்தனம் தேக்கு இவையும் இக் காடுகளில் வளர்கின்றன.
- நீலகிரியில் தோடர்கள் படகர்கள் மற்றைய தொடர்களில் ஆங்காங்கே வசிக்கும் மலை வாழ் மக்களான காடர் இருளர் புலையர் மூதுவர் இங்கே காணப் படுகின்றனர்.

கிழக்குக் கடற்கரை மற்றும் மேற்குக் கடற்கரைப் பகுதிகள்: டெல்டா பகுதி என்றழைக்கப் படும் கிழக்குப் பகுதிகளில் மகா நதி கோதாவரி கிருஷ்ணா காவேரி பாயும் பகுதிகளில் விவசாயம் தழைத்துள்ளது. காவேரி டெல்டாப் பகுதி முற்றிலும் விவசாய பூமியாகப் பயன் பெறுகிறது. 'சோழ நாடு சோறுடைத்து' என்று பெருமை சேர்த்த இந்தப் பகுதி தமிழ் நாட்டின் நெற்களஞ்சியம் எனப் படுகிறது.

மேற்குப் பகுதிகளில் தென் மேற்குப் பருவக் காற்று மழையினால் விவசாயம் நல்ல முறையில் செயல் படுகிறது எனலாம். புவியியலில் இவை மலபார் மற்றும் கொங்கணப் பகுதிகளாகக் காணப் படுகின்றன.

தமிழ் நாட்டின் ஆறுகள்-நதிகள்:குடகு பிரம்மகிரியில் பிறக்கும் காவேரி மைசூர் வழியாகத் தென் கிழக்காகப் பாய்ந்து சென்று தமிழ் நாட்டை அடைகிறது. திருச்சிராப்பள்ளியில் கரிகாலவளவன் என்ற சோழமன்னனால் காவேரியைத் தடுத்துக் கட்டப்பட்ட கல்லணை பெருமை வாய்ந்தது. பொறியியல் கலையிலும் சிறப்பானதாகக் கருதப் படுகிறது.

தாமிரபரணி ஆறு வற்றாத ஆறாகக் கருதப் படுகிறது

பாலாறு கர்நாடகத்தில் நந்திதுர்க்கா என்ற இடத்தில் தொடங்கி வட ஆர்காடு வழியாகச் சென்று கிழக்கே வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

இவற்றைத் தவிர பெண்ணையாறு வைகை பரலியாறு என்னும் உப நதிகள் தமிழ் நாட்டை வளப்படுத்துகின்றன.

தமிழ் நாட்டின் சீதோஷண நிலை மற்றும் மழை விபரம்: பருவ மழையைப் பொறுத்து தமிழ் நாட்டின் விவசாயம் பலன் பெறும். தமிழ் நாடு பூமத்திய ரேகைக்கும் மகர ரேகைக்கும் இடையில் இருக்கும் காரணத்தால் சூடான தட்ப வெப்ப நிலையாக இருக்கும்.வடகிழக்குப் பருவ மழையில் கிழக்குக் கடற்கரை சமவெளிகள் அக்டோபர் நவம்பர் டிசம்பர் மாதங்களில் பயன் பெறும். ஜூன் ஜூலை ஆகஸ்ட் மாதங்களில் தென் மேற்கு பருவ மழையால் மேற்குக் கடற்கரை பிரதேசங்களில் மழை அதிக அளவில் உண்டாகிறது.

## புவியியல் கூறுகளின் தாக்கம்

1. விந்தியா சாத்பூரா மலைத்தொடர்கள் வடக்கத்திய படையெடுப்புக்களிலிருந்து அரணாக அமைந்ததால் தமிழகத்தின் வரலாறு பண்பாடு மற்றும் கலாச்சாரம் முதலியன பெருமளவில் பாதுகாக்கப் பட்டுள்ளன என்று கருதப் படுகிறது.

2. சங்க காலம் தொட்டு புவியியல் சார்ந்த தொழில் முறைகளும் வாழ்க்கை முறைகளும் பின்பற்றப் பட்டன. கலாச்சாரம் மற்றும் பண்பாடும் அந்த புவியியல் முறைக்கேற்ப வளர்ச்சி அடைந்தது.

**குறிப்பு**

தட்பவெப்ப நிலைக்கேற்ப புவியியல் அமைப்பிற்கேற்ப மக்களிடையே நிலப் பகுதிகள் பிரிக்கப் பட்டன. இதைத் தொடர்ந்து தொழில்களும் கலைகளும் வாழ்க்கைமுறைகளும் வழிபாடுகளும் ஏற்படுத்தப்பட்டன.

ஐந்து வகைப் பிரிவுகள்

| வகை | நிலப் பகுதியின் பெயர் | பகுதியின் தன்மையும் விவரங்களும் |
|---|---|---|
| 1. | குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த இடமும் |
| 2. | முல்லை | புல்வெளிகளும் வயல் சார்ந்த இடமும் |
| 3. | மருதம் | நீர் வளமிக்க பகுதி |
| 4. | நெய்தல் | கடலும் கடல் சார்ந்த இடமும் |
| 5. | பாலை | வாழ்க்கை வசதியற்ற பகுதிகள் |

விவசாயத்தில் முதன்மை: கனிம வளங்களும் உலோக வளங்களும் குறைவான தமிழ் நாட்டில் விவசாயம் முதன்மை பெற்றது. விவசாயம் சார்ந்த உற்பத்திப் பொருட்கள் பயிரிடப்பட்டன.

கடல் வாணிபம்: இயற்கைத் துறைமுகங்கள் குறைவான தமிழ் நாடு திராவிடர்கள் அயல் நாட்டு வாணிபத்தில் மிகச்சிறந்து விளங்கினர். சேர சோழ பாண்டிய பல்லவ மன்னர்கள் கடல் கடந்த வாணிபத்தை அதிகரிக்கவும் கீழ்த்திசை நாடுகளில் குடியேற்றங்களை ஏற்படுத்தவும் பெருமளவில் செயல்பட்டனர். கடலாதிக்கம் அதிகரித்தது எனலாம். நெய்தல் மூலம் இப் பறிமாற்றங்கள் செயல் படுத்தப் பட்டன.

**அயல் நாட்டு வாணிபம்:** சுமித்ரா, ஜாவா, சீனா, பாரசீகம், இலங்கை, பாபிலோன், கிரீஸ், ரோமாபுரி ஆகிய நாடுகளில் வாணிபத்தொடர்புகள் ஏற்பட்டன. முசிரி, கொற்கை, தொண்டி, காவேரிப் பூம்பட்டிணம் துறைமுகங்களின் வாயிலாக வாணிபம் செய்யப் பட்டது.

அரிசி மெசபடோமியாவிற்கும் முத்துக்கள் ரோமாபுரிக்கும் தேங்காய் நார் ஐரோப்பாவிற்கும் அனுப்பப் பட்டன. இதைத்தவிர மயிலிறகுகள் சந்தனம் தேக்கு மிளகு ஏலக்காய் யானைத்தந்தம் போன்றவை கிழக்கு நாடுகளுக்கு அனுப்பப்பட்டன.

**ஆறுகள் மலைகளின் அமைப்புக்களின் தாக்கம்:** தமிழ் நாட்டின் ஆறுகளும் மலைகளும் மக்கள் வாழும் பகுதிகளைப் பிரித்து விட்டபடியால் மைய அரசு என்ற ஒன்றை நாம் காண முடியவில்லை. அரசியல் ஒற்றுமையும் ஏற்படவில்லை எனலாம். இதனால் எண்ணற்ற பல சிற்றரசுகள் தோன்றவும் அடிக்கடிப் போர்களைத் தொடுக்கவும் ஏதுவானது என்று கருதப் படுகிறது.



ncs_t.indb 6 3/1/2019 8:35:25 AM

**உங்கள் முன்னேற்றத்தைப் பரிசோதிக்கவும்**

1. ஒரு நாட்டின் புவியியல் கூறுகள் யாவற்றைத் தீர்மானிக்கின்றன?
2. தமிழ் நாட்டின் வளமை எதைப் பொறுத்து அமையும்?

குறிப்பு

## 1.3 தமிழ் நாட்டின் வரலாற்றிற்கான ஆதாரங்கள்

ஒரு நாட்டின் வரலாற்று உண்மைகளைக் குறிக்கும் சான்றுகள் பலவிதங்களில் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப் படுகின்றன. இந்த ஆதாரங்களை வைத்துத்தான் ஊகங்கள் உயிர் பெறும். இலக்கியங்களில் காணப்படும் குறிப்புக்கள் இவ்வாறு கண்டுபிடிக்கப்படும் சான்றுகளின் வாயிலாக உறுதிப் படுகிறது.

தொடர்ந்து நடைபெற்றுவரும் ஆராய்ச்சிகளினால் சரித்திரம் அவ்வப்போது புதுப்பிக்கப் படுகிறது. இந்தப் புதிய கருத்துக்களும் உண்மைகளாக உருமாறின ஊகங்களும் சான்றுகளைக் கொண்டு முடிவு செய்யப் படுகின்றன.

சான்றுகள் பலவகைப் பட்டவையாகும் அவை கீழ்க் கண்டவாறு வகைப் படுத்தப்பட்டுள்ளன:

1. தொல்பொருள் ஆதாரங்களும் சான்றுகளும்
   - அகழ்வாராய்ச்சிகளில் கிடைக்கும் சமூக சான்றுகள் கட்டிடங்கள் முதலியன
   - கலைச்சின்னங்கள் பாரம்பரிய நினைவிடங்கள் கோவில்கள் கல்வெட்டுக்கள்
   - செப்புப் பட்டயங்கள்
   - நாணயங்கள்
2. இலக்கியச் சான்றுகள்
   - உள் நாட்டு இலக்கியங்கள்
   - வெளி நாட்டு இலக்கியங்கள்
3. அயல் நாட்டினரின் நாட்குறிப்புக்கள்
   - யாத்திரிகர் குறிப்புக்கள்
   - வரலாற்று ஆராய்ச்சியாளர் குறிப்புக்கள்

### இவற்றைக் குறித்து நாம் ஒவ்வொன்றாக ஆராய்வோமாக:

### 1. தொல்பொருள் ஆதாரங்களும் சான்றுகளும்

தொல்பொருள் ஆராய்ச்சி அறிக்கைகள் பெருமளவில் வரலாற்று உண்மைகளை ருசு செய்யவும் அறிஞர்கள் அவற்றை ஏற்றுக் கொள்ளவும் வழிவகை செய்கின்றன.

குறிப்பு

புதைந்து கிடக்கும் சரித்திர சான்றுகள் பலவிதங்களில் கிடைக்கப் பெறுகின்றன. அவையாவன:

கட்டிடங்கள் நாணயங்கள் மண்டையோடுகள் நினைவுச்சின்னங்கள் கலைச்சின்னங்கள் மட்பானைகள் கருவிகள் ஆயுதங்கள் போன்றவை. ராபர்ட் புரூஸ் ஃபூட் என்ற ஆங்கிலேயர் இந்திய அகழ்வாராய்ச்சித்துறைக்குப் பெரிதும் உதவினார் என்றால் மிகையாகாது. இவரைப் போலவே இன்னும் சில ஆராய்ச்சியாளர்களும் பல இடங்களில் புதை பொருட்களை மீட்டு இருக்கிறார்கள்.

1. அகழ்வாராய்ச்சிகளில் கிடைக்கும் சமூக சான்றுகள் கட்டிடங்கள் முதலியன

   - ஆதிரப்பாக்கம் செங்கல்பட்டு மாவட்டம்: கற்காலக் கருவிகள் மற்றும் பயன்பாட்டு சாதனங்கள் 2 இலட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்ட அக்கூலியன் தொழில் நுட்பத்தில் செய்யப் பட்டவை. இதைக் கண்டுபிடித்தவர்கள் ராபர்ட் புரூஸ் ஃபூட் பாட்டர்சன் மற்றும் சங்காலியா

   - பையம்பள்ளி வட ஆர்காடு மாவட்டம்: முனைவர்.எஸ்.ஆர் ராவ் மேற்கொண்ட ஆராய்ச்சியின் பயனாக பெருங்கற்காலக் கருவிகள் விளக்குகள் களிமண்வளையல்கள் போன்றவை கண்டுபிடிக்கப் பட்டன. இதனால் வாழ்க்கைமுறை ஆதாரங்கள் கிடைத்தன.

   - ஆதிச்ச நல்லூர் -திரு நெல்வேலி மாவட்டம்: தாமிரபரணியின் கரைகளில் வாள்களும் கோடாரிகளும் வில் அம்பும் இரும்பு ஆயுதங்களும் ஈட்டி மனித மண்டையோடுகள் கிடைத்தன. இது தவிர முதுமக்கள் தாழி என்ற இறந்தவரைப் புதைக்கும் களிமண் தாழிகள் கிடைத்தன.

   - திருத்தாங்கல்-விருது நகர் மாவட்டம் சிவகாசியின் அருகில் கருப்பும் சிவப்புமான மண்பானைகள் செப்புத் தகடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை சங்க கால பாண்டிய மன்னர் காலத்தவை என்கின்றனர். பழங்கற்காலக் கருவிகளும் குறு உபகரணங்களும் கிடைத்தன.

   - கொடுமணல் அகழ்வு: இதில் ரோமாபுரி வாணிபம் குறித்த சான்றுகள் கிடைத்தன. மண்பாண்டங்களும் மண் பொம்மைகளும் சங்க காலத்தவை என்ற கருத்து நிலவுகிறது.

2. கலைச்சின்னங்கள் பாரம்பரிய நினைவிடங்கள் கோவில்கள் கல்வெட்டுக்கள்

   தமிழ் நாடு மற்றும் ஆந்திரா நினைவுச் சின்னங்கள்-கல்வெட்டுக்கள்: அதிக அளவில் அமைந்திருக்கும் கோட்டைகள் கோவில்கள் அரண்மனைகள் இவை எல்லாம் புராதன கலைச்சின்னங்களாகும்.

இவற்றைத் தவிர சிற்பங்களும் கல்வெட்டுக்களும் சரித்திர நாயகர்களின் புகழ் பாட உதவும். புராண இதிகாசக் கதைகளிலிருந்து தீட்டப்பட்ட ஓவியகள் சுவர்ச் சித்திரங்கள் அனைத்தும் கலை மற்றும் காவியச் சான்றுகளே.

3. கல் வெட்டுக்கள் செப்புப் பட்டயங்கள்

கல்வெட்டுக்களும் செப்புப் பட்டயகளும் அதிக அளவில் வரலாற்றை அறிந்துகொள்ள உதவுகின்றன. இவை தமிழ் பிராகிருதம் சமஸ்கிருதம் பிரம்மி மற்றும் கன்னடம் ஆகிய மொழிகளில் அமைந்துள்ளன.

- இராமேஸ்வரம் பிரம்மகிரி மாஸ்கி இடங்களில் கிடைத்த கல்வெட்டுக்கள் கன்னேரி மற்றும் நாசிக் ஆகிய இடங்களிலும் இருப்பதாகத் தெரிகிறது. இவை பிருகு மொழியில் எழுதப் பட்டுள்ளன.
- அசோகருடைய பாறைக் கல்வெட்டுக்கள் சிறப்பு மிக்கவை. இவை சித்தாபுரம் பிரும்மகிரி மற்றும் எர்ரகுடி என்ற இடங்களில் தமிழில் காணப் படுகின்றன.
- கலிங்க மன்னர் காரவேலர்: ஹதிகும்பா கல்வெட்டுக்களின் படி அக்கால தமிழ் மன்னர்களிடையே சிறிதளவு ஒற்றுமை இருந்தது என அறிவிக்கிறது
- சமுத்திர குப்தன் அலகாபாத் தூணின்மேல் பொறித்த கல்வெட்டுக்கள் காஞ்சியை ஆண்டு வந்த பல்லவ மன்னன் விஷ்ணு கோபன் குறித்து தெரிவிக்கிறது.
- இரண்டாம் புலிகேசியின் அய்க்கோல் கல்வெட்டுக்கள் புலிகேசிக்கும் மகேந்திர வர்ம பல்லவனுக்கும் இடையிலான போர்கள் குறித்துத் தெரிவிக்கின்றன.
- சோழர் காலக் கல்வெட்டுக்கள் எண்ணிலடங்காதவை. இவை சோழர் கால வரலாற்றுச் சான்றுகளை முன் வைக்கின்றன.
- மால்பாடி கல்வெட்டுக்கள் மற்றும் ராஜ ராஜேஸ்வரன் கோவில் கல் வெட்டுக்கள் முதலாம் இராஜேந்திர சோழனின் அரசியல் செய்திகளைத் தெரிவிக்கின்றது.
- திருமுக்கூடல் கல்வெட்டுக்கள் வீர இராஜேந்திர சோழனின் காலத்தில் கல்விக்கூடங்களையும் மருத்துவ மனைகளையும் நிறுவ அளிக்கப் பட்ட நிதியுதவி பற்றிக் குறிக்கின்றது.
- திருவேதிபுரம் கல்வெட்டில் மூன்றாம் இராஜேந்திர சோழன் குறித்த செய்திகள் இன்றும் பெருமைக்குரியவையாகக் கருதப்படுகிறது.
- பாண்டியன் பராந்தகன் நெடுஞ்செழியன் காலத்தில் பண்டைய கால சாசனத்தைத் தோற்றுவித்த பாண்டியன் முது குடுமிப் பெருவழுதியின்

வேள்விக்குடி சாசனங்கள் மறுசாசனம் செய்யப்பட்டு உயிர்ப்பித்த விவரங்கள் உள்ளன.

- பல்லவ மன்னர் மகேந்திரவர்மனின் குடுமியான்மலை கல்வெட்டுக்கள் இசை ஓவியம் குறித்த விவரங்களைத் தெரிவிக்கின்றன.

குறிப்பு

**செப்புப்பட்டயங்கள்:** 7ஆம் நூற்றாண்டிற்குப் பின்னார் செப்புத் தகடுகளின் உபயோகம் அதிகரித்து வந்தது. சேர சோழ பாண்டிய பல்லவர்கள் செப்புப் பட்டயங்களை அதிக அளவில் பயன் படுத்தினர். இதன் மூலம் சமயம் சமூக அரசியல் மற்றும் போர்கள் குறித்து செய்திகளை பிரகடனப் படுத்தினர்.

- அன்பில் செப்புத்தகடுகள் சோழ மன்னர் செங்கண்ணனின் தகவல்களைத் தெரிவிக்கின்றது.
- பள்ளான் கோவில் தகடுகள் மூன்றாம் நரசிம்மவர்மன் காலத்தது. இவை பிராக்கிருதம் அல்லது சமஸ்கிருத மொழிகளில் இருந்தன. இதன் மூலம் சமண மதம் ஆதரிக்கப் பட்டது தெரிய வருகிறது.
- சோழர்களின் செப்புத்தகடுகள் மிகவும் நீளமானவையாகும். முதலாம் இராஜராஜசோழனின் லெய்டன் பட்டயம் முதலாம் இராஜேந்திரசோழனின் திருவாலங்காடு கரந்தை பட்டயங்கள வீர இராஜேந்திரனின் சரளா செப்பேடுகள் இவையெல்லாம் சோழர் கால நடைமுறைகள் குறித்து விவரங்களைத் தெரிவிக்கின்றன.
- விஜய நகர சாம்ராஜ்யத்தின் மன்னர் முதலாம் ஹரிஹரன் பங்கனப்பள்ளி செப்புத்தகடுகளை வெளியிட்டான். கிருஷ்ணதேவராயன் அமராவதி பட்டயங்களையும் இரண்டாம் தேவராயன் ஸ்ரீரங்கம் பட்டயங்களையும் வெளியிட்டுள்ளனர். இவை விஜய நகரப் பேரரசின் பல்வேறு திட்டங்களையும் அவர்தம் ஆட்சி குறித்தும் தெரிவிக்கின்றன.

4. நாணயங்கள்: தொல்பொருள் நிபுணர்களால் கண்டுபிடிக்கப்பட்ட நாணயங்களின் மூலம் ஆட்சிகளின் விவரங்கள் தெரியவருகின்றன. ஆட்சி காலம் மன்னர்களின் பெயர் உருவங்கள் இலச்சினைகள் ஆளுகையின் பகுதிகள் போன்ற பல்வேறு குறிப்புக்கள் கிடைக்கின்றன.

   - அரிக்கமேடு என்ற இடத்தில் கிடைத்த தங்க நாணயங்கள் ரோமானியத் தொடர்பு உள்ளவை. தொடக்க கால நாணயங்கள் முத்திரை பதித்த செப்பு நாணயங்களாகும். பின்னர் தங்க நாணயங்கள் புழக்கத்தில் வந்தன. அகஸ்டஸ் கால நாணயங்கள் பணம் அல்லது வராகன் எனப் படும்.
   - பல்லவர் கால நாணயங்களின் ஒரு புறத்தில் காளையும் மறு புறம் இரண்டு பாய் மரங்களுடன் கூடிய கப்பல் உருவங்களையும் கொண்டுள்ளன. மேலும் ஸ்வஸ்திகா சிம்மம் போன்ற உருவங்களையும் கொண்டுள்ளன.



ncs_t.indb 10 3/1/2019 8:35:25 AM

- சேர சோழ பாண்டியர் காலத்து நாணயங்கள் அழகுடன் அமைந்துள்ளன. சோழ நாணயங்களில் புலியும் சேர நாணயங்களில் வில்லும் பாண்டிய நாணயங்களில் மீனுருவமும் காணப்பட்டன. இவற்றின் மூலம் நாட்டின் சமுதாய கலை மேம்பாடு மற்றும் பொருளாதார வள நிலைகளையும் அறியலாம்.
- பெரிய பட்டணம் அகழ்வாராய்ச்சி: தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைகழகம் எடுத்துக் கொண்ட இப் பணியின் மூலம் சீனக் காசுகள் மற்றும் சீன மட்பாண்டங்கள் திரு நெல்வேலி பெரியகுளம் மற்றும் தஞ்சாவூரில் கண்டெடுக்கப்பட்டன.இவற்றில் டாங்போ ரியூபின் என்ற சீன எழுத்துக்களாலான சொற்கள் காணப்படுகின்றன.இக் காசுகள் சீனாவுடன் இருந்த வர்த்தகம் குறித்த சான்றாகும். மேலும் இவை தென் பாண்டிய நாடு வரையில் சீன வர்த்தகம் பரவியிருந்ததை உறுதி செய்கிறது. மிங்க் எனும் சீன மன்னர் பரம்பரையில் வெளியான காசு இது.
- இராஜராஜேஸ்வரனின் நாணயங்கள் கோதாவரிக் கரையில் தெள்ளேஸ்வரம் என்ற இடத்தில் கண்டு பிடிக்கப்பட்டன. அவனுடைய ஆட்சி கோதாவரி வரை பரந்திருந்ததை அறிகிறோம்.
- சிறு ஆராய்ச்சிகள் கொற்கை உறையூர் மதுரை மற்றும் அமராவதி ஆகிய இடங்களில் நிகழ்த்தப்பட்டன. நாணயங்களும் கண்டு பிடிக்கப் பட்டன என்பர்.

## 2. இலக்கியச் சான்றுகள்

இலக்கியங்கள் வரலாற்றின் முதன்மையான சான்றாகக் கருதப் படுகிறது. அதன் மூலம் சமூக வளர்ச்சி பொருளாதார முன்னேற்றம் கலை பண்பாடு கலாச்சாரம் போன்றவை சமய ஈடுபாடுகள் எல்லாம் கோர்வையாக வரும் அரசியல் நிலை எழுச்சி வீழ்ச்சி நிலைகள் அனைத்தும் அறிந்து கொள்ளும் சாளரமாகப் பயன்படுகின்றன. இலக்கியங்கள் அரச சபைகளை மட்டும் உற்றுப் பார்க்காமல் அதன் பின்னணியாக உள்ள மக்கள் சமுதாயம் குறித்தும் தம் பார்வையில் நிலை நிறுத்தி வந்தன. கதைகள் காவியங்கள் கவிதைகள் நாடகங்கள் மூலமாக நாட்டின் முழு அளவு சித்திரம் புலப் படும் எனலாம்.

இலக்கிய சான்றுகள் மூன்று வகைப் படும்:

1. உள் நாட்டு இலக்கியங்கள்: இந்தியாவில் தோன்றிய இலக்கியங்கள்
   - சங்க கால இலக்கியங்கள்:
     - சங்க கால இலக்கியங்கள் அனைத்திலும் முதன்மையாகக் கருதப்படுவது பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும்தான்
     - இவற்றைத் தவிர (1) அகத்தியம் (2) தொல்காப்பியம் (3) பதினெண்கீழ்க்கணக்கு (4) சிலப்பதிகாரம் (5) மணிமேகலை



ncs_t.indb 11 3/1/2019 8:35:25 AM

குறிப்பு

(6) வளையாபதி (7) குண்டலகேசி (8) சீவகசிந்தாமணி (9) திருக்குறள் இவை யாவும் சமூக சமய நிலைகளையும் திராவிடப் பாரம்பரியத்தையும் எடுத்துச் சொல்கின்றன.

- புற நானூறு: குறு நில மன்னர்களின் ஆட்சித் திறமைகளையும் அரசர்களின் மாட்சியையும் புகழும் கவிதைத் தொகுப்பு எனப் படுகிறது.
- பதிற்றுப்பத்து சேர அரசர்களின் அமைதி கலை வீரச் செயல்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது.
- சங்ககால இலக்கியங்கள் தமிழரின் காதல் வாழ்க்கை விருந்தோம்பல் வீரம் கொடை இவை குறித்து விளக்கமாகக் குறிப்பிடுகின்றன.

• களப்பிரர் கால இலக்கியச்சான்றுகள்: களப்பிரர் காலம் இலக்கியத்திலும் ஒரு இருண்ட காலமாகவே கருதப் படுகிறது. ஆயினும் மூன்று இலக்கியங்களில் களப்பிரர் ஆட்சி குறித்த குறிப்புக்கள் காணப் படுகின்றன.

- தமிழ் நாவலர் சரிதை
- பெரிய புராணம்
- யாப்பெருங்கலம்

• பல்லவர்கள்: பல்லவர் காலத்தின் இலக்கிய சான்றுகள் ஏராளம்.

- அப்பர் சம்பந்தர் சுந்தரர் எழுதிய தேவாரம் பல்லவர்களின் சமூக பொருளாதார சமய வரலாற்றுக் குறிப்புக்களைத் தருகிறது.
- நாலாயிர திவ்வியப்பிரபந்தம் பல்லவர் சாளுக்கியர் உறவு குறித்து தெரிவிக்கிறது.
- நந்திவர்மனின் நந்திக் கலம்பகம் பல்லவர்களின் அரசியல் வாழ்க்கை வரலாறாகக் கருதப் படுகிறது.
- பெருந்தேவனாரால் இயற்றப் பட்ட பாரத வெண்பா பல்லவர்களின் அரசாட்சி குறித்து எழுதப்பட்டதாகும்.
- தண்டின் இயற்றிய பெரிய புராணம் மற்றும் பாண்டிக் கோவை நூல்கள் பல்லவர்களின் ஆட்சி குறித்த தகவல்களைத் தருகின்றன.

• முற்காலப் பாண்டியர்கள்: இவர்களைக் குறித்து பெரிய புராணம் பாண்டிக் கோவை திவ்விய சுசரிதா குரு பரம்பரை ஆகிய நூல்கள் உதவுகின்றன. மேலும் வைஷ்ணவ இலக்கியங்களும் பரஞ்சோதி எழுதிய திருவிளையாடல் புராணமும் இக்கால வரலாற்றின் சான்றுகளாம்.

• பிற்காலச் சோழர்கள் : விஜயாலய சோழன் முதல் மற்றைய சோழர்களைக் குறித்து அநேக இலக்கியங்கள் தோன்றியுள்ளன.



ncs_t.indb 12 3/1/2019 8:35:25 AM

சீவக சிந்தாமணி வளையாபதி குண்டலகேசி இவை எல்லாம் சோழர் கால சமண பௌத்த மத நிலை குறித்தாகும்.

மேலும் கீழ்க்கண்ட இலக்கியங்கள் சோழர் ஆட்சி குறித்து விளக்குகின்றன:

- புத்த மித்திரர் எழுதிய வீர சோழியம்
- கம்ப ராமாயணம்
- ஜெயம்கொண்டார் எழுதிய கலிங்கத்துப் பரணி
- ஒட்டக்கூத்தர் எழுதிய மூவருலா போற்றும் சோழ மாமன்னர்கள்
  - விக்கிரம சோழன்
  - இரண்டாம் குலோத்துங்கன்
  - இரண்டாம் இராஜராஜன்

- வேற்று மொழி இலக்கியங்கள்:
  - கௌடில்யரின் அர்தசாஸ்திரம்-பாண்டியரின் மதுரை குறித்து
  - தண்டினின் அவனிசுந்தர கதாசாரம்-பல்லவர்களைக் குறித்து
  - மகேந்திரவர்மனின் மத்த விலாச பிரகசனம்- பல்லவர் குறித்து
  - சோழ வம்ச சரிதை-
  - கொங்கு தேச ராசாக்கள்
  - சவிஸ்தார சரிதை(சமஸ்கிருதம்)
- கங்காதேவியின் மதுர விஜயம்-(சமஸ்கிருதம்) குமார கெம்பணரின் மதுரைப் படையெடுப்பும் மதுரை சுல்தான்களின் ஆட்சி அஸ்தமனமும் குறிப்பிடப் பட்டுள்ளன
- பம்பாவின் பம்ப பாரதம் - ராணாவின் பீம விஜயம் (கன்னடம்) ராஷ்டிரகூடர் மற்றும் சாளுக்கியர் ஆட்சி குறித்து விவரிக்கின்றன.
- கன்னட தேச மகாண தரங்கிள் (கன்னடம்) விஜய நகரப் பேரரசின் ஆட்சி குறித்து விவரிக்கின்றது.

2. வெளி நாட்டு இலக்கியங்கள்: வெளி நாட்டில் எழுதப் பட்ட இலக்கியங்களில் காணப் படும் இந்திய சரித்திர உண்மைகள்
   - மெகஸ்தனிஸ் எழுதிய இண்டிகா-பாண்டிய அரசாட்சி குறித்து
   - ஹெரடோட்டஸ் எழுதிய பாரசீகப் போர்கள் - தமிழர்களின் அயல் நாட்டு வாணிபம் குறித்து
   - தலாமி எழுதிய உலகின் வரைபடம்- அயல் நாட்டு வாணிபம் குறித்து
   - எரித்திரியக் கடலின் பெரிப்புளுஸ்- அயல் நாட்டு வாணிபம் குறித்து

குறிப்பு



ncs_t.indb 13 3/1/2019 8:35:26 AM

குறிப்பு

- ஸ்டரெபோவின் குறிப்புக்கள் - பாண்டியரின் ரோமானிய வணிக உறவு குறித்து
- பிளினி யின் இயற்கை வரலாறு- மேற்குத் துறைமுகங்களைப் பற்றி
- இலங்கை இலக்கியங்களான மகாவம்சம் தீபவம்சம்- சேரன் செங்குட்டுவனைப் பற்றி எழுதப் பட்டவை

3. அயல் நாட்டினரின் நாட்குறிப்புக்கள்
   - யாத்திரிகர் குறிப்புக்கள்
   - வரலாற்று ஆராய்ச்சியாளர் குறிப்புக்கள்
     - பாஹியான்: சந்திரகுப்த மௌரியர் காலத்தில் வருகை புரிந்த இவர் சீனப் பயணி. தமிழ் நாட்டைக்குறித்து குறிப்புகளை விட்டுச் சென்றுள்ளார்.
     - யுவான் சுவாங்- 7ஆம் நூற்றாண்டில் வருகை புரிந்த இவர் சீனப்பயணி. இவருடைய குறிப்புக்கள் சரித்திரப் முக்கியத்துவம் வாய்ந்தவை.
     - பெஞ்சமினும் மார்கோபோலோவும்(13ஆம் நூற்றாண்டு) தமிழ் நாட்டின் சமூக நிலை சமூக வாழ்க்கை இவற்றைக் குறிப்பிட்டுள்ளனர்.
     - இபின் பதூதா மொராக்கோவிலிருந்து வந்த பயணி முஸ்லீம் படையெடுப்புக்கள் குறித்தும் மதுரை சுல்தானியம் குறித்தும் எழுதியுள்ளார்.

**உங்கள் முன்னேற்றத்தைப் பரிசோதிக்கவும்:**

3. நாணயங்களின் மூலம் நாம் அறிவது என்ன?
4. கல்வெட்டுக்கள் மூலம் நாம் என்ன தெரிந்துகொள்கின்றோம்?

## 1.4 திறன் அடைவிற்கான பரிசோதனை வினாக்களுக்கான விடைகள்

1. புவியியற்கூறுகள் ஒரு நாட்டின் செல்வம் செழுமை வளங்கள் இவற்றைத்தீர்மானிக்கின்றன. நாட்டின் முன்னேற்றம் இயற்கைச் செல்வங்களின் கொடையினால் மேன்மைப்படும் எனலாம்.
2. தமிழ் நாட்டின் வளமை பருவ மழையைப் பொறுத்து அமையும்
3. தொல்பொருள் நிபுணர்களால் கண்டுபிடிக்கப்பட்ட நாணயங்களின் மூலம் ஆட்சிகளின் விவரங்கள் தெரியவருகின்றன. ஆட்சி காலம் மன்னர்களின் பெயர் உருவங்கள் இலச்சினைகள் ஆளுகையின் பகுதிகள் போன்ற பல்வேறு குறிப்புக்கள் கிடைக்கின்றன.



ncs_t.indb 14 3/1/2019 8:35:26 AM

4. கல்வெட்டுக்கள் ஒரு ஆட்சியின் சரித்திர உண்மைகளைப் பறைசாற்றுவதாக அமைகிறது. இலக்கியக் குறிப்புக்களுடன் சரித்திர சான்றுகளைச் சேர்க்கும்போது சரித்திரம் உயிர்த்து எழுகிறது.

குறிப்பு

## 1.5 உரைச் சுருக்கம்

- புவியியல் கூறுகள் கலாச்சார வளர்ச்சிக்கும் முக்கியமான ஒரு காரணி. வரலாறு மற்றும் புவியியல் ஒன்றை மற்றொன்று தாங்கிச் செல்லும் பயணத்தில் புவியியலின் செழிப்பு வளர்ச்சி வரலாற்றையும் வரலாற்றின் நன்மை வன்மை புவியியலைக் கைகோர்த்து நிற்கச்செய்யும் கட்டாயம் உண்டு.
- தமிழ் நாட்டின் தனிப் பெருமையாக வடக்கே விந்தியா சாத்பூரா மலைத்தொடர் இயற்கையின் அரணாகச் செயல்படுகிறது. தமிழர் பண்பாடு கலாச்சாரம் மற்றும் அரசியல் இதனால் படையெடுப்புக்களிலிருந்து பாதுகாக்கப் பட்டது எனலாம்.
- குடகு- பிரம்மகிரியில் பிறக்கும் காவேரி மைசூர் வழியாகத் தென் கிழக்காகப் பாய்ந்து சென்று தமிழ் நாட்டை அடைகிறது. திருச்சிராப்பள்ளியில் கரிகாலவளவன் என்ற சோழமன்னனால் காவேரியைத் தடுத்துக் கட்டப்பட்ட கல்லணை பெருமை வாய்ந்தது. பொறியியல் கலையிலும் சிறப்பானதாகக் கருதப் படுகிறது.
- தொல்பொருள் சான்று வரலாற்றுக் குறிப்புக்களை சரித்திர உண்மையாக்கும் ஒரு கருவி எனலாம்.
- தொல்பொருள் ஆராய்ச்சி அறிக்கைகள் பெருமளவில் வரலாற்று உண்மைகளை ருசு செய்யவும் அறிஞர்கள் அவற்றை ஏற்றுக் கொள்ளவும் வழிவகை செய்கின்றன. புதைந்து கிடக்கும் சரித்திர சான்றுகள் பலவிதங்களில் கிடைக்கப் பெறுகின்றன: கட்டிடங்கள் நாணயங்கள் மண்டையோடுகள் நினைவுச்சின்னங்கள் கலைச்சின்னங்கள் மட்பானைகள் கருவிகள் ஆயுதங்கள் போன்றவை.
- கல்வெட்டுக்கள் ஒரு ஆட்சியின் சரித்திர உண்மைகளைப் பறைசாற்றுவதாக அமைகிறது. இலக்கியக் குறிப்புக்களுடன் சரித்திர சான்றுகளைச் சேர்க்கும்போது சரித்திரம் உயிர்த்து எழுகிறது.
- இலக்கியக் கூறுகள் கண்டறிந்த தொல்பொருள் சான்றுகளுடன் ஒப்பிடப் பட்டு ஊகங்கள் முடிவானதாகக் கொள்ளப் படுகின்றன.
- வரலாற்று ஆராய்ச்சியாளர்களின் பலகோணப் பதிவுகள் மூலம் தொல்பொருளும் ஒரு நிரந்தர வரலாற்று சான்றாக அமைகிறது. இதனால் ஆராய்ச்சி முற்றுப் பெறுகிறது.
- இலக்கியங்கள் வரலாற்றின் முதன்மையான சான்றாகக் கருதப் படுகிறது. அதன் மூலம் சமூக வளர்ச்சி பொருளாதார முன்னேற்றம் கலை பண்பாடு



ncs_t.indb 15 3/1/2019 8:35:26 AM

குறிப்பு

கலாச்சாரம் போன்றவை சமய ஈடுபாடுகள் எல்லாம் கோர்வையாக வரும் அரசியல் நிலை எழுச்சி வீழ்ச்சி நிலைகள் அனைத்தும் அறிந்து கொள்ளும் சாளரமாகப் பயன்படுகின்றன.

- அயல் நாட்டுப் பயணிகளின் குறிப்புக்கள் மிகச் சிறந்த வரலாற்றுக் குறிப்புக்களாகக் கொள்ளப் படுகின்றன.
- அயல் நாட்டவரின் பல இலக்கியங்களும் தமிழ் நாட்டின் வரலாற்று நிலைகளைப் படம் பிடித்துக் காண்பிக்குமளவில் அமைந்துள்ளன.

## 1.6 சுய பரிசோதனை- கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

### குறுகிய விடைகளுக்கான வினாக்கள்:

1. தமிழ் நாட்டு மலைத் தொடர்களின் பயன் என்ன?
2. தமிழ் நாட்டின் தட்ப வெப்ப நிலை மற்றும் மழை குறித்து குறிப்பு வரைக
3. இலக்கியத்தில் இடம்பெறும் வரலாற்றுச் சான்றுகள் எவ்வாறு வகைப் படுத்தப் படுகின்றன?

### விரிவான விடைகளுக்கான வினாக்கள்:

1. பண்டைய தமிழ் நாட்டின் புவியியல் கூறுகளை விவரிக்கவும்
2. தமிழ் நாட்டின் வரலாற்றில் தொல்பொருள் சான்றுகள் குறித்து விளக்கமாகக் கூறவும்
3. இலக்கியச் சான்றுகள் யாவை? இவற்றை விரிவாகக் கூறவும்.



ncs_t.indb 16 3/1/2019 8:35:26 AM

# அலகு 2 தமிழ் நாட்டின் கலாச்சாரம்



**அமைப்பு**

2.0 அறிமுகம்
2.1 கற்றலின் நோக்கங்கள்
2.2 பழைய கற்காலம்
2.3 இடைக் கற்காலம்
2.4 புதிய கற்காலம்
2.5 உலோக காலம்
2.6 பெருங்கற்காலம்
2.7 சுய பரீட்சைக்கு விடைகள்
2.8 கட்டுரைச் சுருக்கம்
2.9 சுய மதிப்பீடு: கேள்விகளும் பயிற்சிகளும்

## 2.0 அறிமுகம்

வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகம் நமக்கு இன்னும் ஒரு புரியாத புதிராகவே இருந்து கொண்டிருக்கிறது. இதன் மூல காரணம் எழுத்தும் படிப்பும். எழுதப்படிக்கத் தெரியாத ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி பற்றி வருங்காலம் அறிய முற்பட்டால் அதற்குத் தேவையான சாட்சியங்கள் இலக்கியம் மூலம் கிடைப்பதில்லை. அகழ்வு ஆராய்ச்சி மற்றும் புதை பொருள் கண்டு பிடிப்புக்கள் மூலம் தான் சில ஆதாரங்கள் பொருட்களாகப் பதிவாகின்றன. அறிஞர்கள் இவற்றை வைத்து அவர்களுடைய ஊகங்களுக்கு ஒரு விடையாக மட்டும் இந்த ஆதாரங்கள் தெளிவு படுத்துகின்றன.

சரித்திர ஆதாரங்கள்: அகழ்வுகளில் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புகள் பானைகள் ஓடுகள் மற்றும் உலோகங்கள் மூலமாக நமக்கு சில செய்திகள் மட்டும் தெளிவாகும்.

வரலாற்றுக்கு முற்பட்ட தமிழர் வாழ்க்கை ஆதாரங்களின் உபயோகம்: முக்கியமாக இதன் மூலம் நமக்கு ஒரு அளவு கோல் கிடைக்கிறது. எங்கிருந்து நாம் இங்கே வந்திருக்கிறோம் சமுதாயத்தில் நாம் எந்த நிலையில் நிற்கிறோம். போன்ற அசாதாராண கேள்விகளுக்கு சரியான பதில்களும் கிடைக்கும். அதே சமயத்தில் பல்வேறு சமுதாயங்களுடன் ஒப்பிடும்போது நமது புரிதல் அதிகமாகும்.

தமிழ் நாட்டின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை நாம் ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம்.

1. பழைய கற்காலம்
2. இடைக் கற்காலம்

3. புதிய கற்காலம்
4. உலோக காலம்
5. பெருங்கற்காலம்

குறிப்பு

1. **பழைய கற்காலம்:** இந்தக் கால நடைமுறைகள் பெரும்பாலும் மலைச் சரிவுகளிலும் காடுகளிலும் குகைகளிலும் வசிக்கக் கூடிய ஒரு இடம் விட்டு இடம் பெயர்ந்து செல்லக்கூடிய ஒரு நாடோடி வாழ்க்கையாகக் காணப்பட்டது. வேட்டையாடிய மாமிசம் மற்றும் காய் கனி பழங்களில் உயிர் வாழ்ந்தனர். இவர்கள் குவார்ட்சு கல் ஆயதங்களைப் பயன் படுத்தினர்.
2. **இடைக் கற்காலம்:** பழைய கற்கால மனிதர்களின் வாழ்க்கை முறையிலிருந்து இடைக்கற்கால மக்கள் சிறிது மேம்பட்டிருந்தது. வேட்டையாடுதல் மற்றும் வேறு உபதொழில்களிலும் இவர்கள் ஈடுபட்டனர்.சிறிய கற்களினால் ஆன கருவிகளை உபயோகித்தனர். மலை அடிவாரங்களில் வசிக்கத் தொடங்கினர். இடம் விட்டு இடம் பெயருவது குறைவாகக் காணப்பட்டது.
3. **புதிய கற்காலம்:** கலாச்சார வளர்ச்சிதான் இந்த கற்காலத்தின் பரிமாணம். மக்கள் வேட்டையாடுதல் மீன்பிடித்தல் மற்றும் விவசாயம் போன்ற பணிகளில் ஈடுபட்டனர். குடிசைகளையும் வீடுகளையும் அமைத்துக் கொண்டனர். இருப்பிடங்கள் ஏற்பட்டன.
4. **உலோக காலம்:** கற்காலத்தை ஒட்டி வந்த மாற்றங்கள் உலோக காலத்தில் தோன்றின.கற்களைவிட உலோகங்களின் உபயோகம் அதிகரித்தது. வாழ்க்கை முறைகளில் மாற்றங்கள் தோன்றின. சமுதாய கலாச்சார மேம்பாடுகளுடன் நாகரிகம் வளர்ந்தது.
5. **பெருங்கற்காலம்:** இந்தக் கால கட்டத்தில் வாழ்க்கை முறை மற்றும் கலாச்சார மாற்றங்கள் அதிக அளவில் காணப்பட்டன.கிராமங்கள் வீடுகள் குடும்பங்கள் போன்ற கலாச்சாரம் துவங்கியது. பெரிய அளவில் கற்பாறைகளினால் ஆன நினைவுச்சின்னங்கள இறந்தவர்களுக்காக உருவாக்கப் பட்டன. பழைய தொழில்களுடன் விவசாயம் முக்கிய அங்கமானது. இயற்கையின் பயன்களை அறிந்து கொண்டனர். கருவிகளும் ஆயதங்களும் நுண்ணியமானதாக உருவாக்கப்பட்டது.

## 2.1 கற்றலின் நோக்கங்கள்

இந்தப் பகுதியைப் படித்து முடித்ததும் உங்களால்:

- தமிழ் நாட்டின் கலாச்சாரப் பின்னணியைப் புரிந்துகொள்ள முடியும்
- பழைய கற்காலம் புதிய கற்காலம் பெருங்கற்காலம் குறித்து விவாதிக்க முடியும்
- ஒவ்வொரு காலத்தின் பரிமாணத்தையும் அதன் சிறப்புகளையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் பலன்களை உணர முடியும்

## 2.2 பழைய கற்காலம்

குறிப்பு

கி.மு 5 லட்சம் வருடங்களுக்கு முன்பிருந்து 15000 வருடம் வரையிலான ஒரு கால கட்டம் தமிழ் நாட்டில் பழைய கற்காலமாகக் கருதப் படுகிறது. இக் கால மக்கள் கல்லினாலான கோடாரிகளை உபயோகித்தனர். ராபர்ட் புரூஸ் பூட் என்ற ஆராய்ச்சியாளர் 1863 ல் பல்லாவரம் அருகில் இந்த கல் கோடாரியினைக் அகழ்ந்து எடுத்தார். இதைத் தவிர சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் கைக் கோடாரிகள் கத்திகள் போன்ற ஆயதங்களும் கருவிகளும் கண்டெடுக்கப்பட்டன. இவை சென்னை தொழில் நுட்பம் என்ற பெயரில் அழைக்கப்படுகின்றன.

செங்கல்பட்டு தஞ்சாவூர் வட ஆற்காடு போன்ற இடங்களில் கைக் கோடாரிகள் கல் வெட்டும் கருவிகள் செதுக்கும் கருவிகள் மற்றும் இருமுனைகளிலும் கூர்மையான கல் ஆயுதங்களும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர். இவை எல்லாம் வழுவழுப்பான கற்களினால் ஆனது. இவை குறைந்த திறனுள்ள தொழில் நுட்பத்தின் அடிப்படையில் செய்யப்பட்டதால் இது அசூலியன் தொழில் நுட்பம் என்று பெயர் பெற்றது.

வாழ்க்கை முறை: இவர்களின் வாழ்க்கை முறை மிகவும் பின்தங்கியிருந்தது. எழுத்தறிவு இல்லாததால் கல்விமுறை கிடையாது. வேட்டையாடுவதே தொழிலாக இருந்தது. மண் பானைகள் பாத்திரங்கள் இவற்றின் உபயோகங்களை எல்லாம் அவர்கள் அறிந்திருக்கவில்லை. சமைக்காத இறைச்சி காய் கனிகள் பழங்கள் இவற்றின் மூலம் உயிர் வாழ்ந்தனர். மலைக் குகைகளிலும் வெட்ட வெளிகளிலும் ஆற்றோரங்களிலும் நாடோடிகளாக இவர்கள் இடம் பெயர்ந்து வாழ்ந்து வந்தனர்.

## 2.3 இடைக் கற்காலம்

இந்த இடைப்பட்ட கற்காலம் கி.மு8000 முதல் 2000 வரையிலான கால கட்டத்தில் தமிழகத்தில் காணப்பட்டது என்பர். இவர்கள் சிறு கற்களைக்கொண்டு உருவாக்கப்பட்ட கருவிகளையும் ஆயதங்களையும் பயன்படுத்தி வந்தனர். கத்திகள் சுத்தியல் முக்கோணக் கருவிகள் சம்மட்டி கரண்டி வாள் இவற்றை கற்களினால் உருவாக்கினர். இந்த தொழில் நுட்பம் லெவசியன் தொழில் நுட்பம் எனப் பெயர் பெற்றது. இக் காலத்தில் தமிழ் மக்கள் தர்மபுரி குடியாமலை திருமங்கலம் கல்லுபட்டி திருநெல்வேலி ஏரல் மற்றும் நாசரேத் போன்ற இடங்களில் வசித்து வந்தனர் இவர்களுடைய ஆயதங்களும் பண்டைய ஆயுதங்களைப் போலல்லாமல் தொழில் நுட்பத்தில் சீரமைந்து இருந்தது. இவர்கள் மீன் பிடித்தல் வேட்டையாடுதல் போன்ற தொழில்களில் இருந்தனர். தவிர கலாச்சாரத்திலும் முன்னேறி இருந்தனர்.



ncs_t.indb 19 3/1/2019 8:35:26 AM

குறிப்பு

கலாச்சார முன்னேற்றத்தினால் அவர்கள் இருப்பிடம் மற்றும் வாழ்க்கை முறைகளில் மாற்றங்கள் தென்பட்டன எனலாம். மலை அடிவாரங்களில் வசித்த இவர்கள் இயற்கையை வணங்கினர். இறந்தவர்கள் புதைக்கப்பட்டனர். கடவுளை வணங்கத் தொடங்கினர். வழிபாடுகள் நடத்தினர்.கடந்த காலம் முன் ஜென்மம் மறுபிறப்பு போன்ற கருத்துக்களை ஏற்கத் தொடங்கினர்.

### உங்களின் சுய பரீட்சைக்குத் தயாரா?

1. பழைய கற்காலத்தில் உபயோகப் படுத்திய கற் கோடாரியினைக் அகழ்ந்து எடுத்தவர் யார்?
2. லெவாசியன் தொழில் நுட்பம் என்பது என்ன?

## 2.4 புதிய கற்காலம்

கி. மு 1500 முதல் 750 வரையிலான கால கட்டம் புதிய கற்காலம் எனப்படுகிறது. தமிழர்கள் இக் காலத்தில் வட ஆற்காடு, சேலம், கிருஷ்ணகிரி, சேர்வராயன் மலை, புதுக்கோட்டை, பழநி, கொடைக்கானல், போடி நாயக்கனூர், போன்ற இடங்களில் வசித்து வந்தனர்.

அவர்கள் உபயோகித்து வந்த கருவிகளின் தரத்தை வைத்து அவர்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் கலாச்சாரம் இவற்றில் முன்னேற்றம் காணப் பட்டது எனலாம். இவர்களுடைய கருவிகள் டியொரைட் டிராப்டைன் பசால்ட் போன்ற பொருட்களைக் கொண்டு உருவாக்கப் பட்டவை என்பதால் மென்மையாகவும் பளபளப்பாகவும் உறுதியாகவும் தரத்தில் உயர்ந்ததாகவும் தோன்றுகிறது.

அவர்களின் உபயோகத்தில் இருந்த கருவிகள் ஆயதங்கள்:

1. துளைக் கருவிகள்
2. கைக் கோடாரி
3. சுத்தியல்
4. கைப் பிடிகள்
5. வெட்டுக் கருவிகள்
6. பிடி கருவிகள்
7. சம்மட்டிகள்

இவர்கள் எலும்புகளினாலான கருவிகளையும் ஆயுதங்களையும் செய்து உபயோகித்தனர் எனப்படுகிறது.

தொழில்கள் இவர்கள் மீன்பிடித்தல் வேட்டையாடுதல் விவசாயம் ஆகிய தொழில்களில் ஈடுபட்டனர் என்று தெரிகிறது. கானகங்களை அழித்து விவசாய பூமிகளாக மாற்றி பயிரிடத் தொடங்கினர். ஆராய்ச்சியாளர்கள் புதிய கற்கால மக்களைப் பற்றிய இன்னும் சில தகவல்களை முன்வைத்துள்ளனர்.



ncs_t.indb 20 3/1/2019 8:35:26 AM

குறிப்பு

- நிலத்தைப் பண்படுத்தி பயிரிடும் வேலைகளில் ஈடுபட்டனா
- உழவுக்காக அவர்கள் கூர்மையான கருவிகளைப் பயன்படுத்தினர். கோடாரிகளையும் அவர்கள் உபயோகித்தனர்.
- நிரந்தர குடியிருப்புக்களை ஏற்படுத்திக் கொண்டனர்
- வீடுகளை களிமண் சுவர் எழுப்பிக் கட்டினர்
- தரைகளை சதுரம் செவ்வகம் வட்டம் போன்ற வடிவங்களில் ஏற்படுத்தினர்.
- கூரைகள் புற்களினாலும் இலைகளினாலும் வேயப் பட்டன
- பசு நாய் ஆடு காளைகள் வளர்க்கப் பட்டன

### கலாச்சார குறிப்புக்கள்

- இவர்கள் முந்தைய கற்கால மக்களை விட நாகரிகத்தில் முன்னேறி இருந்தனர்
- கூடுதலான தொழில்களில் ஈடுபட்டிருந்தனர்
- விலங்குத்தோல் பருத்தி நூலாடை மர உரி ஆடைகள் இவற்றை உடுத்தனர்
- கற்பாறைகள் கலை நயத்துடன் சித்திரங்களாலும் ஓவியங்களாலும் அலங்கரிக்கப் பட்டன
- ஆபரணங்கள் அணியும் வழக்கம் நாகரிகமாகக் கருதப் பட்டது
- ஆடை அணிகலங்கள் மற்றும் அலங்காரங்கள் முக்கியமானதாகக் கருதப்பட்டது
- வழிபாட்டு முறைகள் ஆரம்பமாயின
- இயற்கையை வணங்கி வந்தனர்

## 2.5 உலோக காலம்

புதிய கற்காலத்தைத் தொடர்ந்து உலோக காலம் தொடங்கியது. இக் காலத்தில் தமிழர் தம் வாழ்க்கை முறையில் அடிப்படை மாற்றங்கள் நிகழ்ந்தன. இக்காலக் கருவிகள் மற்றும் ஆயுதங்கள் யாவும் உலோகத்தினால் செய்யப் பட்டவைதாம்.வட இந்தியாவின் உலோக காலத்தில் செப்பு அதிக அளவில் பயன்படுத்தப்பட்ட காலம் ஆகும். ஆனால் தமிழ் நாட்டின் உலோக காலத்தில் இரும்பு அதிக அளவில் பயன்படுத்தப்பட்டது. இதற்கான தொல்பொருள் சான்றுகளும் கண்டறியப்பட்டுள்ளன. இரும்பின் பயனால் ஆயுதங்கள் கருவிகள் அனைத்தும் இரும்பால் ஆனது என்ற நிலை ஏற்பட்டது. வீட்டுக் கருவிகளும் பாத்திரங்களும் இரும்பினால் செய்யப் பட்டன. இதனால் வாழ்க்கை முறையில் ஒரு பெரும் மாறுதல் ஏற்பட்டது. நிரந்தர இருப்பிடங்கள் உண்டானதால் சமூக கோட்பாடுகளும் சமூக பழக்க வழக்கங்களும் ஏற்படுத்தப்பட்டன. சமுதாய



ncs_t.indb 21 3/1/2019 8:35:26 AM

முன்னேற்றம் புலப்பட்டது. இவர்களின் விளை நிலங்களில் நெல் மற்றும் பல பயிர்களைச் சாகுபடி செய்தனர்.

குறிப்பு

**உங்களின் சுய பரீட்சைக்குத் தயாரா?**

3. புதிய கற்காலத்தில் தமிழர்கள் எந்தெந்தப் பகுதிகளில் காணப்பட்டனர்?
4. உலோக காலத்தினால் ஏற்பட்ட அபரிமித வாழ்க்கை முறையில் மாற்றங்கள் எதனால் என்று கூறவும்.

## 2.6 பெருங்கற்காலம்

கி.மு 700 முதல் 300 வரையிலான காலம் பெருங்கற்காலம் என்று குறிப்பிடப்படுகிறது. இக் காலத்தில் வாழ்ந்த தமிழர்கள் விட்டுச்சென்ற ஆதாரங்களை ஆதிச்ச நல்லூர், செங்கல்பட்டு, நீலகிரி போன்ற இடங்களில் தொல் பொருள் ஆராய்ச்சியினர் கண்டறிந்துள்ளனர்.

பெருங்கற்கால நடைமுறைகளில் முக்கியமாகத் தென்படும் ஒரு ஆதாரம் பெரிய வட்டவடிவிலான கல் நினைவுச்சின்னங்கள். இறந்தவர்களின் கல்லறைகளின் மேல் எழுப்பப் படும் பெரிய அளவிலான கற்சின்னங்கள் இந்தத் தலைமுறையினரின் அடையாளமாகும்.

இந்தக் கால வழக்கங்களில் மூன்று விதமான புதைக்கும் நேர்த்திகள் தெரியவந்தன:

1. மண்பானை முறை
2. நடுக்கல் முறை
3. மேல்கல் முறை

இறந்தவர்கள் பள்ளத்தாக்குகளிலும் பீடபூமிகளிலும் புதைக்கப்பட்டனர். கல்லறைகள் பெரும் கற்களைக் கொண்டு உருவாக்கப்பட்டன.

விவசாயம் முக்கிய தொழிலாகக் கொள்ளப்பட்டது. நெல் தானியங்கள் போன்றவை விளைவிக்கப் பட்டன.

இக்கால மக்கள் கதிர் அறுக்கும் அரிவாள் மண்வெட்டி கோடாரி பாறைக்கற்கள் இவற்றைப் பயன்படுத்தி வந்தனர்.

கறுப்பும் சிவப்புமான மண் பானைகள் இக் கால வீடுகளில் பாத்திரங்களாகப் பயன்படுத்தப்பட்டு வந்தன. இவற்றில் அம்பு நட்சத்திரம் முக்கோணம் ஆகிய பல குறியீடுகள் காணப்பட்டன. வரலாற்று அறிஞர்கள் இவற்றின் முக்கியத்துவம் குறித்து ஆராய்ந்து வருகின்றனர்.

இவர்கள் நிரந்தர இருப்பிடங்களில் வசித்து வந்தனர். கிராமங்கள் உருவாயின.



ncs_t.indb 22 3/1/2019 8:35:26 AM

குறிப்பு

இரும்பில் தயாரிக்கப்பட்ட கத்தி வாள் ஈட்டி அம்பு வில் இவற்றை அவர்கள் ஆயுதங்களாகக் கொண்டனர்.

இந்த ஆதாரங்களின் மூலம் நாம் பெருங்கற்கால மக்கள் சமூக பொருளாதார சமய வாழ்வில் பெரியதொரு முன்னேற்றத்தைக் கண்டுள்ளனர் என்று அறிகிறோம்.

இந்த ஆதாரங்கள் மற்றும் நமது வரலாற்று ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி தமிழர்கள் இனம் பழமையானது தமிழ் மொழி மிகவும் தொன்மையானது.கி.மு 300 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட இனமும் மொழியும்.

**உங்களின் சுய பரீட்சைக்குத் தயாரா?**

5. பெருங்கற்காலத்தின் முக்கிய அம்சம் எது?
6. பெருங்கற்காலத்தில் விளைந்த பயிர்கள் என்ன?

## 2.7 சுய பரீட்சைக்கு விடைகள்

1. ராபர்ட் புரூஸ் பூட் என்ற ஆராய்ச்சியாளர் 1863 ல் பல்லாவரம் அருகில் பழைய கற்கால கல் கோடாரியினை அகழ்ந்து எடுத்தார்.
2. இடைக்கற்காலத் தமிழர்கள சிறு கற்களைக்கொண்டு உருவாக்கப்பட்ட கருவிகளையும் ஆயதங்களையும் பயன்படுத்தி வந்தனர். கத்திகள் சுத்தியல் முக்கோணக் கருவிகள் சம்மட்டி கரண்டி வாள் இவற்றை கற்களினால் உருவாக்கினர். இந்த தொழில் நுட்பம் லெவசியன் தொழில் நுட்பம் எனப் பெயர் பெற்றது.
3. தமிழர்கள் இக் காலத்தில் வட ஆற்காடு சேலம் கிருஷ்ணகிரி சேர்வராயன் மலை புதுக்கோட்டை பழநி கொடைக்கானல் போடி நாயக்கனூர் போன்ற இடங்களில் வசித்து வந்தனர்.
4. வட இந்தியாவின் உலோக காலத்தில் செப்பு அதிக அளவில் பயன்படுத்தப்பட்ட காலம் ஆகும். ஆனால் தமிழ் நாட்டின் உலோக காலத்தில் இரும்பு அதிக அளவில் பயன்படுத்தப்பட்டது.இரும்பின் பயனால் ஆயுதங்கள் கருவிகள் அனைத்தும் இரும்பால் ஆனது என்ற நிலை ஏற்பட்டது. வீட்டுக் கருவிகளும் பாத்திரங்களும் இரும்பினால் செய்யப் பட்டன. இதனால் வாழ்க்கை முறையில் ஒரு பெரும் மாறுதல் ஏற்பட்டது.
5. பெருங்கற்கால நடைமுறைகளில் முக்கியமாகத் தென்படும் ஒரு ஆதாரம் பெரிய வட்டவடிவிலான கல் நினைவுச்சின்னங்கள். இறந்தவர்களின் கல்லறைகளின் மேல் எழுப்பப் படும் பெரிய அளவிலான கற்சின்னங்கள் இந்தத் தலைமுறையினரின் அடையாளமாகும்.
6. விவசாயம் முக்கிய தொழிலாகக் கொள்ளப்பட்டது. நெல் தானியங்கள் போன்றவை விளைவிக்கப் பட்டன.

## 2.8 கட்டுரைச் சுருக்கம்

குறிப்பு

- வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகம் நமக்கு இன்னும் ஒரு புரியாத புதிராகவே இருந்து கொண்டிருக்கிறது.எழுதப்படிக்கத் தெரியாத ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி பற்றி வருங்காலம் அறிய முற்பட்டால் அதற்குத் தேவையான சாட்சியங்கள் இலக்கியம் மூலம் கிடைப்பதில்லை.
- அகழ்வு ஆராய்ச்சி மற்றும் புதை பொருள் கண்டு பிடிப்புக்கள் மூலம் தான் சில ஆதாரங்கள் எலும்பு பானைகள் கருவிகள் போன்ற பொருட்களாகப் பதிவாகின்றன. அறிஞர்கள் இவற்றை வைத்து அவர்களுடைய ஊகங்களுக்கு ஒரு விடையாக மட்டும் இந்த ஆதாரங்கள் தெளிவு படுத்துகின்றன.
- இந்த அலகில் கி.மு 5 லட்சம் வருடங்களுக்கு முன்னால் வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகம் சந்தித்த சந்ததியினர் அவர்களுடைய சமூக பொருளாதார மற்றும் நாகரீக வளர்ச்சியின் ஒரு கண்ணோட்டம் ஆகியவை கொடுக்கப்பட்டுள்ளன.
- தமிழ் நாட்டின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை நாம் ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம். பழைய கற்காலம் இடைக் கற்காலம் புதிய கற்காலம் உலோக காலம் பெருங்கற்காலம்
- தமிழர் இனமும் மொழியும் தொன்று தொட்ட தொன்மையான ஒன்று என்பதில் சரித்திர வல்லுனர்கள் ஆதாரத்துடன் முடிவு செய்துள்ளார்கள். கி.மு.300 முதல் தமிழ் மொழி உபயோகத்தில் உள்ளது.

## 2.9 சுய மதிப்பீடு: கேள்விகளும் பயிற்சிகளும்

### சிறிய கேள்விகள்

1. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைக் கண்டறிதலின் பயன் என்ன?
2. புதிய கற்காலத்தில் ஏற்பட்ட கலாச்சார மாற்றங்கள் என்னென்ன?
3. பெருங்கற்காலத்தின் முக்கிய அம்சங்கள் என்ன?

### விரிவான பதில்களுக்கான கேள்விகள்

1. பழைய கற்காலத்தின் கலாச்சாரத்தைப் பற்றி விவரிக்கவும்
2. புதிய கற்காலத்தின் முக்கிய அம்சங்களைப் பற்றி விரிவாகக் கூறவும்.
3. இடைக் கற்காலம் தமிழர்களின் மறுமலர்ச்சிக் காலம் மதிப்பீடு செய்யவும்



ncs_t.indb 24 3/1/2019 8:35:27 AM

# அலகு 3 சங்ககாலம் மற்றும் தொன்மை வாய்ந்த இலக்கியங்கள்

குறிப்பு

**அமைப்பு**

3.0 அறிமுகம்
3.1 நோக்கங்கள்
3.2 சங்கம் என்பது என்ன?
    3.2.1 பண்டைய இலக்கியங்கள்
    3.2.2 சங்ககாலம்- சமூக மற்றும் பொருளாதார பழக்கவழக்கங்கள்
3.3 தமிழ் அரசுகள்- சங்க காலம்- சமூக பொருளாதார சமய நிலைகள்
    3.3.1 சேரர்கள்
    3.3.2 சோழர்கள்
    3.3.3 பாண்டியர்கள்
    3.3.4 குறுநில மன்னர்கள்
3.4 திறன் அடைவிற்கான பரிசோதனைக் கேள்விகள்
3.5 உரைச் சுருக்கம்
3.6 முக்கிய சொற்கள்
3.7 சுய பரிசோதனை கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
3.8 மேலும் படிக்க

## 3.0 அறிமுகம்

தமிழக மக்களின் பொற்காலம் என்று இன்றும் சிறப்புப் பெறும் காலம் சங்க காலமாகும். அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி அடைந்து மக்கள் வீரம் மிக்கவர்களாகவும் இலக்கியத் திறமை உள்ளவர்களாகவும் சமூகம் மேம்பாடு அடைந்தாகவும் நாகரிக வளர்ச்சி பெற்று பொருளாதாரத்திலும் ஒரு வளமையான வாழ்க்கைமுறையை ஏற்படுத்திக் கொண்டதாகவும் விளங்கியது. இக்காலத்தில் மூவேந்தர்களான சேர சோழ பாண்டியர்களின் ஆட்சியும் பல குறு நில மன்னர்களின் ஆட்சியும் நடந்தன. கல்விக்கு முதலிடமும் கலை இயல் இசை நாடகம் இலக்கியம் உல்லாசம் வாணிபம் (இதில் வெளி நாட்டு வாணிபமும் சேர்ந்தது) சமயப் பற்று அதை ஒட்டிய நீதி மற்றும் உயர் கருத்துக்களுக்கும் நேர்மை நியாயக் கோட்பாடுகளுக்கும் முக்கியத்துவமும் இருந்தன. இக்காலத்தை ஒப்பிட்டே முந்தைய ஆட்சிகளின் திறனைக் கணித்தனர் எனலாம்.

கல்விக்குப் பெற்றோர் முதலிடம் கொடுத்தனர். சங்க கால இலக்கியங்களும் அகம் புறம் என்று பிரித்து நீதியையும் ஒழுக்க நெறியினையும்



ncs_t.indb 25 3/1/2019 8:35:27 AM

கற்பித்தன. அகம் என்பது அன்பு காதல் வீரம் கருணை போன்ற அகச் சிறப்புக்களையும் புறம் என்பது சமூகம் மற்றும் மனித வாழ்க்கை முறை பொருளாதார முறைகள் போன்றவற்றையும் குறிப்பிட்டன.

**குறிப்பு**

முச்சங்கங்கள் பாண்டிய மன்னர்களால் நிறுவப்பட்டு அவை தமிழையும் தமிழ்ப்புலவர்களின் இலக்கியங்களையும் வளர்த்தன. சங்க காலம் என்ற பெயர் இந்த சங்கங்களால் ஏற்படுத்தப் பட்ட புகழ் எனலாம். சங்கப் பலகை பெரும் பெயர் பெற்றது.

இந்த அலகின் மூலம் நீங்கள் சங்க கால இலக்கிய- பாரம்பரிய மற்றும் கலை வளர்ச்சி குறித்தும் மூவேந்தர்களின் கீழ் தமிழ் நாட்டின் பொருளாதார சமூக கலாச்சார வளர்ச்சி பற்றியும் அறிந்து கொள்ள இயலும்.

## 3.1 நோக்கங்கள்

இந்த அலகில் நீங்கள் கீழ்க்கண்டவற்றின் விவரங்களை அறிந்து கொள்ள இயலும்.

- சங்க காலத்தின் வரலாற்றை அறிந்து கொள்ளுதல்
- சங்ககாலத் தொன்மை வாய்ந்த இலக்கியங்களை அறிந்து கொள்ளுதல்
- சங்க காலத் தமிழரசுகள் மற்றும் மன்னர்கள் குறித்து அறிந்து கொள்ளுதல்

## 3.2 சங்கம் என்பது என்ன?

தமிழ்ப்புலவர்களின் ஒருங்கிணைந்த அமைப்பு ஆகும் சங்கம். கி.மு 500 முதல் கி.மு 300 வரையிலான காலம் தென்னிந்தியாவில் சங்க காலம் எனப்படுகிறது.

சங்க கால இலக்கியங்கள் எதிர்காலத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் தமிழரின் வாழ்க்கை நெறிகளுக்கும் முறைகளுக்கும் ஒரு அளவு கோலாகவும் ஒரு வரைபடமாகவும் அமைந்தது என்றால் அது மிகையாகாது. ஆண் பெண் இரு பாலாரும் இயற்றிய பாடல்கள் கவிதைகள் சங்கத் தமிழ் இலக்கியங்களில் உள்ளன. இவர்கள் வெவ்வேறு தொழில் களிலும் வியாபாரங்களிலும் ஈடுபட்டுவந்த பின்னணியை உடைய அறிஞர்களாவர்.கி.பி 1000ஆம் ஆண்டில் இவை தொகுக்கப்பட்டு பற்பல இலக்கியக் கோவைகளாக வைக்கப் பட்டன. பின்னர் இவை டாக்டர் உ.வே. சாமினாத ஐயர் ஆறுமுக நாவலர் மற்றும் தாமோதரம்பிள்ளை இவர்களால் 19ஆம் நூற்றாண்டில் மீண்டும் கண்டெடுக்கப்பட்டு உயிர்ப்பிக்கப்பட்டன.

சங்கம் என்ற சமஸ்கிருதத்திலிருந்து பிறந்த் சொல் ஒரு சபையைக் குறிக்கிறது. இச்சபையில் முனிவர்கள் புலவர்கள் இவர்களின் தலைமையைத் தவிர இறைவனின் பங்கேற்பும் கூடி இருந்ததாகப் புராணத் திருவிளையாடல்கள் குறிப்பிடுகின்றன. இவற்றின் சிறப்பு பாண்டிய மன்னர்களின் ஆதரவுடன் சங்கத்தில் தமிழ் வளர்த்தனர் என்ற ஆழ்ந்த கருத்து இருந்ததுதான்.



ncs_t.indb 26 3/1/2019 8:35:27 AM

1. முதற் சங்கம்: தலைச் சங்கம் எனப்பட்ட இது தென் மதுரையில் அமைந்திருந்தது. இதன் தலைவர் அகஸ்திய முனிவர் ஆவர். இதுவே மதுரைத் தமிழ்ச் சங்கமாகும். இதில் தோன்றிய இலக்கியங்கள் யாவும் நமக்குக் கிடைக்காமல் கால வெள்ளத்தில் அழிந்து போயின என்று கருதப் படுகின்றது.காய் சினவழுதி முதல் கடுங்கோன் ஈறாக 89 மன்னர்கள் சங்கம் வளர்த்த புரவலர்கள் ஆவர்.

   நூல்கள்: பரிபாடல் முது நாரை முதுகுருகு களரியாவிரை முதலியன

2. இடைச் சங்கம் கபாடபுரம் என்ற இடத்தில் அமைந்த இடைச் சங்கம் தொல்காப்பியரால் இயற்றப் பட்ட தொல்காப்பியத்தைக் கொண்டு பெருமை பெற்றது.அகஸ்திய முனிவர் தோற்றுவித்த இந்தச் சங்கம் பின்னர் அவருடைய சீடர் தொல்காப்பியனால் தலைமை தாங்கப் பட்டது. வெண்தேர்ச் செழியன் முதல் முடத்திருமாறன் ஈறாக 59 அரசர்கள் இடைச் சங்கம் வளர்த்த சங்கப் புரவலர்களாவர்.

   நூல்கள்: கலி குருகு வெண்டாளி வியாழ மாலை அகவல் மாபுராணம் பூத புராணம் இசை நுணுக்கம் முதலியன.

3. கடைச் சங்கம்: இது மதுரையில் நக்கீரனால் தோற்றுவிக்கப் பட்டது. இதன் மூலம் பல இலக்கியங்கள் இலக்கியப் பேழைகள் உருவாயின எனலாம். இந்த இலக்கியங்களே இன்றைய தமிழ் இலக்கியத்திற்கான அடிப்படை இலக்கணங்களாக விளங்குகின்றன. முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி ஈறாக 49 அரசர்கள் கடைச் சங்கம் வளர்த்த புரவலர்களாவர்.

   முச்சங்கம்: முச்சங்கங்களில் தென் மதுரை தலைச் சங்கமும் கபாடபுரம் இடைச்சங்கமும் ஒரு பிரளயத்தில் நீருக்கு இரையாயின. இதன்பின்னர் பாண்டிய மன்னர்களால் கடைச் சங்கம் மதுரையில் நிறுவப் பட்டது. நாமறியும் தமிழ்ச் சங்கம் மதுரைச் சங்கமான கடைச் சங்கமேயாகும். மற்ற சங்கங்களின் படைப்புக்கள் அனைத்தும் இந்துமாக் கடலில் மூழ்கிய நிலையில் கால வெள்ளத்தில் கரைந்து போயின. சங்க இலக்கியங்கள் பண்டைய தமிழகத்தின் தொன்மையான பழமையான இலக்கியங்கள் ஆகும். அக நானூறு குறுந்தொகை நற்றிணை இவற்றில் 2381 பாடல்கள் 473 புலவர்களால் பாடப் பெற்றவையாகும். இதில் 102 புலவர்களின் பெயர்கள் தெரியவில்லை.

## சங்க இலக்கியங்களின் வகைகள்

இவை இரு வகைப் பட்டன. 1. அகம் 2 புறம். அகம் மற்றும் புறத்திற்கிடையான வேறுபாடுகள் பின்பற்றப்படவில்லை என்றாலும் அர்த்தங்களின் மேல் அவை அகம் என்றும் புறம் என்றும் தரம் பிரிக்கப் பட்டன.

பரிபாடல் என்ற இலக்கியத்தைத் தவிர மற்ற சங்க இலக்கியங்கள் மக்களின் உறவுகள் அவர்களின் அந்தரங்க தனித்துவ குணங்களான அன்பு

காதல் வீரம் சோகம் கருணை போன்றவற்றை வெளிப்படுத்தின என்கிறார் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி அவருடைய புத்தகத்தில்.

**குறிப்பு**

## தொகுப்புக்கள்

சங்க இலக்கியங்களின் தொகுப்பு இரண்டு தொகுதிகளாகத் தொகுக்கப் பட்டன:

1. பதினெண்மேல்கணக்கு

   பதினெண்மேல்கணக்கில் எட்டுத்தொகை பத்துப்பாட்டு ஆகிய இரு இலக்கியங்களும் சேர்க்கப் பட்டன

2. பதினெண்கீழ்க்கணக்கு

   பதினெண்கீழ்க்கணக்கில் ஏனைய இலக்கியங்கள் சேர்க்கப் பட்டன.

   திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப் பட்ட திருக்குறள் தமிழ் மறையாகவும் உலகத்திருமறையாகவும் கருதப் படுகிறது.

திருவள்ளுவர் அவருடைய நூலில் ஒழுக்கம் நற்குணங்கள் செல்வம் காதல் என்பதனைப் பற்றிக் கூறும்போது மாமூலனார் என்ற சங்கப்புலவர் சரித்திர நிகழ்வுகளைக்கொண்டு அவருடைய புத்தகத்தை இயற்றினார்.

ஏ. கே. இராமானுஜம் அவர்கள் சங்கத் தமிழ்ப் பாடல்கள் அறிவுக்கூர்மையை வெளிப் படுத்துவதாகவும் பொருட்செறிவு மிக்கதாகவும் குறுகிய வெண்பாக்களில் நிறைந்து இருந்த பொருள் பொதிந்த அர்த்தங்களை நுணுக்கமாகச் செய்திகளை வெளிப்படுத்துவதாகவும் சிறப்பை அடைந்துள்ளன என்று மேல் நாட்டு அறிஞர் காமில் ஜ்வேலைபில்லின் (Kamil Zvelebil) மேற்கோளை எடுத்துக் காட்டுகிறார்.

### 3.2.1 பண்டைய இலக்கியங்கள்

சங்க நூல்கள் காவியங்கள் என்றும் மற்ற இலக்கியங்கள் என்றும் பிரிக்கப் பட்டுள்ளன

**காவியங்கள்:**

1. சிலப்பதிகாரம் (இளங்கோ அடிகள் இயற்றியது)
2. மணிமேகலை (சீத்தலைச் சாத்தனார்)

   இதர இலக்கியங்களில்

3. பத்துப் பாட்டு
4. எட்டுத்தொகை
5. பதினெண்கீழ்க்கணக்கு மற்றும்
6. தொல்காப்பியம்

இடம் பெறுகின்றன.


ncs_t.indb 28 3/1/2019 8:35:27 AM

## சங்க இலக்கியங்களில் இரண்டு முக்கிய பிரிவுகள்

குறிப்பு

1. அகத்தியம் (அகத்திய முனிவரின் தலைமையில் இயற்றப் பட்டவை)
2. தொல்காப்பியம் (அவருடைய சீடர் தொல்காப்பியரின் தலைமையில் இயற்றப் பட்டவை)

சிறப்பான இரண்டு சங்ககால இலக்கியங்கள் கீழ் வருமாறு:

1. தொல்காப்பியம்- தொல்காப்பியர் இயற்றியது. இது பெரும்பாலும் இலக்கணமாகக் கருதப் பட்டாலும் சமூக பொருளாதார நிகழ்வுகளையும் குறிக்கிறது.
2. எட்டுத்தொகை: இதில் பதினெண்மேல்கணக்கு (எட்டு தொகுப்புக்கள்) மற்றும் பத்துப்பாட்டு (பத்து பாயிரங்கள்) இவற்றின் தொகுப்பாகும்.

## எட்டுத்தொகை:

1. ஐங்குறு நூறு தொகுத்தவர்: புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் என்ற புலவராவார். இது 500 வரிசைகளைக் கொண்டது. ஐந்துவகைத்திணைகளைக் (நிலங்களை) குறித்தும் பாண்டிய மன்னர்கள் குறித்தும் செய்திகள் காணப்படுகின்றன.
2. அகநானூறு 400 பாடல்கள் கொண்டது. மனிதர்களின் உணர்வுகள் குறித்துப் பாடப் பெற்ற இவை பாண்டிய மன்னன் உக்கிரப் பெருவழுதியின் கீழ் தொகுக்கப்பட்டன. மௌரியர் படையெடுப்பு தொண்டை மண்டல திரையர்கள் போன்ற பல வரலாற்று உண்மைகள் இதில் உள்ளன.
3. புறநானூறு: இது சங்க கால மன்னர்கள் குறு நில மன்னர்கள் குறித்தும் போர் முறைகள் கொடை ஆரியரின் ஆதிக்கம் போன்றவை குறித்தும் குறிப்பிடுகிறது.
4. கலித்தொகை: ஐந்து திணைகளில் ஏற்பட்டும் காதல் மற்றும் உணர்ச்சிப்பூர்வமான வாழ்க்கை குறித்து 5 கவிஞர்கள் 250 கவிதைகளை எழுதியுள்ளனர்.
5. குறுந்தொகை: புரிக்கோ என்பவரால் இயற்றப்பட்டது. 402 வரிகளில் சமணர்களின் வாழ்க்கைமுறைகள் அவர்களுடைய இயல்புகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது.
6. நற்றிணை: 400 பாடல்களைக் கொண்டது இந்நூல. சிற்றரசர்களான ஓமு பாமு அதிகன் நின்னன் மலையன் பாணன் இவர்களைப்பற்றிக் குறிப்பிடுகிறது. மேலும் தொண்டி கொற்கை மருதூர்ப்பட்டிணம் புனல்வாயில் இரப்பையூர் குடந்தை போன்ற ஊர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. ஐந்து திணைகளில் உண்டான வரலாற்றுக் குறிப்புக்களையும் கூறுகின்றன.
7. பரிபாடல்: சங்க காலத்து சமய வாழ்க்கைமுறை குறித்து இந்நூல் கூறுகிறது. திருமால் கொற்றவை முருகன் வைகை நதி ஆகியவற்றைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

8. பதிற்றுப்பத்து: சேர மன்னர்களைப் பற்றிப் பல புலவர்கள் பாடிய பாடல்கள் இவை. சங்க கால சமூக பொருளாதார நிலைகளைக் குறிப்பிடுகிறது.

குறிப்பு

**பத்துப் பாட்டு: பத்து நூல்கள் இதில் இடம் பெற்றுள்ளன.**

1. திருமுருகாற்றுப்படை நக்கீரரால் இயற்றப் பட்டது. முருகக் பெருமானைப் புகழும் பாடல்கள்
2. குறிஞ்சிப் பாட்டு இத்திணையின் வாழ்க்கைமுறை குறித்துப் பாடுகிறது
3. மலைப்படுகடம் இது அகத்தைக் குறிப்பது. உணர்வுகளைக் குறித்துப் பாடப் பெற்றவை.
4. மதுரைக் காஞ்சி: மதுரை நகர் வாழ்வியலைக் குறித்தும் மன்னன் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் போர்கள் குறித்தும் சொல்லப் பட்டுள்ளன.
5. முல்லைப் பாட்டு: நிப்பூதனார் இயற்றிய இவை முல்லை நிலத்தின் வாழ்வு முறைகள் குறித்த பாடல்களாகும்.
6. நெடு நல்வாடை: நக்கீரன் இயற்றிய இ ந் நூலில் புறத்தைப் பற்றிய குறிப்புக்கள் அதிகம். பாண்டியன் நெடுஞ்செழினின் வீரம் கொள்கைகள் குணங்கள் வாழ்வு முறை போன்றவை இடம் பெற்றுள்ளன.
7. பட்டினப்பாலை: பாலை நில அமைப்பு மற்றும் வாழ்வு முறை குறித்து உள்ளது
8. பெரும்பாணாற்றுப் படை: நல்லூர் கடியலூர் உருத்திரக்கண்ணார் இயற்றியவையாகும். இதில் காஞ்சி அரசன் தொண்டைமான் குறித்தும் இசைக் கருவி யாழ் குறித்தும் சொல்லப் பட்டிருக்கின்றன.
9. பொருநராற்றுப்படை: முடத்தாம கண்ணியார் இயற்றியது இ ந் நூல். பரிசில் பெற்று வந்த பொருநர் தான் பெற்று வந்த வள்ளலிடம் சென்று பரிசில் பெறுமாறு வழிப் படுத்துகிறான். இதில் கரிகால சோழனைப் பற்றிய தகவல்கள் கிடைக்கின்றன.
10. சிறுபாணாற்றுப்படை: நல்லூர் நத்த தத்தனார் இயற்றியவை இவை. கடை ஏழு வள்ளல்களின் பெருமை குறித்துப் பாடப் பெற்றவை. இவை சங்க காலத்திற்கு முந்தைய காலத்தில் இயற்றப் பட்டதாகக் கருதப் படுகிறது. 269 வரிகள் உள்ளன.

**பதினெண்கீழ்க்கணக்கு: இவற்றில் 18 நூல்கள் உள்ளன.**

1. நாலடியார்
2. திணைமாலை நூற்று ஐம்பது
3. நான்மணிக்கடிகை
4. திருக்குறள்
5. இன்னா நாற்பது

குறிப்பு

6. திரிகடுகம்
7. இனியவை நாற்பது
8. ஆசாரக் கோவை
9. கல் நாற்பது
10. பழமொழி நானூறு
11. களவழி நாற்பது
12. சிறுபாங்கமூலம்
13. ஐந்திணை ஐம்பது
14. முதுமொழிக்காஞ்சி
15. திணைமொழி ஐம்பது
16. ஏலாதி
17. ஐந்திணை எழுபது
18. கை நிலை

### 3.2.2 சங்ககாலம்- சமூக மற்றும் பொருளாதார பழக்கவழக்கங்கள்

சங்க கால வாழ்க்கையைப் புரிந்து கொள்ள நாம் ஆங்கே தோன்றிய நடை முறைகளையும் அவர்தம் வாழ்க்கை முறைகளையும் சமுதாய உள்ளுணர்வுகளும் பல நிலை நிலப் பரப்புக்களும் அவற்றின் தன்மையையும் தெரிந்து கொள்வது அவசியம்.

வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் இன்னும் சங்க கால கால நிர்ணயத்தினை முழுவதுமாக ஒப்புக் கொள்ள வில்லை எனலாம். கிடைத்த ஆதாரங்களை யும் இலக்கியம் மற்றும் அகழ்வுகளில் கிடைத்த சான்றுகள் மூலம் சங்ககாலம் கி.மு 300 முதல் கி.பி 300 வரையிலானது என்று கொள்ளப் படுகிறது.

**அட்டவணை 3.1 சங்ககால நிர்ணயத்திற்கான சான்றுகளின் விவரம்**

| வரலாற்று அறிஞர் | சங்ககாலத்தின் கால நிர்ணயம் | சான்றுகளின் விவரங்கள் |
|---|---|---|
| வீ. கனகசபை | இன்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது | சங்ககால இலக்கியங்கள் |
| வீ.ஆர்.இராமசந்திர தீட்சிதர் மற்றும் கே. ஆர். சீனிவாச ஐயங்கார் | கி.மு 6 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 5 ஆம் நூற்றாண்டு வரை | சங்ககால இலக்கியங்கள் அசோகரின் கல்வெட்டு மற்றும் சாசனங்கள் |
| கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி | கி.பி.1ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 3 ஆம் நூற்றாண்டு வரை | சங்க இலக்கியங்கள் கல்வெட்டுக்கள் |



ncs_t.indb 31 3/1/2019 8:35:27 AM

குறிப்பு

சங்க கால தொடக்கம்: பிரம்மி எழுத்துக்கள் தமிழ் மொழி வடிவத்தில் மிகப் பழைமையான காலத்தில் உபயோகத்தில் இருந்தன. கி.மு 200 ஆண்டிற்கு முற்காலத்தில் காணப்படுவதாகும். வேறு சான்றுகள் இல்லாத நிலையிலும் கி.மு 300 ல் சங்க காலம் இருந்தது எனக் கொள்ளலாம். அறிஞர்களும் சங்க காலத்தை கி.மு300 முதல் கி.பி 300 வரை நிர்ணயம் செய்துள்ளனர். இதற்கான ஆதாரங்கள் பின்வருமாறு:

1. கல்வெட்டுக்களில் குறிப்புக்கள் - பல்வேறு ஆட்சிகளும் மன்னர்களும் விட்டுச் சென்ற இந்த ஆதாரங்கள் முதன்மையானவை
2. சங்ககாலக் கருவிகள் ஆயுதங்கள் கலை ஓவியம் கலைச் சின்னங்கள் அகழ்வாராய்ச்சிகளில் தோண்டி எடுக்கப் பட்டவை.
3. கடைச் சங்க கால இலக்கியங்கள் மதுரை சங்கம் வழங்கிய இலக்கியங்கள்தாம் நாம் இப்போது காணும் சங்ககால இலக்கியங்களாகும். மற்ற இரு சங்கங்களின் இலக்கியங்களும் கடல் நீரில் மூழ்கிக் போனதால் அந்தச் செல்வம் அழிந்து போனது.

**சங்ககால முடிவு:**

1. சிலப்பதிகாரம் மற்றும் இலங்கையின் காவியம் மகாவம்சம் (பாலி மொழியில்) சங்க காலத்தின் முடிவு கி.பி.200 இல் என்று குறிப்பிடுகின்றன.
2. சிலப்பதிகாரத்தில் கண்டுள்ள ஒரு குறிப்பில் சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கான விழா எடுத்ததும் அதில் சிங்கள அரசன் கயவாகு பங்கேற்றதும் காணப்படுகின்றன. இச் செய்திதான் மகாவம்சத்திலும் இடம்பெற்றுள்ளது. கயவாகு கி.பி 180 முதல் 198 வரை ஆட்சி செய்தான்.சேரன் செங்குட்டுவனும் கி.பி.200இல் ஆண்டான் என்று கொண்டாலும் கடைச் சங்க காலம் கி.பி. 200 கருதப் பட சான்றாகும்.
3. எட்டுத்தொகையிலும் பத்துப்பாட்டிலும் உள்ள சான்றுகளின் படி உரோமானியப் பயணிகள் பிளினி மற்றும் தலாமி துறைமுகப் பட்டிணங்களான கொற்கை புகார் முசிரி இவற்றைக் குறிப்பிட்டுள்ளனர். இவர்களின் காலம் கி.பி.200 ஆகும். ஆகவே சங்க காலத்தின் முடிவு கி.பி.200 ஆகக் கொள்ளலாம் என்பது கருத்து.
4. பதிற்றுப்பத்து என்னும் தமிழ் இலக்கியம் சேரர்களை இரண்டு பிரிவினராகக் குறிப்பிட்டுள்ளது. ஒன்று உதியன் சேரலாதன் மற்றொன்று இரும்பொறை. சங்க கால சேர மன்னர்கள் வானவர் வில்லவர் மற்றும் மலையர் என்ற பட்டங்களைப் பெற்றனர். செங்குட்டுவன் கி.பி.200 இன் இறுதியில் ஆண்டதாகக் கருதப் படுகிறது. அவனுக்குப் பின் 4 அரசர்கள் ஆண்டனர். ஒரு மன்னன் 25 ஆண்டுகள் ஆட்சி புரிந்ததாக நாம் கொண்டால் 100 ஆண்டுகளுக்குப் பின் கி.பி.300ல் சங்க காலம் முடிவுற்றதாகக் கருதவேண்டும்.



ncs_t.indb 32 3/1/2019 8:35:27 AM

## அட்டவணை 3.2 சங்க காலத்தை நிர்ணயிக்க கிடைத்த சான்றுகள்

| எண் | சான்றுகள் | வகை | இடம் | குறிப்பிடும் காலம் |
|---|---|---|---|---|
| 1. | கல்வெட்டு | பிரமி எழுத்துக்கள் | சமண முனிவர்களின் குகைகள் | கி.பி 300 |
| | (அ) தமிழகத்தில் 5 மாகாணப் பிரிவுகளான சோழ பாண்டிய சத்திய புத்திரர் கேரள புத்திரர் தாமிரபரணி இவற்றைக் குறிக்கும் கல் வெட்டுக்கள் | அசோகரின் கல்வெட்டுக்கள் | இரண்டாம் குகை எழுத்துக்கள் | கி.பி. 300 |
| | (ஆ) காரவேலரின் வெற்றியைக் குறிக்கும் கல்வெட்டுக்கள். தமிழ் அரசுகளின் தோற்றம் கிமு 113 ஆகும் | கலிங்க காரவேலர் | ஹடிகும்பா எழுத்துக்கள் | சங்க காலம் |
| | (இ) பராந்தக நெடுஞ்செழியன் மீண்டும் தானமாகக் கொடுத்த பிரம்மதேய கிராமங்கள் | பராந்தக நெடுஞ்செழியன் | வேள்விக்குடி கல்வெட்டுக்கள் | சங்க காலம் |
| | (ஈ) கல்வெட்டுக்கள் புலவர் கபிலரின் வடக்கிருந்து உயிர் விட்ட சோக நிகழ்வைப் பதிவு செய்துள்ளன. | கபிலரின் வடக்கிருத்தல் | திருக்கோவிலூர் | சங்க காலம் |
| 2. | நாணயங்களில் குறிப்பிட்டுள்ள தமிழர் உரோமானியர் வணிகத் தொடர்பு | அகஸ்டஸ் சீசரின் காலம் உரோமானிய நாணயங்களின் மூலம் தெரிகிறது | மதுரையின் சுற்றுவட்டாரம் | சங்க காலம் |
| 3. | தொல்பொருள் ஆராய்ச்சிகள் வாணிபத்தில் தமிழக உரோமானியத் தொடர்பு குறித்து | தொல்பொருள் ஆராய்ச்சி அகழ்வுகள் | அரிக்கமேடு புதுச்சேரியின் அடுத்து | சங்க காலம் |
| 4. | இலக்கியச் சான்றுகளில் அதிக அளவில் நூல்கள் குறிப்பிடப் பட்டாலும் இரண்டே நூல்கள் தாம் சங்க காலத்தில் உருவானவை என்று | பத்துப் பாட்டு எட்டுத்தொகை | மதுரை சங்கம் | கி.பி 300 |

குறிப்பு

முடிவாக சங்க காலம் கி.மு 300 இல் தொடங்கி கி.பி 300 ல் முடிவடைந்தது என்று பல்வேறு ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

**சங்ககால சான்றுகள்**

**குறிப்பு**

புவியியல் கூறுகள்: தென் இந்தியா எனக் குறிப்பிடப் படும் இந்த தீபகர்ப்பம் பகுதி கிருஷ்ணா மற்றும் துங்கபத்திராவின் தெற்கே அமைந்துள்ள பகுதியாகும்.

வியாபாரம் மற்றும் வாணிபம்: வெளி நாட்டுப் பயணிகள் தம் குறிப்புகளில் தமிழகத்திற்கும் ஏனைய மேற்கத்திய நாடுகளுக்கும் இடையே நடந்த வாணிபத்தினைக்குறித்து சொல்லியிருக்கின்றனர். இவர்கள் முறையே மெகஸ்தனிஸ் ஸ்டிராபோ பிளினி ப்டோலெமி என்பவர்கள் ஆவர்.

அரசியல் கூறுகள்: அசோகரின் கல்வெட்டுக்களில் தென் இந்திய அரசுகளான சேர சோழ மற்றும் பாண்டிய மன்னர்கள் மௌரிய அரசின் தென் பாகத்தில் ஆட்சி புரிந்தனர் எனற அங்கீகாரம் காணப் படுகிறது.

சங்க காலத்து இலக்கியங்களும் சேர சோழ மற்றும் பாண்டிய அரசுகளைக் குறிப்பிட்டிருக்கின்றன.

ஹதிகும்பாவில் காணப்படும் கலிங்கத்துக் காரவேலரின் கல் வெட்டுக்கள் தமிழ் அரசுகளின் ஆட்சியைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

புவியியல் மற்றும் சுற்றுச் சூழல் வகைப்படுத்தல்: சங்க கால நிலப் பரப்புக்ளையும் சுற்றுச் சூழலையும் பிரிவுகளாக வகைப்படுத்தி தொல்காப்பியத்தில் சொல்லப் பட்டிருக்கிறது.

திணை எனக் குறிப்பிடப்படும் இப்பகுதிகளில் பிரிவுகளுக்குத் தகுந்த மக்களின் வாழ்க்கை முறைகளும் உணர்வுகளும் கோர்வைகளாக அகம் பாடல்களில் சொல்லப் பட்டிருக்கின்றன.

**அகத் திணைகள்: (நிலப் பரப்புகள்)**

குறிஞ்சி (மலையும் மலை சார்ந்த இடமும்)

முல்லை (வனமும் வனம் சார்ந்த இடமும்)

மருதம் (வயலும் வயல் சார்ந்த இடமும்)

நெய்தல் (கடலும் கடல் சார்ந்த இடமும்)

பாலை (அடிப்படை வசதிகளில்லா இடங்கள் பாலைவனப் பரப்புக்கள்)

புறம் பாடல்களில் திணைகள் குறிப்பிடப் பட்டிருந்தாலும் அவற்றில் அந்தந்தப் பரப்புகளில் நடந்து வரும் வாழ்க்கைமுறை தொழில்கள் பொருளாதார முயற்சிகள் குறித்து சொல்லப் பட்டிருக்கின்றன. அவற்றைக் கீழ்க்கண்டவாறு பிரித்துள்ளனர்:

| புறத் திணை நிலப்பரப்புக்கள் | புறத் திணை நிலப்பரப்புக்கள் |
|---|---|
| வெட்சி | நொச்சி |



ncs_t.indb 34 3/1/2019 8:35:27 AM

| | |
|---|---|
| கரந்தை | தும்பை |
| வஞ்சி | வாகை |
| காஞ்சி | பாடான் |
| உழிஞை | பொதுவியல் |

குறிப்பு

சங்க இலக்கியங்கள் மீண்டும் கண்டெடுக்கப் பட்டதும் அவற்றை மக்களிடம் பரவச் செய்த தொண்டு:

- 1851ல் அறிஞர் ஆறுமுக நாவலரால் திருமுருகாற்றுப்படை முதல் முதலாக சங்க இலக்கியப் பதிப்பாக வெளியிடப் பட்டது.
- 1887 ல் தாமோதரம்பிள்ளை அவர்கள் எட்டுதொகைகளில் ஒன்றை கலித்தொகை என்று வெளியிட்டார்.
- 1889 ல் டாக்டர் உ. வே. சாமினாத ஐயர் (தமிழ்த் தாத்தா) பத்துப் பாட்டை அச்சு வடிவில் கொண்டு வந்தார்.

நூற்றுக்கும் மேற்பட்ட இலக்கிய நூல்களை இவர்கள் சிறப்பான உரையுடன் பிரசுரம் செய்தனர் என்பது சிறந்த தமிழ்த் தொண்டாகும்.

| இலக்கியத்தின் பெயர் | பிரசுரமான ஆண்டு |
|---|---|
| தொல்காப்பியம் நச்சினார்க்கினியர் உரை | 1895 |
| தொல்காப்பியம் சேனவரையார் உரை | 1868 |
| மணிமேகலை | 1898 |
| சிலப்பதிகாரம் | 1889 |
| பத்துப்பாட்டு | 1889 |
| புற நானூறு | 1894 |
| பத்துப்பாட்டு ஆங்கில மொழிபெயர்ப்பு ஜாஃப்னா கல்லூரியின் ஜே. வி. செல்லையா அவர்களால் பிரசுரம் செய்யப் பட்டது | 1945 |

### உங்கள் முன்னேற்றத்தைப் பரிசோதியுங்கள்

1. சங்ககால இலக்கியங்கள் எப்போது எப்படி மீண்டும் கண்டெடுக்கப் பட்டன?
2. இடைச் சங்கம் யாரால் எங்கே தோற்றுவிக்கப்பட்டது?
3. சங்ககாலத் தோற்றமும் முடிவும் எவ்வாறு கணிக்கப்பட்டுள்ளன?

## 3.3 தமிழ் அரசுகள்- சங்க காலம்- சமூக பொருளாதார சமய நிலைகள்:

சங்ககாலத்தில் மூவேந்தர்கள் சேர சோழ பாண்டியர்களால் தமிழ் நாட்டில் சிறப்பான ஆட்சி நடத்தப்பட்டு அது ஒரு பொற்காலம் என்ற அழியாப் புகழைப் பெற்றுத் தந்தது. இது பற்றி நீங்கள் இந்த அலகில் மேலும் தெரிந்து கொள்ளலாம்:



ncs_t.indb 35 3/1/2019 8:35:28 AM

### 3.3.1 சேரர்கள்

சேரர்களின் ஆட்சி மேற்குக் கடற்கரையை ஒட்டி வடக்கே கொங்கணத்திலிருந்து தொடங்கி தெற்கே கொல்லம் வரையிலுமான எல்லைகளினுள் அமைந்திருந்தது. முசிறி மற்றும் தொண்டி சேரர்களின் துறைமுகப் பட்டினங்களாகும்.

குறிப்பு

சேர மன்னர்கள் எல்லைகளை விரிவாக்கியதும் கடற்போர்கள் பல செய்ததும் அவர்தம் சிறப்புக்களாகக் கருதலாம்.

1. பெருஞ்சோற்று உதியன் சேரலாதன்: வஞ்சியிலிருந்து ஆண்ட முதல் சேர மன்னன் இவன். புற நானூற்றில் இவனுடைய கடல் போர்களைக் குறித்துச் சொல்லப் பட்டிருக்கின்றது. ஆனால் ஒரு சில வரலாற்று அறிஞர்கள் இவனைக் கற்பனைக் கதா நாயகன் என்றே கருதுகின்றனர்.
2. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்: இமயத்தின் மீது படையெடுத்து ஆரியர்களை வென்றான் இம்மன்னன். இமயத்தில் சேரர்களின் வில் அம்பு கொடியை இமயத்தில் பறக்க விட்டான். இதனால் இமயவரம்பன் என்ற பட்டத்தைப் பெற்றான். உரோமானியர்களை வென்று சிறைப்படுத்தினான் என்பது வரலாறு. சோழ மன்னன் வேர்ப்பகரடக்கிய பெருவீரற் கிள்ளிக்கும் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் இடையே நடந்த கடும் போரில் இருவரும் மாண்டனர்.
3. பல்யானைசெல்கெழுகுட்டுவன்: இமயவரம்பனுக்குப் பின் அவன் தம்பி பல்யானைசெல்கெழுகுட்டுவன் மன்னன் ஆனான். இவன் கொங்கு நாட்டைக் கைப்பற்றி உம்பர்காடு என்ற பகுதியில் அரசாட்சியை ஏற்படுத்தியதாகச் சொல்லப் படுகிறது. தன் அரசைப் பல பகுதிகளாகப் பிரித்து தன் குலத்தின் மூத்த உறுப்பினர்களுக்குக் கொடுத்தான். இவன் ஆட்சி மேற்குக் கடற்கரையிலிருந்து கிழக்குக் கடற்கரை வரை பரவியிருந்தது.
4. களங்காய் கண்ணி நார்முடிச் சேரல்: இவன் பூலி நாட்டை வென்றான். கடம்பில் பெருவாயில் எனுமிடத்தில் நன்னனைத் தோற்கடித்தான். தகடூரை ஆண்ட அதியமான் நெடுமான் அஞ்சியைத் தோற்கடித்தான்.
5. கடற்பிறகோட்டிய சேரன் செங்குட்டுவன்: இவன் புகழ் பெற்ற மன்னனாவான். இவனுடைய தம்பிதான் சிலப்பதிகாரம் படைத்த இளங்கோ அடிகள்.
    - ஆரியர்களைக் கங்கைவரை சென்று வென்றான்
    - கொங்கு நாட்டு மன்னர்களைத் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தான்
    - கடம்பர்களின் கடல் ஆதிக்கத்தைச் சிதறடித்து அவர்களைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து கடலாதிக்கத்தைப் பெருக்கினான். கடற்கொள்ளையர்களையும் முறியடித்தான். இதனால் கடற்பிறகோட்டிய என்ற பட்டம் கொண்டான்.



ncs_t.indb 36 3/1/2019 8:35:28 AM

குறிப்பு

- பழையன் மேல் போர் தொடுத்து மோகூரில் பழையன் என்ற குறு நில மன்னன் தோற்கடிக்கப் பட்டான்.
- பெருங்கிள்ளியைச் சோழ மன்னனாக முடி சூட்ட வேண்டி இவன் கலகம் செய்த ஒன்பது சோழ அரசர்களிடம் போரிட்டான். நேரிவாயில் என்ற இடத்தில் அவர்கள் தோற்றனர். பின்னர் உறையூரில் முடிசூட்டு விழா நடந்தது. இந்தப் பெருங்கிள்ளி தான் பத்தினிக் கடவுள் கண்ணகிக்கு சிலை எடுத்தான்.
- இமாலயத்தின் மீது படையெடுத்துச் சென்று ஆரியர்களை வென்றான். கண்ணகியின் காவியத்தை சாத்தனார் வாயிலாகக் கேட்ட இவன் அதற்காக கொடுங்கனூரில் கண்ணகிக்குக் கோவில் எழுப்பினான். சிலைக்கான கற்கள் கனக விசயர் என்ற சிற்றரசர்களின் தலைமேல் சுமந்து வரச் செய்து கோவில் சிலை வைக்கப் பட்டது. எல்லா மன்னர்களும் பங்கேற்ற இந்த வைபவத்தில் இலங்கை மன்னன் கயவாகுவும் கலந்து கொண்டதாக மகாவம்சம் தெரிவிக்கிறது. அவனும் கண்ணகிக்குச் சிலை வைத்து வணங்கியதாகக் கூறப் படுகிறது. இவன் 55 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான் எனவும் சிறந்த அரசனாக விளங்கினான் எனவும் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. இவனுக்குப் பின் ஆட்சி புரிந்த சேர மன்னர்களில் புகழ் பெற்றவர்கள் பின்வருமாறு:
    - ஆடு கோட்பாட்டு சேரலாதன்
    - செல்வக் கடுங்கோ வழியாதன்
    - பெருஞ்சேரல் இரும்பொறை
    - இளஞ்சேரல் இரும்பொறை

இவர்களைத் தவிர மேலும் பல சேர மன்னர்கள் ஆட்சி புரிந்தனர் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

### 3.3.2 சோழர்கள்

சோழ அரசர்கள்

அசோகரின் கல்வெட்டுக்கள் சங்க காலச் சோழ அரசர்களின் குறிப்புக்களை வெளிப்படுத்துகின்றன.சோழ அரசானது வடக்கே வேங்கிட மலையிலிருந்து தெற்கே வெள்ளாறு வரையும் கிழக்கே வங்காள விரிகுடா மேற்கே கோட்டாக்கரை வரையும் எல்லைகளுடன் விளங்கியது. இது காவேரி நாடு என்றும் அழைக்கப் பட்டது. இவரது கொடி புலிக் கொடியாகும்.

1. சோழர்களில் முதன்மையானவர்கள்: சிபி காந்தன் மற்றும் செம்பியன் சிறந்த அரசர்கள் எனப் படுவர். இவர்கள் வீரம் நீதி மனித சக்திக்கு அப்பாற்பட்ட பேராற்றலைப் பெற்றவர்கள் எனப் படுகிறார்கள்.



ncs_t.indb 37 3/1/2019 8:35:28 AM

குறிப்பு

- சிபிச் சக்கரவர்த்தி ஒரு புறாவைக் காப்பாற்ற தன் உடல் சதையினை அரிந்து வேட்டைப் பருந்திற்குக் கொடுத்த அசாதாரணமான நீதி உணர்ச்சி மிகவும் போற்றப் படுகிறது.
- காந்தன் அழகிய நகரம் காவேரிப் பூம்பட்டினத்தின் நிர்மாணத்தை மேற்கொண்டவன் ஆவான்.
- செம்பியன்- தூங்கெயில் எறிந்த செம்பியன் எனப் படுகிறான். பெரும் வீரனாகவும் மற்றும் இராணுவப் பேராற்றல் பெற்றவனும் ஆவான். பின்னர் வந்த சோழ மன்னர்களுக்கு வழிக்காட்டுதலாக அமைந்தன செம்பியனின் போர்த் தந்திரங்கள்.

2. மனு நீதிச் சோழன்: திருவாரூரில் ஆட்சி செய்தான். இவனுடைய நீதி பெரிதும் பாரட்டப் படும் சரித்திர உண்மையாகும். இவனுடைய ஒரே மகனின் தேரில் அடிபட்டு இறந்த கன்றின் தாய்ப்பசு ஆராய்ச்சி மணியை அடித்தது. உடனே மனு தனது மகனை அதே தேர்க் காலில் இட்டுக் கொன்றான். இதை மணிமேகலை இலக்கியம் பெரிதும் போற்றுகிறது.
3. இளஞ்சேட்சென்னி: இவன் செருபாழி எறிந்த இளஞ்சேட்சென்னி என்று அழைக்கப் படுகிறான். காட்சிக்கு எளியவனாகத் திகழ்ந்த முதல் சோழ மன்னன் இவன் என்று புகழப் படுகிறான்.
4. கரிகால சோழன்: இவன் சோழப் பேரரசின் மாமன்னராகக் கருதப் படுகிறான். பட்டினப் பாலை பொருநராற்றுப் படை போன்ற சங்க இலக்கியங்கள் இவனைப் புகழ்ந்து குறிப்பிட்டிருக்கின்றன.காடு கொன்று நாடாக்கிக் குளந்தொட்டு வளம் எழுப்பி நீர் பாய்ச்சி நெடுவயல் நிறையக் கண்டான் என்று கரிகாலனின் பெருமையைப் பேசுகின்றன. அவன் ஆட்சியில் இவன் சேரர் பாண்டியர்களை வென்றான். இவனுடைய கடற்படையின் ஆதிக்கத்தால் இலங்கையும் இவன் ஆட்சியின் கீழ் வந்தது. திருச்சியில் காவேரி ஆற்றின் குறுக்கே கல்லணை கட்டியவன் கரிகாலன். இது இன்றளவிலும் பொறி இயல் விந்தையாகவே இருந்து வருகிறது.

   போர்களைத் தவிர சோழர்களின் சமூக மற்றும் பொருளாதார நிலை பெரும் வளர்ச்சி அடைந்தது. கலை கலாச்சாரம் நல்ல முன்னேற்றம் அடைந்தது. கரிகாலன் ஏழு வகை இசைகளில் புகழ் பெற்றான். ஏழிசை வல்லவன் என்ற பெயர் பெற்றான்.

   - கரிகால சோழனின் ஆட்சியில் சங்க காலச் சோழர் ஆட்சியின் திருப்பு முனையாக இருந்தது. இவன் சேர பாண்டியர்கள் மற்றும் 11 வேளிர் குல குறு நில மன்னர்களை எதிர்த்துப் போரிட வேண்டியிருந்தது. வெண்ணி என்ற போரில் இவன் அனைவரையும் தோற்கடித்தான். இந்தப் போரில் சேர மன்னன் பெருஞ்சேரலாதன் முதுகில் காயமுற்றுத் தோற்றதால் வடக்கிருந்து உயிர் விட்டான் என்பர்.

குறிப்பு

- மீண்டும் ஏற்பட்ட வாகைப்பெருந்தலைப் போரில் இவன் 9 வேளிர் குல குறு நில மன்னர்களைத் தோற்கடித்தான்.
- நாகப்பட்டினத்தைக் கைப்பற்றி நாகர்களை வென்றான். குரும்பர்களையும் தோற்கடித்தான். சேர நாட்டை இணைத்தான். தமிழகம் முழுவதும் இவன் ஆட்சியின் கீழ் வந்தது.
- ஆரியர்களை வென்று இமாலயத்தின் மீதும் படையெடுத்தான். இவை எல்லாம் இலக்கியங்களில் இடம் பெற்ற செய்திகளாகும்.

மைந்தர்களே உருவாக்கிய உள் நாட்டுக் குழப்பங்களினால் அரசன் கோப்பெருஞ்சோழன் முடி துறந்து வடக்கிருந்து உயிர் நீத்தான். இதன் பின்னர் ஆண்ட பெருநற்கிள்ளிக்குப் பின்னர் சோழ அரசின் கடைசி சோழ மன்னன் கோச்செங்கணான் ஆவான்.

### 3.3.3 பாண்டியர்கள்

முச் சங்கங்களைத் தோற்றுவித்து தமிழ் வளர்த்த பெருமை பாண்டிய மன்னர்களுக்கும் பாண்டிய நாட்டிற்கும் உண்டு. மதுரை இராமனாதபுரம் திருநெல்வேலி போன்ற இடங்களில் நடந்த பாண்டியர் ஆட்சி பெருமை வாய்ந்தது.

**அட்டவணை 3.3 பாண்டிய மன்னர்களும் அவர்களின் சாதனைகளும்**

| எண் | பாண்டிய அரசனின் பெயர் | முக்கிய சாதனைகள் |
|---|---|---|
| 1. | வடிவம்பலம் நின்ற பாண்டியன் | தென் பாண்டி நாடு கடலுள் மூழ்கியதால் இவன் வடக்கில் எல்லைகளை விரிவு படுத்தினான் இவனுடைய அரசவையில் தொல்காப்பியம் அரங்கேற்றம் செய்யப் பட்டது. |
| 2. | பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிப் பாண்டியன் | வேள்விக்குடி சாசனங்கள் இவன் காலத்தில் உருவாக்கப் பட்டன. வேத பிராம்மணர்களுக்குத் தானமாக கிராமம் வழங்கப் பட்டது. |
| 3. | ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் | இவன் மதுரையிலிருந்து ஆட்சி புரிந்தான். ஆரியர்களை வெற்றி கொண்டான். சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்கு முறை தவறி நீதி வழங்கி பின்னர் உண்மை உணர்ந்து உயிர் நீத்ததாகச் சொல்லப்படும் பாண்டிய மன்னன் இவனே. |

குறிப்பு

| எண் | பாண்டிய அரசனின் பெயர் | முக்கிய சாதனைகள் |
|---|---|---|
| 4. | வெற்றிவேற் செழியன் | இவன் கொற்கையிலிருந்து ஆட்சி புரிந்தான். மதுரையில் பஞ்சம் ஏற்பட்டதால் கண்ணகிக்கு விழா எடுத்தான். சேரன் செங்குட்டுவனின் இணையான காலத்தில் வாழ்ந்தவன் |
| 5. | தலையானங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் | இவன் தலையானங்கானத்துப் போரில் வெற்றி பெற்றவனாவான். இதனால் செருவென்ற பாண்டியன் என்ற பட்டம் அடைந்தான்.வீரமும் புகழும் பெற்ற இவன் பெருமன்னன் என்று புகழப் பட்டான். |
| 6. | கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி | சங்க காலப் பாண்டிய மன்னர்களில் கடைசி மன்னனும் சிறப்பாக ஆண்ட அரசனும் ஆவான். இவன் கவிஞனுமாவான் என்ற குறிப்பு உள்ளது. இவன் காலத்தில் அக நானூறு இயற்றப் பட்டது. கடைச் சங்கம் இவனால் ஆதரிக்கப் பட்டது. |

### 3.3.4 குறுநில மன்னர்கள்

சங்க காலத்தில் முடியுடை மன்னர்களைத் தவிர குறு நில மன்னர்களும் சிற்சில எல்லைகளில் ஆட்சி புரிந்து வந்தனர். இவர்கள் சேர சோழ பாண்டியர் அரசுகளின் கீழ் ஆட்சி புரிந்தவர்களாகவோ அல்லது தனியரசாகவோ ஆட்சி புரிந்து வந்தனர். ஏறத்தாழ 20 குறு நில மன்னர்கள் சங்ககாலத் தமிழகத்தில் ஆட்சி புரிந்து வந்தனர்.

இவர்களில் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள்:

1. ஆய் பொதிகை மலைப் பகுதியில் ஆட்சி புரிந்தான்
2. பாரி பறம்பு மலையை ஆண்டு வந்தான். முல்லைக்குத் தேர் ஈந்த பாரி இவனே ஆவான்.
3. காரி தொண்டை மண்டலத்திலிருந்த திருக்கோவிலூரிலிருந்து ஆட்சி புரிந்தான்.
4. ஓரி கொல்லி மலையிலிருந்து ஆட்சி புரிந்தான்.
5. நல்லூரிலிருந்து ஆட்சி புரிந்தவன் பேகன். மயிலுக்குத் தன் போர்வை போர்த்திக் காத்தவன் இவன்.
6. தொட்டிமலையை ஆண்டு வந்தவன் நள்ளி. இவன் சேர மன்னனுக்குக் கப்பம் கட்டி வந்தான். வறியவருக்கு நண்பன் என்று கருதப் பட்டான்.
7. அதியமான் நெடுமான் அஞ்சி குதிரை மலை மற்றும் தகடூரிலிருந்து ஆட்சி புரிந்தான். இவன் அவ்வைப் பிராட்டியாரை ஆதரித்து வந்தான். இவன் சேரமான் பெருஞ்சேரலாதனுடன் நடந்த போரில் வீர மரணம் அடைந்தான்.



ncs_t.indb 40 3/1/2019 8:35:28 AM

குறிப்பு

8. மலைபடுகடாம் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள நன்னன் பல்குன்றக் கோட்டம் என்ற பகுதியினை ஆண்டு வந்தான்.
9. நல்லியக் கோடன் மகாபலிபுரத்தை அடுத்துள்ள ஓய்மா நாடு என்ற பகுதியில் ஆட்சி புரிந்து வந்தான்.
10. பொருனன் பொதிகை மலையின் மேற்குப் பகுதியை ஆண்டு வந்தான்.
11. பாண்டியன் மாறன் என்ற குறு நில மன்னன் பாண்டியர் வம்சத்தைச் சேர்ந்தவன். பொதிகை மலைப் பகுதியை ஆண்டு வந்தான்.
12. தொண்டைமான் இளந்திரையன் சங்க காலத்தில் காஞ்சியை ஆண்டுவந்தான். இவன் சோழர் வம்சத்தைச் சேர்ந்தவன்.

இவர்களைத் தவிர கடம்பர்கள் மற்றும் கோகர்கள் சில பகுதிகளில் ஆட்சி புரிந்து வந்தனர்.

முடிவாக சங்க காலத்தில் தமிழ் அரசு வடக்கே வேங்கிட மலையில் தொடங்கி தெற்கே இந்து மாக் கடல் வரையும் கிழக்கே வங்காள விரிகுடாவில் தொடங்கி மேற்கே அரபிக் கடல் வரையிலான தென் மண்டலம் முழுதும் பெருவாரியாக மூவேந்தர் ஆட்சியின் கீழ் இருந்தன. சிற்றரசர்களும் குறு நில மன்னர்களும் கடம்பர்களும் கோகர்களும் சிற்சில பகுதிகளை ஆண்டுவந்தனர். இந்த சங்க கால ஆட்சி தமிழகத்தின் பொற்காலமாகும் என்பது சரித்திரம் ஆனால் நிரந்தர உண்மையாகும்.

### உங்கள் முன்னேற்றதைப் பரிசோதிக்கவும்

4. சேர நாட்டின் இரண்டு துறைமுகப் பட்டினங்களைக் கூறவும்.
5. மிகவும் புகழ் பெற்ற சேர மன்னன் யார்?
6. சங்க இலக்கியங்களான பட்டினப்பாலை மற்றும் பொருநராற்றுப்படை இவற்றில் போற்றப்படும் சோழ மன்னன் யார்?

## 3.4 திறன் அடைவிற்கான பரிசோதனைக் கேள்விகளுக்கு விடைகள்

1. சங்க இலக்கியங்கள் மீண்டும் கண்டெடுக்கப் பட்டதும் அவற்றை மக்களிடம் பரவச் செய்த தொண்டு: 1851ல் அறிஞர் ஆறுமுக நாவலரால் திருமுருகாற்றுப்படை முதல் முதலாக சங்க இலக்கியப் பதிப்பாக வெளியிடப் பட்டது. 1887 ல் தாமோதரம்பிள்ளை அவர்கள் எட்டுதொகைகளில் ஒன்றை கலித்தொகை என்று வெளியிட்டார்.1889 ல் டாக்டர் உ.வே.சாமினாத ஐயர்(தமிழ்த்தாத்தா) பத்துப் பாட்டை அச்சு வடிவில் கொண்டு வந்தார்.
2. அகஸ்திய முனிவரால் இடைச் சங்கம் கபாடபுரம் என்ற இடத்தில் அமைக்கப் பட்டது. பின்னர் அகஸ்தியரின் சீடர் தொல்காப்பியர் அதை நடத்தினார்.

**குறிப்பு**

3. சங்க காலம் கி.மு 300 முதல் கி.பி 300 வரையிலான காலத்தில்தான் என்று இலக்கிய மற்றும் வரலாற்று சான்றுகளைக் கொண்டு அறிஞர்களால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
4. முசிறி மற்றும் தொண்டி சேர நாட்டின் இரண்டு துறைமுகப் பட்டினங்களாகும்.
5. சேர அரசர்களில் மிகவும் புகழடைந்த மன்னன் கடற்பிறகோட்டிய சேரன் செங்குட்டுவன் ஆவான்.
6. கரிகால சோழன் சோழர் குல மாமன்னனாவான். பட்டினப்பாலை மற்றும் பொருநராற்றுப்படை போன்ற சங்க இலக்கியங்களில் இவற்றில் இவன் பெருமை சொல்லப்பட்டிருக்கிறது.

## 3.5 உரைச் சுருக்கம்

- தமிழக மக்களின் பொற்காலம் என்று இன்றும் சிறப்புப் பெறும் காலம் சங்க காலமாகும். அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி அடைந்து மக்கள் வீரம் மிக்கவர்களாகவும் இலக்கியத் திறமை உள்ளவர்களாகவும் சமூகம் மேம்பாடு அடைந்தாகவும் நாகரிக வளர்ச்சி பெற்று பொருளாதாரத்திலும் ஒரு வளமையான வாழ்க்கைமுறையை ஏற்படுத்திக் கொண்டதாகவும் விளங்கியது. இக்காலத்தில் மூவேந்தர்களான சேர சோழ பாண்டியர்களின் ஆட்சியும் பல குறு நில மன்னர்களின் ஆட்சியும் நடந்தன
- சங்கம் என்பது தமிழ்ப்புலவர்களின் ஒருங்கிணைந்த அமைப்பு ஆகும். கி.மு 500 முதல் கி.மு 300 வரையிலான காலம் தென்னிந்தியாவில் சங்க காலம் எனப்படுகிறது.
- சங்க கால இலக்கியங்கள் எதிர்காலத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் தமிழரின் வாழ்க்கை நெறிகளுக்கும் முறைகளுக்கும் ஒரு அளவு கோலாகவும் ஒரு வரைபடமாகவும் அமைந்தது என்றால் அது மிகையாகாது. ஆண் பெண் இரு பாலாரும் இயற்றிய பாடல்கள் கவிதைகள் சங்கத் தமிழ் இலக்கியங்களில் உள்ளன. இவர்கள் வெவ்வேறு தொழில் களிலும் வியாபாரங்களிலும் ஈடுபட்டுவந்த பின்னணியை உடைய அறிஞர்களாவர்.
- தமிழ் வளர்க்கும் சங்கங்கள் பாண்டிய மன்னர்களால் நிறுவப்பட்டு ஆதரிக்கப்பட்டன. முச்சங்கங்களில் தென் மதுரை தலைச் சங்கமும் கபாடபுரம் இடைச்சங்கமும் ஒரு பிரளயத்தில் நீருக்கு இரையாயின. இதன்பின்னர் பாண்டிய மன்னர்களால் கடைச் சங்கம் மதுரையில் நிறுவப் பட்டது. நாமறியும் தமிழ்ச் சங்கம் மதுரைச் சங்கமான கடைச் சங்கமேயாகும்.
- சங்க இலக்கியங்கள் பண்டைய தமிழகத்தின் தொன்மையான பழமையான இலக்கியங்கள் ஆகும். அக நானூறு குறுந்தொகை நற்றிணை இவற்றில்



ncs_t.indb 42 3/1/2019 8:35:28 AM

2381 பாடல்கள் 473 புலவர்களால் பாடப் பெற்றவையாகும். இதில் 102 புலவர்களின் பெயர்கள் தெரியவில்லை.

குறிப்பு

- சங்க இலக்கியங்கள் இரு வகைப் பட்டன. 1. அகம் 2 புறம். சங்க இலக்கியங்களின் தொகுப்பு இரண்டு தொகுதிகளாகத் தொகுக்கப் பட்டன: பதினெண்மேல்கணக்கு எட்டுத்தொகை பத்துப்பாட்டு ஆகிய இரு இலக்கியங்களும் சேர்க்கப் பட்டன
- பதினெண்கீழ்க்கணக்கு: பதினெண்கீழ்க்கணக்கில் ஏனைய இலக்கியங்கள் சேர்க்கப் பட்டன.
- சங்க கால நிலப் பரப்புக்ளையும் சுற்றுச் சூழலையும் பிரிவுகளாக வகைப்படுத்தி தொல்காப்பியத்தில் சொல்லப் பட்டிருக்கிறது.
- திணை: குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் மற்றும் பாலை என்ற ஐந்து வகை நிலப்பரப்புக்கள் இருந்தன. இப் பகுதிகளில் பிரிவுகளுக்குத் தகுந்த மக்களின் வாழ்க்கை முறைகளும் உணர்வுகளும் கோர்வைகளாக அகம் பாடல்களில் சொல்லப் பட்டிருக்கின்றன.
- பரிபாடல் என்ற இலக்கியத்தைத் தவிர மற்ற சங்க இலக்கியங்கள் மக்களின் உறவுகள் அவர்களின் அந்தரங்க தனித்துவ குணங்களான அன்பு காதல் வீரம் சோகம் கருணை போன்றவற்றை வெளிப்படுத்தின என்கிறார் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி அவருடைய புத்தகத்தில்.
- கடைச் சங்க இலக்கியங்களைத் தவிர மற்றைய கால இலக்கியங்கள் இன்றும் கடலுக்கடியில் புதைந்து கிடக்கும் இலக்கியப் பேழைகளாகும்.
- கடைச் சங்க இலக்கியங்கள் மீண்டும் கண்டெடுக்கப் பட்டதும் அவற்றை மக்களிடம் பரவச் செய்த தொண்டு: 1851ல் அறிஞர் ஆறுமுக நாவலரால் திருமுருகாற்றுப்படை முதல் முதலாக சங்க இலக்கியப் பதிப்பாக வெளியிடப் பட்டது.1887 ல் தாமோதரம்பிள்ளை அவர்கள் எட்டுதொகைகளில் ஒன்றை கலித்தொகை என்று வெளியிட்டார்.1889 ல் டாக்டர் உ.வே.சாமினாத ஐயர்(தமிழ்த்தாத்தா) பத்துப் பாட்டை அச்சு வடிவில் கொண்டு வந்தார். நூற்றுக்கும் மேற்பட்ட இலக்கிய நூல்களை இவர்கள் சிறப்பான உரையுடன் பிரசுரம் செய்தனர் என்பது சிறந்த தமிழ்த் தொண்டாகும்.
- சங்ககாலத்தில் மூவேந்தர்கள் சேர சோழ பாண்டியர்களால் தமிழ் நாட்டில் சிறப்பான ஆட்சி நடத்தப்பட்டு அது ஒரு பொற்காலம் என்ற அழியாப் புகழைப் பெற்றுத் தந்தது
- சேரர்களின் ஆட்சி மேற்குக் கடற்கரையை ஒட்டி வடக்கே கொங்கணத்திலிருந்து தொடங்கி தெற்கே கொல்லம் வரையிலுமான எல்லைகளினுள் அமைந்திருந்தது. முசிறி மற்றும் தொண்டி சேரர்களின் துறைமுகப் பட்டினங்களாகும்.
- சோழ அரசானது வடக்கே வேங்கிட மலையிலிருந்து தெற்கே வெள்ளாறு வரையும் கிழக்கே வங்காள விரிகுடா மேற்கே கோட்டாக்கரை வரையும்

குறிப்பு

எல்லைகளுடன் விளங்கியது. இது காவேரி நாடு என்றும் அழைக்கப் பட்டது. இவரது கொடி புலிக் கொடியாகும்.

- முச் சங்கங்களைத் தோற்றுவித்து தமிழ் வளர்த்த பெருமை பாண்டிய மன்னர்களுக்கும் பாண்டிய நாட்டிற்கும் உண்டு. மதுரை இராமனாதபுரம் திருநெல்வேலி போன்ற இடங்களில் நடந்த பாண்டியர் ஆட்சி பெருமை வாய்ந்தது.
- சங்க காலத்தில் முடியுடை மன்னர்களைத் தவிர குறு நில மன்னர்களும் சிற்சில எல்லைகளில் ஆட்சி புரிந்து வந்தனர். இவர்கள் சேர சோழ பாண்டியர் அரசுகளின் கீழ் ஆட்சி புரிந்தவர்களாகவோ அல்லது தனியரசாகவோ ஆட்சி புரிந்து வந்தனர். ஏறத்தாழ 20 குறு நில மன்னர்கள் சங்ககாலத் தமிழகத்தில் ஆட்சி புரிந்து வந்தனர்.
- சங்க காலத்தில் தமிழ் அரசு வடக்கே வேங்கிட மலையில் தொடங்கி தெற்கே இந்து மாக் கடல் வரையும் கிழக்கே வங்காள விரிகுடாவில் தொடங்கி மேற்கே அரபிக் கடல் வரையிலான தென் மண்டலம் முழுதும் பெருவாரியாக மூவேந்தர் ஆட்சியின் கீழ் இருந்தன. சிற்றரசர்களும் குறு நில மன்னர்களும் கடம்பர்களும் கோகர்களும் சிற்சில பகுதிகளை ஆண்டுவந்தனர். இந்த சங்க கால ஆட்சி தமிழகத்தின் பொற்காலமாகும் என்பது சரித்திரம் ஆனால் நிரந்தர உண்மையாகும்.

## 3.6 சுய பரிசோதனை- கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

### குறுகிய விடைகளுக்கான வினாக்கள்

1. முச்சங்கம் குறித்து குறிப்புகள் வரைக
2. சங்க கால இலக்கியங்கள் எவ்வாறு தொகுக்கப் பட்டன?
3. சங்க கால சான்றுகளைக் குறிப்பிடுக
4. சங்க காலத்தில் போற்றப்பட்ட பாண்டிய மன்னர்கள் யார்?
5. சங்க காலக் குறு நில மன்னர்கள் குறித்துக் கூறுக

### விரிவான விடைகளுக்கான வினாக்கள்

1. பதினெண்மேல் கணக்கு என்பவை யாவை?
2. சங்ககால நிர்ணயக் கணக்கை ஆராய்க
3. புகழ் பெற்ற சேர மன்னர்களைக் குறித்து விளக்குக
4. சோழர்களில் புகழ் பெற்ற மன்னர்கள் பற்றி விரிவாகக் கூறவும்



ncs_t.indb 44 3/1/2019 8:35:28 AM

# அலகு 4 களப்பிரர்கள்

குறிப்பு

## அமைப்பு

4.0 அறிமுகம்
4.1 நோக்கங்கள்
4.2 களப்பிரர்கள் காலம்
4.2.1 களப்பிரர் ஆட்சியின் செய்திகளும் சான்றுகளும்
4.2.2 களப்பிரர் ஆட்சியைப் பற்றிய வரலாற்று அறிஞர்களின் கருத்துக்கள்
4.3 தமிழகத்தில் சமணமும் புத்த மதமும் கண்ட வளர்ச்சி
4.4 களப்பிரர்கள் நல்கியவை
4.5 திறன் அடைவிற்கான பரிசோதனைக் கேள்விகள்
4.6 உரைச் சுருக்கம்
4.7 முக்கிய சொற்கள்
4.8 சுய பரிசோதனை கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
4.9 மேலும் படிக்க

## 4.0 அறிமுகம்

மூன்றாம் நூற்றாண்டு சங்ககாலம் எனப்பட்டது சோழர்கள் பாண்டியர்கள் மற்றும் பல்லவர்கள் தமிழகத்தை ஆண்டு வந்தார்கள். இந்த ஒரு சிறப்பான வரலாற்றைத் தொடர்ந்து தமிழகம் ஒரு இருண்ட ஆட்சி காலத்தினுள் நுழைந்தது. இந்த ஆட்சியை அளித்தவர்கள் தமிழ் நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் கலாச்சாரம் பண்பாடு பாரம்பரியம் இவை எல்லாவற்றிற்கும் முற்றிலும் அன்னியர்களாக இருந்த களப்பிரர்களாவர். இந்த அன்னியர் ஆட்சியில் சங்க காலப் பொற்கால ஆட்சிப் பயன்கள் வரலாற்றில் மறைந்தன.மூன்றாம் நூற்றாண்டிலிருந்து ஆறாம் நூற்றாண்டு வரையான களப்பிரர்கள் ஆட்சியில் தமிழ் நாட்டை இருள் கவ்வியது.

களப்பிரர்கள் மலை சாதியினர் என்றும் அவர்கள் தமிழ் நாட்டில் இடம் விட்டு இடம் மாறிவரும் நாடோடி விவசாயக் குடியானவர்கள் என்றும் அவர்கள் குறும்பர்கள் என்று அழைக்கப் பட்டனர் என்றும் அவர்களின் மொழி கன்னடம் (குறும்பர் கன்னடம்) என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

களப்பிரர்களின் காலத்தில் சமணம் மற்றும் பௌத்தம் தழைத்தது. இந்து மதம் நசுக்கப் பட்டது என்று கூறுகின்றனர்.



ncs_t.indb 45 3/1/2019 8:35:29 AM

## 4.1 கற்றலின் நோக்கங்கள்

இந்த அலகின் மூலம் நீங்கள் அடைவது:

குறிப்பு

- களப்பிரர்களின் ஆட்சிக் காலத்தைக் குறித்த கணிப்பு
- களப்பிரரின் ஆட்சி குறித்த வரலாற்றுச் சான்றுகள்
- களப்பிரரின் தோற்றம் குறித்த வரலாற்று அறிஞர்களின் கருத்துக்கள்
- களப்பிரர் ஆட்சியமைத்த நோக்கம் மற்றும் தந்திரங்கள்
- சமணமும் பௌத்தமும் அடைந்த வளர்ச்சியின் பரிமாணம்
- தமிழகத்தை ஆண்ட காலத்தில் இந்த ஆட்சியாளர்களின் பங்களிப்பு
- தமிழ் இலக்கியம் மற்றும் கலாச்சாரம் அடைந்த வளர்ச்சி குறித்து கண்ணோட்டம்

## 4.2 களப்பிரர் காலம்

இவர்களது ஆட்சி திருவேங்கிடம் முதல் குமரிமுனை வரையிலான எல்லைக்கோட்டினுள் கி.பி 250 முதல் கி.பி 575 வரை நடந்தது. கி.பி ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் பாண்டியர்களாலும் பல்லவர்களாலும் தோற்கடிக்கப்பட்டனர். களப்பிரர் காலம் முத்தமிழ் வேந்தர்களின் வீழ்ச்சிக் காலம் சமண மதத்தின் உயிர்ச்சிக் காலம் வடமொழி ஆதிக்கத்தின் உச்ச காலம் ஆகும். சில வரலாற்று ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி களப்பிரர் ஆட்சி நிலையான ஆட்சிக் காலமாகவும் அமைந்தது.

- இது விமரிசனத்துக்குள்ளான ஆட்சி மற்றும் ஆட்சியாளர்கள் என்ற பொதுவான கருத்து நிலவுகிறது.
- இவர்கள் அரச குடும்பத்தினரா என்று ஏற்படும் கருத்துப் பரிமாற்றங்களில் பேராசிரியர் ராஜமாணிக்கனார் இல்லை என்றும் கிருஷ்ண சாஸ்திரி ஆமாம் என்றும் கூறுகின்றனர். உண்மையில் அவர்களுக்கென்று ராஜ்ஜியம் இருந்தது என்றும் சரித்திர பூர்வமாக நம்பப்படுகிறது. எல்லை மலை நாடுகளில் அவர்கள் மலை அரசர்களாவர் என்றும் சிலர் ஒப்புக் கொள்கின்றனர்.
- ஆக்கிரமிப்பு செய்த கருத்து: இவர்கள் கர்நாடகத்திலிருந்து உட்புகுந்த ஆக்கிரமிப்பாளர்கள் என்றும் இவர்கள் காவேரிப்பட்டிணத்திலிருந்து ஆட்சி புரிந்தனர் என்றும் கூறப் படுகிறது.
- மூவேந்தர்களின் இடையில் திறமையுள்ள வல்லமையுள்ள அரசர்களும் வீரர்களும் இல்லாத காரணத்தால் களப்பிரருக்குப் பணிந்து போகும் அவல நிலை ஏற்பட்டது எனக் கருதப் படுகிறது.
- ஒருங்கிணைப்பு: மூவேந்தர்களையும் தம் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து அவர்தம் தலைமையாகச் செயல் பட்ட களப்பிரர்கள் தம் கொடியில் சேர சோழ பாண்டிய இலச்சினைகள் மூன்றும் இடம் பெறுமாறு அமைத்துக் கொண்டனர்.

குறிப்பு

- ஆட்சி எல்லைகள்: திருவேங்கிடம் முதல் குமரிமுனை வரை ஆண்ட களப்பிரர்கள் உச்ச காலத்தில் இலங்கையிலும் ஆட்சி புரிந்தனர். காவேரிப் பட்டினம் துறைமுகப் பட்டினமாக வளர்ச்சி பெற்று அரசியல் மற்றும் சமூக நிகழ்வுகளைக் கண்டது.
- ஆட்சிக்காலம்: 7ஆம் நூற்றாண்டிலும் (கி.பி.690 வரை) சுமார் 75 ஆண்டு காலம் ஆட்சி புரிந்த களப்பிரர்கள் ஆட்சி தொடங்கிய காலம் கி.பி 250 ல் ஆகும். பெரும்பாலான அறிஞர்கள் ஆட்சிக் கால கணிப்பில் குறைந்த பட்சம் 3 நூற்றாண்டுகள் களப்பிரர்கள் ஆட்சி புரிந்தனர் என்று ஒப்புக் கொள்கின்றனர். இதற்கான இலக்கிய அல்லது தொல்பொருள் சான்றுகள் அவர்களால் அதிகம் விட்டுச் செல்லப்படவில்லை எனலாம்.
- தொண்டை மண்டலத்தின் மூலமாக நுழைந்து குடியேறியவர்கள் என்ற கருத்து பரவலாக ஆமோதிக்கப் படுகிறது.கடம்பர்களால் சொந்த நாட்டிலிருந்து வெளியேற்றப் பட்ட களப்பிர புல்லி வேங்கட மலை நாட்டிலிருந்து வந்து பல்லவர்களின் ஆட்சியிலிருந்த தொண்டை மண்டலத்தில் ஊடுருவி பல்லவ அரசன் பப்பதேவன் மற்றும் சிவஸ்கந்தவர்மன் காலத்தில் தோல்வியுற்ற நிலையில் தொண்டை மண்டலத்தில் ஏற்பட்ட குழப்ப நிலை காரணமாக கூற்றுவ நாயனார் காலத்தில் மூன்றாம் நூற்றாண்டுக்கும் நான்காம் நூற்றாண்டுக்கிடையிலும் தொண்டை நாடு களப்பிரர் வசமானது. தொண்டை நாடு பல்லவர் ஆட்சியில் கூற்றுவ நாயனாரின் கீழ் இருந்ததை திருத்தொண்ட தொகை பெரிய புராணத்தின் குறிப்பு தெரிவிக்கிறது.
- சோழ நாட்டை அடைந்த களப்பிரர்கள்: தொண்டை நாட்டில் உட்புகுந்த இவர்கள் தெற்கே சென்று ஊடுருவி சோழ நாட்டையும் பிடித்தனராம். ஆங்கே திறமையற்ற நிலையற்ற ஆட்சியினால் உள் நாட்டுக் குழப்பங்களுமாக நிறைந்திருந்த கட்டத்தில் களப்பிரர்கள் நிலையான ஆட்சியையும் சிற்சில பொது நன்மைகளையும் செய்தனர் என்று கூறப் படுகிறது.

### 4.2.1 களப்பிரர் ஆட்சியின் செய்திகளும் சான்றுகளும்:

இவர்கள் காலத்திய பட்டயங்கள் கல்வெட்டுக்கள் கலைப் பொக்கிஷங்களுமாக விட்டுச் செல்லப்படாத நிலையில் சிற்சில விவரங்கள் பௌத்த மற்றும் சமண மத நூல்களிலிருந்து கிடைத்துள்ளன.

வேறு வம்சத்தினர் விட்டுச் சென்ற அளவு களப்பிரரின் காலத்தில் இத்தகைய சான்றுகள் மிகவும் குறைவாகவே காணப் படுவது அவர்களின் இது குறித்த நிகழ்வுகளைப் பதிவாக்காத இருண்ட காலக் கொள்கையினைப் பறைசாற்றுகிறதோ என்ற ஐயம் எழுகிறது.

இந்த இலக்கியங்களின் வாயிலாக நாம் அறிவது கள்வர் குலத்தைச் சேர்ந்த அச்சுத விக்ராந்தா என்னும் அரசன் சேர சோழ பாண்டிய மன்னர்களைச்

சிறைபிடித்து அவர்களைக் கொண்டு நாவலர் சரிதை என்னும் நூலை இயற்றி களப்பிரர் புகழ் பாட முற்பட்டான் என்று தெரிகிறது.

குறிப்பு

இந்த அச்சுத விக்கிராந்தனைப் பற்றி முற்காலச் சோழ நாட்டின் இலக்கியம் ஒன்றில் அவன் புத்த மதத்தைச் சேர்ந்தவன் என்றும் காவேரிப் பூம்பட்டினத்திலிருந்து சோழ நாட்டை ஆட்சி புரிந்தான் என்றும் குறிப்புக்கள் உள்ளன.

கா்நாடக கல் வெட்டுக்கள் கலி தேவன் குறித்தும் வேள்விக்குடி பட்டயங்கள் கலி அரசன் (மூர்க்க அரசன்) என்றும் களப்பிரரைக் குறிப்பிடுகின்றன.

## அ. இலக்கிய சான்றுகள்

1. பொய்கை ஆழ்வாரின் இலக்கியத்தில் வேங்கட மலை ஆனைகளின் வாசஸ்தலம் என்றும் அங்கே குறவர்கள் குரபர்கள் வசித்தனர் என்றும் குறிப்பிடுகிறார். மேலும் தொடக்ககால ஆழ்வார்களின் குறிப்புக்களில் குரவர் என்பது கா் நூல் மைசூர் சேலம் கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி யில் வாழ்ந்த குரபர்களைக் குறிப்பதாகும் என்றும் சொல்கிறார். இவரின் கூற்றுப்படி இந்தக் குரபர்களின் ஆட்சி வேங்கடத்தில் பல்லவர்களின் படையெடுப்பு ஏற்படும்வரையில் நடந்து வந்தது. மொத்தத்தில இவர்கள் கா்நாடகத்திலிருந்து இறங்கியவர்கள்.
2. தமிழ் நாவலர் சரிதை கவிதைகள் 154 முதல் 157 வரை களப்பிரர் குறித்துத் தெரிவிக்கின்றன. இதன்படி அச்சுத களப்பாளன் எனற நந்தி மலையிலிருந்து ஆட்சி புரிந்து வந்த களப்பிர அரசன் தமிழ் நாட்டை சோழ நாட்டிலிருந்து கொண்டு ஆட்சி புரிந்தான் என்று சொல்லப் படுகிறது. இதன் மூலம் சேர சோழ பாண்டியர்கள் களப்பிரரின் ஆதிக்கக்குடையின் கீழ் ஆட்சி புரிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.
3. பெரிய புராணத்தில் சொல்லப்படும் 63 நாயன்மாரில் ஒருவரான கூற்றுவ நாயனார் களப்பிரர் ஆவார்.நம்பியாண்டார் நம்பி என்பவர் இவரைக் களப்பாளன் என்றே குறிப்பிடுகிறார்.
4. 5ஆம் நூற்றாண்டில் புத்ததத்தர் என்ற பௌத்தத் துறவி பாலி மொழியில் வினயவிநிச்சயம் என்ற நூலை இயற்றினார். இதில் அச்சுத விக்கிராந்தன் களபர்குலநந்தன் என்று புகழப் படுகிறான்.அகனானூறு மற்றும் கல்லாடம் நூல்களில் களப்பிரர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர்.
5. புத்த தத்தரின் மற்றொரு நூலான அபிதம்மாவதாரம் கி.பி 4ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்து புகழ் பெற்றவனான அச்சுத களப்பாளனின் புகழ் பாடுகிறது.

## ஆ. செப்பேடுகளும் கல்வெட்டுக்களும்

1. வேள்விக்குடி சாசனங்கள்(பாண்டிய அரசன் பராந்தக நெடுஞ்செழியன்) கடுங்கோன் தோற்கடித்த களப்பிரரின் நிலை குறித்துத் தெரிவிக்கின்றன.

குறிப்பு

2. கூரம் சாசனங்கள் (அரசன் முதலாம் பரமேஸ்வரா) வேலூர்பாளையம் பள்ளங்கோவில் செப்பேடுகளில் கண்டுள்ள குறிப்புக்களின்படி பல்லவன் சிம்ம விஷ்ணு களப்பிரரைத் தோற்கடித்து சோழ நாட்டை வென்றதாகச் செய்தி உள்ளது.
3. இரண்டாம் விக்கிரமாதித்தனின் நேரூர் நன்கொடைப்பட்டயம் களப்பிரரைப் பற்றிக் குறிப்பிடுகிறது.
4. காஞ்சி வைகுண்டப் பெருமாள் கல்வெட்டின்படி முத்தரையன் என்பவன் பல்லவ மன்னன் நந்தி வர்மனின் முடிசூட்டு விழாவில் கலந்து கொண்ட வரலாற்றுச் செய்தி உள்ளது. முத்தரையர்கள் ஹம்பி மற்றும் திருப்பதியில் ஆண்ட களப்பிரர்களின் வழித்தோன்றல்களாம். இந்த இரு இடங்களும் தக்காணப் பீடபூமியிலான தண்டகாரண்யம் என்ற பகுதியாகும்.
5. செந்தலைத்தூண் கல்வெட்டுக்களில் பெரும் பிடுகு முத்தரையன் கள்வர் கள்வன் களப்பிரனாகும் என்று குறிப்புக்கள் காணப்படுகின்றன.
6. திருப்புகழூர் கல்வெட்டுக்களின்படி நெற்குன்றம் கிழார் களப்பிரனாவான் என்று அறிகிறோம்.
7. கொற்றமங்களம் மற்றும் விநய ஆதித்தியாவின் ஹரிஹரர் செப்பேடுகள் களப்பிரரைக் குறித்து செய்திகளைத் தெரிவிக்கின்றன.
8. கர்நாடகத்தில் அதிக அளவில் வாழும் குருபர்கள் தமிழகத்தின் மேற்குப் பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் கன்னட மொழியைப் பேசுகின்றனர்.

## 4.2.2 களப்பிரர் ஆட்சியைப் பற்றிய வரலாற்று அறிஞர்களின் கருத்துக்கள்

- டி. ஏ. கோபினாதராவ் களப்பிரர்கள் முத்தரையர்கள்தான் என்று காஞ்சிக் கல்வெட்டுக்களின் மூலம் கண்டறிகிறார். கள்வர் என்ற சொல் பிராக்கிருதத்தில் களப்பிரர் என்று காணப் படுகிறது. எனவே களப்பிரர்கள் முத்தரையர்கள்தான் என்பது திண்ணம்.
- எம். ராகவ ஐயங்கார் இதிலிருந்து மாறுபட்ட கருத்தைக் கூறுகிறார். அவர் கூற்றின்படி குடியானவக் கலப்பாளர்கள் தமிழ் நாட்டினவர்தான் என்று தெரிகிறது. யாப்பெருங்கலம் இலக்கியத்தில் களப்பிர அரசன் அச்சுத விக்கிராந்தன் பிராம்மணர்களை ஆதரித்ததாகவும் சொல்லப்படுகிறது.
- எஸ்.கிருஷ்ணசாமி ஐயங்கார் யாப்பெருங்கலத்தில் குறிப்பிடப்படும் களப்பிர அரசன் தமிழகத்தின் வடக்கே கர் நாடகத்தில் அமைந்த நந்தி மலையிலிருந்து வந்தவன் என்றும் தமிழனல்லன் என்றும் கூறுகிறார். சங்க கால இலக்கியங்களில் சொல்லப்பட்ட வேங்கட மலையில் ஆண்ட புல்லி கள்ளர் இனத்தைச் சேர்ந்த களப்பிரனாவான். ஆந்திர அரசர்களும் பல்லவ அரசர்களும் கொடுத்த அரசியல் நெருக்கடியின் காரணமாக

குறிப்பு

இவர்கள் தொண்டைமண்டலம் மூலமாக சோழ நாட்டைப் பிடித்து பின்னர் பாண்டிய நாட்டையும் கைப்பற்றினர் எனலாம். இவரின் கூற்றுப்படி பின்னாளில் தஞ்சை கொடும்பலூரில் வாழ்ந்திருந்த முத்தரையர்கள் களப்பிரரின் வழித்தோன்றல்கல்தாம் என்று கொள்ளப்படுகிறது.

- எஸ். கிருஷ்ணசாமி ஐயங்காரின் வாதங்களும் முடிவுகளும் என். சுப்பிரமணியம் போன்ற அறிஞர்களாலும மேலும் பலராலும் ஏற்றுக் கொள்ளப் படுகின்றன.
- கே. ஆர். வெங்கடராம ஐயரின் கூற்றுப் படி 5ஆம் நூற்றாண்டில் சிரவணபெலகோளாவில் இருந்து வந்த களப்பிரர்கள் கடம்பர்களால் வெளியேற்றப்பட்டனர். 5ஆம் நூற்றாண்டில் அவர்கள் கிழக்கே சென்று தமிழகத்தை அடைந்தனர். கலியரசர் மற்றும் கலிகுலம் என்பது இவர்களைத்தான் குறிக்கிறது என்று அறிகிறோம். என்.சுப்பிரமணியம் இதை மறுக்கிறார். அவரின் கூற்றுப்படி களப்பிரர் தமிழகத்தில் 3ஆம் நூற்றாண்டிலேயே இருந்தனர் என்பதுதான்.
- வெங்கையா முத்தரையனார் புராணம் திருவிளையாடல் புராணம் இவற்றில் கண்டுள்ளபடி களப்பிரர் தமிழ் நாட்டைக் கைப்பற்றிய வரலாற்றைச் சுட்டிக் காட்டுகிறார். தலையாலங்கானத்துப் போரில் பாண்டியன் நெடுஞ்செழியனின் எதிரில் போரிட வந்தது எருமையூரான் என்ற களப்பிரனாவான் என்ற குறிப்பையும் ஏற்றுக் கொள்கிறார்.
- பி. டி. சீனிவாச ஐயங்கார் கருத்துக்களின்படி தமிழ் வேந்தர்களான சேர சோழ பாண்டியரின் செய்யுள்களில் புகழப் படும் களப்பிரர்கள் குறு நில மன்னர்களான தமிழர்களாகவே கருதப் பட வேண்டும் என்று உறுதியாகக் கூறுகிறார்.
- மறைமலை அடிகளார் களப்பிரர் கர்நாடகத்தினர் என்பதை உறுதி செய்கிறார். இவர் கூற்றுப்படி களப்பிரர்களைப் பற்றிய குறிப்புக்கள் அதிக அளவில் ஹொசகொட்டை கற்சின்னங்களிலும் கடம்ப அரசன் காகுஸ்தனைப் பற்றின குறிப்புக்களில் அவன் களேபர இனத்தின் எதிரியாவான் என்றும் இடம் பெற்றுள்ளன.அசோகருடைய கல்வெட்டுக்களிலும் களப்பூரியார் என்ற குறிப்பு இவர்களைக் குறித்துக் காணப்படுகிறது.
- டி. வி. சதாசிவ பண்டாரத்தார் ஏற்றுக்கொள்ளும் கருத்து களப்பிரர் வேறு கலப்பாளர் வேறு என்பதுதான். கலப்பாழ் தஞ்சையின் அருகிலுள்ள ஒரு கிராமம. பெரிய புராணத்தில் கண்ட கூற்றுவ நாயனார் களப்பிரர் அல்லர். அவர் கலப்பாழ் ஊரைச் சேர்ந்தவர் என்று கொள்ளலாம். ஆயினும் சமீபத்தில் தளவாய்புரத்தில் கிடைத்த சாசனப் பட்டயங்களின்படி சின்னமனூர் சாசனத்தில் உள்ள கலியரசனும் தளவாய்புரத்தில் கண்டுள்ள கலப்பாளர் இருவரும் ஒருவரே என்று தெளிவாகத் தெரிகிறது.



ncs_t.indb 50 3/1/2019 8:35:29 AM

- டி. வி. மகாலிங்கம் வேள்விக்குடி செப்பேடுகளில் கண்டுள்ள ஒளியரே களப்பிரர் என்று கருதுகிறார். ஆயினும் என்.சுப்பிரமணியம் இதை மறுக்கிறார். வேங்கட மலையைச் சேர்ந்த களப்பிரரும் ஒளி நாட்டைச் சேர்ந்த ஒளியரும் எந்தத் தொடர்பும் இல்லாதவர்கள் என்று கூறுகிறார்.

குறிப்பு

### வேறு கருத்துக்கள்

- டாக்டர். பன்னீர்செல்வம் களப்பிரர் வேங்கட மலைக்குடியின் மன்னர்கள் என்றும் அவர்களே முத்தரையர்கள் என்றும் ஒப்புக் கொள்கிறார்.
- கே. பி .அரவாணன் களப்பிரர்கள் தமிழர்களே என்று வலியுறுத்துகிறார்.
- நடன காசினாதனின் கருத்துப்படி களப்பிரர்கள் மைசூரின் தெற்கிலிருந்த வேளிர் குடியைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர்கள் தமிழ் நாட்டின் வடக்கு எல்லைகளில் வசித்தவர்கள் என்றும் குறிப்பிடுகிறார்.
- இதைத் தவிர வேறு ஒரு கருத்தின்படி களப்பிரர்கள் கர் நாடகத்தைச் சேர்ந்த கோலார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் சமண மதத்தைப் பின்பற்றினர் என்றும் திட்டவட்டமாக நம்பப் படுகிறது.

முடிவாக களப்பிரர்கள் தொண்டைமண்டலம் வழியாகத் தமிழகத்தில் ஊடுருவி சோழ நாட்டைக் கைப்பற்றிய பின்னர் பாண்டிய நாட்டையும் இணைத்துக் கொண்டு தமிழகம் முழுவதும் ஆட்சியமைத்தனர் என்பது வரலாற்று உண்மையாகும்.

### உங்களுடைய முன்னேற்றத்தைப் பரிசோதியுங்கள்

1. களப்பிரர்கள் யார்? எப்படி அவர்கள் தங்கள் வம்ச ஆட்சியை ஏற்படுத்திக் கொண்டனர்?
2. களப்பிரர் சோழ நாட்டினுள் படையெடுத்துச் செல்ல எது காரணமாக இருந்தது?
3. டாக்டர் பன்னீர்செல்வம் களப்பிரர்கள் தோற்றம் பற்றிக் கூறுவது என்ன?

## 4.3 தமிழகத்தில் சமணமும் புத்த மதமும் கண்ட வளர்ச்சி

களப்பிரர்கள் பௌத்த மதத்தையும் சமண மதத்தையும் ஆதரித்தனர். முற்காலக் களப்பிரர்கள் பௌத்தர்களாகவும் பிற்கால களப்பிரர்கள் சமணரகளாகவும் காணப்பட்டனர். காஞ்சி பௌத்தத்தின் மையமாகவும் மதுரை சமணத்தின் வாயிலாகவும் அமைந்தது. புத்த விகாரங்களும் சமணப் பள்ளிகளும் அதிக அளவில் கட்டப்பட்டன.

கர்நாடகத்தில் அதிக செல்வாக்குள்ள சமணமும் பௌத்தமும் தமிழகத்தில் வேரூன்றக் காரணமானது களப்பிரர் கர் நாடகத்திலிருந்து வந்ததுதான் எனலாம்.

குறிப்பு

சமணக் கொள்கைகள் இந்துமதக் கோட்பாடுகளுக்குப் போட்டியாக இருந்த காரணத்தினாலோ என்னவோ களப்பிரர் காலத்தை இருண்ட காலம் என்று முத்திரை குத்தியுள்ளனரா என்று அறிஞர்கள் ஐயம் எழுப்புகின்றனர்.இதுபோல பௌத்தமும் பிராமணர்கள் பிராமணத்துவம் போன்றவை பின் தங்கிப் போக வழிவகை செய்துவிட்டதாலும் மேற்கண்ட இருண்ட காலக் குற்றச்சாட்டு இன்னும் இருந்து கொண்டுதானிருக்கிறது.

மூவேந்தர் காலத்தில் பிராம்மணர்கள் கீழ் சாதிகளைக் கொடுமைப்படுத்தி வந்தனர் என்றும் அரசனின் அருகாமையால் பிராம்மணர்கள் அதிக சலுகைகளைப் பெற்றதாகவும் கருத்து நிலவுகிறது. இதன் காரணத்தினால்தான் களப்பிரர் பிராம்மணர்களை எதிர்த்து அரச குலத்தினரை அகற்றி அழித்து தம் ஆட்சியை நிறுவ முற்பட்டதாகவும் கருத்து உள்ளது. அரசாங்கத்தின் சலுகையான கொடைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டன. கோவில்களின் வருவாய் பெரிதும் பாதிக்கப் பட்டது எனலாம்.மூவேந்தர் காலத்து பிரம்மதேயம் சாசனங்கள் நிறுத்தப் பட்டன. கோவில் நிர்வாகத்திற்காக ஊர் மக்களிடம் வரிகள் வசூலிக்கப்பட்டு அதிலிருந்து செலவிடப்பட்டது.

இக்காலத்தில் பிராம்மணர்கள் அதிக அளவில் துன்புறுத்தப் பட்டு கொலையும் செய்யப் பட்டனர். அவர்களுடைய ஆஸ்திகளும் அந்த்ஸ்துகளும் பறிக்கப்பட்டன.இதனால் மக்களின் மத்தியில் களப்பிரர்கள் “கொடூரமானவர்கள்” என்ற கருத்துத்தான் நிலவியது.

## 4.4 களப்பிரர்கள் நல்கியவை

சிறந்த கொடுகை சமணம் மற்றும் பௌத்தம் கண்ட அபார வளர்ச்சிதான்

- களப்பிரர் ஆட்சி வலுவானதாகவும் தொடர்ச்சி உள்ளதாகவும் குழப்பம் மற்றும் இனவேற்றுமைகளை அடக்கி வந்த சீரான அமைப்பாகவும் இருந்தது. ஒரு திறன்மிக்க அரசாங்கமாகவும் நிர்வாக முறைகள் யாவும் சீரானதாகவும் தெளிவானதாகவும் இருக்கும் ஆட்சியாக மக்களுக்குப் புலப்பட்டது.
- களப்பிரர் ஆட்சி எல்லைகள் முழுதும் நாட்டு நிர்வாகம் எல்லாத்துறைகளிலும் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியான நடைமுறையில் திட்டவட்டமாக இருந்தது.
- களப்பிரர் ஆட்சி சீரானது என்றாலும் பெருமளவு வளர்ச்சிகள் சில துறைகளில் மட்டும் காணப் பட்டன. ஆனாலும் இலக்கியம் மற்றும் நிர்வாகம் சமயம் போன்றவைகளில் இவர்களின் ஆட்சி சிறப்படைந்தது.
- நிர்வாகம்: இந்த ஆட்சியில் தனித்தனி மாகாணங்களாக நாடு பிரித்து ஆளப்பட்டது.
  - நாடு



ncs_t.indb 52 3/1/2019 8:35:29 AM

- மங்கலம்
- கூரம்
- உருசு

குறிப்பு

- அழியாப் புகழ் பெற்ற சில பல இலக்கியங்கள் களப்பிரர் காலத்தில் இயற்றப் பட்டவையாகும்.
- சேர சோழ பாண்டிய மன்னர்கள் ஒரே குடையில் களப்பிரரின் ஆதிக்கத்தின் கீழ் மூன்று கொடிகளையும் ஒன்றில் ஐக்கியப் படுத்தி ஆட்சி புரியத் தொடங்கினர்.
- பிராக்கிருதம் என்ற வட மொழி தமிழகத்தில் விரிந்து பரவியது. பயனும் பெற்றது.
- கடல் கடந்த வாணிபம் இவர்கள் காலத்தில் முன்னேற்றம் அடைந்தது.
- களப்பிரர்களின் துறைமுகப் பட்டினம் சிறந்த வளர்ச்சி அடைந்தது.

**இலக்கியம்:** ஜைன சங்கம் களப்பிரரால் தோற்றுவிக்கப்பட்டது. இதன் மூலம் தமிழ் இலக்கியம் வளர்ச்சியடைந்தது. அழியாப்புகழ் அடைந்த தமிழ் இலக்கியங்கள் திருக்குறள் சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை இக்காலத்தைச்சேர்ந்தது என்று கருதுகின்றனர். இதை இயற்றியவர்கள் பௌத்த மதத்தினர் அல்லது சமண மதத்தினர் ஆவர்.

**களப்பிரரின் வீழ்ச்சி:** களப்பிரர்கள் தொடர்ந்து மேற்கொண்ட படையெடுப்புக்களால் சேர சோழ பாண்டிய பல்லவ மன்னர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாயினர். இவர்கள் ஒருங்கிணைந்து இந்த அராஜகத்தை ஒழிக்க முடிவு செய்தனர். பல்லவ மன்னன் இரண்டாம் சிம்ம வர்மனின் மகன் சிம்ம விஷ்ணு களப்பிரரைத் தோற்கடித்தான். இதே போல பாண்டியன் கடுங்கோன் பல்லவர் துணை கொண்டு களப்பிரரைத் தோற்கடித்தான். களப்பிரரை அழித்து பிராம்மணத்துவம் மீண்டும் உயிர்த்தெழ சிம்ம விஷ்ணுவின் வெற்றிதான் அடிகோலியது எனபது சரித்திரத்தின் உண்மையாகும்.

சோழர்களும் பல்லவர்களும் பாண்டியர்களும் 7ஆம் நூற்றாண்டில் தென் இந்தியாவில் தங்கள் பூரண ஆட்சியை நிலை நாட்டி களப்பிரரை வேரறுத்தனர். களப்பிரரின் இருண்ட காலம் இவ்வாறு முடிவுக்கு வந்தது.

## உங்களுடைய முன்னேற்றத்தைப் பரிசோதியுங்கள்

4. வரலாற்று அறிஞர்கள் தமிழகத்தின் வரலாற்றில் களப்பிரரின் ஆட்சியை ஏன் இருண்ட காலம் என்று கருதுகின்றனர்?
5. சோழர் பாண்டியர் நாட்டுக் குடிமக்களின் பார்வையில் களப்பிரர்கள் கொடூரமானவர்கள் என்று ஏன் கருதப்பட்டனர்?
6. களப்பிரர் காலத்து சிறப்பான பங்களிப்புக்கள் என்ன?
7. களப்பிரரின் நிர்வாகத் திறமையின் நடைமுறைகள் குறித்து சிறிய குறிப்பு வரைக.



ncs_t.indb 53 3/1/2019 8:35:29 AM

## 4.5 திறன் அடைவிற்கான பரிசோதனை வினாக்களுக்கான விடைகள்

குறிப்பு

1. கடம்பர்களால் சொந்த நாட்டிலிருந்து வெளியேற்றப் பட்ட களப்பிர அரசன் புல்லி வேங்கட மலை நாட்டிலிருந்து வந்து பல்லவர்களின் ஆட்சியிலிருந்த தொண்டை மண்டலத்தில் ஊடுருவி பல்லவ அரசன் பப்பதேவன் மற்றும் சிவஸ்கந்தவர்மன் காலத்தில் தோல்வியுற்ற நிலையில் தொண்டை மண்டலத்தில் ஏற்பட்ட குழப்ப நிலை காரணமாக கூற்றுவ நாயனார் காலத்தில் மூன்றாம் நூற்றாண்டுக்கும் நான்காம் நூற்றாண்டுக்கிடையில் தொண்டை நாட்டை வசப்படுத்தினான். காவேரிப்பட்டினத்தைத் தலை நகராகக் கொண்டான். பின்னர் சேர சோழ பாண்டியர்களைக் கட்டுப் படுத்தி தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர்.
2. தொண்டை நாட்டில் உட்புகுந்த இவர்கள் தெற்கே சென்று ஊடுருவி திறமையற்ற நிலையற்ற ஆட்சியினால் உள் நாட்டுக் குழப்பங்களுமாக நிறைந்திருந்த சோழ நாட்டையும் பிடித்தனர்.
3. டாக்டர்.பன்னீர்செல்வத்தின் கருத்துப்படி களப்பிரர் வேங்கட மலைக்குடியின் மன்னர்கள் என்றும் அவர்களே முத்தரையர்கள் என்றும் ஒப்புக் கொள்கிறார்.
4. சமணக் கொள்கைகள் இந்துமதக் கோட்பாடுகளுக்குப் போட்டியாக இருந்த காரணத்தினாலோ என்னவோ களப்பிரர் காலத்தை இருண்ட காலம் என்று முத்திரை குத்தியுள்ளனரா என்று அறிஞர்கள் ஐயம் எழுப்புகின்றனர்.இதுபோல பௌத்தமும் பிராமணர்கள் பிராமணத்துவம் போன்றவை பின் தங்கிப் போக வழிவகை செய்துவிட்டதாலும் மேற்கண்ட இருண்ட காலக் குற்றச்சாட்டு இன்னும் இருந்து கொண்டுதானிருக்கிறது.
5. இக்காலத்தில் பிராம்மணர்கள் அதிக அளவில் துன்புறுத்தப் பட்டு கொலையும் செய்யப் பட்டனர். அவர்களுடைய ஆஸ்திகளும் அந்த்ஸ்துகளும் பறிக்கப்பட்டன. அரச குடும்பத்தினரும் ஒடுக்கப்பட்டு அழிக்கப்பட்டனர்.இதனால் நாட்டுக் குடி மக்களின் மத்தியில் களப்பிரர்கள் “கொடூரமானவர்கள்” என்ற கருத்துத்தான் நிலவியது
6. சமண மதமும் பௌத்த மதமும் அவர்தம் வழிபாட்டுச் தலங்களும் சின்னங்களும் களப்பிரர்கள் தமிழகத்துக்கு அளித்த கொடுகை என்று கருதலாம்.
7. களப்பிரர் ஆட்சி வலுவானதாகவும் தொடர்ச்சி உள்ளதாகவும் குழப்பம் மற்றும் இனவேற்றுமைகளை அடக்கி வந்த சீரான அமைப்பாகவும் இருந்தது. ஒரு திறன்மிக்க அரசாங்கமாகவும் நிர்வாக முறைகள் யாவும் சீரானதாகவும் தெளிவானதாகவும் இருக்கும் ஆட்சியாக மக்களுக்குப் புலப்பட்டது. களப்பிரர் ஆட்சி எல்லைகள் முழுதும் நாட்டு நிர்வாகம்



ncs_t.indb 54 3/1/2019 8:35:29 AM

எல்லாத்துறைகளிலும் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியான நடைமுறையில் திட்டவட்டமாக இருந்தது.

குறிப்பு

## 4.6 உரைச் சுருக்கம்

- சோழர் பாண்டியர் பல்லவர்கள் ஆண்ட 3ஆம் நூற்றாண்டு சங்ககாலமாகும்
- களப்பிரர்கள் கர்நாடகத்திலிருந்து உட்புகுந்த ஆக்கிரமிப்பாளர்கள் என்றும் இவர்கள் தொண்டைமண்டலம் வழியாகத் தமிழகத்தில் ஊடுருவி சோழ நாட்டைக் கைப்பற்றிய பின்னர் பாண்டிய நாட்டையும் இணைத்துக் கொண்டு காவேரிப்பட்டிணத்திலிருந்து தமிழகம் முழுவதும் ஆட்சியமைத்தனர் என்றும் கூறப் படுகிறது.
- ஆட்சி எல்லைகள்: திருவேங்கிடம் முதல் குமரிமுனை வரை ஆண்ட களப்பிரர்கள் உச்ச காலத்தில் இலங்கையிலும் ஆட்சி புரிந்தனர். காவேரிப் பட்டினம் துறைமுகப் பட்டினமாக வளர்ச்சி பெற்று அரசியல் மற்றும் சமூக நிகழ்வுகளைக் கண்டது.
- கி.பி 250 முதல் கி.பி575 வரை இவர்களது ஆட்சி நடந்தது. கி.பி ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் பாண்டியர்களாலும் பல்லவர்களாலும் தோற்கடிக்கப்பட்டனர்.
- இலக்கியங்களின் வாயிலாக நாம் அறிவது கள்வர் குலத்தைச் சேர்ந்த அச்சுத விக்ராந்தா என்னும் அரசன் சேர சோழ பாண்டிய மன்னர்களைச் சிறைபிடித்து அவர்களைக் கொண்டு நாவலர் சரிதை என்னும் நூலை இயற்றி களப்பிரர் புகழ் பாட முற்பட்டான் என்று தெரிகிறது.
- டி.ஏ.கோபினாதராவ் களப்பிரர்கள் முத்தரையர்கள்தான் என்று காஞ்சிக் கல்வெட்டுக்களின் மூலம் கண்டறிகிறார். கள்வர் என்ற சொல் பிராக்கிருதத்தில் களப்பிரர் என்று காணப் படுகிறது. எனவே களப்பிரர்கள் முத்தரையர்கள்தான் என்பது திண்ணம்.
- எம்.ராகவ ஐயங்கார் இதிலிருந்து மாறுபட்ட கருத்தைக் கூறுகிறார். அவர் கூற்றின்படி குடியானவக் கலப்பாளர்கள் தமிழ் நாட்டினவர்தான் என்று தெரிகிறது. யாப்பெருங்கலம் இலக்கியத்தில் களப்பிர அரசன் அச்சுத விக்கிராந்தன் பிராம்மணர்களை ஆதரித்ததாகவும் சொல்லப்படுகிறது.
- எஸ்.கிருஷ்ணசாமி ஐயங்கார் யாப்பெருங்கலத்தில் குறிப்பிடப்படும் களப்பிர அரசன் தமிழகத்தின் வடக்கே கர் நாடகத்தில் அமைந்த நந்தி மலையிலிருந்து வந்தவன் என்றும் தமிழனல்லன் என்றும் கூறுகிறார். சங்க கால இலக்கியங்களில் சொல்லப்பட்ட வேங்கட மலையில் ஆண்ட புல்லி கள்ளர் இனத்தைச் சேர்ந்த களப்பிரனாவான். ஆந்திர அரசர்களும் பல்லவ அரசர்களும் கொடுத்த அரசியல் நெருக்கடியின் காரணமாக இவர்கள் தொண்டைமண்டலம் மூலமாக சோழ நாட்டைப் பிடித்து பின்னர் பாண்டிய நாட்டையும் கைப்பற்றினர் எனலாம். இவரின் கூற்றுப்படி

குறிப்பு

பின்னாளில் தஞ்சை கொடும்பலூரில் வாழ்ந்திருந்த முத்தரையர்கள் களப்பிரரின் வழித்தோன்றல்கல்தாம் என்று கொள்ளப்படுகிறது.

- எஸ்.கிருஷ்ணசாமி ஐயங்காரின் வாதங்களும் முடிவுகளும் என். சுப்பிரமணியம் போன்ற அறிஞர்களாலும மேலும் பலராலும் ஏற்றுக் கொள்ளப் படுகின்றன.
- மறைமலை அடிகளார் களப்பிரர் கர்நாடகத்தினர் என்பதை உறுதி செய்கிறார். இவர் கூற்றுப்படி களப்பிரர்களைப் பற்றிய குறிப்புக்கள் அதிக அளவில் ஹொசகொட்டை கற்சின்னங்களிலும் கடம்ப அரசன் காகுஸ்தனைப் பற்றின குறிப்புக்களில் அவன் களேபர இனத்தின் எதிரியாவான் என்றும் இடம் பெற்றுள்ளன.அசோகருடைய கல்வெட்டுக்களிலும் களப்பூரியார் என்ற குறிப்பு இவர்களைக் குறித்துக் காணப்படுகிறது.
- டி. வி. சதாசிவ பண்டாரத்தார் ஏற்றுக்கொள்ளும் கருத்து களப்பிரர் வேறு கலப்பாளர் வேறு என்பதுதான். கலப்பாழ் தஞ்சையின் அருகிலுள்ள ஒரு கிராமம். பெரிய புராணத்தில் கண்ட கூற்றுவ நாயனார் களப்பிரர் அல்லர். அவர் கலப்பாழ் ஊரைச் சேர்ந்தவர் என்று கொள்ளலாம். ஆயினும் சமீபத்தில் தளவாய்புரத்தில் கிடைத்த சாசனப் பட்டயங்களின்படி சின்னமனூர் சாசனத்தில் உள்ள கலியரசனும் தளவாய்புரத்தில் கண்டுள்ள கலப்பாளர் இருவரும் ஒருவரே என்று தெளிவாகத் தெரிகிறது.
- டி. வி. மகாலிங்கம் வேள்விக்குடி செப்பேடுகளில் கண்டுள்ள ஒளியரே களப்பிரர் என்று கருதுகிறார். ஆயினும் என்.சுப்பிரமணியம் இதை மறுக்கிறார். வேங்கட மலையைச் சேர்ந்த களப்பிரரும் ஒளி நாட்டைச் சேர்ந்த ஒளியரும் எந்தத் தொடர்பும் இல்லாதவர்கள் என்று கூறுகிறார்.
- கே. ஆர்.வெங்கடராம ஐயரின் கூற்றுப் படி 5ஆம் நூற்றாண்டில் சிரவணபெலகோளாவில் இருந்து வந்த களப்பிரர்கள் கடம்பர்களால் வெளியேற்றப்பட்டனர். 5ஆம் நூற்றாண்டில் அவர்கள் கிழக்கே சென்று தமிழகத்தை அடைந்தனர். கலியரசர் மற்றும் கலிகுலம் என்பது இவர்களைத்தான் குறிக்கிறது என்று அறிகிறோம். என்.சுப்பிரமணியம் இதை மறுக்கிறார். அவரின் கூற்றுப்படி களப்பிரர் தமிழகத்தில் 3ஆம் நூற்றாண்டிலேயே இருந்தனர் என்பதுதான்.
- டாக்டர்.பன்னீர்செல்வம் களப்பிரர் வேங்கட மலைக்குடியின் மன்னர்கள் என்றும் அவர்களே முத்தரையர்கள் என்றும் ஒப்புக் கொள்கிறார்.
- கே. பி. அரவாணன் களப்பிரர்கள் தமிழர்களே என்று வலியுறுத்துகிறார்.
- நடன காசினாதனின் கருத்துப்படி களப்பிரர்கள் மைசூரின் தெற்கிலிருந்த வேளிர் குடியைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர்கள் தமிழ் நாட்டின் வடக்கு எல்லைகளில் வசித்தவர்கள் என்றும் குறிப்பிடுகிறார்.



ncs_t.indb 56 3/1/2019 8:35:29 AM

குறிப்பு

- இதைத் தவிர வேறு ஒரு கருத்தின்படி களப்பிரர்கள் கர் நாடகத்தைச் சேர்ந்த கோலார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் சமண மதத்தைப் பின்பற்றினர் என்றும் திட்டவட்டமாக நம்பப் படுகிறது.
- களப்பிரர்கள் பௌத்த மதத்தையும் சமண மதத்தையும் ஆதரித்தனர். முற்காலக் களப்பிரர்கள் பௌத்தர்களாகவும் பிற்கால களப்பிரர்கள் சமணர்களாகவும் காணப்பட்டனர். காஞ்சி பௌத்தத்தின் மையமாகவும் மதுரை சமணத்தின் சாளரமாகவும் அமைந்தது.
- களப்பிரர் ஆட்சி வலுவானதாகவும் தொடர்ச்சி உள்ளதாகவும் குழப்பம் மற்றும் இனவேற்றுமைகளை அடக்கி வந்த சீரான அமைப்பாகவும் இருந்தது. ஒரு திறன்மிக்க அரசாங்கமாகவும் நிர்வாக முறைகள் யாவும் சீரானதாகவும் தெளிவானதாகவும் இருக்கும் ஆட்சியாக மக்களுக்குப் புலப்பட்டது. களப்பிரர் ஆட்சி எல்லைகள் முழுதும் நாட்டு நிர்வாகம் எல்லாத்துறைகளிலும் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியான நடைமுறையில் திட்டவட்டமாக இருந்தது.
- தமிழ் இலக்கியம் வளர்ச்சியடைந்தது. அழியாப்புகழ் அடைந்த தமிழ் இலக்கியங்கள் திருக்குறள் சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை இக்காலத்தைச்சேர்ந்தது என்று கருதுகின்றனர். இதை இயற்றியவர்கள் பௌத்த மதத்தினர் அல்லது சமண மதத்தினர் ஆவர்.
- சேர சோழ பாண்டிய மன்னர்கள் ஒரே குடையில் களப்பிரரின் ஆதிக்கத்தின் கீழ் மூன்று கொடிகளையும் ஒன்றில் ஐக்கியப் படுத்தி ஆட்சி புரியத் தொடங்கினர்.
- பிராக்கிருதம் என்ற வட மொழி தமிழகத்தில் விரிந்து பரவியது. பயனும் பெற்றது.
- கடல் கடந்த வாணிபம் இவர்கள் காலத்தில் முன்னேற்றம் அடைந்தது.
- களப்பிரர்களின் துறைமுகப் பட்டினம் சிறந்த வளர்ச்சி அடைந்தது.
- சோழர்களும் பல்லவர்களும் பாண்டியர்களும் 7ஆம் நூற்றாண்டில் தென் இந்தியாவில் தங்கள் பூரண ஆட்சியை நிலை நாட்டி களப்பிரரை வேரறுத்தனர். களப்பிரரின் இருண்ட காலம் இவ்வாறு முடிவுக்கு வந்தது.

## 4.7 சுய பரிசோதனை கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

### குறுகிய விடைகளுக்கான வினா

1. சங்ககால காலக் கணிப்பு என்ன என்று குறிப்பிடவும்
2. களப்பிரரின் ஆட்சி எல்லைகளைக் கூறவும்
3. களப்பிரரைக் குறிக்கும் இலக்கியச் சான்றுகள் பற்றிக் குறிப்பிடுக
4. களப்பிரர் ஆட்சியில் பிராம்மணர்களின் நிலை என்ன?



ncs_t.indb 57 3/1/2019 8:35:30 AM

குறிப்பு

## விரிவான விடைகளுக்கான வினா

1. களப்பிரரின் ஆட்சி இருண்ட காலம் என வரலாற்றில் ஏன் கருதப்படுகிறது?
2. களப்பிரரின் தோற்றம் குறித்து எழும் வரலாற்று அறிஞர்களின் கருத்துக்களை ஆராய்க
3. களப்பிரர்களின் நிர்வாக முறையின் அமைப்பை விவரிக்கவும்
4. இக்காலத்தில் இலக்கியங்கள் அடைந்த வளர்ச்சியை ஆராய்ந்து விளக்கவும்.



ncs_t.indb 58 3/1/2019 8:35:30 AM

# அலகு 5 பல்லவர்கள்

குறிப்பு

**அமைப்பு**

5.0 அறிமுகம்
5.1 நோக்கங்கள்: இப் பாடங்களின் மூலம் நீங்கள்
5.2 பல்லவர்களின் தோற்றமும் அதற்கான சான்றுகளும்
5.3 முற் காலப் பல்லவர்கள்
5.4 வலிமை மிகு பல்லவர்கள்
5.5 பல்லவர் சாளுக்கியர் போர்கள்
5.6 திறன் அடைவிற்கான பரிசோதனை வினாக்களுக்கு விடைகள்
5.7 உரைச் சுருக்கம்
5.8 சுய பரிசோதனை கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

## 5.0 அறிமுகம்

பல்லவர்களின் தோற்றம் குறித்து மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. முனைவர். வி.ஏ.ஸ்மித் என்ற வரலாற்று அறிஞர் பல்லவர்களை பாரசீக பார்த்தியர்கள் என்று கருதுகிறார். வேறு சிலர் அவர்களை கடம்பர்கள் என்றும் பஹ்லவர் என்றும் குறிப்பிடுகின்றனர். எனினும் எல்லா அறிஞர்களும் பல்லவர்களை சத்திரியர்கள் என்றே ஒப்புக் கொள்கின்றனர். சிம்மவர்மனே முதன் முதலான பல்லவ மன்னன் எனலாம். பல்லவ வம்ச ஆட்சியைத் தொடங்கி வைத்தவன் சிம்மவர்மன் என்று பிராக்கிருதத்தில் எழுதப்பட்ட கல்வெட்டுக் குறிப்புக்கள் கூறுகின்றன. இதன் பின்னர் வந்தவன் அவனுடைய மகன் ஸ்கந்தவர்மன்- யுவராஜாவாக இருந்தவன் மகாராஜாவாகிப் பட்டம் சூட்டிக் கொண்டான்.காஞ்சியைத் தலை நகராகக் கொண்ட இவன் அஸ்வமேத யாகம் நடத்தினான். அக்னிஸ்தோமா மற்றும் வாஜபேய யக்யம் நிகழ்த்தினான். இவனுடைய ஆட்சி வடக்கில் கிருஷ்ணா நதிவரையிலும் மேற்கே அரபிக் கடல் வரையிலும் பரந்திருந்தது.

இந்த அலகில் பல்லவர்களுடைய தோற்றம் பல்லவப் பேரரசர்கள் பல்லவர் சாளுக்கியப் போர்கள் என்பவற்றைப் படிக்கலாம்.தென் இந்திய தீபகர்ப்பத்தில் 6ஆம் நூற்றாண்டு முதல் 8ஆம் நூற்றாண்டு வரையிலான அரசியல் வரலாற்றில் பல்லவ சாளுக்கியப் போர்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

## 5.1 நோக்கங்கள்: இப் பாடங்களின் மூலம் நீங்கள்

- பல்லவர்களின் பின்னணி மற்றும் தொடக்கம் குறித்து அறிந்து கொள்ளலாம்.

- பெருமை மிக்க பல்லவர்களின் வரலாறு குறித்து விவரிக்கலாம்.
- பல்லவர் சாளுக்கியர் போர்கள் குறித்த விவரங்களை அறிந்து கொள்ளலாம்.

குறிப்பு

## 5.2 பல்லவர்களின் தோற்றமும் அதற்கான சான்றுகளும்

தமிழ் நாடு 3ஆம் நூற்றாண்டிலிருந்து 6ஆம் நூற்றாண்டு வரை களப்பிரர் ஆட்சியின் கீழ் இருந்து வந்தது. சிலபல நன்மைகள் கோடிட்டுக் காட்டப் பட்டாலும் பெருமளவில் பார்க்கும்போது நமக்குக் களப்பிரரின் ஆட்சி ஒரு இருண்ட காலமாகவே தோற்றமளிக்கிறது. சங்கத்தமிழ் நாடு சேர சோழ பாண்டியர்களின் காலத்தில் பெற்ற அனைத்து நன்மைகளும் பொலிவிழந்து நிலை குலைந்து ஒரு இயங்கா நிலையில் நாடும் மக்களும் சிக்கித்தவித்தன எனலாம். இதைத் தவிர களப்பிரர்கள் கர்நாடக நாட்டிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் என்பதனால் அவர்களுடைய நடைமுறைகள் பண்பாடு கலாச்சாரம் எல்லாம் தமிழ் நாட்டிற்கு உகந்தவையாக இல்லாததால் மக்களிடம் நன்மதிப்பு ஏற்படவில்லை என்பது ஒரு காரணம். சங்ககால தமிழ் இலக்கிய வெளிப்பாடுகள் மற்றும் மொழி சார்ந்த வளர்ச்சி களப்பிரர் உடன் கொணர்ந்த பிராக்கிருத மொழியின் ஆதிக்கத்தினால் தடைபட்டது எனக் கொள்ளலாம். இந்து மத உணர்வுகள் சமண மத வளர்ச்சியினாலும் பிராம்மணர்கள் கொடுமைப்படுத்திக் கொல்லப்பட்டதாலும் பெரிதும் புண்பட்டன. களப்பிரர்கள் தம் இருப்பிடங்களிலிருந்து கடம்பர்களாலும் ஆந்திர மன்னர்களாலும் விரட்டப்பட்டனர். ஆங்கே சேர சோழ பாண்டிய மன்னர்களிடையே நிலவிய ஒற்றுமையின்மை நாட்டில் நிலவிய குழப்ப நிலை மற்றும் அவர்களின் திறமையான வலிமையான சந்ததியின்மை காரணமாகக் களப்பிரரின் படையெடுப்பில் வீழ்ந்தது தமிழகம். தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளினால் பல்லவர் காஞ்சியிலும் தெற்கில் மதுரை பாண்டியர்களும் 7ஆம் நூற்றாண்டில் களப்பிரர்களைத் தோற்கடித்தனர்.

பல்லவ சாம்ராஜ்ஜியம் வடக்கே கிருஷ்ணா நதியிலிருந்து தொடங்கி தெற்கே பாலாறு வரை பரவியிருந்தது. இது தொண்டை மண்டலம் எனப்பட்டது.

கி.பி 900 வரை பல்லவர்கள் சீராக ஆட்சி புரிந்தனர். பல்லவர்கள தமிழ் நாட்டைச் சேர்ந்தவரல்லர் என்ற கருத்து நிலவினாலும் ஒரு சில வரலாற்று வல்லுனர்கள் இவர்களைத் தமிழர்கள் என்றே ஒப்புக் கொள்கின்றனர்.

### 5.2.1 பல்லவர் குறித்த சான்றுகள்

வரலாற்று ஆசிரியர்களும் ஆராய்ச்சியாளர்களும் பல்லவர்களின் தொடக்கத்தை ஆராய முற்படுகையில் கிடைக்கும் பல்வேறு கருத்துக்கள் அவர்களைக் கடம்பர்கள் என்றும் பஹ்லவர் என்றும் குறிப்பிடுகின்றன. எனினும் எல்லா அறிஞர்களும் பல்லவர்களை சத்திரியர்கள் என்றே ஒப்புக் கொள்கின்றனர்.

மேலும் களப்பிரர்களைப் போலல்லாமல் பல்லவர்களைக் குறித்த சான்றுகள் அதிக அளவில் இருந்த படியால் கல்வெட்டுக்கள் மூலமாகவோ பட்டயங்கள் சாசனங்கள் மூலமாகவோ நினைவுச்சின்னங்கள் மூலமாகவோ அல்லது வெளி நாட்டுப் பயணிகளின் குறிப்புக்களினாலோ கிடைக்கும் ஆதாரங்களாக ஒப்புக்கொள்ளப் படுகின்றன.

குறிப்பு

| வரிசை எண் | சான்றுகளின் மூலம் | சான்றுகளின் வகை | சான்றுகள் |
|---|---|---|---|
| 1. | உள் நாடு | இலக்கியம் | தமிழ் சமஸ்கிருதம் பிராக்கிருதம் |
| 2. | உள் நாடு | தொல்பொருட்கள் | கல்வெட்டுக்கள் பட்டயங்கள் சாசனங்கள் நினைவுச்சின்னங்கள் கலைச்சின்னங்கள் |
| 3. | வெளி நாடு | இலக்கியம் | இலங்கையிலிருந்து மகாவம்சம் மற்றும் தீப வம்சம் |
| 4. | வெளி நாடு | இலக்கியம் | சியூக்கி-சீன யாத்திரிகர் யுவான் சுவாங் குறிப்புக்கள் |

I. **இலக்கியச் சான்றுகள்:** தமிழிலும் சமஸ்கிருதத்திலும் பல்லவர்களைக் குறித்தும் பல்லவர்களுடைய ஆட்சியைப் பற்றியும் பல குறிப்புக்கள் உள்ளன.

1. தேவாரம்: அப்பர் சம்பந்தர் சுந்தரர் இயற்றிய தேவாரம் ஒரு சைவ சமய நூல். பல பாடல்களைக் கொண்ட இத் தொகுப்பு கடவுளைப் போற்றிப் பாடப் பெற்றவை.
    - இதன் மூலம் நாம் பல்லவர் காலத்திலிருந்த சமணர் குறித்து அறிகிறோம். பல்லவ மன்னன் முதலாம் மகேந்திர வர்மன் சமண மதத்திலிருந்து மாறி சைவக் குரவர் அப்பரின் போதனைகளால் சைவத்தைத் தழுவினார் என அறிகிறோம்.
    - 9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுந்தரர் தனது திருதொண்ட தொகையில் பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மனைக் குறித்து எழுதியிருக்கிறார்.
2. பெரிய புராணம்: சேக்கிழார் எழுதிய இலக்கியப் பொக்கிஷம் இது. இவர் பல்லவ அரசர்கள் மற்றும் படைத் தலைவர்களாக இருந்த நாயன்மார்களைக் குறித்து எழுதியுள்ளார். நாயன்மார்கள் சைவ சமயத்தின் தொண்டர்கள்.
    - ஐயடிகள் கடவர் கோன் என்ற நாயன்மாரின் இயற்பெயர் பல்லவ அரசன் மூன்றாம் சிம்மவர்மன்

குறிப்பு

- கழர்ச்சிங்கன் என்ற நாயனார் பல்லவ மன்னர் மூன்றாம் நந்திவர்மன் ஆவான்
- சிறுதொண்ட நாயனார் பல்லவர்களின் படைத் தலைவர் ஆவான். இயற்பெயர் பரஞ்சோதியார்
- பெரிய புராணத்தில் பல்லவர் ஆளுகைக்குட்பட்ட வேறு பல குறு நில மன்னர்களைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளது

3. நாலாயிர திவ்வியப் பிரபந்தம்: திருமங்கை ஆழ்வாரால் இயற்றப் பெற்ற இந் நூல் வைணவ மதத்தின் வழிபாட்டு நூலாகும். இவர் பல்லவ மன்னர் இரண்டாம் நந்திவர்மன் காலத்தவர். நென்மேனிப் போரைக்குறித்தும் அதில் நேரடியாகப் போரிட்ட மன்னன் இரண்டாம் நந்திவர்மன் குறித்தும் குறிப்புக்கள் உள்ளன. இந்த நூலில் பல்லவப் போர் முறைகளையும் அவர்களின் படைத்திறன் குறித்தும் ஆயுதங்கள் குறித்தும் இசைக் கருவிகள் குறித்தும் எழுதப் பட்டிருக்கின்றன.
4. லோகவிபாகா: இந்த நூல் சமணரின் மத நூல். இதை எழுதிய சர்வான்தி என்பவர் பல்லவ மன்னர் சிம்மவர்மன் ஆட்சி தொடங்கிய காலத்தவர்.
5. நந்தி கலம்பகம்: மூன்றாம் நந்திவர்மனின் வீரம் அவனுடைய போர்த்திறமை இவற்றைச் சித்தரிக்கும் நூல் இது. தொள்ளாறு போர் குறித்து இந் நூலிற்கண்டுள்ளது. நந்திவர்மனுக்கு கிடைத்த பட்டமான தொள்ளாறு எறிந்த நந்தி போத்தறையான் என்ற குறிப்பு காணப்படுகிறது. மேலும் தலை நகரம் பல்லவர்கள் பெருமை செய்த புலவர்களின பெயர்கள் மற்றும் பல்லவ மன்னர்கள் ஆதரித்து வந்த புலவர்களின் பெயர்கள் அனைத்தும் இடம் பெற்றுள்ளன.
6. பாரத வெண்பா என்பது தமிழ்க் கவிதையாகும். மூன்றாம் நந்திவர்மன் பங்குபெற்ற தொள்ளாறு போர் குறித்து இதில் எழுதப்பட்டிருக்கிறது.
7. சமஸ்கிருத இலக்கியச் சான்றுகள்: முதலாம் மகேந்திரவர்மன் சமஸ்கிருதத்தில் நாடகங்கள் மற்றும் உரைகளை எழுதியுள்ளான். அப்பர் அடிகளின் காலத்தில் வாழ்ந்த இவன் காஞ்சியிலிருந்த சமணர் பௌத்தர் கபாலிகர் பசுபதர் குறித்த நூல் ஒன்றான மத்த விலாச பிரஹசனா என்பதை இயற்றியுள்ளான். பகவத அஜிகியம் என்பது இன்னொரு நூ லாகும்.அவந்தி சுந்தர கதாச்சாரா என்ற மற்றொரு நூல் காஞ்சியில் பல்லவ மன்னன் சிம்மவிஷ்ணு கவிஞர் பாரவியைப் பாராட்டிச் சிறப்பு செய்த நிகழ்வைக் குறித்துச் சொல்லுகிறது.

II. கல்வெட்டுக்குறிப்புக்கள் பட்டயங்கள் மற்றும் சாசனங்கள் பல்லவரின் ஆட்சி குறித்து விவரங்களைத் தெரிவிக்கின்றன. வரலாற்று ஆராய்ச்சியாளர் திரு.ஆர்.கோபாலன் இவற்றை மொழிவாரியாகப் பிரித்துக் காட்டியுள்ளார்.

- பிராக்கிருதம்
- சமஸ்கிருதம்



ncs_t.indb 62 3/1/2019 8:35:30 AM

குறிப்பு

- சமஸ்கிருதம் மற்றும் தமிழ்

பல்லவ மன்னர்களின் பரிசில்கள் அன்பளிப்புப் பொருட்கள் கொடையாகக் கொடுக்கப்பட்டதற்கான சாசனங்கள் கோவில்களுக்குக் கொடுக்கப்பட்ட காணிக்கைகள் குறித்து இதில் எழுதப் பட்டிருக்கின்றன.

- 4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிம்ம வர்மன் காலத்தில் ஏற்படுத்திய மஞ்சிகல்லு கல்வெட்டுக்கள்
- இளவரசன் சிவஸ்கந்தவர்மன்னின் மொய்த வோலு நன்கொடைப் பட்டயங்கள் சிம்ம வர்மனின் 10வது ஆட்சி ஆண்டில் கொடுக்கப்பட்டன
- சிவஸ்கந்தவர்மன் அரசனான பின்னர் அவனது எட்டாம் ஆட்சி ஆண்டில் கிராகத கல்லி செப்புத் தகடுகள் வெளியிடப்பட்டன.
- ஆங்கிலேய பொருட்காட்சியில் உள்ள ராணி சாருதேவியின் செப்புத் தகடுகள் பிராக்கிருத மொழியில் உள்ளன. இவற்றில் விஜயஸ்கந்தவர்மன் விஜய புத்தவர்மன் மற்றும் புத்தான்குரன் ஆகிய பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.
- இந்த பிராக்கிருத மொழியிலான பட்டயங்களைத் தவிர அரசன் சமுத்திரகுப்தன் அலகாபாத்தில் பல்லவர்களைக் குறித்து கல்வெட்டுக்களை வெளியிட்டுள்ளான் என்று உணர்கிறோம்.

### உங்களுடைய முன்னேற்றத்தைப் பரிசோதியுங்கள்

1. களப்பிரர்களின் காலம் ஒரு இருண்ட காலம் என்று சில வரளாற்று ஆசிரியர்களால் ஏன் கொள்ளப்பட்டது?
2. தேவாரம் என்பது எதனைக்குறிக்கின்றது?

## 5.3 முற் காலப் பல்லவர்கள்

பல்லவர்களின் தோற்றம் குறித்து பல்வேறு கருத்துக்கள் நிலவி வருகின்றன. ஆயினும் அவற்றில் பல்லவர்களின் தோற்றம் பற்றின உடன்பாடான கருத்துக்கள் இவர்களிடம் ஏற்படவில்லை எனலாம்.

முதலாம் கருத்து: பாரசீகத்திலிருந்து வந்த பஹ்லவர்கள் பல்லவர்களாகக் கருதப்பட்டனர் என்பது ஒரு கருத்து. இதற்கு ஆதாரமாக பாரசீக மொழியும் பிராக்கிருத மொழியும் ஒற்றுமையில் இருப்பதாகக் கொள்ளப் படுகிறது. பல்லவர்கள் மத்திய ஆசியாவிலிருந்து வந்து குடியேறியவர்கள் என்று லெவிஸ்ரைஸ் லூவேதூப்ராய் வெங்கையா வெங்கிட சுப்பையா போன்ற அறிஞர்களால் கருதப்படுகிறது. வெங்கிட சுப்பையாவின் கூற்றின் படி பல்லவர்களின் செப்புப் பட்டயங்களும் பாரசீக மொழியின் தன்மையும் உறுதிப்பட்டு ஈர்ப்பதாகக் கருதுகிறார்.

குறிப்பு

இரண்டாம் கருத்து: முற்காலப் பல்லவர்கள் தமிழ் நாட்டிற்கு வெளியே சில நூற்றாண்டுகள் வாழ்ந்ததனால் அவர்கள் வட இந்தியா அல்லது மத்திய இந்தியாவில் வாழ்ந்த வாக்காடக மரபினர் என முனைவர்.ஜெய்ஸ்வால் கருதுகிறார்.வாக்கடகர்களும் பாரத்வாஜ கோத்திரமும் ஒன்றேபோல இருப்பதால் பல்லவர்கள் பிராம்மணர்கள் எனவும் சாதவாகனர் பேரரசு வீழ்ச்சியின்போது இந்த இரு சாராரும் இந்தியாவின் வேறு வேறு பகுதிகளில் தங்கிவிட்டதாக எண்ணுகிறார்.

மூன்றாம் கருத்து: பேராசிரியர்கள் நீலகண்ட சாஸ்திரி – கோபாலன்- மீனாட்சி மற்றும் மகாலிங்கம் இவர்களின் கருத்துப்படி பல்லவர்கள் ஆந்திரர்களாவர். கிழக்கு ஆந்திராவில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியில் பல்லவர்கள் தாயகத்தை விட்டு நீங்கித் தொண்டைமண்டலத்தில் குடியேறி புதிய அரசியல் வாழ்வைத் துவங்கினர் என்பது இவர்களின் கூற்று.

நான்காம் கருத்து: பல்லவர்கள் நாக வம்சத்தினரே என்று பேராசிரியர் சீனிவாச ஐயங்கார் கூறுகிறார். இவர்கள் நாக நாட்டு மணிபல்லவத்தீவைத் தாயகமாகக் கொண்டவர்கள் என்றும் கூறுகின்றனர். இதனை இலங்கைப் பேராசிரியர் இராஜ நாயகமும் ஆதரித்துப் பேசுகிறார்.

ஐந்தாம் கருத்து: பல்லவர்கள் புலிந்தர்கள் அல்லது குரும்பர்களே ஆவர் எங்கிறார் சத்திய நாத ஐயர் என்ற பேராசிரியர். மாமன்னன் அசோகரின் கல்வெட்டுக்களில் காணப்படும் புலிந்தர்கள் பல்லவர்கள்தாம். பல்லவர் என்ற அடைமொழிச் சொல்லின் திரிபே குறும்பர் என்கிறார் இவர்.

ஆறாம் கருத்து: ராஜய்யன் மற்றும் சுப்பிரமணியன் இருவரும் பல்லவர்கள் தொண்டைமண்டலத்தைச் சேர்ந்த தமிழர்கள்தான் என்று தெளிவாகக் குறிப்பிடுகின்றனர். நாக நாட்டு இளவரசி பீலிதேவிக்கும் சோழ நாட்டு கிள்ளிவளவனனுக்கும் மகனாகப் பிறந்தவன்தான் தொண்டைமான் இளந்திரையன். இவன் கரிகால சோழனின் மகன் வழிப் பேரன். இவனே காஞ்சிப்பல்லவர்களின் முதல் மன்னன் என்பது தெளிவு. மேலும் கி.பி மூன்றாம் நூற்றாண்டில் புகாரிலிருந்த உறையூரைத் தமதாக்கிக் கொண்டனர் சோழர்கள் என்றும் கூறுகிறார் பேராசிரியர் சுப்பிரமணியன்.

முடிவாக பல்லவர்கள் நாகர் சேர சோழ பாண்டியர்களின் வழித்தோன்றல்களான தமிழர்களே என்று நிலை நிறுத்தப்படுகிறது.இவர்கள் ஆந்திரா நாகதேசம் மற்றும் கிழக்காசிய நாடான இந்தோனேஷியாவிலும் பரவி நிலைத்தனர் என்பது கருத்து.

## உங்களுடைய முன்னேற்றத்தைப் பரிசோதியுங்கள்

3. பல்லவர்களின் தோற்றம் குறித்து எத்தனை கருத்துக்கள் நிலவி வருகின்றன?
4. பேராசிரியர்கள் நீலகண்ட சாஸ்திரி – கோபாலன் - மீனாட்சி மற்றும் மகாலிங்கம் இவர்களின் ஆராய்ச்சிகளின்படி பல்லவர்களின் தோற்றம் குறித்த கருத்து என்ன?



ncs_t.indb 64 3/1/2019 8:35:30 AM

## 5.4 வலிமை மிகு பல்லவர்கள்

குறிப்பு

வலிமை மிகு பிற்காலப் பல்லவர்கள் ஆட்சி அரசன் சிம்மவிஷ்ணு காலத்தில் தொடங்கியது.இதற்குப் பின்னர் உண்டான பல்லவ மன்னர்களின் விவரங்களும் அவர்களுடைய ஆட்சிக் காலத்தின் சான்றுகளும் சரிவரக் கிடைக்கப் பெற்றன எனலாம்.களப்பிரரிடமிருந்து காஞ்சியைக் கைப்பற்றிய இவன் சேர சோழ பாண்டியர்களையும் வென்று பல்லவ சாம்ராஜ்யத்தை நிலை நாட்டினான். காஞ்சி முதல் கும்பகோணம் வரை இவனுடைய ஆட்சி பரவியது. இவன் வைணவத்தை ஆதரித்தான்.

### பல்லவர்களின் மேன்மை

1. பல்லவர்களின் ஆட்சி பல்முனை வளர்ச்சியாகக் காணப்படுகிறது. கலை கலாச்சாரம் கோவில் கட்டுமானம் குகைக் கோவில்கள் ஒற்றைக்கல் கோவில்கள் அழகிய வேலைப்பாடமைந்த சிற்பங்கள் போன்ற எல்லா துறைகளிலும் ஏற்பட்ட வளர்ச்சிகளுக்கு பல்லவ அரசு மையமாகச் செயல் பட்டது எனலாம்.
2. இலக்கியம் நாடகம் இசை மற்றும் சித்திரங்கள் ஓவியங்கள் ஆகிய துறைகளில் கவனம் செலுத்தப்பட்டது.
3. தமிழ் சமஸ்கிருதம் பிராக்கிருதம் அனைத்தும் ஒருங்கே வளர்ச்சியடைந்தன. தண்டியின் சமஸ்கிருத இலக்கணம் தமிழில் அமைந்த தண்டியலங்காரத்தின் மூலமாகும்.
4. சமணம் நிராகரிக்கப்பட்டாலும் சைவம் வைணவம் பௌத்தம் போன்ற மதங்கள் வளர்ச்சியடைந்தன.
5. பல்லவ மன்னர்கள் அனைவரும் பொதுவாகவே போர்களிலும் அதிக கவனம் செலுத்தி வந்தனர். பழி தீர்க்கும் போர்களில் சாளுக்கியர் பாண்டியர் சோழர் கங்கர்கள் அனைவரும் பல்லவருடன் போரில் ஈடுபட்டனர்.
6. எல்லா மன்னர்களும் பல்லவ நாட்டில் வியத்தகு செயல்களைச் செய்ததாக வரலாறு இல்லை எனினும் சிலர் மெச்சத்தகுந்த பல்வேறு செயல்களை பல்லவ நாட்டில் செய்து காட்டியுள்ளனர். இவைதான் இன்றளவும் பல்லவர்களின் பெயர் சொல்ல சான்றுகளாக நிற்கின்றன.

முதலாம் மகேந்திரவர்மன் (600-630) சிம்ம வர்மனின் மகன் மகேந்திரவர்மன் வியத்தகு செயல்களைப்புரிந்தான். அவனுக்குக் கிடைத்த பட்டங்களினும் மேலாக இருந்தன அவனது ஆட்சித் திறன்.

- சாளுக்கியப் போர்: புலிகேசியின் அய்க்கோல் கல்வெட்டுக்களின் மூலம் நாம் அறிவது சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசி மகேந்திரவர்மனைத் தோற்கடித்ததால் அவன் ஒரு கோட்டைக்குள் தஞ்சம் புகுந்தான் என்றுதான். அதே சமயத்தில் கசக்குடி செப்பேடுகள்



ncs_t.indb 65 3/1/2019 8:35:30 AM

**குறிப்பு**

மூலம் நாம் அறிவது வெற்றி பெற்ற புலிகேசி காவிரி வரை போய்த் திரும்ப வரும்போது மகேந்திரவர்மனின் படைகள் காஞசிக்கு அருகேயுள்ள புள்ளலூர் என்ற இடத்தில் சாளுக்கியரின் படையை அழித்தது என்றுதான்.

- அவனுடைய பட்டங்கள்: மகேந்திரவர்மன் திறமையும் செயல்பாடும் கொண்டவனாவான்:
  - சத்ருமல்லன்
  - மத்த விலாசன்
  - குணபரன்
  - விசித்திர சித்தன்
  - கலகப் பிரியா
- அவனுடைய ஆட்சிச் சிறப்பால் கீழ்க்கண்ட துறைகள் சிறந்து விளங்கின:
  - சமயம்
  - கலை
  - மொழிகள்
  - இலக்கியம்
  - போர்முறை
  - நிர்வாகம்
- சமயம்: முதலாம் மகேந்திரவர்மன் சமணத்தில் ஈடுபாடுள்ளவன். பின்னர் சைவராக மதம் மாறினான். அவனுடைய காலத்தில் சிவன் விஷ்ணு கோவில்கள் கட்டப் பெற்றன. சமண மதத்தின்பால் கொண்ட ஈர்ப்பு பின்னர் எதிர்ப்பாக மாறி சமணத்தை அழித்து சைவத்தைக் கடைப்பிடித்தான். சமணப் பள்ளிகளை அழித்து அதில் சிவபெருமானின் கோவிலைக் கட்டினான்.
  - வேத யாகங்களில் ஈடுபட்டாலும் சிவன் விஷ்ணு கடவுள்களின் வழிபாடுகள் அதிகரித்தன. பிரம்மாவிற்கும் வழிபாடுகள் செய்யப்பட்டன. 7ஆம் நூற்றாண்டு முதல் தோற்றுவித்த பக்தி மார்க்கங்கள் பக்தி இயக்கமாக உருவெடுத்ததில் ஆழ்வார்கள் நாயன்மார்கள் இரு சாராரும் விஷ்ணு மற்றும் சிவனின் பக்தி மணம் பரப்பி வழிபாடுகளைச் சிறப்பாக நடாத்திச் சென்றனர்.
- கட்டிடக்கலை நுட்பம்: தமிழகத்தின் கட்டிடக் கலைகளின் நயம் மிக்க சிறப்பு பல்லவர் காலத்தில் தோன்றியதாகும். செங்கற்களை உபயோகித்துக் கட்டப்பட்ட கோவில்கள் கற்பாறைகளைக் கொண்டும் குகைகளைக் குடைந்தும் அமைக்கப் பட்டன. இந்தக் குகைக் கோவில்களும் குடவரைக்கோவில்களும் பல்லவர் கட்டிடக்கலை நுட்பத்தின் சாட்சிகளாகும்.



ncs_t.indb 66 3/1/2019 8:35:30 AM

குறிப்பு

- இக்குகைக்கோவில்கள் தனித்தன்மை வாய்ந்தது எனலாம். இக்கோவில்கள் மலைகளின் நடுவே பாறைகளைக் குடைந்து அக் கோவிற் சுவர்கள் எண்ணற்ற வேலைப்பாடுகளுடைய அழகிய சிற்பங்களால் அலங்கரிக்கப் பட்டு புராண காலக் கதைகளைச் சித்தரிப்பதாக அமைந்துள்ளன. மகேந்திரவர்மனின் பட்டப் பெயர்களும் சுவர்களில் ஆங்காங்கே பொறிக்கப் பட்டுள்ளன.

குகைக்கோவில்களும் அவற்றில் காணப்படும் தெய்வங்களும்:

| வ. எண் | அமைந்துள்ள இடம் | கடவுளின் விளக்கம் | வரலாற்று விவரங்கள் |
|---|---|---|---|
| 1. | பல்லாவரம் குகைக் கோவில் சென்னைக்கு அருகே அமைந்துள்ளது | சிவபெருமான் | கல்வெட்டுக்களில் தெலுங்கிலும் பிராக்கிருதத்திலும் பொறிக்கப்பட்ட மகேந்திரவர்மனின் பட்டப் பெயர்கள் இதில் காணப்படுகின்றன. |
| 2. | வல்லம் குகைக் கோவில் (செங்கல்பட்டுக்கு கிழக்கே அமைந்துள்ளது) | சிவ லிங்கம் | வசந்தேஸ்வரன் என்று அழைக்கப்படுகிறது |
| 3. | தளவானூர் குகைக் கோவில் | சிவ லிங்கம் | சத்துரு மல்லேஸ்வராலயம் என்று அழைக்கப்படும் இக் கோவில் தூ ண்களில் திருவாசி எனப்படும் தோரணங்கள் செதுக்கப் பட்டுள்ளன |
| 4. | மண்டகப்பட்டு குகைக் கோவில் | பிரம்மா சிவபெருமான் மற்றும் விஷ்ணு | கல் சுண்ணாம்பு உலோகங்களை உபயோகிக்காமல் இந்தக் கோவில் கட்டப் பட்டுள்ள விவரம் கல் வெட்டுக்களில் காணப் படுகிறது. |
| 5. | திருச்சி மலைக்கோட்டை | சிவபெருமான் (தாயுமானவர்) | பல்வேறு சிற்பங்கள் இக் கோவிலை அழகுறச் செய்கின்றன. முதன்மையாக கங்காதரன் என்னும் சிற்பம் நடு நாயகமாகவும் விளங்கி சிறப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது ஆகும். |



ncs_t.indb 67 3/1/2019 8:35:31 AM

குறிப்பு

- நகரமைப்புக்கள்: மகேந்திரவர்மன் பல நகரங்களையும் நிர்மாணம் செய்தான். அவற்றில் சிறப்பான ஒன்று மகேந்திரவாடி. அதில் ஒரு ஏரி அமைக்கப்பட்டுள்ளது.
- ஓவியக்கலை: புதுக்கோட்டைக்கருகிலுள்ள சித்தன்னவாசல் மகேந்திரவர்மனின் காலத்தைச் சேர்ந்தது. காரைச் சுவர்க்கோலங்கள் மிகவும் புகழ் பெற்றவையாகும் (கயசஉழநள) இவற்றைக் கண்டு வியக்காதவரில்லை எனலாம். என்றென்றும் அவை அழகின் சின்னமாகவும் கலைக்கோவிலாகவும் திகழும். இந்த சிறப்புக்கள் அனைத்தும் மாமன்னன் மகேந்திரவர்மனைச் சார்ந்தது.
- இசை: முதலாம் மகேந்திரவர்மன் இசையிலும் சிறந்தவனாக விளங்கினான். தான் சங்கீரண சாதி என்று பல்லாவரம் குகைக் கோவில் கல் வெட்டு ஒன்றில் அறிவித்துள்ளான். இவன் தாள வகைகளில் சங்கீரணம் என்பதனைப் புதிதாக அமைத்தவன் என்று ஆராய்ச்சியாளர்கள் கொள்கிறார்கள். இவனது குடுமியான்மலைக் கல்வெட்டில் சித்தம் நமசிவாய என்று தொடங்கி இசை மாணவர் பலருக்கும் உபயோகப்படும்படியாகப் பல பண்களையும் தாள வகைகளையும் உருத்திராட்சாரியாரின் மாணவனான அரசன் கட்டளைப்படி அமைக்கப் பட்டது என்ற அர்த்த்தில் குறிப்பு வரையப்பட்டுள்ளது.
- இலக்கியம்: சமஸ்கிருதத்தில் இருந்த பாண்டித்தியம் கொண்டு முதலாம் மகேந்திரவர்மன் மத்தவிலாஸப் பிரகசனம் என்ற நூலை இயற்றினான். இதில் பௌத்தம் காபாலிகம் பாசுபதம் என்ற மதங்களின் நிலையை விளக்குகிறது. மேலும் பௌத்தப் பள்ளிகள் குறித்தும் சில விரிவான செய்திகள் உள்ளன. இந்த நூல் அவன் சைவ மதத்தைத் தழுவிய பின்னர் எழுதியதாகும்.
- முதலாம் நரசிம்ம வர்மன் (630-668) தந்தையின் வழித்தடத்தில் கால் பதித்து வந்த முதலாம் நரசிம்ம வர்மன் மிகச் சிறந்த மன்னனாவான். இவனுக்கு மாமல்லன் வாதாபி கொண்டான் ரணஜெயன் நயனன்குரு என்ற சிறப்புப் பட்டங்களைச் சூட்டிக்கொண்டான். எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கினான்.
    - பல்லவர் சாளுக்கியபோர் : புள்ளலூர்ப் போரில் தோற்றதைப் பழிவாங்கும் வகையில் சாளுக்கியர் மீண்டும் முதலாம் நரசிம்ம வர்மனின் காலத்தில் படையெடுத்தனர். பெரிய படையை பரன்ஜோதியாரின் தலைமையில் திரட்டி பரியலாம் சூரமாரம் இரண்டு போர்களிலும் முதலாம் நரசிம்ம வர்மன் வெற்றியடைந்தான். மீண்டும் காஞ்சிக்கு 35 கி.மீ. தொலைவில் இருந்த மணிமங்கலம் என்ற போரில் தோற்ற சாளுக்கியப் படைகள் பின்வாங்கி வாதாபியை நோக்கி விரட்டியடிக்கப்பட்டன. வாதாபியில் நடந்த கடும் போரில் இரண்டாம் புலிகேசி போர்க்களத்திலேயே இறந்தான். வாதாபி



ncs_t.indb 68 3/1/2019 8:35:31 AM

தீக்கிரையாக்கப்பட்டது. முதலாம் நரசிம்ம வர்மன் வாதாபி கொண்டான் என்ற விருதுப் பட்டப் பெயரைச் சூட்டிக்கொண்டான்.

குறிப்பு

- இலங்கைப் படையெடுப்பு: முதலாம் நரசிம்ம வர்மனின் காலத்தில் கடற்படை அமைத்து 631 ல் இலங்கை மீது வெற்றி கொண்டான். இலங்கை அரசுரிமையை மானவர்மனுக்கு வழங்கினான்.இச் செய்தி மகாவம்ச நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- பாண்டியருடன் போர்: வாதாபிப் போர் காலத்தில் பாண்டிய அரசன் அரிகேசரி பராங்குசன் பல்லவர்களை சங்கரமங்கை என்ற இடத்தில் தோற்கடித்தான். இதனைக் கேட்ட முதலாம் நரசிம்ம வர்மன் வாதாபிப் போரைப் பரஞ்சோதியிடம் ஒப்படைத்து விட்டு பாண்டியரை எதிர்த்து நின்று தோற்கடித்து விரட்டினான்.
- யுவான் சுவாங்கின் வருகை: 642ல் காஞ்சிக்கு வருகை புரிந்தான் சீன யாத்திரிகர் யுவான் சுவாங். இவருடைய குறிப்புக்களில் பல்லவ நாட்டு மக்களின் குண நலன்கள் மற்றும் அவர்தம் பக்தியைக்குறித்தும் தெரிவிக்கிறார். காஞ்சியின் அமைப்பைப் பற்றியும் அதைச் சுற்றியுள்ள நாட்டை திராவிட நாடு என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.
- முதலாம் நரசிம்ம வர்மனின் காலத்தில் இருந்த கலை மற்றும் கட்டிடக் கலை நுட்பம்: தன்தைக்கேற்ற தனயனாக முதலாம் நரசிம்ம வர்மன் கோவில்களையும் சிற்பங்களையும் அமைத்து அழியாப் புகழ் பெற்றான்.அவன் அமைத்த மகாபலிபுரம் குகைக் கோவில்கள் மற்றும் அழகிய சிற்பங்கள் அவனைப் புகழின் உச்சிக்குக் கொண்டு சென்றது. அவன் அமைத்த குகைக் கோவில்கள் கீழ்வருமாறு:
    - நாமக்கல் நரசிங்கப் பெருமாள் குகைக் கோவில்
    - திருச்சி மலையடியில் தென் மேற்கு மலையிலமைந்த குகைக் கோவில்
    - திருவெள்ளரை- கட்டி முடிக்கப்படாத நிலையில் குகைக் கோவில்
    - திருமயம் -வைணவ குகைக் கோவில்

• மகாபலிபுரம் சிற்பங்கள் மற்றும் ஓவியங்கள்: வாதாபியை வென்றதும் முதலாம் நரசிம்ம வர்மன் பல்வேறு குகைக் கோவில்களைக் கட்டி வந்தான். இதைத் தவிர அழகிய வேலைப்பாடுடைய சிற்பங்களையும் வடித்தான். மகாபலிபுரத்தில் மட்டுமே மூன்று விதமான கலை நயங்களைக் காணலாம்:

- குகைக் கோவில்கள்
- ஒற்றைக் கல் கோவில்கள்



ncs_t.indb 69 3/1/2019 8:35:31 AM

குறிப்பு

- கல்லில் வடித்த சிற்பங்கள்
  - குகைக் கோவில்கள்: மகிஷாசுர மண்டபம் வராக மண்டபம் திருமூர்த்தி மண்டபம் என்பவை முதலாம் நரசிம்ம வர்மன் அமைத்த குகைக் கோவில்களாகும். வாதாபி குகைக் கோவில் சுவர்களில் காணப்படும் பல ஓவியங்கள் மகாபலிபுரத்திலும் காணப்படுகின்றன. மகிஷாசுர மண்டபத்தின் சுவரில் அமைந்த சிற்ப வேலை பல்லவர்களுக்கே உரியது எனலாம். சிற்ப வேலைப்பாடுகளில் பல்லவர்களின் சிறப்புத்தன்மை தெரிகிறது.
  - ஒற்றைக் கல் கோவில்கள்: முதலாம் நரசிம்ம வர்மன் தந்தையின் குகைக் கோவில் சிறப்புக்களைத் தொடர்ந்து ஒற்றைக்கல் கோவில்கள் அமைப்பதில் ஆர்வம் காட்டினான். இவை இன்றளவும் கட்டிடக் கலை நுட்பத்தின் அதிசயமாகவே கருதப் படுகின்றன.பாண்டவர் ரதங்கள் என்று அழைக்கப் படும் இந்த ஒற்றைக் கல் கோவில்கள் ஐந்தும் வேறு வேறு அமைப்பைக் கொண்டவை.
  - கல்லில் வடித்த சிற்பங்கள்: முதலாம் நரசிம்ம வர்மன் புராணக் கதைகளை அருமையான அழகான சிற்பங்களின் வாயிலாகக் கொடுக்க முற்பட்டது மிகவும் அற்புதமான ஒன்று. இதைக் கலை நயம் கொண்டு வடித்த பல்லவச் சிற்பிகள் வரலாற்றில் மறக்க முடியாத கலைத்தூதர்கள்.
- இரண்டாம் மகேந்திரன் (668-670) முதலாம் நரசிம்ம வர்மனை அடுத்து அவனுடைய மகன் இரண்டாம் மகேந்திரன் மன்னனானான். இரண்டே ஆண்டுகளாயினும் அவன் பல்வேறு துறைகளைச் சீரமைத்தான். ஆயினும் சாளுக்கியர் போரில் அவன் மாண்டு போனான் என்று கருதுகின்றனர்.
- முதலாம் பரமேஸ்வர வர்மன்: முதலாம் விக்கிரமாதித்தன் தன் தந்தை இரண்டாம் புலிகேசியின் தோல்விக்கும் மரணத்திற்கும் பழி வாங்க வேண்டி காஞ்சியின் மீது படையெடுத்தான். இப் போரில் முதலாம் பரமேஸ்வர வர்மன் தோல்வி அடைந்தான். மாமல்லனின் வம்சம் அழிந்து விட்டது என்று கட்வால் செப்புப்பட்டயங்களின் மூலம் அறிவித்தான் முதலாம் விக்கிரமாதித்தன். காஞ்சி கைப்பற்றப்பட்டு சாளுக்கிய சேனை உறையூருக்குள் நுழைந்து விட்டது. இன் நிலையில் முதலாம் பரமேஸ்வர வர்மன் பெரும் சேனையைத் திரட்டி லால்குடியின் அடுத்துள்ள பெருவளநல்லூர் என்ற இடத்தில் நடந்த போரில் சாளுக்கியர்கள் தோற்கடிக்கப் பட்டதாகக் கூரம் பட்டயமும் இரண்டாம் நந்திவர்மனின் உதயேந்திரம் பட்டயமும் தெரிவிக்கின்றன. இழந்த பகுதிகளையும் கைப்பற்றினான்.
- முதலாம் பரமேஸ்வரவர்மன் இரணஜெயன் என்ற பட்டப் பெயரைப் பெற்றான். தமிழ் நாட்டில் முதன் முதலான கற்கோவிலை சிவபெருமானுக்காக கூரம்

குறிப்பு

என்ற இடத்தில் கட்டினான் முதலாம் பரமேஸ்வரவர்மன். மாமல்லபுரத்தில் கணேசர் கோவில் இராமானுஜர் மண்டபம் இவற்றைக் கட்டுவித்தான். இரணஜெயன் என்ற பட்டப் பெயரை மாமல்லபுரத்தின் கல் வெட்டின் மூலம் அறிவித்தான்.

- இரண்டாம் நரசிம்ம வர்மன் (680-720) இராஜசிம்மன் என்றும் அழைக்கப்பட்ட நரசிம்ம வர்மன் காலத்தில் நாட்டில் அமைதி நிலவியது. அதிக அளவில் ஆக்கப் பணிகள் நிறைவேற்றப் பட்டன. இவன் மன உறுதி படைத்தவன் மற்றும் போரில் களைப்படையாத்திறமை பெற்றவன். இவனது ஆட்சிக் காலத்தில் கங்கர்களுடன் சிறு போர்கள் நிகழ்ந்தன.

  அரசவைக் கவியாக தண்டியைப் போற்றி ஆதரித்தான். சமஸ்கிருதத்திலான தண்டியின் காவிய தர்ஷினி பிற்காலத்தில் தமிழில் தண்டியலங்காரம் இயற்ற மூல நூல் ஆனது.

  இராஜசிம்மன் காலத்தில் நான்கு வேதங்களுக்கும் (ருக் யஜுர் சாம அதர்வனம்) கல்விக்கூடமாக கடிகை என்ற வேதாகமக் கூடம் உருவாக்கப்பட்டது. அவன் நாடகங்களிலும் கவனம் செலுத்தினான். வாத்திய வித்தியாதரன் என்ற பட்டப் பெயரைப் பெற்றான். இவன் இசை மற்றும் இசைக் கருவிகளை இயக்குவதிலும் திறமைசாலியாக விளங்கினான்.

  வெளி நாட்டு வாணிபம்: 720ஆம் ஆண்டு இவன் சீன தேசத்திற்கு தூதரை அனுப்பி வைத்தான். இக் குறிப்புக்கள் சீனாவின் சான்றுகளில் காணப்படுகின்றன. மேலும் இவன் சீனப் பேரரசர் நாகப்பட்டிணத்தில் ஒரு புத்த விகாரம் கட்டவும் அனுமதி அளித்தான். தென் கிழக்கு ஆசிய நாடுகளின் வர்த்தகத்தில் இராஜசிம்மன் பெரும் போட்டியாளனாக இருந்தான் இதனால் அராபியர் இவன்பால் பகை கொண்டிருந்தனர். இவனுடைய ஆட்சி முடிவுறும் தருவாயில் சாளுக்கியர் மீண்டும் காஞ்சிப் படையெடுப்பை ஆரம்பித்தனர். இரண்டாம் விக்கிரமாதித்தன் இந்தப் போரில் இராஜசிம்மனின் மகன் மூன்றாம் மகேந்திரனைக் கொன்றான்.

  கோவில்கள்:காஞ்சியில் கைலாசநாதர் கோவில் இராஜசிம்மனால் கட்டுவிக்கப்பட்டது. ஐராவதேஸ்வரர் கோவிலும் பனமலை கோவிலும் மகாபலிபுரம் கடற்கரைக் கோவில்களும் இராஜசிம்மனால் கட்டுவிக்கப்பெற்றன. இதனால் ஓவியம் கலை நாட்டியம் நாடகம் இலக்கியம் மற்றும் சிற்பக்கலை பெரிதும் தரமான வளர்ச்சி அடைந்தன.

- இரண்டாம் பரமேஸ்வரவர்மன்: இராஜசிம்மனுக்குப் பின்னர் அவன் மகன் இரண்டாம் பரமேஸ்வரன் மன்னன் ஆனான். மேலைக் கங்கர்களின் ஆதரவின் மேல் படையெடுத்து வந்த சாளுக்கியர்களை ஏராளமான பொருளை அளித்து அவர்தம் படைகளைத் திரும்பச் செய்தான். இதற்குப் பழி வாங்க கங்கர்பாடி நாட்டின் மேல் படைஎடுத்துச் சென்ற இரண்டாம் பரமேஸ்வரவர்மன் விளார்த்தி எனுமிடத்தில் நடந்த போரில் கொல்லப் பட்டான்.



ncs_t.indb 71 3/1/2019 8:35:31 AM

**குறிப்பு**

- இரண்டாம் நந்திவர்மன் (731-795) பல்லவ மல்லர் என அழைக்கப்படும் இரண்டாம் நந்திவர்மன் இரண்டாம் பரமேஸ்வரவர்மனின் மரணத்திற்குப் பின்னர் அரசனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான்.இவனுடைய ஆட்சி 65 ஆண்டுகள் நீடித்தது. இவனுடைய காலத்தில் சில போர்களையும் சந்தித்தான்:
  - 730ல் பாண்டியருடன் போர்- சித்திரமாயன்(பரமேஸ்வரவர்மனின் மகன்)பாண்டியரிடம் தஞ்சம் புகுந்து உரிமைப்போர் தொடுத்தான். இதன் விளைவாக நடந்த மூன்று போர்களில் கடைசிப் போரான நந்திக்கிராமம் போரில் உதயசந்திரர் என்ற பல்லவ தளபதி பாண்டிய முற்றுகையை உடைத்து சித்திரமாயனைக் கொன்றான்
  - 740ல் இரண்டாம் விக்கிரமாதித்தன் பல்லவர்களைத் தோற்கடித்தான். அவன் மகன் இரண்டாம் கீர்த்திவர்மன் இரண்டாம் நந்திவர்மனைப் பல இடங்களில் தோற்கடித்தான்.
  - 775ல் இரண்டாம் நந்திவர்மன் கங்கபாடி நாட்டின் மேல் படையெடுத்து அரசன் ஸ்ரீபுருஷர் என்பவனைத் தோற்கடித்து இழந்த நாடு செல்வம் அனைத்தையும் திரும்பப் பெற்றான்.
  - 750ல் ராஷ்டிரகூட அரசன் தந்திதுர்கன் சாளுக்கிய அரசன் இரண்டாம் கீர்த்திவர்மனைத் தோற்கடித்தான். பல்லவ நாட்டின் மீதும் படையெடுத்து காஞ்சி கைப்பற்றப்பட்டது.ஆனால் இது மண உறவில் முடிந்தது. தந்தி துர்கன் தன் மகள் ரேவாவை நந்திவர்மனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். பல்லவ சாளுக்கிய பகை இவ்வாறு உறவாக மாறியது.
  - இரண்டாம் நந்திவர்மன் : கலை கலாச்சாரப் பணி: இவன் வைணவத்தை ஆதரித்தான். திருமங்கை ஆழ்வார் இவன் காலத்தவர். நந்திபுர விண்ணகரம் பரமேஸ்வர விண்ணகரம் இலக்கியங்களில் நந்திவர்மனின் ஆழ்ந்த வைணவ ஈடுபாட்டைக் காணமுடிகிறது. கோவில்களையும் கட்டிய நந்திவர்மன் கவிதைகளிலும் சிறந்தவனாக விளங்கினான்.
- பல்லவர்களின் வீழ்ச்சி: இரண்டாம் நந்திவர்மனின் மகன் நந்திவர்மன் (795-845) காஞ்சியையும் தன் நாட்டின் பல பகுதிகளையும் இராஷ்ட்ரகூட மன்னன் மூன்றாம் கோவிந்தனிடம் இழந்து நின்றான். பின்னர் ஏற்பட்ட ஒப்பந்தப் படி கப்பம் கட்டலானான். இதன் தொடர்ச்சியாக பாண்டிய மன்னன் வரகுணன் மற்றும் அவனுடைய சந்ததியினர் ஸ்ரீமார ஸ்ரீவல்லபர் இவர்களின் படையெடுப்பால் நந்திவர்மன் பெரும்பாலான இடங்களை இழந்தான். பல்லவர்களின் ஆதிக்கம் வீழ்ச்சியடையத் தொடங்கியது.
- மூன்றாம் நந்திவர்மன்: (846-866) நந்திக்கலம்பகம் என்ற இலக்கியத்தின் வாயிலாகவும் பல செப்புப்பட்டயங்களின் மூலமும் மூன்றாம் நந்திவர்மன்

குறித்து அறிந்து கொள்கிறோம். தொள்ளாறு போரில் பாண்டியர்களைத் தோற்கடித்தான். வெளி நாடுகளிலும் இவன் புகழ் பரவியது.

- நிருபதுங்கன் (866-896) இரண்டாம் நந்திவர்மனின் மகன் நிருபதுங்கன் 30 ஆண்டுகள் அரியணையில அமர்ந்திருந்தான். இவன் காலத்திலும் பாண்டியப் போர்கள் தொடர்ந்தன.
- அபராஜிதவர்மன் (885-903) நிருபதுங்கனை அகற்றிவிட்டு பல்லவ அரசனானான். பாண்டிய மன்னன் இரண்டாம் வரகுணன் நிருபதுங்கனையும் முதலாம் ஆதித்திய சோழன் அபராஜித வர்மனையும் ஆதரித்தனர். 880ல் திருபுறம்பியம் போர் நடந்தது இதில் அபராஜிதவர்மன் வெற்றியடைந்தான். ஆயினும் பல இடங்களை ஆதித்திய சோழனுக்கு விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று.
  - இதன் பின்னர் பல்லவர் ஆதிக்கம் குன்றி வந்தது. இதையடுத்து ஆதித்திய சோழன் பல்லவர் மேல் படையெடுத்தான். யானை மேல் அமர்ந்து போர் செய்து கொண்டிருந்த அபராஜிதன் மீது பாய்ந்து கொன்றான். இது 897 ஆம் ஆண்டா அல்லது 903ஆம் ஆண்டா என்று வரலாற்று அறிஞர்களிடம் நிலவி வரும் ஒரு சந்தேகம். இப் போரில் பல்லவர் வம்சம் முழுதுமாக அழிக்கப்பட்டது. சோழ ஆட்சி எழுச்சி பெற்றது.

குறிப்பு

### உங்களுடைய முன்னேற்றத்தைப் பரிசோதியுங்கள்

5. பல்லவர் ஆட்சிக் காலத்தில் எந்த மொழிகள் அதிகம் உபயோகத்தில் இருந்தன?
6. பல்லவர்களின் கடைசி மன்னன் யார்?

## 5.5 பல்லவர் சாளுக்கியர் போர்கள்

6ஆம் நூற்றாண்டிலிருந்து 8ஆம் நூற்றாண்டு வரை சாளுக்கியர்களும் பல்லவர்களும் அவரவர் ஆதிக்கத்தை நிலை நாட்டி நாட்டின் எல்லைகளை தென் இந்திய தீபகர்ப்பத்தில் விரிவு படுத்தும் ஒரே நோக்கத்தில் திடீர் போர்களில் ஈடுபட்டனர். கிருஷ்ணா நதிக்கரையிலிருந்து துங்கபத்திரா நதிக்கரைவரையிலான பகுதிதான் இவர்களின் பழைய பகைமையின் உரிமை நிலப்பரப்பு.

பரம்பரைப் பகை பழிவாங்கும் உணர்வும் சூழ் நிலையும் தொடர்ந்து நிலவியதால் பல்லவர்களும் சாளுக்கியர்களும் போர்க்களங்களிலேயே நின்று ஆட்சி புரிந்து கொண்டிருந்தனர். இதில் காலங்காலமாக வளர்த்த பகை உறவைக் கெடுத்து பாடம் கற்பிக்கும் எண்ணத்தினால் 150 ஆண்டு காலத்திலும் தீர்க்க முடியாத ஒரு பிரச்சினையாகவே இருந்து வந்தது எனலாம்.

இதைத் தொடர்ந்து கங்கர்கள் சோழர்கள் பாண்டியர்கள் ராஷ்டிரகூடர்கள் எல்லோரும் பகைக்கு உறவாகவும் உறவுக்குப் பகையாகவும் மாறி மாறி அவர்களும் தங்கள் மண்ணாசையில் வீழ்ந்து போர்களில் ஈடுபட்டனர். பல்லவர்கள் சாளுக்கியர்களை முழுவதுமாக அழிக்க முடியவில்லை

**குறிப்பு**

பல்லவர் சாளுக்கியர் இருவரும் இறையுணர்வு நிறைந்தவர்கள் கலையுணர்வு மிக்கவர்கள் பிராம்மணர்களை ஆதரித்தனர் கோவில்களைக் கட்டினர். இருப்பினும் அவர்களிடையே ஒற்றுமையிலும் வேற்றுமைதான் மிகுந்து காணப் பட்டது. காரணம் மண்ணாசை பொன்னாசை மற்றும் போர்காலக் கொள்ளை செல்வங்கள்.

**போர்களின் மையம்:** பல்லவர்கள் அவ்வப்போது தக்காணப் பீடபூமியின் எல்லை கடக்க முற்படும்போதெல்லாம் துங்கபத்திரா நதியின் அப்புறத்தில் ஆட்சி நடத்தும் சாளுக்கியர்கள் தடை செய்து வந்தனர். இரண்டாம் புலிகேசியைக் குறித்தும் அவனுடைய பராக்கிரமங்கள் குறித்தும் ஐக்கோல் கல்வெட்டுக்களில் அரச கவி ரவிகீர்த்தி விவரித்துள்ளார். இந்தக் கவிதைகள் சமஸ்கிருதத்தில் கருத்துச் செறிவுடனும் சுவையாகவும் எழுதப்பட்ட இலக்கண சுத்தமான கோவையாகும்.

இரண்டாம் புலிகேசி (609-642) வீரம் மிக்கவன் என்பதால் கடம்பர்களையும் கங்கர்களையும் தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டிருந்தான். அதே சமயத்தில் ஹர்ஷனின் படைகளை நர்மதா ஆற்றின் கரைகளிலேயே நிறுத்தி தக்காணப் பீடபூமியில் கால் பதிக்க விடாமல் பாது காத்து வந்தான்.

இரண்டாம் புலிகேசி 610ஆம் ஆண்டில் கிருஷ்ணா முதல் கோதாவரி வரையிலான வெங்கி என்ற பகுதியை வென்றான். இங்கே ஆண்ட சாளுக்கியர்கள் கிழக்கத்திய வெங்கி நாட்டின் சாளுக்கியர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

இரண்டாம் புலிகேசியின் அய்க்கோல் கல்வெட்டுக்களின் மூலம் நாம் அறிவது சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசி மகேந்திரவர்மனைத் தோற்கடித்ததால் அவன் ஒரு கோட்டைக்குள் தஞ்சம் புகுந்தான் என்று. அதே சமயத்தில் கசக்குடி செப்பேடுகள் மூலம் நாம் அறிவது வெற்றி பெற்ற புலிகேசி காவிரி வரை போய்த் திரும்ப வரும்போது மகேந்திரவர்மனின் படைகள் காஞ்சிக்கு அருகேயுள்ள புள்ளலூர் என்ற இடத்தில் சாளுக்கியரின் படையை அழித்தது என்றுதான்.

புள்ளலூர்ப் போரில் தோற்றதைப் பழிவாங்கும் வகையில் சாளுக்கியர் மீண்டும் முதலாம் நரசிம்ம வர்மனின் காலத்தில் படையெடுத்தனர். பெரிய படையை பரன்ஜோதியாரின் தலைமையில் திரட்டி பரியலாம் சூரமாரம் இரண்டு போர்களிலும் முதலாம் நரசிம்ம வர்மன் வெற்றியடைந்தான். மீண்டும் காஞ்சிக்கு 35 கி.மீ. தொலைவில் இருந்த மணிமங்கலம் என்ற போரில் தோற்ற சாளுக்கியப் படைகள் பின்வாங்கி வாதாபியை நோக்கி விரட்டியடிக்கப்பட்டன. வாதாபியில் நடந்த கடும் போரில் இரண்டாம்



ncs_t.indb 74 3/1/2019 8:35:31 AM

புலிகேசி போர்க்களத்திலேயே இறந்தான். வாதாபி தீக்கிரையாக்கப்பட்டது. முதலாம் நரசிம்ம வர்மன் வாதாபி கொண்டான் என்ற விருதுப் பட்டப் பெயரைச் சூட்டிக்கொண்டான் (642ல்) இவை எல்லாம் முதலாம் நரசிம்ம வர்மனை எழுச்சி அடையச் செய்து மேலும் சேர சோழ பாண்டியர்களையும் களப்பிரர்களையும் வெற்றி கொள்ளத் தூண்டியது எனலாம்.

முதலாம் விக்கிரமாதித்தன் தன் தந்தை இரண்டாம் புலிகேசியின் தோல்விக்கும் மரணத்திற்கும் பழி வாங்க வேண்டி காஞ்சியின் மீது படையெடுத்தான். இப் போரில் முதலாம் பரமேஸ்வர வர்மன் தோல்வி அடைந்தான். மாமல்லனின் வம்சம் அழிந்து விட்டது என்று கட்வால் செப்புப்பட்டயங்களின் மூலம் அறிவித்தான் முதலாம் விக்கிரமாதித்தன். காஞ்சி கைப்பற்றப்பட்டு சாளுக்கிய சேனை உறையூருக்குள் நுழைந்து விட்டது. இந் நிலையில் முதலாம் பரமேஸ்வர வர்மன் பெரும் சேனையைத் திரட்டி லால்குடியின் அடுத்துள்ள பெருவளநல்லூர் என்ற இடத்தில் நடந்த போரில் சாளுக்கியர்கள் தோற்கடிக்கப் பட்டதாகக் கூரம் பட்டயமும் இரண்டாம் நந்திவர்மனின் உதயேந்திரம் பட்டயமும் தெரிவிக்கின்றன. இழந்த பகுதிகளையும் கைப்பற்றினான்.

(இரண்டாம் நரசிம்ம வர்மன்)இராஜசிம்மனுக்குப் பின்னர் (680-720) அவன் மகன் இரண்டாம் பரமேஸ்வரன் மன்னன் ஆனான். மேலைக் கங்கர்களின் ஆதரவின் மேல் படையெடுத்து வந்த சாளுக்கியர்களை ஏராளமான பொருளை அளித்து அவர்தம் படைகளைத் திரும்பச் செய்தான். இதற்குப் பழி வாங்க கங்கர்பாடி நாட்டின் மேல் படைஎடுத்துச் சென்ற இரண்டாம் பரமேஸ்வரவர்மன் விளார்த்தி எனுமிடத்தில் நடந்த போரில் கொல்லப் பட்டான்.

740ல் இரண்டாம் விக்கிரமாதித்தன்(733-745) மூன்று முறைகள் காஞ்சியைக் கைப்பற்ற முயன்றான். இறுதியில் பல்லவர்களைத் தோற்கடித்தான். அவன் மகன் இரண்டாம் கீர்த்திவர்மன் இரண்டாம் நந்திவர்மனைப் பல இடங்களில் தோற்கடித்தான். இதன் பின்னர் பல்லவர் சாளுக்கியர் போர்கள் எதுவும் ஏற்படவில்லை.

காஞ்சியில் சில காலம் இருந்த இரண்டாம் விக்கிரமாதித்தன் கைலாசனாதர் கோவில் அழகினை மெச்சி அங்குள்ள பிராம்மணர்களுக்குப் பெரும் செல்வத்தை தானமாக அளித்தான் என்பது சரித்திரம். கன்னட மொழியில் எழுதப்பட்ட கல்வெட்டைக் கோவிலில் அமைத்தான்.

750ல் ராஷ்டிரகூட அரசன் தந்திதுர்கன் சாளுக்கிய அரசன் இரண்டாம் கீர்த்திவர்மனைத் தோற்கடித்தான். பல்லவ நாட்டின் மீதும் படையெடுத்து காஞ்சி கைப்பற்றப்பட்டது.ஆனால் இது மண உறவில் முடிந்தது. தந்தி துர்கன் தன் மகள் ரேவாவை நந்திவர்மனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். பல்லவ சாளுக்கிய பகை இவ்வாறு உறவாக மாறியது.

பல்லவர்களின் கடைசி மன்னன் அபராஜிதவர்மன் (885-903) சோழனின் கைகளில் வஞ்சகமாகக் கொல்லப்பட்டான்.

**உங்களுடைய முன்னேற்றத்தைப் பரிசோதியுங்கள்**

7. பல்லவர் சாளுக்கியர் போர்களின் முக்கிய காரணிகள் என்ன?
8. சாளுக்கிய ஆட்சி எவ்வாறு முடிவுக்கு வந்தது?

**குறிப்பு**

## 5.6 திறன் அடைவிற்கான பரிசோதனை வினாக்களுக்கு விடைகள்

1. களப்பிரர் காலத்தில் தமிழ் நாடு தன் பொலிவை இழந்தது. வளர்ச்சிகள் குன்றின. சேர சோழ பாண்டிய அரசுகளில் இருந்து வந்த மக்கள் வழி ஆளுமை மாறிப் போயின. இதன் காரணமாக சில வரலாற்று அறிஞர்கள் இதை இருண்ட காலம் என்கின்றனர்.
2. நாயன்மார்கள் இயற்றிப் பாடிய சிவபெருமானின் துதிப்பாடல்கள் தேவாரம் என்று அழைக்கப் படுகின்றன. அப்பர் சம்பந்தர் மற்றும் சுந்தரர் ஆவர்.
3. பல்லவர்களின் முற்காலம் குறித்து ஆறு வேறுபட்ட கருத்துக்களை வரலாற்று அறிஞர்கள் முன்வைத்து அதில் ஒரு ஒருமனதான முடிவை ஏற்க முயற்சிகள் நடக்கின்றன.
4. பேராசிரியர்கள் நீலகண்ட சாஸ்திரி – கோபாலன் - மீனாட்சி மற்றும் மகாலிங்கம் இவர்களின் கருத்துப்படி பல்லவர்கள் ஆந்திரர்களாவர். கிழக்கு ஆந்திராவில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியில் பல்லவர்கள் தாயகத்தை விட்டு நீங்கித் தொண்டைமண்டலத்தில் குடியேறி புதிய அரசியல் வாழ்வைத் துவங்கினர் என்பது இவர்களின் கூற்று.
5. தமிழ் சமஸ்கிருதம் மற்றும் பிராக்கிருதம் மொழிகள் ஒருசேர வளர்ச்சி பெற்றன
6. அபராஜித வர்மன் பல்லவர்களின் கடைசி மன்னனாகத் திகழ்கிறான். இவன் போர் செய்யும் போது சோழனின் கைகளால் வஞ்சகமாகக் கொல்லப்பட்டான்
7. பல்லவர் சாளுக்கியர் போர்க் காரணங்கள் பல. ஆனாலும் முதற்காரணம் துங்கபத்திரா நதிக்கரைக்கும் கிருஷ்ணா நதிக்கரைக்கும் இடையே உள்ள நிலப்பரப்பு தான்.
8. சாளுக்கியர்களின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது இராஷ்டிரகூடர்கள் (757ல்)



ncs_t.indb 76 3/1/2019 8:35:31 AM

## 5.7 உரைச் சுருக்கம்

குறிப்பு

- 900ஆம் ஆண்டு வரை பல்லவர்கள் ஒரு சிறந்த சீரான ஆட்சியை அளித்தனர்
- பல்லவர்களின் முற்காலம் குறித்த பல்வேறு ஐயப்பாடுகள் இருப்பினும் வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் சான்றுகளின் மேலான சரித்திர ஊகங்களின் பேரில் அதை முடிவாகக் கொண்டுள்ளனர்.
- பிற்காலப் பல்லவர்களின் ஆட்சி சிம்மவர்மனால் தொடங்கப் பட்டது. அவன் களப்பிரர்களை வெற்றி கொண்ட பின் காஞ்சி கைப்பற்றப்பட்டது
- சிம்மவர்மனின் ஆட்சிக்காலத்திற்குப் பின்னர் வந்த அனைத்து பல்லவ மன்னர்களின் காலக் கணிப்பும் அவர்களின் பெயர்களும் சான்றுகளுடன் அமைந்துள்ளன.
- அபராஜித வர்மன் பல்லவர்களின் கடைசி மன்னனாகத் திகழ்கிறான். 897 ஆம் ஆண்டில் சோழர்கள் எழுச்சி பெற்றார்கள்
- பல்லவர் சாளுக்கியர் போர்க் காரணங்கள் பல. ஆனாலும் முதற்காரணம் துங்கபத்திரா நதிக்கரைக்கும் கிருஷ்ணா நதிக்கரைக்கும் இடையே உள்ள நிலப்பரப்பு தான்.
- சாளுக்கியர்கள் பல்லவர்களைத் தோற்கடித்தாலும் அவர்களுடைய நிலப்பரப்பு வேற்று மன்னர்களிடம் தோற்கப் பட்டன. ஆனால் பல்லவர்கள் அதனை ஒரு ஒப்பந்தம் மூலம் திரும்பப் பெற்றனர்.

## 5.8 சுய பரிசோதனை கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

### குறுகிய விடைக்கான வினாக்கள்

1. பல்லவர்களின் முற்காலத்தைக் கணிக்க எந்த ஆதாரங்கள் காணப்படுகின்றன?
2. இதில் மூன்றாம் கருத்து என்னவாக இருக்கிறது?
3. சிம்மவிஷ்ணுவின் ஆட்சியைப் பற்றிக் குறிப்பு வரைக

### விரிவான விடைக்கான வினாக்கள்

1. முதலாம் நரசிம்ம வர்மனின் ஆட்சி குறித்து விவரிக்கவும்
2. பல்லவர் சாளுக்கியர் போர்க்காரணங்கள் என்ன என்பதை விரிவாகக் கூறவும்
3. பல்லவர்களின் முற்காலக் கணிப்பைக் குறித்து எடுக்கப்பட்ட ஆதாரங்கள் என்ன என்பதை விரிவாகச் சொல்லவும்.

# அலகு 6 பல்லவர் வம்சாவளியின் எழுச்சியும் வளர்ச்சியும்



**அமைப்பு**

6.0 அறிமுகம்
6.1 நோக்கங்கள்
6.2 பல்லவர்களின் எழுச்சி
6.3 சமூக பொருளாதார நிலைமை
6.4 கலை கட்டிடக் கலையின் வளர்ச்சி நிலை
6.5 திறன் அடைவிற்கான பரிசோதனைக் கேள்விகள்
6.6 உரைச் சுருக்கம்
6.7 முக்கிய சொற்கள்
6.8 சுய பரிசோதனை கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
6.9 மேலும் படிக்க

## 6.0 அறிமுகம்

பல்லவர்களின் சரித்திரத்தைக் குறித்த விவரங்கள் மூன்று கால கட்டங்களில் மூன்று ஆட்சி காலங்களாக ஆராயப் படவேண்டும். இவை முறையே 3 தனித்தனி காலங்களில் தமிழ் நாட்டில் இருந்த சரித்திர நிகழ்வுகளாகும்.

முற்காலப் பல்லவர்கள்: இவர்களின் ஆட்சி மூன்றாம் மற்றும் நான்காம் நூற்றாண்டுகளில் வடக்கே கிருஷ்ணா நதியிலிருந்து தெற்கே பொருணை நதி வரையிலான எல்லைகளில் அமைந்தது. முற்காலப் பல்லவர்களின் ஆட்சி குறித்து நேரிடைச் சான்றுகள் இல்லையென்றாலும் சில செப்புப் பட்டயங்கள் பல்லவர் ஆட்சி குறித்து செய்திகள் தெரிவிக்கின்றன.

இடைக்காலப் பல்லவர்கள்: இவர்களின் ஆட்சி நான் காம் ஐந்தாம் மற்றும் ஆறாம் நூற்றாண்டுகளில் நடந்ததாகக் கூறப்படுகிறது.

பிற்காலப் பல்லவர்கள்: ஏழாம் மற்றும் எட்டாம் நூற்றாண்டுகளில் ஆண்ட பல்லவர்கள் பிற்காலப் பல்லவர்களாவர். இவர்கள் தொண்டை மண்டலத்தில் ஆட்சியமைத்தனர்.

இந்த அலகில் நீங்கள் பல்லவர்களின் தோற்றம் அவர்களின் ஆட்சிமுறை குறித்தும் சமூக பொருளாதார நிலை கலை கட்டிடக் கலை நுட்பம் மற்றும் சிற்பக்கலை போன்றவற்றைக் குறித்தும் அறியலாம்.

## 6.1 நோக்கங்கள்

இந்த அலகின் மூலம் நீங்கள்

- பல்லவ வம்சத்தின் மூன்று நிலை ஆட்சியை அறியலாம்.



ncs_t.indb 78 3/1/2019 8:35:32 AM

- பல்லவர்களின் தோற்றம் குறித்து ஆராயலாம்.
- சமூக பொருளாதார நிலைகள் குறித்து ஆராயலாம்
- பொருளாதார நிலை விவசாய விளைச்சல் நீர்ப்பாசனம் வாணிபம் குறித்து அறியலாம்
- கலை மற்றும் கட்டுமானக் கலை குறித்து ஆராயலாம்.

குறிப்பு

## 6.2 பல்லவர்களின் எழுச்சி

முற்காலப் பல்லவர்கள்: பிராக்கிருத்தில் எழுதப்பட்டிருக்கும் செப்புத்தகடுகள் மூலம் முற்காலப் பல்லவர்கள் தமிழ் நாட்டை ஆண்ட விவரமும் அவர்களுடைய பெயர் பெற்ற மன்னர்கள் பப்ப தேவன் மற்றும் சிவஸ்கந்த வர்மன் ஆவர் என்றும் தெரியவருகிறது

இவர்களைத் தொடர்ந்து புத்தவர்மன் மற்றும் புத்தஹயங்குரன் ஆண்டனர். இவர்கள் காலத்தில் சிவஸ்கந்த வர்மன் விரிபாரம் என்ற ஊரை பிராம்மணர்களுக்கு தானமாக அளித்தான் என்று தெரிகிறது. இவன் அஸ்வமேதயாகத்திலும் பங்கேற்றான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இடைக்கால பல்லவர்கள்: செப்புப் பட்டயங்கள் மூலம் இடைக்கால பல்லவ மன்னர்களான குமார விஷ்ணு அவனைத் தொடர்ந்து கந்த வர்மன் வீர வர்மன் இரண்டாம் கந்த வர்மன் சிம்மவர்மன் ஆகியோர் ஆட்சி புரிந்தனர் என்று குறிப்புக்கள் கிடைக்கின்றன.

கந்தவர்மன் சமய வளர்ச்சிக்குப் பெரிய அளவில் கொடை கொடுத்தான். ஆனால் சிம்ம வர்மன் போர்களில் ஈடுபட்டு வெற்றி வாகை சூடினான்.மூன்று கடல்களின் நடுவில் இருக்கும் அத்தனை நிலப் பரப்பையும் அவன் வென்றதாக சரித்திரம் கூறுகிறது. இவன் ஆட்சியின் இறுதிக் கட்டத்தில் கடம்பர்கள் வலிமை மிக்கவர்களாயினர். அது பல்லவ சரித்திரத்தை மாற்றியமைத்தது.

### பிற்காலப் பல்லவர்கள்

இவர்கள் சிறந்த பல்லவர்கள் என்றும் அழைக்கப் படுகின்றனர். தொண்டை மண்டலத்தில் அவர்கள் ஆட்சியை நிலை நிறுத்தினர். சிம்ம விஷ்ணுவின் வழித்தோன்றல்களாக இவர்கள் ஆட்சி புரிந்தனர்.

சரித்திர ஆதாரங்கள் பிற்காலப் பல்லவர்கள் குறித்து கிடைத்துள்ளன. ஆயினும் இடைக்கால மற்றும் முற்காலப் பல்லவர் குறித்து செப்புப் பட்டயங்களின் வாயிலாகத்தான் கருத்துக்களை உறுதி செய்து கொள்ள முடிகிறது.

மூன்றாம் நூற்றாண்டு சங்ககாலம் எனப்பட்டது சோழர்கள் பாண்டியர்கள் மற்றும் பல்லவர்கள் தமிழகத்தை ஆண்டு வந்தார்கள். இந்த ஒரு சிறப்பான வரலாற்றைத் தொடர்ந்து தமிழகம் ஒரு இருண்ட ஆட்சி காலத்தினுள் நுழைந்தது. இந்த ஆட்சியை அளித்தவர்கள் தமிழ் நாட்டிற்கும் தமிழ்

குறிப்பு

மொழிக்கும் கலாச்சாரம் பண்பாடு பாரம்பரியம் இவை எல்லாவற்றிற்கும் முற்றிலும் அன்னியர்களாக இருந்த களப்பிரர்களாவர். இந்த அன்னியர் ஆட்சியில் சங்க காலப் பொற்கால ஆட்சிப் பயன்கள் வரலாற்றில் மறைந்தன.மூன்றாம் நூற்றாண்டிலிருந்து ஆறாம் நூற்றாண்டு வரையான களப்பிரர்கள் ஆட்சியில் தமிழ் நாட்டை இருள் கவ்வியது.

களப்பிரர்கள் மலை சாதியினர் என்றும் அவர்கள் தமிழ் நாட்டில் இடம் விட்டு இடம் மாறிவரும் நாடோடி விவசாயக் குடியானவர்கள் என்றும் அவர்கள் குறும்பர்கள் என்று அழைக்கப் பட்டனர் என்றும் அவர்களின் மொழி கன்னடம் (குறும்பர் கன்னடம்) என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இவர்களது ஆட்சி திருவேங்கிடம் முதல் குமரிமுனை வரையிலான எல்லைக்கோட்டினுள் கி.பி 250 முதல் கி.பி 575 வரை நடந்தது.

களப்பிரர்கள் தொடர்ந்து மேற்கொண்ட படையெடுப்புக்களால் சேர சோழ பாண்டிய பல்லவ மன்னர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாயினர். இவர்கள் ஒருங்கிணைந்து இந்த அராஜகத்தை ஒழிக்க முடிவு செய்தனர். பல்லவ மன்னன் இரண்டாம் சிம்ம வர்மனின் மகன் சிம்ம விஷ்ணு களப்பிரரைத் தோற்கடித்தான். இதே போல பாண்டியன் கடுங்கோன் பல்லவர் துணை கொண்டு களப்பிரரைத் தோற்கடித்தான். களப்பிரரை அழித்து பிராம்மணத்துவம் மீண்டும் உயிர்த்தெழ சிம்ம விஷ்ணுவின் வெற்றிதான் அடிகோலியது எனபது சரித்திரத்தின் உண்மையாகும்.

இப்படியாக சிம்ம விஷ்ணுவின் ஆட்சியால் பல்லவர்களின் ஆட்சி கி.பி900வரையில் நீடித்தது எனலாம்.இந்த ஆட்சியில் சில குறைபாடுகள் இருப்பினும் பல துறைகளில் நிர்வாகமுறையில் மாட்சி ஏற்பட்டது. பொருளாதாரம் மற்றும் சமூக நிலையில் பெரிய மாற்றங்கள் காணப்பட்டன.

## 6.3 சமூக பொருளாதார நிலைமை:

தமிழ் நாட்டின் சமூகப் பொருளாதார நிலைகளில் அவ்வப்போது மாற்றங்கள் நிகழ்ந்து வந்தன. இவை பெரும்பாலும் அந்தந்த ஆட்சிகளின் கீழ் மாறும் அரசியல் மற்றும் சமயக் கொள்கைகளைப் பொறுத்து அமைந்து வந்தன. எனினும் சங்க காலத்து தொண்டைமண்டலத்தை விட பல்லவர் காலத் தொண்டை மண்டலம் பெருவளர்ச்சி பெற்றதாக அறிஞர்கள் கருதுகின்றனர். பல்லவர்களின் ஆளுகையின் கீழ் தொண்டை மண்டலம் ஒரு வளமான சமுதாயத்தையும் வலுவான பொருளாதாரத்தையும் கொண்டிருந்ததாகச் சொல்லப் படுகிறது.

### 6.3.1 சமூக நிலை

பல்லவர் கால சமுதாயம் சங்க காலத்தின் சமுதாயத்திலிருந்து மாறுபட்டதாக இருந்தது. இதில் பல்லவர்கள் விவசாயத்தை முன் நிறுத்தி ஏற்படுத்தி வைத்த

பொருளாதார இயக்கம் நாடு முழுதும் பரவியது. இதைத்த்விர பிராம்மணர்களும் வேளாளர்களும் தத்தம் சாதி மற்றும் தொழில் முறை சமுதாயக் குடும்ப நிலைகளை உருவாக்கி தொழில் முறைச் சமுதாயங்களாகவும் சாதி முறைச் சமுதாயமாகவும் காணப்பட்டன.



## 6.3.2 சாதி முறை

சாதிகள் ஆழமாக வேரூன்றிவிட்ட காலமாக இருந்தது. ஆந்திரா மற்றும் கர் நாடகத்திலிருந்து இடம் பெயர்ந்து வந்த பிராம்மணர்கள் தமிழர்களின் முறையிலிருந்து பெரும் மாற்றங்களைக் கொண்டிருந்தது. பிளவுகளையும் ஏற்படுத்தியது. சாதிகள் முக்கியமாகக் கருதப்பட்டவை:

- பிராம்மணர்கள்
- சத்திரியர்கள்
- வைசியர்கள்
- சூத்திரர்கள்

மேல் சாதி கீழ் சாதி பேதங்கள் அதிகமானது. புராணக்கதைகளின் மேல் எழுப்பப்பட்ட மதச் சார்புகள் இதை வலுப் படுத்தின.கூரம் பட்டயங்களின் மூலம் நாம் அறிவது முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் இந்த சாதி முறைகளைச் சார்ந்த நீதி நெறிகளை மிகவும் மதித்து வந்தான் என்று. ஆரிய தர்மத்தைக் காப்பாற்றுவது அரச தர்மம் என்று அவன் பிரகடனப் படுத்தினான். இதனால் சாதி முறை பாகுபாடுகள் தமிழ் நாட்டில் மேலும் வலுப் பெற்றன.

வைசியர்கள் சமுதாயத்தின் இரண்டாம் நிலையில் செல்வாக்கு பெற்றிருந்த நிலையில் உள் சாதிப் பிரிவுகளும் முக்கியத்துவமடைந்து மேல் சாதி கீழ் சாதி வரைமுறைகள் மிகவும் வலுவடைந்தன எனலாம். சமுதாய ஏற்றத் தாழ்வுகள் இதனைச் சார்ந்ததாகும்.

புலையர்களும் (வெட்டியான்) ஈழவர்களும் (மரமேறிகள்) கடை நிலைச் சாதிகளாக இருந்தனர். ஏனைய தொழில் வினைஞர்களான கொல்லர்கள் தச்சர்கள் மருத்துவர்கள் சிற்பிகள் வியாபாரிகள் அனைவரும் கீழ் சாதிகளின் ஒரு அங்கமாக இருந்தனர்.

எல்லா சாதிகளிலும் உட்பிரிவுகள் கோத்திரத்தின் பேரில் பிரிக்கப் பட்டிருந்தன. கோத்திரத்தினுள்ளும் பல உட்பிரிவுகள் காணப் பட்டன.

பிராம்மணர்கள்: வேதத்தின் புலமை காரணமாக பிராம்மணர்கள் மிக உயர்ந்த அரச சலுகையில் அமர்ந்து இருந்தனர். வேதாகம யாகங்களும் நடத்தப் பட்டன. இவர்கள் பூணூல் அணிந்ததால் பிரும்மன் என்று பெரிதும் மதிக்கப் பட்டனர். சிலர் அமைச்சர்களாகவும் செயல் பட்டனர்.

பிராம்மணர்கள் வசித்து வந்த ஊர்கள் பிரம்மதேயம் எனப் பட்டது. இவர்கள் சிவபெருமான் விஷ்ணுவை வழிபட்டனர். கோவில் கட்டி அதைச் சுற்றி குளங்கள் அமைத்து அதில் குடியிருக்கும் அந்தணர்கள் ஒரு குழுவின்

மூலம் நிர்வாகம் செய்து வந்தனர். இதுவே எல்லா பிரம்மதேயங்களின் அமைப்பு திட்டமும் ஆனது.

கீழ்ச் சாதியினர் பிராம்மணர்களின் கோவில்களில் வழிபட அனுமதி இல்லை என்ற நிலை இருந்து வந்தது.



இதர சாதி மக்கள் பிரம்மதேயத்திற்கு அப்பால் குடிசைகளிலும் சிறு கிராமங்களிலும் தனியாக வாழ்ந்து வந்தனர். பல்லவ நாட்டின் இந்த சாதி முறை பல்லவ நாட்டின் எல்லா இடங்களிலும் பொதுவாகக் காணப்பட்டது.

பெண்களின் சமுதாய நிலை: ஒரு தார நியதி பல்லவர் காலத்தில் பெரிதும் பின்பற்றப் பட்ட சமுதாய நீதியாகும். பெண்கள் பெரிதும் மதிக்கப் பட்டனர் செல்வாக்குடன் இருந்தனர். இருந்தாலும் சில அரச பரம்பரையினர் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளைத் திருமணம் செய்தனர்.

பெண்கள் பல்லவ கலாச்சாரத்தின் பின்பலமாகக் கருதப் பட்டனர்

அவர்களின் பெயரில் சொத்துக்கள் வைத்துக் கொள்ள அனுமதிக்கப் பட்டனர்.

சில பின்னாள் கல்வெட்டுக்கள் இந்த நிலைகளை விளக்கி பிரதானம் அங்கமணி ஸ்த்ரீதானம் என்று குறிப்பிடுகின்றன.

இவர்கள் சமயத்தில் ஈடுபாடுகொண்டு பக்தி மார்க்கத்தில் திளைத்திருந்தனர்.

சில பெண்டிர் அவர்களின் கடவுள்களுக்காக கோவில் எழுப்பினர்

காரைக்கால் அம்மையார் தன் சுக போகங்களைத் துறந்து சிவபெருமானின் சேவையில் வாழ் நாளைக் கழித்தார்.

திலகவதி அம்மையார் என்பவர் தேவாரம் இயற்றிய திரு நாவுக்கரசரின் சகோதரியாவார். இவர் சிவ பக்தையும் ஆவார். இவருடைய போதனையின் பேரில் திரு நாவுக்கரசர் சைவத்தைத் தழுவினார் என்பது சரித்திரம்.

குடும்பப் பெண்கள் நெசவு நூல் நூற்றல் பூ விற்றல் பால் விற்பனை மற்றும் சிறு வியாபாரங்களில் ஈடுபட்டனர். பொருளாதார ரீதியில் அவர்கள் சுயமாகப் பொருள் ஈட்டினர்.

இயல் இசை நாடகங்களிலும் பெண்மணிகள் சிறந்து விளங்கினர். சிலர் கோவில்களிலும் சேவைகள் புரிந்து வந்தனர்.

அரச குடும்பப் பெண்கள் விலையுயர்ந்த நகைகளை அணிவதிலும் தங்களை அழகு படுத்திக் கொள்வதிலும் ஈடுபட்டனர்.

அரசிகள் சமய வளர்ச்சிக்காகப் பணி செய்தனர். சிலர் சமய வளர்ச்சிப் பணிகளுக்காகப் பொருள் தானமும் செய்தனர்.

பல்லவ மன்னர்கள் பல்வேறு அரசியல் காரணங்களுக்காக வேற்று நாட்டு இளவரசிகளைத் திருமணம் செய்து கொண்டனர்.

திருமண முறைகள்: பல்லவர் காலத்தில் சங்ககால திருமண முறைகளில் மாற்றம் ஏற்பட்டது. ஆரிய முறைகள் பெரிதும் பின்பற்றப் பட்டன. வேத

முழக்கம் தாலி கட்டுதல் அம்மி மிதித்து அருந்ததி பார்த்தல் அக்னியை வலம் வருதல் நல்ல நாள் நட்சத்திரம் அனுசரித்தல் கிரக நிலைகளை அனுசரித்தல் போன்ற சடங்குகள் சம்பிரதாயங்கள் ஏற்பட்டன.

**குறிப்பு**

உணவு: கல்வெட்டுக்கள் இலக்கியச் சான்றுகள் மற்றும் சிற்பங்கள் நமக்கு பல்லவ கால உணவு வழக்கங்களைத் தெரிவிக்கின்றன. அதிக பட்சம் அரிசிச் சோறும் தானிய வகைகளும் முக்கிய உணவாக இருந்தது. காய் கனிகளை உண்டு வந்தவர்கள் பால் மற்றும் தயிர் வெண்ணை போனற பொருட்களை உணவாகக் கொண்டனர். மதுபானங்கள் அருந்துவதும் வழக்கமாக இருந்தது. கீழ் சாதியினர் மாமிசத்தைப் புசித்தனர்.

ஆடைகள் மற்றும் ஆபரணங்கள்: அழகிய ஆடைகளை உடுத்தி மகிழ்வது பல்லவப் பெண்களின் முழுக்கவனமாக இருந்தது தெரிகிறது.மேல் தட்டு மக்கள் பட்டாடைகளையும் துறவிகள் காவி ஆடைகளையும் போர்வீரர்கள் போர்முறை உடைகளையும் அணிந்தனர்.

அரசியர் மகுடம் தரித்திருந்தனர். விலைமதிப்புள்ள தங்கம் வைரம் வைடூரிய அணிகலன்களை அணிந்தனர்.

பிற பெண்டிர் அனைத்து வகை நகைகளையும் அணிந்தனர். இவை கழுத்தில் ஆபரணமாக மாலைகள் ஆரங்கள் காலுக்குக் கொலுசுகள் கங்கணங்கள் போன்றவையாம்.

## சமூக பழக்க வழக்கங்கள்

இறந்தவர்களுக்கு கல் நினைவுச் சின்னங்கள் எழுப்புவது என்னும் சங்க கால வழக்கம் பல்லவர்கள் காலத்திலும் கடைப்பிடிக்கப்பட்டது. இவர்கள் காலத்தில் கல்லின் மேல் அவர்களுடைய படங்களும் அவர்கள் செய்த வீர தீரச் செயல்களும் பொறிக்கப் பட்டன.

மாடு மேய்த்தல் ஓர் தொழிலாக இருந்தது. அவற்றைத் தீனிக்காக வெளியே விட்டு வீடுகளுக்கு சாயந்திரம் திரும்ப அழைத்துவருவது வழக்கமாகக் காணப் பட்டது.

மார்கழி மாதத்தில் கன்னிப் பெண்கள் அதிகாலை பஜனையில் ஈடு பட்டு கிருஷ்ணரைப் பிரார்த்தித்தனர்.

கோவில் பணிகளுக்காக சிவாச்சாரியார்கள் என்ற அர்ச்சகர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்கள் சமஸ்கிருதத்தில் வழிபாடுகள் செய்தனர்.

## நகரமைப்பு

கைலாச நாதர் கோவில் கல்வெட்டுக்களில் காஞ்சியின் முழு நகரமைப்பு குறித்த விவரங்கள் காணப் படுகின்றன.

ஆராய்ச்சியாளர் கெட்டிஸ் என்பவர் காஞ்சியின் நகரமைப்பை மிகவும் பாராட்டியுள்ளார். சாலைகள் நல்ல அகலத்துடன் இரதங்கள் சாலைகளாகவும் போர்வீரர்கள் சாலைகளாகவும் வசதியாக அமைக்கப்பட்டுள்ளன.



ncs_t.indb 83 3/1/2019 8:35:32 AM

தொழில்களுக்குத் தக்க அவரவரின் இருப்பிடம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. போர்வீரர்கள் ஒரு புறம் தச்சர்கள் மற்றொரு புறம் என்பது போல குடிகளுக்கு நகரைச் சுற்றிலும் இருப்பிடங்கள் அமைக்கப் பட்டன.

குறிப்பு

கோட்டையின் மதிற் சுவர்கள் அரசனின் தலை நகர் முழுவதையும் பாதுகாக்கும் அரணாக கட்டப்பெற்றிருக்கின்றது.

**பொருளாதார நிலை:** சங்க காலத்தைப் போல பல்லவர்களின் பொருளாதாரம் ஒரு நல்ல நிலையில் இருந்து வந்தது.பல்லவர் காலத்து செப்புப் பட்டயங்களின் மூலமும் இலக்கியங்கள் மூலமும் இவற்றை நாம் அறிந்து கொள்கின்றோம்.

சங்க காலத்தில் இருந்ததைப் போலவே விவசாயம் முதன்மையான தொழிலாகக் கருதப்பட்டது.தவிர சிறு தொழில்கள் வியாபாரம் முதலானவையும் இருந்து வந்தன.

கோவில்களுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட நிலங்கள் தேவதானம் எனப் பட்டது.

சமணர்களுக்குக் கொடுக்கப்பட்ட இடங்கள் பள்ளி சந்தா நிலங்கள் எனப் பட்டன. குத்தகை முறையில் நிலங்கள் உழுவதற்காகக் கொடுக்கப் பட்டன.

பாயல் என்ற நிலங்களின் விளைச்சல் 50 சதவிகிதம் உழுபவனுக்கும் 50 சதவிகிதம் விவசாயிக்கும் என்று சட்டம் இருந்தது.

அடை நிலங்கள் அரசனுக்குச் சொந்தம். அவற்றில் விளைவிக்க வரிகள் செலுத்தப் பட வேண்டும் என்று சட்டம் இருந்தது.

பொதுவாகவே நிலங்கள் யாவும் தனிப்பட்ட பெயர்களில் இருந்ததாகத் தெரியவில்லை. கூட்டுப்பெயர்களில் தான் இருந்தன.

நிலமில்லா தொழிலாளிகள் மேல்சாதிக்காரரின் அடிமைகளாக இருந்து வந்தனர். நிலமேம்பாட்டுக்கும் இதர கடின வேலைகளுக்கும் இவர்கள் நியமிக்கப் பட்டனர்.

விளையும் பூமிகளில் நெல் பயிரிடப்பட்டது. இந்த நிலங்கள் விளைச்சலின் தர வாரியாகப் பிரிக்கப்பட்டன

அரிசிதான் அடிப்படை உணவுப்பொருளாக இருந்தது. வியாபாரத்திலும் இதுதான் முன் நின்றது.

அரிசிதான் பண்டமாற்று முறையில் மதிப்பீட்டு அளவாகக் கருதப்பட்டது.

தென்னைமரங்கள் அதிக அளவில் பயிரிடப் பட்டன

பருத்தி வாழை கரும்பு ஆகியவையும் பயிரிடப்பட்டன

எண்ணை வித்துக்கள் வெற்றிலை பூக்கள் பழங்களும் பயிரிடப்பட்டன

காடுகளில் பலவிதமான அடர்த்தியான் தரமான மரங்களும் வளர்க்கப்பட்டு வியாபாரம் செய்யப் பட்டது.



ncs_t.indb 84 3/1/2019 8:35:32 AM

ஆயுர்வேதம் பிரபலமடைந்தது. பலவித மூலிகைகள் பயிரிடப்பட்டு அந்த மூலிகைகள் அயல் நாட்டு வாணிபத்தில் நல்ல பொருளீட்டின.

நீர்ப்பாசனம்: பல்லவ நாட்டில் பாசன வசதிக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப் பட்டது.



ஏரிகளும் குளங்களும் அமைக்கப்பட்டன. முக்கியத்துவம் தர இவை பெயரிடப் பட்டு பராமரிக்கப்பட்டன.

ஆற்றிலிருந்து ஏரிக்கும் ஏரியிலிருந்து வயல்களுக்கும் நீர் நிரம்ப கால்வாய்கள் வெட்டப்பட்டன.

இவற்றின் நீர் அளவு மற்றும் நீர் உபயோக அளவீடுகளை மேற்பார்வையிட ஏரி நீராட்சி நிறுவப்பட்டது. அந்தந்த கிராமப் புற குழுக்கள் இவற்றைப் பராமரித்து வந்தனர்.

வரி வசூல் மற்றும் பராமரிப்பு செலவுகள் மக்களால் ஏற்கப் பட்டன.

## பஞ்சம்

பல்லவர் காலத்தில் கடும் பஞ்சம் நிலவியது என்று குறிப்புக்கள் உள்ளன. தேவாரத்திலும் பெரிய புராணத்திலும் இந்த குறிப்புக்கள் காணப் படுகின்றன.

1. நரசிம்ம வர்மன் காலத்திலும் மூன்றாம் நந்திவர்மன் காலத்திலும் வரட்சி காணப்பட்டதாக கல் வெட்டுக்களில் குறிக்கப் பட்டுள்ளன
2. பஞ்சத்தைப் போக்க ஒரு பஞ்ச வாரியம் நிறுவப்பட்டது
3. தானியங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பஞ்ச கால உபயொகத்திற்கு சேமித்து வைக்கப்பட்டன
4. பஞ்சம் வரட்சி சம்பந்தப்பட்ட வாரியம் நிவாரணப்பணிகளுக்கென உருவாக்கப்பட்டதாகும்.

## பிற தொழில்கள்

1. நூற்பு நெசவு போன்றவை நாட்டில் இருந்தன
2. ஆண்களும் பெண்களும் சம பங்கேற்றுப் பணி செய்தனர்
3. காஞ்சியைச் சுற்றி பருத்தி விளையும் பகுதிகள் அதிகம் இருந்தன.
4. நெசவிலும் துணிமணிகளின் உற்பத்தியிலும் காஞ்சி ஒரு வியாபார மையம் ஆனது
5. கரும்பு சாறு பிழிதலும் தேனீ வளர்ப்பும் ஒரு தொழிலாகக் கருதப்பட்டது
6. மரத்தால் ஆன கருவிகள் மற்றும் வீட்டு உபயோகச் சாமான்கள் மிகவும் பிரபலமாயின.
7. தங்கம் மற்றும் உலோக ஆபரணங்கள் செய்வது ஒரு வேலைப்பாடுள்ள தொழிலாகச் செய்யப் பட்டது
8. எண்ணெய் வித்துக்களிலிருந்து எண்ணெய் எடுத்தல் மண்பாண்டங்கள் செய்தல் மெழுகு உற்பத்தி போன்ற தொழில்கள் இருந்தன.

குறிப்பு

9. மீன் பிடித்தல் கால் நடை வளர்த்தல் போன்றவை விவசாயத்தைச் சுற்றி இருந்த இடங்களில் நடந்தன.
10. தொழில் வரி இருந்தது. புதிய தொழில் வியாபாரம் தொடங்க அரசனின் அனுமதி தேவையானதாக இருந்தது.

**உள் நாட்டு வாணிபம்:**

1. அரச அனுமதியின் பேரில் வியாபாரம் செய்யப் பட்டது
2. உள் நாட்டு வாணிபம் பெரிதும் ஊக்குவிக்கப் பட்டது
3. உள் நாட்டு வாணிபம் உள்ளூர் சந்தைகளின் மூலம் நடத்தப்பட்டது
4. கோவில்களைச் சுற்றி அமைக்கப்பட்ட தற்காலிகக் கடைகள் மூலம் சந்தை நடத்தப் பட்டது. அனைத்துப் பொருட்களும் விற்கப் பட்டன.
5. மொத்த வியாபாரிகள் சில்லரை வியாபாரிகள் துணி வியாபாரம் பொது வியாபாரம் என்று பிரிவுகளை ஏற்படுத்தி பல வியாபாரக் குழுக்கள் இவற்றில் ஈடுபட்டன.

**அயல் நாட்டு வாணிபம்**

1. நந்திக்கலம்பகம் எனற இலக்கியத்தில் பல்லவரின் அயல் நாட்டு வாணிபம் குறித்து சொல்லப் பட்டிருக்கிறது
2. பாரசீக வளைகுடாவுடன் ஏற்பட்ட வாணிபத்தின் குறிப்புக்கள் சில கல் வெட்டுக்களில் காணப் படுகின்றன
3. இந்தோசீனா இந்தோனேஷியா இலங்கை வளைகுடா தெற்கு நாடுகள் இவற்றுடன் ஏற்பட்ட வாணிபம் குறிப்பிடத்தக்கது
4. சீனர்களின் புத்த மத ஈடுபாட்டை மதித்து அதன்மூலம் வியாபாரத்தை அபிவிருத்தி செய்ய இரண்டாம் நரசிம்ம வர்மன் நாகப்பட்டினத்தில் புத்த விகாரம் ஒன்றை எழுப்பினான்.
5. டகுபா கல்வெட்டுக்களில் தாய்லாந்துடன் ஆன வணிக உறவு குறிப்புக்களாகக் காணப் படுகின்றன.
6. கஸ்தூரி சங்கு பவழங்கள் பட்டு திராட்சைரசமது மருந்துகள் முதலியவை இறக்குமதி செய்யப்பட்டன.
7. பானைகள் முத்துக்கள் ஏற்றுமதி செய்யப் பட்டன
8. மகாபலிபுரம் நாகப்பட்டினம் மகேந்திரபள்ளி திருமறைக்காடு திருவொற்றியூர் இவை முக்கியமான துறைமுகங்களாக இருந்தன.
9. யுவான் சுவாங் குறிப்பில் மகாபலிபுரம் துறைமுகம் குறித்துச் சொல்லியிருக்கிறார்.
10. கடற்படை ஒன்று தனியாக அயல் நாட்டு வாணிபத்திற்காகவும் பயணங்களுக்காகவும் பல்லவர்களால் காவல் நிறுத்தப் பட்டிருந்தது.



ncs_t.indb 86 3/1/2019 8:35:32 AM

11. வாங்கம் (பெரிய கப்பல்) தோணி (வட்டத்தோணி) மரக்கலம் (பாய்மரக் கப்பல்)இவையெல்லாம் கடல் செலவிற்கான கப்பல்களாகும்.
12. தங்கக் காசுகளில் பாய்மரக்கப்பலின் உருவம் பொறிக்கப்பட்டிருப்பதைக் கண்டால் பல்லவர் காலத்தில் அயல் நாட்டு வாணிபம் இருந்தது தெளிவாகத் தெரிகிறது.

நில அளவைக்கான பல்வேறு அளவைக் குறியீடுகள் அறிமுகப் படுத்தப் பட்டன. தவிர தானியங்கள் அளக்க அளவைகளும் உலோகங்களை எடை போட்டு அளக்க அளவைகளும் உபயோகத்தில் இருந்தன.

## பல்லவ நாணயங்கள்

செம்பு வெள்ளி தங்கக் காசுகள் பல்லவர்களின் காலத்தில் வெளியிடப் பட்டன. டாக்டர்.மீனாட்சி இதனை ஆராய்ச்சி செய்துள்ளார்.

1. தங்க நாணயங்கள் வியாபாரத்தில் உபயோகிக்கப் பட்டது
2. நந்தி மற்றும் இரட்டை பாய்மரக் கப்பல்களின் உருவம் பொறித்த காசுகள் பல்லவர் காலக் காசுகள்
3. மகேந்திரவர்மனின் காசுகளில் தமிழில் “கதா சித்ரா” என்று எழுதப்பட்டிருக்கும்.
4. இரண்டாம் நரசிம்மவர்மனின் காசுகளில் “ஸ்ரீ பத்ரா” என்று காணப்படும்
5. கோவில்களுக்கு அரசனின் இலச்சினை பொறித்த தங்கக் காசுகள் தானமாக வழங்கப் பட்டன.

மொத்தத்தில் பல்லவர் கால சமூக பொருளாதார மாற்றங்கள் சங்க கால நிலையிலிருந்து மேம்பட்டும் முற்றிலும் மாறுபட்டதாகவும் காணப் படுகின்றன.

## பண்பாடும் கலாச்சாரமும்

1. பலதுறை வளர்ச்சியைக் கண்ட பல்லவ ஆட்சி சங்க காலத்திலிருந்து மேம் பட்டதாகத் தெரிகிறது. துறை சார்ந்த வளர்ச்சியில் குறிப்பிடும்படியாக:
    - கல்வி
    - இலக்கியம்
    - சமயம்
    - சிற்பக்கலை
    - ஓவியங்கள்
    - நாட்டியம்
    - பாடல்



ncs_t.indb 87 3/1/2019 8:35:32 AM

குறிப்பு

2. கல்வி மூன்று நிலைகளில் காணப்பட்டது
   - இந்து மத கல்வி நிறுவனங்கள்
     - காஞ்சி கல்வி மையமாகக் கருதப்பட்டது
     - கோவில்களிலும் மடங்களிலும் கல்வி நிறுவனங்களிலும் கல்வி கற்பிக்கப்பட்டது
     - நிறுவனங்கள் கடிகைகள் எனப் பட்டன. சில கடிகைகள் அரசனின் நேரடிக் கண்காணிப்பில் இருந்தன.
     - சங்கர மடம் முன்னுரிமை பெற்றிருந்தது
     - இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் மாணாக்கர்கள் இங்கே படிப்பில் ஈடுபட்டிருந்தனர்.
   - பௌத்த மதத்தின் கல்வி நிறுவனங்கள்
     - யுவான் சுவாங்கின் குறிப்புக்களின் படி ஏறத்தாழ 100 புத்த மடாலயங்கள் காஞ்சியில் காணப்பட்டதாகத் தெரிகிறது.
     - சமய வாதங்களும் பேச்சுத்திறன் போட்டிகளும் இன்கே நடத்தப் பட்டன.
     - புத்த மத கல்வி நிறுவனங்கள் தமிழ் மொழி மற்றும் இலக்கியங்களை மேம்படுத்தியதில் மிகப் பெரிய பங்காற்றியது.
   - சமணரின் கல்வி நிறுவனங்கள்
     - சமணத்தைப் பரப்பவும் தமிழ் மொழியை வளர்க்கவும் வஜ்ஜிர நந்தி மதுரையில் தமிழ் சங்கத்தை கி.பி.76ல் அமைத்தான்.
     - பாடலிபுத்திரம் சமண மடம் திரு நாவுக்கரசரின் தலைமையில் நடந்து வந்தது. இவர் அப்போது தரும சேனர் என்றழைக்கப்பட்டார். இதன் பின்னர் அவர் சகோதரியின் போதனைக்கிணங்க சைவத்தைத் தழுவினார். திரு நாவுக்கரசர் என்றும் அழைக்கப் பட்டார். இலக்கியமும் படைத்த நாயன்மாராவார்.
     - இவை சமஸ்கிருதம் தமிழ் பிராக்கிருதம் மொழிகளின் வாயிலாகப் பாடம் சொல்லிக் கொடுத்தன.
     - காஞ்சி சமணப் பள்ளிகள் அரசன் சிம்ம விஷ்ணு மற்றும் முதலாம் மகேந்திரவர்மான் ஆகியோரால் ஆதரிக்கப்பட்டன.

இவற்றைத் தவிர பல்லவர் ஆட்சியில்

- இலக்கியம் • விஞ்ஞானம் • இசை
- நாட்டியம் • ஓவியம்

போன்றவை மிக்க வளர்ச்சி பெற்றன என்பதனை ஆங்காங்கே காணுகிறோம்.



ncs_t.indb 88 3/1/2019 8:35:32 AM

## 6.4 கலை கட்டிடக் கலையின் வளர்ச்சி நிலை

குறிப்பு

பல்லவர் காலத்தில் முதன்மை இடத்தில் வைத்துப் பார்க்கப் படுவது பல்லவர்களின் கலை மற்றும் கட்டிடக் கலை நுட்பம் எனலாம். இதற்கான ஏராளமான ஆதாரங்கள் கலைச் சின்னங்களாகவும் கோவில்களாகவும் சிற்பங்களாகவும் கல்வெட்டுக்களாகவும் தொல்பொருள் ஆராய்ச்சி அகழ்வுகளாகவும் கிடைத்துள்ளன. இக் காலத்தில் இவை ஒரு திறமையான கட்டிடக் கலை வல்லுனரின் திறமைக்கும் கலை நயத்திற்கும் விடப் பட்ட சவாலாகவே இருக்கின்றன.

இசை ஓவியம் சிற்பக்கலை நாட்டியம் கட்டுமானக் கலை காவியங்கள் போன்ற பல துறைகளில் பல்லவர்களின் பங்களிப்பு மிகவும் சிறப்பானதாகக் கருதப் படுகிறது. இந்தக் கலைக் கோவில்களுக்கும் இலக்கியங்களுக்கும் காவியங்களுக்கும் பின்னால் அரசர்கள் அவர்களின் சொந்தத் திறமைகளின் மூலமாக விடாமுயற்சிகளின் விளைவாக ஒரு கலைப் பொக்கிஷத்தை எதிர்காலத்தையும் எதிர்கால மக்களையும் சேரச் செய்தது மாபெரும் தொண்டு எனலாம். இவை அனைத்தும் அழியாக் கலைகள் எனப் படுகின்றன.

1. கட்டுமானக் கலை நுட்பம்: பல்லவ ஆட்சியின் முன்பு கோவில்கள் மரம் சுண்ணாம்பு செங்கல் இவற்றால் கட்டப் பட்டன. கற்களினாலான கோவில்களை முதன் முறையாகப் பல்லவர்கள் அமைத்துக் காட்டினர்.
   - மகாபலிபுரம் கடற்கரைக் கோவில்கள்
   - காஞ்சி கைலாச நாதர் கோவில்

   இவை இரண்டும் கட்டுமானக் கலை நுட்பம் மற்றும் கலை நயம் கொண்ட பல்லவர் காலக் கலைத்திறனைப் பறை சாற்றுவனவாகும்.
   - மகேந்திரவர்மனின் குகைக் கோவில்கள்
   - நரசிம்ம வர்மனின் ஒற்றைக்கல் பாறைக் கோவில்களும் இரதங்களும்.
2. இசை: களப்பிரர் காலத்தில் இசை வளர்ச்சி மிகவும் குறைவு. பல்லவர் காலத்தில் தழைத்து வளர்ந்தது.
   - ஆழ்வார்களும் நாயன்மார்களும் பக்தி இயக்கத்தினால் மக்களைப் பரவசப் படுத்த இசை ஒரு கருவியானது. இறைப் பண்களும் வழிபாட்டு முறைகளும் இசை கல்ந்ததாக இருந்ததால் மக்கள் ஆர்வமடைந்தனர். தமிழ் மொழி இலக்கியம் இரண்டும் வளர்ச்சி அடைந்தன.
   - குடுமியான்மலையின் கல்வெட்டு பரிவாதினி என்ற வீணையைக் குறிப்பிடுகிறது. திருமயம் கல்வெட்டு புதிய தாளவகையையும் குறிப்பிடுகிறது.

குறிப்பு

- தக்கராகம் பழந்தக்கராகம் சீகாமரம் கொல்லி கொல்லிக்காவாணம் வியாழக்குறிச்சி போன்ற பல ராகங்களைப் பாடினார்கள்.
- மகேந்திரவர்மன் இசை ஞானம் பெற்றவன். சங்கீரணசாதி என்ற புனைப் பெயரை வைத்துக் கொண்டான். இதனால் இசை வல்லுனர்களின் வளர்ச்சியும் மன்னர்களால் வெகுவாக ஆதரிக்கப்பட்டது.
- ராஜசிம்ம பல்லவன் வாத்திய வித்தியாதரன் என்று அழைக்கப் பட்டான்.

3. நாட்டியம்

- சித்தன்னவாசல் கிராமம் கி.மு.முதலாம் நூற்றாண்டிலிருந்து கி.பி பத்தாம் நூற்றாண்டு வரையிலுள்ள கால கட்டத்திலான வரலாற்றில் இடம் பெற்றுள்ளது. சித்தன்னவாசல் ஓவியங்களின் மூலம் பல்லவ நாட்டின் நாட்டியத் திறமையைப் பெருமையுடன் நாம் தெரிந்துகொள்ளலாம். இவற்றில் ஓவியத்திறமையும் நாட்டியத் திறமையும் ஒன்றாக வெளிப்படுகின்றன.
- நாட்டிய முத்திரைகளும் முகத்தில் நவரச பாவங்களும் ஒருங்கே பிரதிபலிக்கும் ஓவியங்கள் நாட்டியத்தில் இருந்த மேன்மையை உணர்த்துகின்றன.
- நடராசரின் சதுர் தாண்டவம் தத்ரூபமாக ஓவியத்தில் வரையப்பட்டுள்ளது. இதேபோல ஸ்தாவிருச்சிகா என்ற நடனத்தைக் குறிக்கும் ஓவியம் காலத்தில் அழியாவண்ணம் இடம் பெற்றுள்ளது. இது பல்லவ நடனக் கலையின் சிறப்பை எடுத்துச் சொல்வதாக அமைந்துள்ளது.
- சிற்பங்களிலும் பல்லவர்கள் நடனக் கலையிலான முக பாவங்களை தத்ரூபமாகக் கொண்டுவந்ததால் நடனக் கலையின் மேன்மை மற்றும் சிற்பக் கலையின் சிறப்பு இரண்டையும் ஒன்றாகக் காண்கிறோம்.
- வைகுண்டப் பெருமாள் கோவிலில் உள்ள சிற்பங்கள் நடனக்கலையின் மேன்மையை எடுத்துக் காட்டுகிறது.
- ஆண்களும் பெண்களும் நடனக் கலையில் ஈடுபட்டனர்.
- பக்தி இயக்கத்தின் முக்கியமான ஈர்ப்பாக கோவில்களுக்கு இசையும் நடனமும் வரப் பிரசாதமாக அமைந்தன.

4. சிற்பக்கலை

- பல்லவர்களின் சிற்பங்கள் காவியம் சொல்லும் உயிரோவியங்கள் எனப்படுகின்றன. இவை சிற்பக்கலையின் சிறப்பைப் பறைசாற்றுகின்றன.
- மகாபலிபுரத்திலுள்ள அர்சுனன் தவம் மகிசாசுர மர்த்தினி சிற்பங்கள் அவற்றை வடித்த சிற்பிகளின் திறமையுடன் அக் கலை நயமும் வெளிப்படுமாறு உயிரோட்டமுள்ளவையாகக் கண்டவர் கண்ணைக் கவரும் வகையில் அமைந்துள்ளன.



ncs_t.indb 90 3/1/2019 8:35:33 AM

- கைலாச நாதர் கோவில் வைகுண்டபெருமாள் கோவில் சிற்பங்கள் மற்றும் சிவ தாண்டவ சிற்பங்கள் மிகவும் சிறப்பானவையாகக் கருதப் படுகின்றன.
- துவாரபாலகர்கள் தோரணங்கள் தாமரை அன்னங்களின் பவனி இரட்டை திருவாசி சிற்பங்கள் இவை கண்ணைக் கவர்கின்றன.
- மகாபலிபுரத்தின் பாறைக் கோவில்கள் இரதங்கள் கடற்கரைக் கோவில்கள் எல்லாம் புராணக் கதைகளை சிற்பங்கள் வாயிலாக நமக்கு நேரிடையாகத் தெரியப்படுத்துகின்றன.
- கோவர்த்தன கிரியைத் தாங்கி சிற்பவடிவில் நிற்கும் கிருஷ்ணனை வடித்த அந்தச் சிற்பியின் திறமையை வியக்காதவர் எவருமில்லை.
- கட்டிடக்கலை வடிவமைப்புக்களும் நுட்பங்களும் சித்தன்னவாசல் குகையிலமைந்துள்ள சிற்பங்கள் மற்றும் ஓவியங்கள் மூலம் வெளிப்படுகின்றன.

**குறிப்பு**

5. ஓவியம்

- பல நூற்றாண்டுகள் கடந்து விட்டாலும் பல்லவர் கால ஓவியங்கள் சித்திரங்கள் மிகவும் தொன்மையானவை. சித்தன்னவாசலில் வரையப்பட்டுள்ள ஓவியங்களில் அழகிய தாமரைப் பூக்களைக் கொண்ட தாமரைத்தடாகம் அதிலிருந்து தாமரைகளைப் பறிக்கும் மக்கள் கூட்டம் இரண்டு நாட்டியக் கலைஞர்கள் வெள்ளை நிற அல்லி ஆம்பல் மலர்கள் மீன்கள் வாத்துக்கள் எருமை மாடுகள் ஆனைகள் அனைத்தும் இடம் பெற்றுள்ளன. இதைத்தவிர 9ஆம் மற்றும் 10 ஆம் நூற்றாண்டின் கல்வெட்டுக்களும் இதில் இடம் பெற்றுள்ளன. அரசன் அரசி ஓவியங்கள் நடன மாதர் ஓவியங்கள் உருவச்சிலை ஓவியங்கள் அர்த்தமண்டபத்தின் மேற்கூரையை அலங்கரிக்கும் 7ஆம் நூற்றாண்டின் சுவர் சித்திர வேலைப்பாடுகளும் சிறப்பானவை எனலாம்.
- பல்லவ காலத்து மகளிர் அணிந்து வந்த ஆடை அணிகலன்கள் கூந்தல் ஒப்பனை இவையெல்லாம் மிகவும் நேர்த்தியாகக் காட்சியளிக்கின்றன. சித்தன்னவாசல் ஓவியங்களை வரைந்தது மகேந்திரவர்மன்தான் என்றும் சொல்லப்படுகிறது. அவனுக்கு சித்திரக்காரப் புலி என்ற பட்டமும் உண்டு. ஆனால் கால நிர்ணயத்தில் இது பாண்டியர் காலத்தைச் சேர்ந்ததாகக் கொள்ளப் படுகிறது.
- இவையெல்லாம் உயிருள்ளவையாக தத்ரூபமாகத் தோன்றி பரவசம் அடையச் செய்கின்றன.

6. இலக்கியம்

- பல்லவர் காலத்தில் இந்துக்கள் வேத பாட சாலைகளின் மூலமும் சமணர்கள் சமணப் பள்ளிகளின் மூலமும் பௌத்தர்கள் புத்த

குறிப்பு

விகாரங்க்ளின் மூலமும் கல்வியைப் பரப்பி வந்தனர். இவர்கள் சமஸ்கிருதம் தமிழ் பிராக்கிருதம் ஆகிய மொழிகளில் கற்பித்தனர்.

- பல்லவர்கள் வடக்கிலிருந்து வந்தவர்களே ஆனாலும் அவர்தம் சமஸ்கிருதப் புலமையும் தமிழ் ஆர்வமும் இணைந்து புதிய இலக்கியப் பாதைகளைத் தோற்றுவித்தன.
- இவர்களின் செப்புப் பட்டய சாசனங்கள் இதிகாசத்தையும் புராணத்தையும் விளக்கிடும் வகையில் அமைந்தன.
- பிறமொழி இலக்கியங்களான மத்த விலாசபிரகாசனம் காவிய தரிசனம் மற்றும் அவந்தி சுந்தரி கதா என்பவை பல்லவர் காலத்தவையாகும்.
- சமயத்தைச் சார்ந்த பல இலக்கியங்களும் இக்காலத்தில் தோன்றின:
  - தேவாரம்
  - திருமூலர் திருமந்திரம்
  - ஆழ்வார் திருவாய்மொழி
  - நாலாயிர திவ்வியப் பிரபந்தம்
  - திருவாசகம்
- சமணர்களும் பௌத்தர்களும் தத்தம் மதங்களின் மாட்சியைக் காப்பாற்ற வேண்டிய நிலையில் இருந்தனர். சைவமும் வைணவமும் அடைந்த வளர்ச்சியிலும் எழுச்சியிலும் பௌத்தமும் சமணமும் மக்களிடம் செல்வாக்கை இழந்தன. இக் கருத்துக்களை மாற்ற வேண்டி சில இலக்கியங்கள் கொண்டுவரப்பட்டன:
  - வளையாபதி
  - குண்டலகேசி
  - நீலகேசி
- இக்காலத்தில் அகராதிகளும் இலக்கணக் குறிப்புகளும் தொகுக்கப்பட்டன.
- பாரத வெண்பா என்ற நூலும் நந்திக்கலம்பகம் என்ற நூலும் பல்லவர் காலத்தில் இயற்றப்பட்டன.

முடிவாக பல்லவர் ஆட்சியில் ஏற்பட்ட ஓவியக்கலை கட்டிடக் கலை நுட்பம் இசை நாட்டியம் மற்றும் சிற்பக்கலை இவற்றின் வரலாற்றுச் சிறப்பு வருங்கால சமுதாய மறுமலர்ச்சிக்கு மூல காரணமாக இருந்தது எனக் கொள்ளலாம்.

## உங்கள் முன்னேற்றத்தைப் பரிசோதியுங்கள்

1. பல்லவர் ஆட்சியின் மூன்று நிலைகளைக் குறிப்பிடுக
2. களப்பிரரின் ஆட்சி தமிழரின் கலாச்சார சிறப்புக்களைப் பயனற்றதாகச் செய்து பொலிவிழந்தது எவ்வாறு?

3. பல்லவர் கால சாதி நிலை எவ்வாறு இருந்தது?
4. பல்லவர் கால மக்களின் உணவு உடை எவ்வாறு இருந்தது?
5. விவசாயத்தில் முக்கியமான உற்பத்தி எதுவாக இருந்தது?
6. பல்லவர் காலத்தில் நாணயங்கள் எவ்வாறு காணப் பட்டன?
7. பல்லவர் காலக் கல்வியின் மூன்று விதமான அமைப்புக்கள் யாவை?
8. பஞ்ச வாரியத்தின் அமைப்பு எதனால் ஏற்பட்டது?

**குறிப்பு**

## 6.5 திறன் அடைவிற்கான பரிசோதனைக் கேள்விகளுக்கான விடைகள்

1. பல்லவர்களின் சரித்திரத்தைக் குறித்த விவரங்கள் மூன்று கால கட்டங்களில் மூன்று ஆட்சி காலங்களாக ஆராயப் படவேண்டும். இவை முறையே 3 தனித்தனி காலங்களில் தமிழ் நாட்டில் இருந்த சரித்திர நிகழ்வுகளாகும்.முற்காலப்பல்லவர்கள் 3ஆம் 4ஆம் நூற்றாண்டுகளில் ஆண்டனர். இடைக்காலப் பல்லவர்கள் 4ஆம் 5ஆம் 6ஆம் நூ ற்றாண்டுகளில் ஆண்டனர். முற்காலப் பல்லவர்கல் 7ஆம் 8ஆம் நூ ற்றாண்டுகளில் ஆட்சி புரிந்தனர். பிற்காலப் பல்லவர்களின் காலத்தில் தொண்டை மண்டலம் பல்லவர் குடையின் கீழ் இருந்தது.
2. களப்பிரரின் ஆட்சியில் சங்க காலத்து மூவேந்தர்கள் ஆட்சியில் விளைந்த நன்மைகள் அனைத்தும் அடியோடு நீங்கின. பௌத்தம் மற்றும் சமண மதங்களின் வருகையில் தமிழகத்தின் பக்தி மார்க்கம் அடியோடு அழிந்தது. பிராம்மணர்கள் ஒடுக்கப்பட்டு கொல்லப்பட்டு கோவில்களும் பொலிவை இழந்தன.
3. சாதி முறை வேரூன்றிய காலம் அது. ஆந்திரா கர் நாடகத்தைச்சேர்ந்த பிராம்மணர்கள் இடம் பெயர்ந்து வந்து தமிழ் நாட்டில் குடியேறி ஆரிய வழக்கங்களைத் தோற்றுவித்தனர். இதனால் தமிழர்களிடையே பிளவு ஏற்பட்டது. பிராம்மணர், வைசியர், சத்திரியர், சூத்திரர் என்ற நான்கு அமைப்புக்கள் இருந்தன.
4. பல்லவ கால உணவு வழக்கங்களில் அரிசிச் சோறும் தானிய வகைகளும் முக்கிய உணவாக இருந்தது. காய் கனிகளை உண்டு வந்தவர்கள் பால் மற்றும் தயிர் வெண்ணை போனற பொருட்களை உணவாகக் கொண்டனர். மதுபானங்கள் அருந்துவதும் வழக்கமாக இருந்தது. கீழ் சாதியினர் மாமிசத்தைப் புசித்தனர். அழகிய ஆடைகளை உடுத்தி மகிழ்வது பல்லவப் பெண்களின் முழுக்கவனமாக இருந்தது தெரிகிறது.மேல் தட்டு மக்கள் பட்டாடைகளையும் துறவிகள் காவி ஆடைகளையும் போர்வீரர்கள் போர்முறை உடைகளையும் அணிந்தனர். அரசியர் மகுடம் தரித்திருந்தனர். விலைமதிப்புள்ள தங்கம் வைரம் வைடூரிய அணிகலன்களை அணிந்தனர்.பிற பெண்டிர் அனைத்து



ncs_t.indb 93 3/1/2019 8:35:33 AM

வகை நகைகளையும் அணிந்தனர். இவை கழுத்தில் ஆபரணமாக மாலைகள் ஆரங்கள் காலுக்குக் கொலுசுகள் கையில் கங்கணங்கள் போன்றவையாம்.

குறிப்பு

5. நெல் உற்பத்தி முக்கியத்துவம் நிறைந்து இருந்தது. கால் நடை பராமரிப்பு பால் உற்பத்தி தென்னை வளர்ப்பு காட்டு மரங்கள் வளர்ப்பு தேனீ வளர்ப்பு போன்ற பல்வேறு உற்பத்திகள் மேற்கொள்ளப் பட்டன. அரிசி வியாபாரம் அதிகரித்தது.
6. செம்பு வெள்ளி தங்கம் ஆகிய உலோகங்களால் நாணயங்கள் வார்க்கப் பட்டன. தங்கக் காசுகள் பெரும்பாலும் வர்த்தகத்தில் உபயோகிக்கப் பட்டன.
7. மூன்று வகையிலான கல்வி முறைகள் செயல் பட்டன
    - இந்துக்களின் கல்வி நிறுவனங்கள்
    - சமணர்களின் கல்வி நிறுவனங்கள்
    - பௌத்தர்களின் கல்வி நிறுவனங்கள்
8. பஞ்ச வாரியம் என்பது பஞ்ச காலத் தட்டுப்பாட்டைப் போக்க அரசர் அமைத்த வாரியமாகும். நாட்டில் தானியங்களை சேமித்து வைத்து பஞ்ச கால நிவாரணமாகப் பயன்படுத்தின.

## 6.6 உரைச் சுருக்கம்

- முற்காலப்பல்லவர்கள் 3ஆம் 4ஆம் நூற்றாண்டுகளில் ஆண்டனர். இடைக்காலப் பல்லவர்கள் 4ஆம் 5ஆம் 6ஆம் நூற்றாண்டுகளில் ஆண்டனர். முற்காலப் பல்லவர்கல் 7ஆம் 8ஆம் நூற்றாண்டுகளில் ஆட்சி புரிந்தனர்.
- பிராக்கிருத்தில் எழுதப்பட்டிருக்கும் செப்புத்தகடுகள் மூலம் முற்காலப் பல்லவர்கள் தமிழ் நாட்டை ஆண்ட விவரமும் அவர்களுடைய பெயர் பெற்ற மன்னர்கள் பப்ப தேவன் மற்றும் சிவஸ்கந்த வர்மன் ஆவர் என்றும் தெரியவருகிறது
- செப்புப் பட்டயங்கள் மூலம் இடைக்கால பல்லவ மன்னர்களான குமார விஷ்ணு அவனைத் தொடர்ந்து கந்த வர்மன் வீர வர்மன் இரண்டாம் கந்த வர்மன் சிம்மவர்மன் ஆகியோர் ஆட்சி புரிந்தனர் என்று குறிப்புக்கள் கிடைக்கின்றன.
- பிற்காலப் பல்லவர்கள் சிறந்த பல்லவர்கள் என்றும் அழைக்கப் படுகின்றனர். தொண்டை மண்டலத்தில் அவர்கள் ஆட்சியை நிலை நிறுத்தினர். சிம்ம விஷ்ணுவின் வழித்தோன்றல்களாக இவர்கள் ஆட்சி புரிந்தனர்.
- சங்க காலத்தைப் போல பல்லவர்களின் பொருளாதாரம் ஒரு நல்ல நிலையில் இருந்து வந்தது.பல்லவர் காலத்து செப்புப் பட்டயங்களின்

மூலமும் இலக்கியங்கள் மூலமும் இவற்றை நாம் அறிந்து கொள்கின்றோம்.

குறிப்பு

- சாதி முறை வேரூன்றிய காலம் அது. ஆந்திரா கர்நாடகத்தைச் சேர்ந்த பிராம்மணர்கள் இடம் பெயர்ந்து வந்து தமிழ் நாட்டில் குடியேறி ஆரிய வழக்கங்களைத் தோற்றுவித்தனர். இதனால் தமிழர்களிடையே பிளவு ஏற்பட்டது. பிராம்மணர் வைசியர் சத்திரியர் சூத்திரர் என்ற நான்கு அமைப்புக்கள் இருந்தன.
- வேதத்தின் புலமை காரணமாக பிராம்மணர்கள் மிக உயர்ந்த அரச சலுகையில் அமர்ந்து இருந்தனர். வேதாகம் யாகங்களும் நடத்தப் பட்டன. இவர்கள் பூணூல் அணிந்ததால் பிரும்மன் என்று பெரிதும் மதிக்கப் பட்டனர். சிலர் அமைச்சர்களாகவும் செயல் பட்டனர்.
- பல்லவர் காலத்தில் முதன்மை இடத்தில் வைத்துப் பார்க்கப் படுவது பல்லவர்களின் கலை மற்றும் கட்டிடக் கலை நுட்பம் எனலாம். இதற்கான ஏராளமான ஆதாரங்கள் கலைச் சின்னங்களாகவும் கோவில்களாகவும் சிற்பங்களாகவும் கல்வெட்டுக்களாகவும் தொல்பொருள் ஆராய்ச்சி அகழ்வுகளாகவும் கிடைத்துள்ளன. இக் காலத்தில் இவை ஒரு திறமையான கட்டிடக் கலை வல்லுனரின் திறமைக்கும் கலை நயத்திற்கும் விடப் பட்ட சவாலாகவே இருக்கின்றன.
- மூன்று வகையிலான கல்வி முறைகள் செயல் பட்டன
- பெண்கள் நல்ல நிலையில் இருந்து வந்தனர்
- அரிசிதான் முதன்மையான வியாபார தானியமானது
- காசுகள் செம்பு வெள்ளி தங்க உலோகங்களில் வார்க்கப் பட்டன.
- திருமண சடங்குகள் ஆரிய முறையில் மாறியதால் சங்ககால வழக்கிலிருந்து மாற்றம் தென்பட்டது.
- உள் நாட்டு வாணிபம் அயல் நாட்டு வாணிபம் முறையே நல்ல முறையில் நடத்தப் பட்டன
- பல்லவர் ஆட்சியில் பலதுறை முன்னேற்றங்கள் காணப் படுகின்றன.
- பல்லவர்களின் கலை இயல் இசை நாடகம் ஓவியம் சிற்பங்கள் கோவில்கள் சுவர்ச் சித்திரங்கள் அனைத்தும் வரலாற்று விந்தைகள். சங்க காலத்தைக் காட்டிலும் இலக்கியங்களும் தோன்றி முன்னேறின.
- கட்டிடம் கட்டுமானத் தொழில் நுட்பம் இவை பல்லவர்களின் கொடுகை.
- சமஸ்கிருதம் தமிழ் மற்றும் பிராக்கிருதம் மொழிகள் நல்ல வளர்ச்சி பெற்றன. பல்லவர்களின் தமிழ் ஆர்வம் பல நல்ல இலக்கியங்களைத் தோற்றுவித்தது.

## 6.7 சுய பரிசோதனை கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

குறிப்பு

### குறுகிய விடைகளுக்கான வினாக்கள்

1. பல்லவர்களின் தோற்றம் குறித்து சிறு குறிப்பு வரைக
2. சமூக பழக்க வழக்கங்கள் குறித்து உரைக்கவும்
3. பல்லவர் கால பொருளாதாரம் சார்ந்த தொழில்கள் யாவை?
4. நீர்ப்பாசனம் எவ்வாறு இருந்தது?
5. வாணிபம் குறித்து குறிப்பு வரைக
6. சிறு குறிப்பு வரைக: சமணர் பள்ளி
   - இந்துக்கள் பாடசாலை
   - பௌத்த விகாரம்

### விரிவான விடைகளுக்கான வினாக்கள்

1. பல்லவர் காலத்தில் பிராம்மணர்களுடைய நிலை என்ன?
2. பெண்களின் நிலை எவ்வாறு இருந்தது? விளக்கவும்
3. கலை மற்றும் கட்டுமானத் தொழில் நுட்பம் குறித்து விளக்க.
4. பல்லவர் கால நிர்வாக முறைகள் எவ்வாறு இருந்தன?



ncs_t.indb 96 3/1/2019 8:35:33 AM

# அலகு 7 பக்தி இயக்கம்

**குறிப்பு**

## அமைப்பு

7.0 அறிமுகம்
7.1 நோக்கங்கள்
7.2 பக்தி இயக்கத்தின் தோற்றம்
7.3 பக்தி இயக்கத்தின் காரணிகள்
7.4 சைவக் குரவர்கள் (பெரியோர்கள்)
7.5 63 நாயன்மார்கள்
7.6 அப்பர்
7.7 சம்பந்தர் (திருஞானசம்பந்தர்)
7.8 சுந்தரர்
7.9 மாணிக்கவாசகர்
7.10 தேவாரம்
7.11 திருவாசகம்
7.12 உரைச் சுருக்கம்
7.13 முக்கிய சொற்கள்

## 7.0 அறிமுகம்

பக்தி எனும் சொல் முக்திக்கான பாதையைக் குறிக்கிறது. சொல்லிலக்கியத்தின் படி பக்தி என்னும் சொல் பஜ் என்ற சமஸ்கிருத மூலச் சொல்லிலிருந்து உதயமானது-இது ‘சொல்ல வேண்டி’ என்பதையும் ‘மரியாதையுடன் அன்பு செலுத்த’ என்ற உட் கருத்தையும் கொண்டது. பக்தி ஒரு தத்துவமாக ஒரு அணியாக மக்களின் தினசரி வாழ்க்கையில் ஊடுருவி நாளடைவில் ஒரு மாபெரும் இயக்கமாக 7ஆம் நூற்றாண்டு முதல் 10ஆம் நூற்றாண்டு வரையில் பரிணமித்தது.

பண்டைய காலத்தில் முதலாம் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற இந்தியப் பெரு நூல்களான ஸ்வேதாஸ்வதாரா உபநிஷத்- கதா உபநிஷத் மற்றும் பகவத் கீதை போன்றவற்றில் பக்தி என்பது சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த அலகில் நீங்கள் பக்தி இயக்கம் குறித்தும் அதன் அரசியல் ஆதரவு இடைச் செருகல்களின் பரிமாணங்கள் குறித்தும் கலாச்சார மற்றும் பொருளாதார நிலைகளினால் இயக்கத்திற்குக் கிடைத்த அனுகூலங்கள்- பிராம்மணத் தத்துவம் பௌத்த தத்துவம் சமண தத்துவம்- இவற்றிற்கிடையிலான ஏராளமான படையெடுப்புக்கள் போர்கள் குறித்தும் அறிந்துகொள்ளலாம். இதைத் தவிர இந்த பக்தி இயக்கத்தின் பிறப்பு மற்றும் அதற்கான காரணிகளையும் அறிந்து கொள்ளலாம்.



ncs_t.indb 97 3/1/2019 8:35:33 AM

## 7.1 நோக்கங்கள்

இந்த அலகைப் படித்ததும் உங்களால்

**குறிப்பு**

- பக்தி இயக்கத்தின் தோற்றத்தைப்பற்றி விவரிக்க இயலும்
- இந்த இயக்கம் ஆரம்பமாகக் காரணிகள் என்னென்ன என்பவற்றை விளக்கலாம்
- சைவ மதத்தின் உதயம்- நாயன்மார்கள்-அப்பர்-சம்பந்தர்-சுந்தரர் மற்றும் மாணிக்கவாசகர்- தேவாரம்-திருவாசகம் இவற்றைக்குறித்தும் விவரிக்க இயலும்

## 7.2 பக்தி இயக்கத்தின் தோற்றம்

ஆன்மீக ஈடுபாடுகளின் பக்திப் பரிமாணங்களும் வழிபாட்டு முறைகளும் தென் இந்தியாவில் 8ஆம் நூற்றாண்டில் தோன்றி வட இந்தியாவை நோக்கிப் பயணித்தது எனலாம். 15ஆம் நூற்றாண்டில் இந்த பக்தி இயக்கம் வட இந்தியா மற்றும் கிழக்கு இந்தியாவில் முழுதும் பல்கிப் பெருகியது என்று சொல்லப் படுகிறது. 15 முதல் 17ஆம் நூற்றாண்டில் இந்த பக்தி இயக்கம் தன் சிகரத்தை எட்டிப் பிடித்தது.

இந்த இயக்கமானது வட்டார அளவில் பல்வேறு கடவுள்களையும் பெண் தெய்வங்களையும் முன் நிறுத்தி முனிவர்புலவர்களால் ஊக்குவிக்கப்பட்டு அத்வைதம் மற்றும் த்வைதம் இந்த சித்தாந்தங்களை வேதாந்தமாகப் பரப்பி வந்ததனால் சிறப்புப் பெற்றது. சைவம் வைணவம் என்ற இரண்டு சாரார்களும் இந்து மதத்தை மேன்மைப்படுத்தினர்.

சமுதாய மாற்றத்தின் தூண்டுகோலாக விளங்கிய இந்த பக்தி இயக்கம் சாதி-மற்றும் ஆண் பெண் பாகுபாடின்றி தனிமனித நெறியாக உருவெடுத்தது.

அறிஞர்கள் இந்த இயக்கத்தை ஒரு போராட்டமாகவோ அல்லது புரட்சியாகவோ கருதாமல் இதை ஒரு மறுமலர்ச்சி என்றே கருதுகின்றனர். அவர்கள் கருத்தின்படி இந்த இயக்கம் தொன்மையான வேதமதக் கோட்பாடுகளை சீர்தூக்கிப் பார்த்து நிலைநிறுத்தியதுமல்லாமல் சீரமைத்து ஒரு பக்தி நெறிமுறையாக மாற்றியமைத்தது எனலாம்.

இது தெற்கே(தமிழ் நாடு- கேரளம் சேர்ந்த பகுதி) தோன்றி வடக்கிலும் கிழக்கிலுமாக பல்கிப் பரவியது குறிப்பிடத்தக்கது.

## 7.3 பக்தி இயக்கத்தின் காரணிகள்

சங்க காலத்தில் இருந்த சமய நிலை களப்பிரர் காலத்தில் காணப்படவில்லை. இந்து மதத்தின் வீழ்ச்சியாகக் கருதப்பட்ட இருண்ட காலம்தான் களப்பிரர் ஆட்சி. இங்கே சமணமும் பௌத்தமும் ஆதரிக்கப்பட்டன.

குறிப்பு

- இந்து மதம் சங்க காலத்தில் உன்னத நிலையில் தலை நிமிர்ந்து நின்றது. களப்பிரர் காலம் தொட்டு இந்தக் கௌரவம் மற்றும் புகழ் மறையத் தொடங்கி வீழ்ச்சிக்கான அறிகுறிகள் தென்பட்டன. மாற்று மதத்தினருக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் இந்து மதத்தை வீழ்த்தின.
- ஒடுக்கப்பட்ட காரணத்தால் இந்து மதம் ஒரு விடியலை எதிர் நோக்கியும் வளரவும் பரவவும் ஒரு வாய்ப்பை எதிர் நோக்கியும் காத்திருந்தது. இதனால் இந்து மதமும் பிராம்மணீயமும் மறு வாழ்வை எதிர் நோக்கிக் கொண்டிருந்தன.
- 7ஆம் நூற்றாண்டிலிருந்து 10ஆம் நூற்றாண்டின் இடையே வட்டாரங்களில் சிறு அளவில் மனித நம்பிக்கைகளின் இணைப்புப் பாலமாக வழங்கி வந்த பக்தி நெறி நாளடைவில் ஒரு புனித இயக்கமாக மாறி பக்தர்களை ஆட்கொண்டது. பக்தி என்பது ஆன்மீக முறையில் இறைவனிடம் முக்தி வேண்டி சரணாகதி அடைவது என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்ட கோட்பாடு. களப்பிரர்களுக்குப் பிறகு இந்து மதத்தினர் குறிப்பாக பிராம்மணர்கள் பக்தியை வாழ்வாதாரமாக எண்ணி உணர்ந்து அதை உன்னத நிலைக்குக் கொண்டு செல்வதை மிகவும் அவசரத் தேவையாகக் கருதினர்.
- மூட நம்பிக்கைகளிலிருந்து தொடங்கி ஒரு வாழ்வு நெறியாக உருவெடுத்து முக்திக்காக இறைவனிடம் சரண் அடைய ஏற்பட்ட ஒரு சமயக் கோட்பாடானது இந்த பக்தி இயக்கம். இது கானகங்களில் சென்று துறவறம் ஏற்காத அன்றாட மாந்தர்களின் வாழ்க்கை முறையிலும் கிடைக்கக் கூடிய ஒரு இறையருள் எனப் புரியலானது.
- இந்த இயக்கத்தில் இயக்கக் கொள்கைகளைப் பரப்பியவரும் அதைப்பின்பற்றுபவரும் சேர்ந்து பங்கெடுத்தனர் மற்றும் பங்களித்தனர். தமிழ் நாட்டில் முதல் முறையாக சமூக வாழ்வில் ஊடுருவிப் பரவிய பக்தி மார்க்கம் அறிஞர்களின் கூற்றுப்படி ஒரு புரட்சியாகும். சிலர் இந்த சமூக மாற்றத்தை மறு மலர்ச்சி என்று கருதுகின்றனர்.
- சிறப்பு மிக்க முனிவர்-புலவர்களின் தலைமையில் ஒருங்கிணைந்து கொண்டு செல்லப்பட்ட இந்த இயக்கமானது புகழின் உச்சத்தை 10ஆம் நூற்றாண்டில் பெற்றது எனலாம். அதன் பின்னர் சிறிது சிறிதாக இந்த இயக்கம் வேகமிழந்தது.

  வெறும் சமய வெளிப்பாடாக இருந்து ஒரு மாபெரும் இயக்கமாக உருமாறிய இந்த பக்தி இயக்கத்தின் பலவித வளர்ச்சி நிலைகளை ஆராய்வோமாக.

1. களப்பிரர்களின் காலத்தில் வீழ்ச்சி அடைந்த பிராம்மணத்துவம்: பக்தி இயக்கத்தை ஒரு பிராம்மண அல்லது பௌத்த சமய சம்பிரதாயமாகக் கருதினால் அதில் வரலாற்று மற்றும் அரசியல் பின்னணி காணப்பட்டது என்ற ஐயப்பாடு எழுகிறது.வரலாற்று அறிஞர்கள் பிராம்மணத்துவத்தின் எதிர்ப்பாகக் கருதப்பட்ட சமணம் களப்பிரர் காலத்தில் உச்ச நிலையை

குறிப்பு

அடைந்தது என்பதனால் களப்பிரர் காலத்தை தமிழகத்தின் இருண்ட காலம் என்று அவர்கள் கொண்டனரோ என்ற ஐயப்பாடும் எழுகிறது. பிராம்மணர்கள் உச்ச நிலையில் இருக்கும் போது சேர சோழ பாண்டியரின் சாசனங்கள் பிரம்மதேயம் என்ற பெயரில் நிலங்களும் கோவில்களுக்கான சொத்துக்களும் தானமாக வழங்கப்பட்டன. களப்பிரர் காலத்தில் இவை நிறுத்தப் பட்டன. அது மட்டுமல்லாது பிராம்மணர்கள் அதிக அளவில் ஒடுக்கப்பட்டு கொல்லப்பட்டனர். பிரம்மதேயம் தடைசெய்யப்பட்டது. கோவில்களை நடத்த கிராம மக்களிடம வரி வசூல் செய்யப் பட்டது.

2. சமணம் மற்றும் பௌத்த மத நம்பிக்கைகளின் எழுச்சி: களப்பிரர் கால அடக்கு முறைகளின் வாயிலாக பிராமணத்துவத்தின் வளர்ச்சி தடை செய்யப்பட்ட அதே நேரத்தில் சமணம் மற்றும் பௌத்தம் தழைத்து ஓங்க வழிவகை செய்யப்பட்டது. பிராம்மணர்கள் ஒழிக்கப் பட்டு அவர்தம் அந்தஸ்தும் தகர்க்கப்பட்டது. பிராம்மணர்களும் அரச குடும்பத்தினரும் பெருவாரியாக் களப்பிரர்களால் துன்புறுத்தப் பட்டனர் இதனால் சோழ பாண்டிய நாட்டு மக்கள் களப்பிரர்களை 'கொடூர மனிதர்கள்' என்று சித்தரித்தனர். ஆயினும் களப்பிரர் கால சமணம் பெருமளவிலும் பௌத்தம் குறுகிய அளவிலும் வளர்ச்சி பெற்றது.

3. இந்து மதம் உயிர்த்து எழுதல் மற்றும் நிலைத்து நிற்றலின் அவசியம்: பிராம்மணர்களின் அந்தஸ்தும் ஆஸ்தியும் தரைமட்டமாக்கப்பட்டதால் இந்து மதத்தின் வளர்ச்சி குன்றியது. வேறு இறையுணர்வின் அவசியம் தோன்றியது. களப்பிரர் கால மாற்றத்தால் சமூகத்தில் உயர்சாதியின் உச்சாணிக் கொம்பில் அமர்ந்து கொண்டு பணபலத்தால் சமூகத்தில் செங்கோலோச்சியும் கீழ் சாதியினரைக் கொடுமை செய்தும் வந்த பிராம்மணர்கள் தம் உயிருக்கும் உடமைக்கும் போராட வேண்டிய ஒரு நிலைமை உண்டானது. இந்தக் கொடுமைகளின் பின்னணியைப் பயன் படுத்தித்தான் களப்பிரர்கள் பிராம்மணர்களை வதைத்து அரசர்களை அரியணைகளிலிருந்து வீழ்த்தி அவர்தம் ஆட்சிதனை அமைக்க ஏதுவானது என்று கருதலாம்.

4. களப்பிரரின் வீழ்ச்சிகால இலக்கியம் மற்றும் கலாச்சார நிலை: களப்பிரர் காலத்தில் ஏற்பட்ட பிராம்மணர்களின் வீழ்ச்சியும் இந்து மதத்தின் தாழ்ந்த நிலையும் ஏற்படக் காரணம் கலாச்சார மாற்றங்கள் தாம் எனலாம். சமணம் மற்றும் பௌத்தம் பெரிய குடைகளின் கீழ் பவனி வந்த காலம் தோன்றியது. ஆங்காங்கே இலக்கிய வளர்ச்சியும் காணப்பட்டதால் சமுதாய முன்னேற்றம் மற்றும் சமுதாய மறுமலர்ச்சியின் ஆரம்ப காலமாகவும் இதைக் கருதலாம். இதனைத் தொடர்ந்து வந்த பக்தி மார்க்கத்தின் தோற்றம்தான் பக்தி இயக்கத்தின் தூண்டுகோலாக விளங்கியது என்று கருதப்படுகிறது.

5. பல்லவர்களின் சமய நம்பிக்கைகளும் கலை மற்றும் கலாச்சார முன்னேற்றத்திற்கான அவர்களின் ஆதரவும்: இந்து மதத்தின்



ncs_t.indb 100 3/1/2019 8:35:33 AM

**குறிப்பு**

உயிர்ப்பித்தலும் அதன் மறுமலர்ச்சிக்கான கட்டாயத்தையும் சமூகம் உணரத்தொடங்கிய காலம் அது. பல்லவர்கள் இந்து மதத்தின் வளர்ச்சிக்கு உதவிய அதே நேரத்தில் சமணம் மற்றும் பௌத்த மதங்களின் ஆதிக்கத்தைக் குறைத்தனர். சைவமும் வைணவமும் தத்தம் உரிமைக்காக தனித்தனியாகப் போராட வேண்டிய ஒரு சூழலில் பல்லவ மன்னர்களின் ஆதரவுடன் எழுச்சி பெறவும் வளர்ச்சியடையவும் சந்தர்ப்பங்கள் கூடிவந்தன-நாடிவந்தன. சைவ சமயம் எழுச்சி பெற்ற காலத்தில் பல்லவர்கள் தம் இலச்சினையாக நந்தியை அங்கீகரித்தனர். சிவபெருமானின் வாகனமான நந்தி பல்லவர்களின் நாணயங்களிலும் முத்திரையாகக் கொள்ளப் பெற்றது. சிவபெருமானின் கைகளில் காணப்படும் கட்டங்கம் என்ற சிவப்படைக்கலம் தங்களின் சமய அடையாளமாகக் கொண்டனர் பல்லவர்கள். இதனால் அவர்கள் சைவ சமயத்தின் காவலர்கள் என்று வரலாறு ஒப்புக் கொள்கிறது.

6. புதிய பக்தி மார்க்கத்தின் வழிகாட்டிகளாக முனிவர்புலவர்கள்

   கானகம் செல்லாமலேயே சராசரி மாந்தர்கள் தவமின்றி முக்தி அடைய வழி கோலிய அன்பு மற்றும் இறை நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட பக்தி மார்க்கம் எல்லாரையும் கவரச் செய்தவர்கள்தான் முனிவர்புலவர்கள்.

   ஆழ்வார்களும் நாயன்மார்களும் இதில் மிக முக்கியமான பங்கு வகித்தனர். இந்த முனிவர்கள் ஆசார பிராம்மணர்களின் ஆதிக்கத்தை எதிர்த்ததால் சாதி மற்றும் ஆண் பெண் இன பேதமின்றி அனைவரும் பக்தி மார்க்கத்தில் இணைய ஏதுவானது. 7ஆம் நூற்றாண்டு முதல் 10ஆம் நூற்றாண்டு வரையிலான கால கட்டத்தில் இந்த முனிவர்கள் சமூகத்தினுள் பிரவேசித்து பக்தி மார்க்கத்தைத் தனிப்பட்ட முறைகளில் உபதேசித்து மக்களை ஈர்த்து உணரச் செய்தவர்களாவர். இதன் மூலம் பாமர மக்கள் பக்திப் பிரயோகத்தால் கடவுளிடம் சரணாகதி அடையும் தத்துவம் வளர்ச்சி பெற்றது. வாழ்க்கை நெறி உறுதிபட்டது. இதனால் ஆண் பெண் பேதம் கீழ்சாதி மேல்சாதி பேதம் போன்ற கடந்த கால சமய வழிபாடுக்கான நிராகரிப்புக்கள் மாறின. சில ஆழ்வார்களும் நாயன்மார்களும் கீழ் சாதியிலிருந்து வந்தவர்களாகவும் சிலர் பெண்களாகவும் இருந்த காரணத்தினால் வேற்றுமைகள் குறைந்து ஒற்றுமை அதிகரித்தது. இந்து மதம் வேரூன்றித்தழைத்தது. சமணமும் பௌத்தமும் தங்கள் மேன்மையையும் ஆதிக்கத்தையும் பல்லவர் ஆட்சிக்காலத்தில் இழந்து விட்டன.

7. பாமர மக்கள் தத்தம் கடவுளரை வணங்கி சுய அறிதலுடன் முக்தி வேண்டுதலை ஊக்குவித்தலில் இலக்கியங்களின் தொண்டு: சங்க காலத்திலும் அதைத் தொடர்ந்து வந்த இலக்கிய வெளிப்பாடுகள் அற நெறி தனி மனித ஒழுக்கம் சமூக நீதி போன்ற கொள்கைகள் பாடல்களாகவும் நாடகங்களாகவும் கவிதைகளாகவும் படித்தவர்களிடையே



ncs_t.indb 101 3/1/2019 8:35:33 AM

பரவியதால் சமுதாயப் பண்பாட்டிலும் சமூக மாற்றங்களிலும் மறுமலர்ச்சி ஏற்பட ஒரு முன்னோடியாகச் செயல் பட்டது.

குறிப்பு

## 7.4 சைவ முனிவர்கள்

சிவபெருமானை வணங்குபவர்கள் சைவர்களாவர். இவர்களில் பாடல்களை இயற்றிப் பாடி பாமர மக்களை பக்திப் பரவசமைடையச் செய்த வந்த முனிவர்களை முனிவர் புலவர்கள் என்றும் அழைக்கின்றனர். இதன்மூலம் பாமர மக்களுக்கும் தவ வாழ்க்கை மேற்கொள்ளாமலேயே இறைவனைப் பிரார்த்தித்து முக்தி வரம் வேண்ட இயலும் என்பதைப் புரிய வைத்தனர். இந்த முனிவர்கள் மக்களிடையே வசித்து அவர்களுக்கு இறையறிவை ஊட்டி வந்ததால் சைவ சமயம் வளர்ந்து நன்மையளித்தது. இன மத பேதமின்றி வழிபாடுமுறைகள் தோற்றுவிக்கப்பட்டன. சமயம் வாழ்க்கையின் ஒரு அங்கமாகக் கருதப்பட்டு வாழ்வின் எல்லா நிலைகளிலும் சமயம் ஒரு முக்கிய பங்கைப் பெற்றிருந்தது. தனி வழிபாடுகள் கோவில வழிபாடுகள் உற்சவங்கள் பண்டிகைகள் போன்ற வளர்ச்சிகளைக் காண முடிந்தது. ஆழ்வார்களும் நாயன்மார்களும் சமஸ்கிருதத்தை விட்டு தமிழை உபயோகித்ததால் புரிதல் அதிகமானது. இதனால் மக்களிடையே வரவேற்பும் அதிகமானது. சொந்த மண்ணின் மணத்தினால் மக்கள் கவரப் பட்டனர். மதம் பல்கிப் பரவியது.

## 7.5 அறுபத்து மூன்று நாயன்மார்கள்

சைவ நெறிமுறைகளில் 63 நாயன்மார்களின் தொண்டு மிகச் சிறப்பானது எனலாம். இவர்கள் ஈசனை முழுமுதற்கடவுளாக வணங்கினர். இவர்கள் சிவபெருமானின் சமய நெறிமுறைகளையும் அதன் வழிபாட்டு முறைகளையும் செவ்வனே பின் தொடர்ந்தனர். அதனைப் பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் பாடல்கள் மூலமும் தமிழ் மொழியில் தனித் தனியாகப் போதித்தும் பக்திப் பரவசமடைய வைத்தனர்.

அறுபத்து மூன்று நாயன்மார்கள்:

1. அதிபத்தர்
2. அப்பூதியடிகள்
3. அமர்நீதி நாயனார்
4. அரிவட்டாயர்
5. ஆனாய நாயனார்
6. இசைஞானியார்
7. இடங்கழி நாயனார்
8. இயற்பகை நாயனார்
9. இளையான்குடிமாறார்



ncs_t.indb 102 3/1/2019 8:35:34 AM

குறிப்பு

10. உருத்திர பசுபதி நாயனார்
11. எறிபத்த நாயனார்
12. ஏயர்கோன் கலிகாமர்
13. ஏனாதி நாதர்
14. ஐயடிகள் காடவர்கோன்
15. கண நாதர்
16. கணம்புல்லர்
17. கண்ணப்பர்
18. கலிய நாயனார்
19. கழறிற்றறிவார்
20. கழற்சிங்கர்
21. காரி நாயனார்
22. காரைக்கால் அம்மையார்
23. குங்கிலியகலையனார்
24. குலச்சிறையார்
25. கூற்றுவர்
26. கலிக்கம்ப நாயனார்
27. கோச்செங்கட் சோழன்
28. கோட்புலி நாயனார்
29. சடைய நாயனார்
30. சண்டேசுவர நாயனார்
31. சக்தி நாயனார்
32. சாக்கியர்
33. சிறப்புலி நாயனார்
34. சிறுதொண்டர்
35. சுந்தரமூர்த்தி நாயனார்
36. செருத்துணை நாயனார்
37. சோமசிமாறர்
38. தண்டியடிகள்
39. திருக்குறிப்புத்தொண்டர்
40. திருஞானசம்பந்தமூர்த்தி
41. திருநாவுக்கரசர்
42. திருநாளைப்போவார்
43. திருநீலகண்டர்
44. திருநீலகண்ட யாழ்ப்பாணர்



ncs_t.indb 103 3/1/2019 8:35:34 AM

குறிப்பு

45. திருநீலநக்க நாயனார்
46. திருமூலர்
47. நமிநந்தியடிகள்
48. நரசிங்க முனையர்
49. நின்றசீர் நெடுமாறன்
50. நேச நாயனார்
51. புகழ் சோழன்
52. புகழ்த்துணை நாயனார்
53. பூசலார்
54. பெருமிழலைக் குறும்பர்
55. மங்கையர்க்கரசியார்
56. மானக்கஞ்சாற நாயனார்
57. முருக நாயனார்
58. முனையடுவார் நாயனார்
59. மூர்க்க நாயனார்
60. மூர்த்தி நாயனார்
61. மெய்ப்பொருள் நாயனார்
62. வாயிலார் நாயனார்
63. விறன்மிண்ட நாயனார்

நாயன்மாரில் அப்பர் சம்பந்தர் சுந்தரர் ஆகிய மூவரும் நாயன்மார் வரிசையில் இல்லாத தனியான மாணிக்கவாசகர் ஆகியோரும் முதன்மையானவர்கள். இவர்கள் சைவ சமய குரவர் என்று அழைக்கப் படுகின்றனர். சைவத் திருமுறைகள் என்று அழைக்கப்படும் 12 திருமுறைகளின் தொகுப்பில் முதல் மூன்று திருஞானசம்பந்தராலும் 4வது 5வது 6வது திருநாவுக்கரசராலும் 7வது சுந்தரராலும் பாடப்பெற்றவையாகும்.

நாயன்மார்களில் மூவர் பெண்களாவர். காரைக்கால் அம்மையார் மங்கையர்க்கரசியார் மற்றும் இசைஞானியார் என்பவர்களாகும்

நாயன்மார்கள் மரபு அடிப்படையில் பார்த்தால் ஆதி சைவர் வேளாளர் அந்தணர் வணிகர் அரசர் ஆகியவர்களாய் இருந்து வந்தனர்.

நாடுகளின் அடிப்படையில் பார்த்தால் இவர்கள் சேர சோழ பாண்டிய நாடு மற்றும் தொண்டை நாடு நடு நாடு மலை நாடு வட நாடு போன்ற நாடுகளைச் சேர்ந்தவராவர்.



ncs_t.indb 104 3/1/2019 8:35:34 AM

நாயன்மார்கள் இயற்றிய சில பாடல்களின் முதல் வரிகள் சிவபெருமானாலேயே அருளிக்கப்பட்டு தொடங்கி வைக்கப் பட்டது என்ற ஐதீகத்தினால் இவை சைவ மறைகளில் அதிமுக்கிய இடத்தை வகிக்கிறது.

தேவாரம் திருவாசகம் என்பவை இன்றளவும் சிவபெருமானின் சன்னதிகளில் ஓதப்படும் தமிழ் வேத மந்திர உச்சாடனங்களாகும். சமஸ்கிருத சுலோகங்களும் உச்சரிக்கப் படுகின்றன. இருப்பினும் தேவாரம் மற்றும் திருவாசகம் இரண்டுமில்லாமல் சிவபெருமானுக்குத் தமிழகத்தில் பூஜைகள் இல்லை எனலாம்.

நாயன்மார்களின் தொண்டு பக்தி இயக்கத்தின் முதுகெலும்பு என்று கூறினால் அது மிகை ஆகாது. நாயன்மார்களின் தொண்டு பக்தி இயக்கம் சிகரத்தை எட்டிப் பிடிக்க இறையருளால் உண்டான தூண்டுகோலாகும்.

## 7.6 அப்பர் (அப்பர் அடிகள்)

- அப்பர் அடிகள் அவ்வாறு அழைக்கப்பட்டாலும் அவருடைய இயற்பெயர் திருநாவுக்கரசர் ஆகும். திருவாரூரில் ஒரு வேளாள குடும்பத்தில் பிறந்தவராவார்.
- இவர் ஆரம்பத்தில் சமணராக இருந்தவர். சகோதரி திலகவதியின் அறிவுரையின் மேல் சைவத்தைத் தழுவினார்.
- பல்லவ மாமன்னன் மகேந்திரவர்மனை ஈர்த்து அவனை சைவ மதத்திற்கு மாற்றியவர் அப்பர் அடிகள்.
- இந்த மத மாற்றம் சரித்திரப் புகழ் பெற்றது. இதனால் வேறு பல சமய மாற்றங்களும் நிகழ்ந்தன எனலாம்.
- இவர் சிவபெருமான் மீது பெருமை கொண்டு 311 துதிப்பாடல்களை இயற்றினார்
- இவர் 81 வயது வரையில் வாழ்ந்ததாகக் கொள்ளப் படுகிறது.

### அவருடைய போதனைகள்:

1. உலகத்தில் அனைத்தும் சிவ சக்தியின் வடிவங்கள். எல்லா உயிரினங்களையும் சிவ சக்தியின் வடிவங்களாகப் பார்க்கவேண்டும்.
2. இறைவன் நிறமில்லாதவன்
3. கடவுளை ஒருவன் எழுத்துக்களால் விளக்கிக் கூற இயலாது
4. மகேசன் சேவை ஒன்றுதான் முக்திக்கு சிறந்த வழியாகும்

## 7.7 திருஞானசம்பந்தர் (சம்பந்தர்)

சீர்காழியில் ஒரு பிராம்மண குலத்தில் பிறந்த சம்பந்தர் திருநாவுக்கரசருடன் சைவ சித்தாந்தத்தைப் போதிப்பதில் ஒரு சேர தொண்டாற்றினார்.

குறிப்பு

எல்லா புண்ணிய தலங்களுக்கும் சென்று அங்கே பக்திப் பாடல்களைப் பாடிவந்தார்.சுமார் 16000 பாடல்களை அவர் இயற்றிப் பாடியிருந்தாலும் நம்மிடம் வந்தடைந்தவை 384 பாடல்கள் மட்டும்தான் என்று வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். சமண மதத்தினருடன் பலமுறை சொற்போர்களில் வாதிட்டு வெற்றி பெற்றது இவருடைய பெருமை எனலாம். இந்த வாதங்கள் எல்லாம் பின்னர் சமணர்களின் சித்தாந்தின் மேலிருந்த மக்களின் நம்பிக்கையைத் தகர்த்தது என்பர்.

இவர் பாண்டிய நாட்டை அடைந்து அங்கே மன்னன் மாறவர்மன் அரிகேசரியை (கி.பி640-670) சைவ சித்தாந்தத்தை ஏற்றுக்கொள்ளச் செய்தார். இதனால் பாண்டிய நாட்டிலும் சைவ சித்தாந்தம் பெருமளவில் வளர்ச்சியடைந்தது.

## 7.8 சுந்தரர் (சுந்தரமூர்த்தி நாயனார்)

திருநாவலூர் எனப்படும் தென் ஆர்காடு மாவட்ட நகரில் பிறந்த இவர் ஆதி சைவ பிராம்மண குலத்தைச் சேர்ந்தவர். சைவ சமய நெறி முறைகளில் ஆழ்ந்த பற்றும் பக்தியும் பெற்ற குடும்பம் அது.

இவர் 8ஆம் நூற்றாண்டில் பிரபலமடைந்தார். 18ஆண்டுகளே வாழ்ந்தார் எனப்படுகிறது. சைவக் குரவர்களில் ஒருவராக இருக்கும் பேறு பெற்றார். தேவாரம் பாடல்களை இயற்றி பல்வேறு புண்ணிய தலங்களில் சென்று இறைவனின் புகழ் பாடிய பெருமை இவருக்கு உண்டு. இந்தப் பாடல்கள் தமிழில்  நூலாகத் தொகுக்கப்பட்டு இன்றளவும் ஈசனின் துதிப்பாடல்களாகத் தமிழ் நாட்டுக் கோவில்களில் இசைக்கப் படுகின்றது. இவர் ஈசனிடம் ஒரு நட்பு நிலையில் இருந்து கொண்டு அவரிடம் பல்வேறு கோரிக்கைகளை விடுப்பதும் அவற்றை அவன் நிறைவேற்றிக் கொடுப்பதுமாக இருந்தது என ஐதீகம் சொல்லப்படுகிறது. பெரும்பாலானவை மக்களின் நன்மைக்காகவே என்றும் கூறப்படுகிறது.

ஈசன் சுந்தரர் மேலும் திருவிளையாடலை நிகழ்த்தினார் என்று நம்பப்படுகிறது. அவருடைய திருமணத்தின்போது அங்கே வந்த முதியவர் ஒருவர் சுந்தரர் என் அடிமை என்று கூறினார். சுந்தரர் அவரைத் தெரியாது என்று வாதிட்டாலும் அனைவரின் முன்னிலையில் முதியவர் அவரை அழைத்துச் சென்றார். சுந்தரர் அவரை ‘பித்தா’ என்று கடுமையாகக் கூறினாலும் இறுதியில் அவர் திருவெண்ணை நல்லூர் கோவிலில் சுந்தரரின் முன்னேயே மாயமானார். சுந்தரருக்கு எல்லாம் விளங்கிய போது ஈசனிடம் மன்னிப்புக் கோரினார். ஈசன் அவரை ‘பித்தா’ என்ற சொல் கொண்டு ஒரு பாடல் பாடக் கேட்டார். (அதுதான் ‘பித்தா பிறைசூடி’ பாடல்) இந்த நாயனார் ‘வன் தொண்டர்’ (ஆர்ப்பாட்டத் தொண்டர்) எனப்படுகிறார். பாடல்களில் இறைவனை நையாண்டி செய்வது போலப் பாவித்துப் பெருமை செய்தார்

என்பது நிதர்சனம். இவர் பல்லவ மன்னர் இரண்டாம் நரசிம்ம வர்மனின் காலத்தில் வாழ்ந்ததாகச் சரித்திரம் கூறுகிறது.

குறிப்பு

இவருடைய போதனைகள்:

1. சாதிப் பிரிவினைகளை முற்றிலும் எதிர்த்து வந்தார்.
2. கடவுள் நாம் பிரார்த்தனை செய்து கேட்ட (விரும்பிய) வரத்தை நல்குவார் என்பது இவருடைய நம்பிக்கையாக இருந்தது.
3. இவருடைய வழிபாட்டு முறையில் கடவுளின் துதி தமிழில் இயற்றப் பெற்று பாடல்கள் மூலமாக அனைத்து மக்களைச் சென்றடைந்து அவர்கள் அதனை ஏற்கும் வண்ணம் இருந்தது.
4. சிவபெருமான் அகரமமைத்துக் கொடுத்த சில பாடல்வரிகளும் சுந்தரரின் தொடக்க வரிகளாக இருந்தன என்றும் கூறப் படுகிறது.
5. சுந்தரர் இயற்றிப் பாடிய பாடல்களை சிவபெருமான் பெரிதும் விரும்பிப் போற்றினார் என்பது சரித்திரக் கூற்று.
6. சுந்தரர் விடுத்த எல்லா பொது மக்கள் சார்ந்த கோரிக்கைகளும் ஈசனால் ஏற்றுக் கொள்ளப் பட்டு நிறைவேற்றிவைக்கப்பட்டன என்றும் கூறப் படுகிறது.

சுந்தரரின் பாடல்கள் எளிமையாகவும் இனிமையாகவும் இருந்ததால் ஈசன் அவரைப் பல சோதனைகளுக்கு உள்ளாக்கி மேலும் ஈசனைப் போற்றும் பாடல்களை இயற்றப் பணித்தார் என்பது அனைவரின் நம்பிக்கையுமாகும்.

## 7.9 மாணிக்கவாசகர்

இவர் நாயன்மார்களாகச் சேர்க்கப் படாவிட்டாலும் சைவ சமயக் குரவர்கள் நால்வரில் ஒருவராக நிலைத்து நிற்கிறார்.

இவர் மதுரையின் அருகேயுள்ள திருவாதவூர் என்ற கிராமத்தில் ஆசாரமான பிராம்மண குலத்தில் அவதரித்தார். இவருடைய தந்தை பாண்டிய மன்னரின் ஆலோசகராக இருந்து வந்தார். இவரும் அரசனுக்கு மந்திரியானார்.

அரிமாத்தன பாண்டியனால் அமைச்சராக்கப்பட்ட மாணிக்கவாசகர் அரேபியாவிலிருந்து வந்த குதிரை வியாபாரிகளிடமிருந்து 10000 குதிரைகளை வாங்குவதற்காக அனுப்பப்பட்டார். அப்போது இவர் அந்தப் பணத்தைச் செலவழித்து திருப்பெருந்துரை என்ற இடத்தில் கோவில் ஒன்றைக் கட்டினார் என்பது வரலாறு.

இவர் திருவாசகம் மற்றும் திருச்சிற்றம்பலக்கோவை என்ற நூல்களை இயற்றினார்.

மாணிக்கவாசகர் 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து தமிழ் நாட்டளவில் சைவ சித்தாந்தத்தைப் பரப்பியதில் ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்ந்தார் என்பர்.



ncs_t.indb 107 3/1/2019 8:35:34 AM

குறிப்பு

## 7.10 தேவாரம்- (பன்னிரு திருமுறை)

திருமுறை என்பது சைவ சித்தாந்தங்களின் முதல் நூல் எனலாம். அது அடிப்படை சமயக் கோட்பாடுகளையும் இலக்கணங்களையும் வரைமுறைப்படுத்திக்காட்டுகிறது.இப் பாடல்கள் அனைத்தும் வேதங்களில் உள்ள அருமையான கருத்துக்களை உள்ளடக்கியுள்ளன. இவை சைவ முனிவர்புலவர்களால் ஆழ்ந்த சமய அறிவை வெளிப்படுத்தி உண்மையை உணர வேண்டி மனமுருகிப் பாடப் பெற்றவை என்றும் இவை கடவுளை நேரில் கண்ட முனிவர்கள் இயற்றியவை என்றும் கருதப் படுகின்றன.இப்பாடல்களுக்கு நோய் குணமாக்கும் சக்தி உள்ளதாகவும் அறுவை சிகிச்சை இன்றி எலும்பு முறிவுகளைச் சரி செய்வதும் வாய் பேசாத ஒருவர் சிறப்பாகப் பேச முற்பட்டதும் போன்ற பல அற்புதங்ளை நிகழ்த்திக் காட்டியதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

**பன்னிரு திருமுறை** பக்தர்களால் பாடப் பெற்ற 12 ஆகமங்களாகும். தமிழில் பாடப் பெற்ற இவை திருஞானசம்பந்தர் முதலாக சேக்கிழார் வரையிலான 27 பக்தர்கள் பாடியவை ஆகும். இப் பாடல்களில் இன்றைய வாழ்க்கை -- இறப்புக்குப் பின்னர் உண்டான வாழ்க்கை --முக்திக்கான வழி இவை குறித்து விளக்குகின்றன-போதிக்கின்றன. வாழ்க்கையைக் கடைசிவரை இருந்து வளமாக வாழ்ந்து முழுவதையும் அனுபவித்து நலமாக இருப்பதைக் குறித்து இவை போதிக்கின்றன. அருமருந்தான இந்தக் கருத்துச் செறிவுள்ள பாடல்கள் எல்லா பாமர மக்களுக்கும் பொருந்தும்-எல்லா இடங்களுக்கும் எல்லா சந்தர்ப்பங்களுக்கும் ஈடுகொடுத்து பாகுபாடற்ற பலன்களை அள்ளித்தரும் என்று குறிப்பிடப் படுகிறது.

**தேவாரம்** நூல் பன்னிரு திருமுறைகளில் முதன்மையான ஒன்று. சுந்தரர் அப்பர் மற்றும்திரு நாவுக்கரசர் இவர்களால் சிவபெருமானைப் போற்றி இயற்றப் பெற்றன இப் பாடல்கள். சிவாலயங்களில் இன்றளவும் வழிபாட்டு நேரங்களில் இப் பாடல்கள் ஒலித்து வருகின்றன. பாடல்களின் இனிமையாலும் அவற்றில் உள்ள போற்றுதல்களால் சிவபெருமானின் மனதுக்குகந்தவையாக மகிழ்ச்சியடைய வைப்பதாகவும் திருமுறைகள் சிறப்பிடம் பெற்றுள்ளன. தேவாரம் சிவபெருமானின் பெருமைகளைக் குறித்து இயற்றிய பாமாலை எனக் கூறப் படுகிறது.

## 7.11 திருவாசகம் (பன்னிரு திருமுறை)

மாணிக்கவாசகர் எழுதிய திருவாசகம் ஒரு முக்கிய ஆகமமாகும். சிவாலயங்களில் ஒலிக்கும் தமிழ் மறைகளில் மிக முக்கியமானது திருவாசகம் ஆகும். இதன் இசையிலும் இனிமையிலும் சிவபெருமானைக் கவர்ந்து விட்டாரோ மாணிக்கவாசகர் என்ற ஐயப்பாடும் உண்டு.



ncs_t.indb 108 3/1/2019 8:35:34 AM

**குறிப்பு**

திருவாசகம் சிவபெருமானின் திருவருளுக்குட்பட்ட பக்திப் பாடல் தொகுப்பாகும். இதை ஈசனே பாடியதாகவும் கூறப் படுகிறது. இப் பாடல்களை இயற்றித் தொகுத்துப் பாடிய மாணிக்கவாசகர் சைவ சமய குரவர்களான நால்வரில் ஒருவர். நாயன்மாராக அறிவிக்கப்படாத ஒரே குரவர்(ஆசிரியர்) மாணிக்கவாசகர்தான் என்பது திண்ணம்.

51 அலகுகளில் 656 பாடல்களைக் கொண்டது திருவாசகம். அது மிகவும் இனிமையாகவும் அனைவரையும் கவரக்கூடியதாகவும் இருப்பதால் “திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்” என்று எல்லோரும் கருதும் வண்ணம் அதன் புகழ் பரவியுள்ளது.

9ஆம் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற இந்த நூல் திருமுறைகளில் 8 ஆவதாக இடம் பெற்றுள்ளது.

இப் பாடல்கள் ஆவுடையார் கோவில் எனப்படும் திருப்பெருந்துறையிலிருந்து தோன்றியவை என்று கூறப்படுகிறது. இக் கோவில் பாண்டிய அரசன் சைவ மதத்தைத் தழுவிய தலமாகவும் அமைச்சர் மாணிக்கவாசகர் பாண்டிய நாட்டிற்காக 10000 போர்க்குதிரைகளை வாங்குவதற்கான செல்வத்தைச் செலவு செய்து கட்டிய கோவில் தலமாகவும் சிறப்பு பெற்றது.தேவாரமும் திருவாசகமும் அனைத்து சைவக் கோவில் தலங்களிலும் அன்றாடம் இசைக்கப் படுகின்றன.

பக்தி இயக்கம்: தமிழக பக்தி இயக்கத்தின் பின்பலமான முனிவர்-புலவர்கள் சமண மதம் மற்றும் புத்த மதத்தைக் குறித்து அவர்கள் அரசவைகளில் சலுகைகள் கிடைக்கப் பெற்றவர்களாக விளங்கினர் என்று குற்றம் கூறினர். இம்முனிவர்கள் சமண மற்றும் புத்த மத நம்பிக்கையாளர்களைத் தம் சமயக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளச் செய்தாலும் அதற்குள்ளாக இரண்டு மதங்களும் சீர்பட்டும் இறுகிப் போனதாகவும் ஆகிவிட்டன.

இந்த பக்தி இயக்கத்தின் முக்கிய இலக்குகளாக சமணம் மற்றும் பௌத்தம் மாத்திரம் காணப்பட்டதாலும் நாளடைவில் பிராமணர்களின் ஆதிக்கம் கோவில்களில் தொடர்ந்து நடைபெற்று வந்ததாலும் வர்ண பேதமும் சாதி பேதமும் சமூக அமைப்புக்களின் கட்டமைப்புக்களில் தொடர்ந்து காணப்பட்டன. இதன் மூலம் நாமறிவது என்னவென்றால் தென் இந்திய பக்தி இயக்கம் சாதி முறையில் எந்தப் பெரிதளவு மாற்றமும் கொண்டுவந்ததாக சான்றுகள் இல்லை என்றுதான். இதே போல வழிபாடு முறைகளிலும் விக்கிரகங்களை வணங்குதல் வேதங்கள் ஓதுதல் புனிதப் பயணங்கள் செல்லுதல் போன்ற பல நம்பிக்கைகளைப் பொறுத்த மட்டில் மாற்றங்கள் அதிகமில்லை எனலாம்.தென் இந்தியாவின் பக்தி இயக்கம் பிராம்மணீயத்தை இலக்காக நிறுத்தி நடத்தப் படவில்லை என்பதுதான் தெளிவாகிறது. இதைத் தவிர பிராம்மணர்களின் ஆதிக்கம் பெற்ற கோவில்கள்தாம் பக்தி இயக்கம் வெற்றி பெற ஆயுதங்களாகச் செயல்பட்டன.



ncs_t.indb 109 3/1/2019 8:35:34 AM

குறிப்பு

இதன் மூலம் தென் இந்தியாவில் ஏற்பட்ட பக்தி இயக்கமானது சமூகத்தின் ஏற்ற தாழ்வு நிலையைப் பெரிதும் பாதிக்காமல் விட்டதால் எதிர்க்கவேண்டிய சாதிப் பிளவுகள் பிரிவினைகள் ஏற்ற தாழ்வுகள் சமூக அநீதிகள் போன்றவை நலிந்து போகாமல் மேலும் வலிமையடைந்து விட்டன. 10 ஆம் நூற்றாண்டில் உச்சத்தை எட்டிப் பிடித்த இந்த இயக்கம் இறுதியில் ஆசார பிராம்மண சமயத்துடன் கலந்து பட்டது.

இந்தக் குறைபாடுகள் இருப்பினும் தென் இந்தியாவில் தோன்றிய பக்தி இயக்கம் பெருமளவில் பாமர மக்களை ஈர்த்தது. பிராம்மணர்கள் ஏனைய சாதிகளில் இருந்த பாமர சராசரி மனிதரும் வேதங்களை அறிவதிலும் வழிமுறைகளைக் கற்பித்தலிலும் தவமின்றி முக்தியை அடையும் வழியை அடைவதிலும் உண்டான மாறுபட்ட கருத்துக்களை ஏற்றுக் கொள்ள கட்டாயம் ஏற்பட்டது.

இந்த பக்தி இயக்கமானது அமைதிப் புரட்சி எனலாம். இதன் மூலம் எதிர்பார்த்த எல்லா நன்மைகளும் மாற்றங்களும் நிகழவில்லை என்றாலும் இந்து சமயத்தில் ஏற்பட்ட கலாச்சார நிலை மாறுதலால் இன மத வர்க்க பேதங்கள் ஓரளவு கட்டுப்பாட்டிற்குள் வந்தது குறிப்பிடத்தக்கது. பிராம்மணீயத்தின் ஆதிக்கம் குறைவானதும் பாமர மனிதன் முக்தியை நோக்கிப் பயணிக்கத் தொடங்கிப் புனிதம் பெற்றான். அரசர்களும் இந்து மத மேம்பாட்டிற்கான ஆதரவை நல்கினர். கோவில்களைக் எழுப்பினர். இயல் இசை நாடகம் சிற்பக் கலை கட்டிடக் கலை அனைத்திலும் தென் இந்திய மன்னர்கள் சிறந்து விளங்கினர் எனலாம்.

## உங்கள் முன்னேற்றத்தைப் பரிசோதியுங்கள்

1. பக்தி என்னும் சொல் எதைக் குறிக்கிறது?
2. இந்தியாவில் பக்தி இயக்கம் எப்போது தொடங்கியது?
3. களப்பிரர்கள் ஆதரித்த மதங்கள் யாவை? ஏன்?
4. பல்லவர் காலத்தில் எந்த மதங்கள் தம் செல்வாக்கை இழந்தன?
5. சைவர்கள் என்பவர்கள் யார்? அவர்கள் என்ன தொண்டு புரிந்தனர்?
6. சைவ சமயக் குரவர்கள் யார் யார்? பெயர்க்காரணம் கூறுக.
7. மாணிக்கவாசகர் யார்? அவருடைய புகழ் குறித்து வரைக
8. தேவாரம் என்பது யார் எழுதிய நூல்? சிறப்பு என்ன?

## திறன் அடைவிற்கான பரிசோதனைக் கேள்விகளின் விடைகள்

1. பக்தி எனும் சொல் முக்திக்கான பாதையைக் குறிக்கிறது. சொல்லிலக்கியத்தின் படி பக்தி என்னும் சொல் பஜ் என்ற சமஸ்கிருத மூலச் சொல்லிலிருந்து உதயமானது-இது சொல்ல வேண்டி என்பதையும் மரியாதையுடன் அன்பு செலுத்த என்ற உட் கருத்தையும்

கொண்டது. பக்தி என்பது கடவுளிடம் மனதாரச் செலுத்தும் அன்பின் மூலம் சரணாகதி அடைந்து அவனிடம் முக்தியைக் கேட்பதுதான்.

2. பக்தி ஒரு தத்துவமாக ஒரு அணியாக மக்களின் தினசரி வாழ்க்கையில் ஊடுருவி நாளடைவில் ஒரு மாபெரும் இயக்கமாக 7ஆம் நூற்றாண்டு முதல் 10ஆம் நூற்றாண்டு வரையில் பரிணமித்தது. தோன்றியது 8ஆம் நூற்றாண்டில் என்பார்கள்.
3. களப்பிரர்கள் பௌத்தம் மற்றும் சமண மதங்களை ஆதரித்தனர்.
4. சமணமும் பௌத்தமும் தம் செல்வாக்கை பல்லவர் ஆட்சியில் இழக்கத்தொடங்கின.
5. சிவபெருமானை வணங்குபவர்கள் சைவர்களாவர். இவர்களில் பாடல்களை இயற்றிப் பாடி பாமர மக்களை பக்திப் பரவசமைடையச் செய்த வந்த முனிவர்களை முனிவர் புலவர்கள் என்றும் அழைக்கின்றனர். இதன்மூலம் பாமர மக்களுக்கும் தவ வாழ்க்கை மேற்கொள்ளாமலேயே இறைவனைப் பிரார்த்தித்து முக்தி வரம் வேண்ட இயலும் என்பதைப் புரிய வைத்தனர். இந்த முனிவர்கள் மக்களிடையே வசித்து அவர்களுக்கு இறையறிவை ஊட்டி வந்ததால் சைவ சமயம் வளர்ந்து நன்மையளித்தது.
6. நாயன்மாரில் அப்பர் சம்பந்தர் சுந்தரர் ஆகிய மூவரும் நாயன்மார் வரிசையில் இல்லாத தனியான மாணிக்கவாசகர் ஆகியோரும் முதன்மையானவர்கள். இவர்கள் சைவ சமய குரவர் என்று அழைக்கப் படுகின்றனர். சைவத் திருமுறைகள் என்று அழைக்கப்படும் 12 திருமுறைகளின் தொகுப்பில் முதல் மூன்று திருஞானசம்பந்தராலும் 4வது 5வது 6வது திருநாவுக்கரசராலும் 7வது சுந்தரராலும் பாடப்பெற்றவையாகும்.
7. மாணிக்கவாசகர் மதுரையின் அருகேயுள்ள திருவாதவூர் என்ற கிராமத்தில் ஆசாரமான பிராம்மண குலத்தில் அவதரித்தார். இவர் இயற்றிய திருவாசகம் ஒரு திருமறையாகக் கருதப்படுகிறது. இன்றும் சிவாலயங்களில் வழிபாட்டு நேரங்களில் இசைத்துக் கொண்டிருக்கும் ஒரு தமிழ் வேதம்.
8. தேவாரம் நூல் பன்னிரு திருமுறைகளில் முதன்மையான ஒன்று. சுந்தரர் அப்பர் மற்றும்திரு நாவுக்கரசர் இவர்களால் சிவபெருமானைப் போற்றி இயற்றப் பெற்றன இப் பாடல்கள்.

## 7.12 உரைச் சுருக்கம்

- பக்தி எனும் சொல் முக்திக்கான பாதையைக் குறிக்கிறது. சொல்லிலக்கியத்தின் படி பக்தி என்னும் சொல் பஜ் என்ற சமஸ்கிருத மூலச் சொல்லிலிருந்து உதயமானது-இது □சொல்ல வேண்டி□ என்பதையும் □மரியாதையுடன் அன்பு செலுத்த□ என்ற உட் கருத்தையும்



ncs_t.indb 111 3/1/2019 8:35:34 AM

கொண்டது. பக்தி என்பது கடவுளிடம் மனதாரச் செலுத்தும் அன்பின் மூலம் சரணாகதி அடைந்து அவனிடம் முக்தியைக் கேட்பதுதான்.

**குறிப்பு**

- ஆன்மீக ஈடுபாடுகளின் பக்திப் பரிமாணங்களும் வழிபாட்டு முறைகளும் தென் இந்தியாவில் 8ஆம் நூற்றாண்டில் தோன்றி வட இந்தியாவை நோக்கிப் பயணித்தது எனலாம். 15ஆம் நூற்றாண்டில் இந்த பக்தி இயக்கம் வட இந்தியா மற்றும் கிழக்கு இந்தியாவில் முழுதும் பல்கிப் பெருகியது என்று சொல்லப் படுகிறது. 15 முதல் 17ஆம் நூற்றாண்டில் இந்த பக்தி இயக்கம் தன் சிகரத்தை எட்டிப் பிடித்தது.
- 7ஆம் நூற்றாண்டிலிருந்து 10ஆம் நூற்றாண்டின் இடையே வட்டாரங்களில் சிறு அளவில் மனித நம்பிக்கைகளின் இணைப்புப் பாலமாக வழங்கி வந்த பக்தி நெறி நாளடைவில் ஒரு புனித இயக்கமாக மாறி பக்தர்களை ஆட்கொண்டது. பக்தி என்பது ஆன்மீக முறையில் இறைவனிடம் முக்தி வேண்டி சரணாகதி அடைவது என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்ட கோட்பாடு.
- களப்பிரர் கால அடக்கு முறைகளின் வாயிலாக பிராமணத்துவத்தின் வளர்ச்சி தடை செய்யப்பட்ட அதே நேரத்தில் சமணம் மற்றும் பௌத்தம் தழைத்து ஓங்க வழிவகை செய்யப்பட்டது. பிராம்மணர்கள் ஒழிக்கப் பட்டு அவர்தம் அந்தஸ்தும் தகர்க்கப்பட்டது
- பல்லவர்கள் இந்து மதத்தின் வளர்ச்சிக்கு உதவிய அதே நேரத்தில் சமணம் மற்றும் பௌத்த மதங்களின் ஆதிக்கத்தைக் குறைத்தனர். சைவமும் வைணவமும் தத்தம் உரிமைக்காக தனித்தனியாகப் போராட வேண்டிய ஒரு சூழலில் பல்லவ மன்னர்களின் ஆதரவுடன் எழுச்சி பெறவும் வளர்ச்சியடையவும் சந்தர்ப்பங்கள் கூடிவந்தன-நாடிவந்தன. பல்லவர்கள் சைவ மதததின் காவலர்களாகத் திகழ்ந்தனர்.
- சங்க காலத்திலும் அதைத் தொடர்ந்து வந்த இலக்கிய வெளிப்பாடுகள் அற நெறி தனி மனித ஒழுக்கம் சமூக நீதி போன்ற கொள்கைகள் பாடல்களாகவும் நாடகங்களாகவும் கவிதைகளாகவும் படித்தவர்களிடையே பரவியதால் சமுதாயப் பண்பாட்டிலும் சமூக மாற்றங்களிலும் மறுமலர்ச்சி ஏற்பட ஒரு முன்னோடியாகச் செயல் பட்டது.
- மூட நம்பிக்கை ஏற்பட்ட காலத்தில் தொடங்கி தவவலிமை இன்றி பக்தியின் மூலம் கடவுளிடம் சரணாகதி அடைவதின் தத்துவம் வரை நன்கு உணர்ந்த பக்தர்கள் தங்களின் தினசரி வாழ்வில் பக்தி நெறியைப் பின்பற்றத் தொடங்கினர்.
- சிவபெருமானை வணங்குபவர்கள் சைவர்களாவர். இவர்களில் பாடல்களை இயற்றிப் பாடி பாமர மக்களை பக்திப் பரவசமடையச் செய்த வந்த முனிவர்களை முனிவர் புலவர்கள் என்றும் அழைக்கின்றனர். இதன்மூலம் பாமர மக்களுக்கும் தவ வாழ்க்கை மேற்கொள்ளாமலேயே



ncs_t.indb 112 3/1/2019 8:35:34 AM

இறைவனைப் பிரார்த்தித்து முக்தி வரம் வேண்ட இயலும் என்பதைப் புரிய வைத்தனர்.

குறிப்பு

- பக்தி இயக்கத்தில் ஆழ்வார்களும் நாயன்மார்களும் தமிழில் பாடல்களையும் செய்யுள்களையும் படைத்து உபதேசித்ததால் பாமர மக்கள் அதிக அளவில் புரிந்து கொள்ள முடிந்தது.
- சைவ நெறிமுறைகளில் 63 நாயன்மார்களின் தொண்டு மிகச் சிறப்பானது எனலாம். இவர்கள் ஈசனை முழுமுதற்கடவுளாக வணங்கினர். இவர்கள் சிவபெருமானின் சமய நெறிமுறைகளையும் அதன் வழிபாட்டு முறைகளையும் செவ்வனே பின் தொடர்ந்தனர். அதனைப் பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் பாடல்கள் மூலமும் தமிழ் மொழியில் தனித் தனியாகப் போதித்தும் பக்திப் பரவசமடைய வைத்தனர்.
- அப்பர் அடிகள் ஆரம்பத்தில் சமணராக இருந்தவர். சகோதரி திலகவதியின் அறிவுரையின் மேல் சைவத்தைத் தழுவினார்.
- சீர்காழியில் ஒரு பிராம்மண குலத்தில் பிறந்த சம்பந்தர் திருநாவுக்கரசருடன் சைவ சித்தாந்தத்தைப் போதிப்பதில் ஒரு சேர தொண்டாற்றினார். எல்லா புண்ணிய தலங்களுக்கும் சென்று அங்கே பக்திப் பாடல்களைப் பாடிவந்தார்.
- பன்னிரு திருமுறை திருஞானசம்பந்தர் முதலாக சேக்கிழார் வரையிலான 27 பக்தர்கள் பாடியவை ஆகும். இப் பாடல்களில் இன்றைய வாழ்க்கை -- இறப்புக்குப் பின்னர் உண்டான வாழ்க்கை --முக்திக்கான வழி இவை குறித்து விளக்குகின்றன-போதிக்கின்றன.
- தேவாரம் நூல் பன்னிரு திருமுறைகளில் முதன்மையான ஒன்று. சுந்தரர் அப்பர் மற்றும் திருநாவுக்கரசர் இவர்களால் இப் பாடல்கலள் சிவபெருமானைப் போற்றி இயற்றப் பெற்றன.
- மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகம் ஒரு திருமறையாகக் கருதப்படுகிறது. இன்றும் சிவாலயங்களில் வழிபாட்டு நேரங்களில் இசைத்துக் கொண்டிருக்கும் ஒரு தமிழ் வேதம்.

## சுய பரிசோதனை கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

### குறுகிய விடைகளுக்கான வினாக்கள்

1. பக்தி இயக்கத்தின் தோற்றம் குறித்து சிறு குறிப்பு வரைக
2. சங்க காலத்தில் உச்சத்திலிருந்த இந்துமதம் வீழ்ச்சியடையக் காரணம் என்ன?
3. பிராம்மணர்களுக்கு எதிரான புரட்சியை களப்பிரர்கள் ஏன் மேற்கொண்டார்கள்?
4. பக்தி இயக்கத்தின் பின்னணியாக நாயன்மார்கள் செய்த தொண்டு என்ன?



ncs_t.indb 113 3/1/2019 8:35:34 AM

5. அப்பரின் போதனைகளைக் குறிப்பிடுக
6. பன்னிரு திருமுறை பற்றி சிறு குறிப்பு வரைக

**குறிப்பு**

## விரிவான விடைகளுக்கான வினாக்கள்:

1. பக்தி இயக்கத்தின் காரணிகள் என்ன என்பதை விரிவாக எழுதவும்
2. பிராம்மணீயம் களப்பிரர் காலத்தில் வீழ்ச்சி அடைந்தது ஏன்? விவரிக்கவும்
3. களப்பிரரின் வீழ்ச்சிக்குப் பின் நிலவிய இலக்கிய சமூக கலாச்சார நிலை என்ன? விரிவாக எழுதவும்
4. சைவ சமய முனிவர்-புலவர்கள் பக்தி இயக்கத்தின் வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டு யாவை? விவரிக்க
5. சுந்தரரின் போதனைகளை விவரிக்கவும்
6. பக்தி இயக்கத்திற்கு அமைதிப் புரட்சி என்ற பெயர் வரக் காரணங்கள் என்னென்ன?



ncs_t.indb 114 3/1/2019 8:35:35 AM

# அலகு 8 வைணவம்

குறிப்பு

## அமைப்பு

8.0 அறிமுகம்
8.1 நோக்கங்கள்
8.2 பன்னிரு ஆழ்வார்கள்
  8.2.1 நாலாயிர திவ்வியப்பிரபந்தம்
  8.2.2 திருப்பாவை
  8.2.3 சைவ சித்தாந்த ஆகமங்கள்
8.3 திறன் அடைவிற்கான பரிசோதனைக் கேள்விகள்
8.4 உரைச் சுருக்கம்
8.5 முக்கிய சொற்கள்
8.6 சுய பரிசோதனை கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
8.7 மேலும் படிக்க

## 8.0 அறிமுகம்

பக்தி இயக்கம் என்பது காலக்கிரமத்தில் ஏற்பட்ட ஒரு சமூக மாற்றம் எனலாம். தனி நபரின் பக்தியானது ஒரு மகத்தான பக்தி நெறியாக வளர்ந்து ஒரு பக்தி இயக்கமாக உருவெடுத்தது சமுதாயத்தில் ஏற்பட்ட கலாச்சார மாற்றங்கள் மற்றும் பாரம்பரிய நிகழ்வுகளினாலும்தான். களப்பிரர் காலத்தில் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்ட சன்மார்க்க நெறிகள் மற்றும் அப்போது இருந்து வந்த சமய நிலை பக்தி என்பது ஒரு இயக்கமாக மாறத் தூண்டுகோலாக இருந்தது. இந்துக்கள் மற்றும் பிராமணர்கள் மீது அவர்களுக்கு இருந்த வெறுப்பு சமணம் மற்றும் பௌத்தம் சுலபமாக வளர வாய்ப்பளித்தது. சைவம் மற்றும் வைணவம் பொலிவிழந்த நிலையில் களப்பிரர் ஆட்சி முடியும் தருவாயில்தான் மறுமலர்ச்சி ஏற்பட ஏதுவானது. பல்லவ மன்னர்களின் ஆதரவு மற்றும் அவர்களுடைய நேரடி பக்தி ஈடுபாடும் சேர்ந்து இந்த மாற்றத்தைக் கொண்டுவந்திருக்கவேண்டும். பக்தி நிலையில் மாற்றங்கள் ஏற்பட்ட பின்னணியில் அடியார்களும் ஆழ்வார்களும் மக்களிடையே பக்திக் கருத்துக்களைப் பரப்பினர். பிராமணர்களின் முக்கியத்துவம் குறையாமல் அவர்கள் கோவில்களும் கோவில் நிலங்களும் பராமரிப்பதில் கவனம் செலுத்தினர்.

சைவமும் வைணவமும் ஒருசேர வளர்ச்சி பெற்ற பல்லவர் காலத்தில்தான் சமணம் பின்னுக்குத் தள்ளப்பட்டது. பௌத்தமும் சுமாரான செல்வாக்குடன் செழுமையடைந்தது. வைணவ மதத்தினர் விஷ்ணுவை முழு முதற்கடவுளாக வணங்கினர். ஆழ்வார்கள் எனப்பட்ட வைணவ முனிவர்கள் மக்களுடன் கலந்து அவர்களின் சமய மேம்பாட்டிற்கான சடங்குகள் மற்றும்

வழிபாடு முறைகளைப் பயிற்றுவித்தனர். வைணவம்தான் உயர்ந்தது என்னும் தத்துவத்தை அனைவருக்கும் எடுத்துக் கூறினர். இருப்பினும் சைவ வைணவ மதங்கள் ஒன்றுபோல தழைத்தன.

குறிப்பு

## 8.1 கற்றலின் நோக்கங்கள்: இந்த அலகின் மூலம் நீங்கள் அடைவது:

- வைணவத்தைக் குறித்த ஒரு கண்ணோட்டம்
- பன்னிரண்டு ஆழ்வார்களின் தொண்டுகளை அறிந்து கொள்வது
- ஆழ்வார்களின் இலக்கியக் கொடை குறித்து தெரிந்து கொள்வது

## 8.2 பன்னிரண்டு ஆழ்வார்கள்

விஷ்ணுவிடம் ஆழ்ந்த ஈடுபாடுடையவர்கள் எனும் வகையில் இந்தப் பெரியோர்கள் ஆழ்வார்கள் என்றும் முனிவர்-கவிகள் எனவும் போற்றப்பட்டனர். கிருஷ்ணாவதாரம் எடுத்த விஷ்ணுவின் பெருமை குறித்த பாடல்கள் கவிதைகள் இந்த ஆழ்வார்களால் இயற்றப் பெற்று மக்களிடையே பரப்பப் பட்டன. விஷ்ணு கோவில்களில் இந்தப் பாடல்கள் துதிகளாக மாறி அனைவரையும் கவர்ந்தது. விஷ்ணுவை முதற்கடவுளாகவே சித்தரித்து இவர்கள் விஷ்ணு புகழ் பரப்பினர். நவீன வரலாற்று ஆராய்ச்சியாளர்களின் கணிப்பில் கி.பி.5 முதல் 10ஆம் நூற்றாண்டுவரை ஆழ்வார்களின் கால அளவாகக் கருதுகின்றனர். எனினும் கி.மு 4200 முதல் 2700 வரையிலான கால கட்டத்தில் ஆழ்வார்கள் வாழ்ந்ததாக சரித்திரம் கூறுகிறது. சம்பிரதாய வைணவர்கள் ஆழ்வார்களின் எண்ணிக்கையை 10 என்றபோதும் ஆண்டாள் மற்றும் மதுரகவியையும் சேர்க்கும் போது ஆழ்வார்கள் 12 ஆவர். பன்னிருவரில் ஒருவரே பெண் ஆழ்வார் என்றும் கூறப்படுகிறது.

இப்படியாக 12 ஆழ்வார்களும் 63 நாயன் மார்களும் ஒருசேர மேற்கொண்ட முயற்சிகளால் தமிழ் நாட்டில் பக்திப் பிரவாகம் ஒரு பக்தி இயக்கமாக மாறி வட இந்தியாவையும் நோக்கிப் பயணப்பட வழிவகை ஆனது என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

ஆழ்வார்களால் இயற்றப் பட்ட பாசுரங்கள் தமிழ் நாட்டு வரலாற்றின் இடைக் காலத்தில் பக்தி இயக்கத்தை மறுமலர்ச்சி செய்ய மிகவும் உதவி செய்தது. ஆழ்வார்கள் இப் பாசுரங்களின் வாயிலாக விஷ்ணுவைப்பற்றியும் அவருடைய அவதாரங்களைக் குறித்தும் துதி பாடினர். திவ்விய தேசத்தைப் புகழ்ந்து விஷ்ணுவின் 108 கோவில்களைப் பற்றி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.இந்தப் பாடல்கள் அனைத்தும் இனிமையாகவும் உள்ளம் உருகப் பாடியவைகளாகவும் ஆழமான உணர்ச்சியுடன் அன்பு கலந்த கானங்களாகவும் இன்றளவும் இருந்து வருகின்றன. இந்தப் பாடற் தொகுப்பிற்கு 4000 திவ்வியப் பிரபந்தம் என்று பெயர். இந்தப் பாடல்களின் மூலம் பாமரர்களின் நடுவே சடங்குகள் மிகுந்த வேதகால சமயங்களை விட மனமுருகிடப் பாடும்



ncs_t.indb 116 3/1/2019 8:35:35 AM

குறிப்பு

இந்தப் பண்களைப் பாடி வெளிப்படுத்தும் இந்தப் பக்தியே முக்திக்கு வழி கோலுகின்றது என்ற நம்பிக்கை துளிர்விட்டது. தமிழரின் சமய நெறிகளும் வாழ்க்கை முறைகளும் சமஸ்கிருதம் தெரிந்துகொள்ளாமலேயே செவ்வனே நடக்கும் என்ற முக்கியமான உண்மை அனைவருக்கும் உடன் புலப்பட்டது. இதைத் தொடர்ந்து சில ஆண்டுகளில் ஆழ்வார்கள் ஐந்து வைணவ சம்பிரதாயங்கள் என்ற கோட்பாட்டை அறிமுகப் படுத்தினர்.

1. பன்னிரண்டு ஆழ்வார்கள்:
2. பொய்கை ஆழ்வார்
3. பூதத்தாழ்வார்
4. பேயாழ்வார்
5. திருமழிசை ஆழ்வார்
6. ஆண்டாள்
7. நம்மாழ்வார்
8. குலசேகர ஆழ்வார்
9. திருப்பாணாழ்வார்
10. திருமங்கை ஆழ்வார்
11. மதுரகவி ஆழ்வார்
12. பெரியாழ்வார்
13. தொண்டரடிப்பொடி ஆழ்வார்

இந்தப் பன்னிரண்டு ஆழ்வார்களும் விஷ்ணுவின் தலைசிறந்த பக்தர்கள் ஆவர். தமிழ் பேசக் கூடிய பல்வேறு பகுதிகளில் வைணவத்தைப் பரப்பிய புகழ் இந்த ஆழ்வார்களையே சாரும். இவர்கள் பகவத்கீதையைப் பக்தி வெளிப்பாடு முறையாக மக்களிடையே அதிக அளவில் நடைமுறையில் கொண்டுவரச் செய்தனர். இராமாயணம் மற்றும் மகாபாரதம் காவியங்களையும் இவர்கள் புகழ் பரப்பினார்கள் என்றால் மிகையாகாது.

முதல் மூன்று ஆழ்வார்கள் பொய்கையாழ்வார் பூதத்து ஆழ்வார் பேய் ஆழ்வார் 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள். நம்மாழ்வார் மற்றும் மதுரகவி ஆழ்வார் இருவரும் 10ஆம் நூற்றாண்டினராவர். ஏனையோர் 9ஆம் நூற்றாண்டினர் என்று சொல்லப்படுகிறது. ஆழ்வார்கள் கி.மு 4200 முதல் 2700 வரையில் வாழ்ந்தாக பாரம்பரிய செய்திகள் தெரிவிக்கின்றன. பாகவத புராண காலத்திற்கும் பின்னோக்கி இழுத்துச் செல்லும் செய்திகளை வைத்து இவர்கள் துவாபர யுகத்தைச் சேர்ந்தவர்கள் என்று நம்பப்படுகிறது. கலியுகத்தின் முற்பகுதியைச் சேர்ந்தவர் நம்மாழ்வார் மாத்திரம் தான்.

பன்னிரண்டு ஆழ்வார்களும் 63 நாயன்மார்களைப் போலவே சமண மதத்தின் கோட்பாடுகளுக்கு எதிரான பிரச்சாரத்தால் சமணம் இல்லாத சைவ வைணவமிணைந்த பக்தி இயக்கம் வலுப்பெற வழிவகை செய்தனர். இந்த முயற்சிகளால் பக்தி இயக்கம் ஓர் மறுமலர்ச்சி காலத்தில் நடைபோட்டது.

ஆழ்வார்களையும் நாயன்மார்களையும் புகழேணியின் உச்சியில் ஏற்றிவைத்தது பக்தி இயக்கம் வலுப்பெற்றதன் பயன்தான் எனலாம்.

குறிப்பு

## 8.2.1 நாலாயிர திவ்வியப்பிரபந்தம்

வைணவப் பாசுரங்கள் பக்தியையும் அன்பையும் வெளிப்படுத்தும் இனிய பாடல்களாகத் தமிழில் இயற்றப் பெற்றன. 108 வைணவத்தலங்கள் திவ்விய தேசமாகப் பாடப் பெற்ற இந்த இனிய பாடல் தொகுப்பு நாலாயிரம் திவ்வியப் பிரபந்தம் எனப் படுகிறது. இதில் 4000 வெண்பாக்கள் அடங்கியுள்ளன.

ஆழ்வார்கள் பலரால் இயற்றப் பெற்ற இந்த வெண்பாக்கள் 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாதமுனி (கி.பி 824-924) என்னும் வைணவத் தத்துவ ஞானியால் தொகுக்கப்பட்டு திராவிட வேதம் அல்லது தமிழ் வேதம் என்று பெயரிடப்பட்டது.

இன்றளவிலும் தமிழ் நாட்டிலுள்ள அனைத்து வைணவக் கோவில்களிலும் அன்றாட வழிபாடாகவும் முக்கிய ஆராதனையாகவும் திவ்வியப்பிரபந்தம் பாடல்கள் இசைக்கப்பட்டு வருகின்றன.

நாலாயிரம் திவ்வியப் பிரபந்தம் நான்கு பிரிவுகளில் வழங்கப் படுகிறது:

1. முதல் ஆயிரம்
2. பெரிய திருமொழி
3. இறைப்பா
4. திருமொழி

ஆழ்வார்களின் இடையறா முயற்சியின் பயனாக வைணவம் அனைவராலும் ஏற்கப்பட்டு வலுப்பெற்று தென் இந்தியாவில் மட்டுமல்லாமல் வட இந்தியாவிலும் கிழக்கு இந்தியாவிலும் பல்கிப் பெருகிப் பரவ வழிகோலியது எனப் படுகிறது.

## 8.2.2 திருப்பாவை

திருப்பாவை தமிழில் எழுதப்பட்ட 30 பாடல்களின் தொகுப்பு ஆகும். இதன் ஆசிரியர் நாச்சியார் எனப்படும் ஆண்டாள் ஆவர். இப் பாடல்கள் (விஷ்ணுவை) திருமாலைப் புகழ்ந்து பாடப் பெற்றவை ஆகும். இப் பாடல்கள் நாலாயிரம் திவ்வியப் பிரபந்தங்களில் சேர்ந்தவை என்றும் தமிழ் இலக்கியங்களில் மிக முக்கியமானவை என்றும் கருதப் படுகிறது.

தனுர்மாதம் எனப்படும் காலத்தில் சூரியன் தனுர் இராசியில்(தனுசு) பிரவேசிக்கிறது. மகர இராசிக்கு இடம் பெயரும் வரையிலான இந்தக் காலம் தனுர்மாதம் என்று அழைக்கப்படுகிறது.

வேத ஆகமத்தின் படி அதிகாலை நேரம் பிரம்மமுகூர்த்தம் என்று கொள்ளப்படுகிறது. இந்த நேரமானது மனதில் நல்ல எண்ணங்களை உருவாக்கி நல்ல செயல்களை விளைவிக்கும் என்பதும் ஓர ஆழ்ந்த நம்பிக்கை. இந்த



ncs_t.indb 118 3/1/2019 8:35:35 AM

குறிப்பு

நேரத்தில் அனுசரிக்கப்பட்ட எந்த ஒரு தியானமும் தவமும் நல்ல முடிவுகளைப் பயக்கும் என்பதும் நம்பிக்கை. ஆகம நாள்காட்டியின்படி பூமியின் ஒரு வருடம் வானுலகில் ஒரு நாளாகக் கருதப்படுகிறது. ஆகவே நமது வருடத்தில் கடைசி 6 மாதங்கள் வானுலகில் இரவாகக் கொள்ளப்படுகிறது.

ஆண்டாள் இந்த சிறப்பான தனுர்மாத விரதத்தின் வாயிலாக வாழ்க்கையில் வெற்றியையும் மகிழ்ச்சியையும் பெறவும் முக்தி அடைவதற்கான பாதையை மேற்கொள்ள வழி கோலவும் இயலும் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் இறைவனைச் சென்று அடைந்த வரலாறுதான் திருப்பாவை பாடிய ஆண்டாளின் கதை. திருப்பாவையின் படி இறைவன் ஒருவனே- நமக்காக பல்வேறு உருவங்களில் அவதரித்து எங்கும் இருப்பான் என்ற வைணவக் கோட்பாட்டில் வீடுகளிலும் கோவில்களிலும் தூணிலும் துரும்பிலுமாக வெளிப்படும் இறைவன் (விஷ்ணு) அனைவருக்கும் அருள் பாலிக்கிறான் என்பது வைணவ ஐதீகம். திருப்பாவையில் ஆண்டாள் அனைவருக்கும் விடுக்கும் கோரிக்கை என்னவென்றால் வாழ்வில் முடிவாக இறைவனை அடைய விஷ்ணுவின் நாமத்தையும் அவனுடைய புகழையும் துதிபாடுங்கள் என்பதுதான்.

கலி யுகத்தின் தொடக்கத்தின் பின்னர் 98 ஆண்டுகள் கழித்து (கி.மு 3102) அவதரித்த கோதை தேவி இந்த விரதத்தை வடபத்ரசாய் என்ற கடவுள் சிலையின் முன் அனுசரித்தாள். அரங்க நாதரை அடைய ஆசைப்பட்டு சுந்தரபாகு கடவுளிடம் வேண்டுதலை முன் வைத்தாள். நம்மிடம் வேங்கடவனை அடையச் சொல்கிறாள். இதன்மூலம் நாம் அறிவது என்னவென்றால் உருவங்கள் வேறானாலும் இறைவன் ஒருவனே என்ற சித்தாந்தத்தை வலியுறுத்தவே இந்த ஒரு பாடம் புகட்டப் பட்டுள்ளது எனலாம்.

ஆண்டாளின் பாசுரங்களின் உட்கருத்தின்படி மூன்று மூல மந்திரங்கள் புலப்படுகின்றன.

1. திருமந்திரம்
2. த்வயம்
3. சரம சுலோகம்

திருப்பாவை வேதத்தின் வித்தாகக் கருதப் படுகிறது. திருப்பாவையின் முழு அர்த்தத்தையும் முற்றும் அறிந்த வேத விற்பன்னர்களின் வழிகாட்டுதலின் பேரில்தான் இந்த திருப்பாவையின் சாராம்சங்களையும் உட் கருத்துக்களையும் நன்கு அறிந்துணர முடியும் என்பர்.ஆண்டாளின் பாசுரங்களில் உள்ள கவிதைகள் பல மறைந்துள்ள உட்கருத்துக்களைக் கொண்டது எனலாம். திருப்பாவைக் கவிதைகள் அர்த்தமுள்ளவையாகவும் பிரபலமடைந்த கருத்துக்களாகவும் சிறப்புடன் போற்றப் படுகின்றன. இன்றும் வைணவக் கோவில்களில் பிரம்ம முகூர்த்த வேளைகளில் இசைக்கப்படும் பாடல்கள் திருப்பாவைப் பாசுரங்கள்தாம். தனுர்மாதங்களில் இவை இன்னும் சிறப்புப்



ncs_t.indb 119 3/1/2019 8:35:35 AM

பெற்றுள்ளன. திருப்பாவை இன்றளவிலும் வைணவர்களின் தமிழ் வேதம் என்பதில் ஐயமில்லை எனலாம்.

**உங்களுடைய முன்னேற்றத்தைப் பரிசோதியுங்கள்:**

குறிப்பு

1. பக்தி உணர்வு எவ்வாறு பக்தி இயக்கமாக மாறியது?
2. ஆழ்வார்கள் யார்?
3. முதல் மூன்று ஆழ்வார்கள் பெயர்கள் என்ன?
4. பிரம்ம முகூர்த்தம் என்பது என்ன?

## 8.2.3 சைவசித்தாந்த ஆகமங்கள்: (சாத்திர நூல்கள்)

சைவ சித்தாந்த ஆகமங்கள் பதினான்கு ஆகும். அவை பதி பசு பாசங்களைக் குறித்து விளக்குகின்றன. இவை முறையே:

1 பதி என்பது கடவுளைக் குறிக்கும்
2. பசு என்பது ஆத்மா அல்லது உயிர் நிலையைக் குறிக்கும்
3. பாசம் என்பது உலகத்தில் உண்டான ஆசாபாசங்களைக் குறிக்கும். மாயை என்பர்

தத்துவ விளக்கம்: ஆத்மா எனப் படுவது எப்போதும் பதியினை அடைய முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும். ஆனால் பாசம் என்ற மாயை இந்த ஆத்மாவினை முக்திப்பாதையை அடைய விடாமல் மாற்றுப் பாதைகளில் அனுப்ப எத்தனிக்கும்.

**ஆகமங்களின் பட்டியல்**

| எண் | ஆகமத்தின் பெயர் | ஆசிரியர் | ஆகமத்தின் கால நிர்ணயம் |
|---|---|---|---|
| 1. | ஞானாமிர்தம் | வாகீசர் | 13 கி.பி |
| 2. | சிவதருமோத்திரம் | மறைஞானசம்பந்தர் | நிர்ணயம் இல்லை |
| 3. | சைவ சமய நெறி | மறைஞானசம்பந்தர் | நிர்ணயம் இல்லை |
| 4. | திருவுந்தியார் | திருவியலூர் உய்யவந்த தேவர் | 45 பாடல்கள் கி.பி 12 |
| 5. | திருக்க்ளிற்றுப்படியார் | திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயக்கர் | 101 வெண்பாக்கள் கி.பி 12 |
| 6. | சிவஞானபோதம் | மெய்கண்டார் | தமிழ் மூல முதல் நூல் 12 சூத்திரங்கள் கி.பி 13 |
| 7. | சிவஞான சித்தியார் | அருள் நந்தி சிவாசாரியார் | கி.பி 13 சுபக்கம் பரபக்கம் எனும் இரு பிரிவுகளைக் கொண்டது. 629 விருத்தங்கள் |
| 8. | இருபா இருபஃது | அருள் நந்தி சிவாசாரியாா | வெண்பா அகவற்பா எனும் இருவகைப் பாடல்களால் இயன்றது. வினாவிடையாக அமைந்துள்ளது. கி.பி.13 |



ncs_t.indb 120 3/1/2019 8:35:35 AM

| எண் | ஆகமத்தின் பெயர் | ஆசிரியர் | ஆகமத்தின் கால நிர்ணயம் |
|---|---|---|---|
| 9. | உண்மை விளக்கம் | திருவதிகைமனவாசகம் கடந்தார் | கி.பி 13 வினா விடை முறை |
| 10. | சிவப்பிரகாசம் | உமாபதி சிவாச்சாரியார் | கி.பி. 14 சிவதீட்சை வகைகள். இந்த ஆசிரியர் முள்ளிச் செடிக்கும் முத்தி அளிக்க வழி செய்தவர். |
| 11. | சித்தாந்த அஷ்டகம் | உமாபதி சிவாச்சாரியார் | கி.பி. 14 எட்டு நூல்களைக் கொண்டது இந்த அஷ்டகம்<br>1. சிவப்பிரகாசம்<br>2. திருவருட்பயன்<br>3. வினா வெண்பா<br>4. போற்றிப் ப்ஃறொடை<br>5. கொடிக்கவி<br>6. நெஞ்சு விடு தூது<br>7. உண்மை நெறி விளக்கம்<br>8. சங்கற்ப நிராகரணம் |

குறிப்பு

இவ்வாறு சைவ சித்தாந்த ஆகமங்கள் மக்களிடையே பல்வேறு கால கட்டங்களில் அற நெறியை வளர்த்ததுமல்லாமல் மக்களின் முன்னேற்றத்திலும் பங்கேற்றது வியக்கத்தக்கது. சைவமும் வைணவமும் இணைந்து நிகழ்த்திய பக்தி இயக்கமானது தமிழகத்தில் தோன்றி வளர்ந்து வடக்கேயும் கிழக்கேயும் பரவிப் பெருகிட வழி கோலியவர்கள் ஆழ்வார்களும் நாயன்மார்களும். மக்களிடையே வியக்கத்தக்க வழிபாடு மாற்றங்களிலும் பண்பாடு கலாச்சார மாற்றங்களிலும் பக்தி இயக்கம் ஒரு முக்கிய பங்கு வகித்தது எனலாம்.

### உங்களுடைய முன்னேற்றத்தைப் பரிசோதியுங்கள்

5. அருள் நந்தி சிவாச்சாரியார் எழுதிய நூல்கள் யாவை?
6. மூல முதல் நூல் யாரால் எழுதப்பட்டது?
7. சித்தாந்த அஷ்டகத்தில் உள்ள புத்தகங்கள் யாவை?

## 8.3 திறன் அடைவுகளைப் பரிசோதிக்கும் விடைகள்

1. களப்பிரர்களின் இந்துக்கள் மீதான மற்றும் பிராமணர்கள் மீதான வெறுப்பு இவையெல்லாம் வருங்காலத்தில் இந்துக்கள் ஒன்று சேர்ந்து சமணர்களையும் பௌத்தர்களையும் மீறி சைவம் வைணவம் இவற்றை உருவாக்கி இந்துக்களின் முன்னேற்றமாகப் பாவித்து பக்தி ஒரு இயக்கமாக உருவெடுத்தது.

குறிப்பு

2. ஆழ்வார்கள் தமிழ் சன்னியாசிப்புலவர்களாவர். வைணவ பக்தி இயக்கத்தில் இவர்கள் ஆற்றிய தொண்டினால் மக்களிடையே பக்திப் பரவசம் பெருகியது. இவர்கள் மக்களின் உணர்வுகளில் கலந்து பக்தியைப் பரப்பினர் எனலாம். தமிழ் வேதமும் பாடல்களும் மிகுந்த செல்வாக்குடன் விளங்கின. பக்தி இயக்கம் தமிழ் நாட்டிலிருந்து வடக்கே யும் கிழக்கேயும் தீவிரமாகப் பரவித் தம் ஆதிக்கத்தை நிலை நாட்டின.
3. பொய்கை ஆழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார் இவர்கள் மூவரும் 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முதல் மூன்று ஆழ்வார்களாவர்.
4. வேதத்தின் படி அதிகாலைப் பொழுதிற்கு சற்று முன்பான முன்விடியற்காலம் என்பது பிரம்ம முகூர்த்தம் என்ற புனித நேரமாகும். தியானம் பிரார்த்தனை தவம் போன்றவை இந்த நேரத்தில் நிகழ்ந்தால் பயனள்ளதாகும் என்பர்.
5. அருள் நந்தி சிவாச்சாரியார் சிவஞான சித்தியார் மற்றும் இருபா இருபஃது என்ற நூல்களை எழுதினார்.
6. மூல முதல் நூல் மெய்கண்டார் என்பவரால் எழுதப்பட்டது.
7. சித்தாந்த அஷ்டகத்தில் எட்டு நூல்கள் காணப்படுகின்றன. அவையாவன:
   - சிவப்பிரகாசம்
   - திருவருட்பயன்
   - வினா வெண்பா
   - போற்றிப் பஃறொடை
   - கொடிக்கவி
   - நெஞ்சு விடு தூது
   - உண்மை நெறி விளக்கம்
   - சங்கற்ப நிராகரணம்

## 8.4 கட்டுரைச் சுருக்கம்

- பல்லவர்களின் காலத்தில் வைணவம் பரவியது. வைணவர்கள் முழு முதற்கடவுளாக விஷ்ணுவை (திருமால்) வணங்கினர். வைணவ முனிவர்கள் ஆழ்வார்கள் என்று அழைக்கப்பட்டனர்.
- ஆழ்வார்கள் விஷ்ணுவின் தலையாய பக்தர்களாகக் கொள்ளப்படுகின்றனர். இவர்கள் தமிழ் பேசும் இடங்களில் எல்லாம் வைணவம் பரவ தூண்டுகோலாக இருந்தார்கள்.
- ஆழ்வார்களின் இடையறா முயற்சிகளினாலும் ஆழ்ந்த பக்தியாலும் வைணவ சமயம் தழைத்து வளர்ந்து பரவியது எனலாம். தென்

இந்தியாவிலிருந்து வட இந்தியா மற்றும் இந்தியாவின் கிழக்குப் பகுதிகளுக்கும் பரவியது வைணவம்.

- திருப்பாவை வேதத்தின் வித்தாகக் கருதப் படுகிறது. திருப்பாவையின் முழு அர்த்தத்தையும் முற்றும் அறிந்த வேத விற்பன்னர்களின் வழிகாட்டுதலின் பேரில்தான் (இந்த திருப்பாவையின்) சாராம்சங்களையும் உட் கருத்துக்களையும் நன்கு அறிந்துணர முடியும் என்பர். ஆண்டாளின் பாசுரங்களில் உள்ள கவிதைகள் பல மறைந்துள்ள உட்கருத்துக்களைக் கொண்டது எனலாம். திருப்பாவைக் கவிதைகள் அர்த்தமுள்ளவையாகவும் பிரபலமடைந்த கருத்துக்களாகவும் சிறப்புடன் போற்றப் படுகின்றன.
- சைவசித்தாந்த ஆகமங்கள் என்பவை சைவ சித்தாந்ததை அனைவரும் தமிழில் படித்துப் புரிந்து கொள்ள ஏற்படுத்தப்பட்ட வேதங்கள். கால ஓட்டத்தில் இவை சைவம் தழைக்க வழி வகுத்தன எனலாம்.

குறிப்பு

## 8.5 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பாடப் பயிற்சி

### சிறிய விடைகளுக்கான வினாக்கள்

1. நாலாயிர திவ்வியப் பிரபந்ததைப் பற்றி சிறு குறிப்பு வரைக
2. பக்தி இயக்கத்தின் மறுமலர்ச்சிக்கு ஆழ்வார்கள் எந்த அளவில் பங்களித்தனர்?
3. ஆழ்வார்களின் கவிதைளின் முக்கிய அம்சங்கள் என்ன?

### பெரிய விடைகளுக்கான வினாக்கள்

1. பக்தி இயக்கத்தின் எழுச்சி குறித்து கட்டுரை வரைக
2. சைவசித்தாந்த ஆகமங்களில் காணப்படும் நூல்கள் குறித்து விவரிக்கவும்
3. திருப்பாவை பாசுரங்கள் பாடிய ஆண்டாள் குறித்து விமரிசனம் செய்யவும்



ncs_t.indb 123 3/1/2019 8:35:35 AM

குறிப்பு

# அலகு 9 மதுரைப் பாண்டியர்கள்

**அமைப்பு**

9.0 அறிமுகம்
9.1 நோக்கங்கள்
9.2 முன்னாள் பாண்டியர்கள்
9.3 திறன் அடைவிற்கான பரிசோதனைக் கேள்விகளுக்கு பதில்கள்
9.4 உரைச் சுருக்கம்
9.5 சுய பரிசோதனை கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

## 9.0 அறிமுகம்

சங்க காலப் பாண்டியர்கள்: களப்பிரர் காலத்தில் சங்க காலப் பாண்டியர்களின் வீழ்ச்சி தொடங்கியது.

பாண்டியர்களின் வீழ்ச்சி காலத்தில் அவர்தம் பெருமை குன்றிய நிலையில் 6ஆம் நூற்றாண்டு வரையில் இந்த நிலை நீடித்தது. கி.பி.575 ல் பாண்டிய மன்னன் கடுங்கோன் களப்பிரரைத் தோற்கடித்து மதுரையிலிருந்து எல்லா விரோத சக்திகளையும் வெளியேற்றினான். மதுரையில் பாண்டிய அரசை மீண்டும் நிறுவினான். பல குறு நில மன்னர்களையும் தோற்கடித்து விரட்டினான்.

## 9.1 நோக்கங்கள்

இந்த அலகின் மூலம் நீங்கள் அறிந்து கொள்வது

- முற்காலப் பாண்டியர்களின் தோற்றத்தைக் குறித்து
- முற்காலப் பாண்டியர்களின் பங்களிப்பு குறித்து
- அடுத்த சந்ததியினர் மேல் முற்காலப் பாண்டியர்களின் தாக்கம் குறித்து

## 9.2 முன்னாள் பாண்டியர்கள்

1. பாண்டியன் கடுங்கோன்: (576-600): களப்பிரரின் ஆட்சி முடிவுக்கு வந்ததற்கு மன்னன் கடுங்கோன் மூல காரணமாவான். களப்பிரரையும் ஏனைய விரோத சக்திகளையும் பாண்டிய நாட்டிலிருந்து விரட்டியடித்து பாண்டியர் அரசாட்சியைக் கைப்பற்றினான். இதைத் தவிர பல குறு நில மன்னர்களைப் போரில் வென்று அவர்களையும் விரட்டி அடித்தான்.



ncs_t.indb 124 3/1/2019 8:35:35 AM

இவன் பாண்டியர்களின் பெருமையை மீண்டும் நிலை நாட்டினான். இது முற்காலப் பாண்டியர்களின் ஆட்சி காலத்திலும் பேருதவியாக இருந்தது. முதல் பாண்டியப் பேரரசை நிறுவிய அரசன் என்ற நற்பெயரைப் பெற்றவன் பாண்டியன் கடுங்கோன்.

**குறிப்பு**

2. மாறவர்மன் அவனி சூலமணி (600-625) பாண்டியன் கடுங்கோனின் மகனாவான்.

   (அ) இவன் அரசர்கள் பாண்டிய நாட்டில் பட்டப் பெயர் சூட்டும் வழக்கத்தை ஏற்படுத்தினான். மாறவர்மன் சடையவர்மன் என்ற பட்டப் பெயர்களை ஆரம்பித்து வைத்தான்.

   (ஆ) இவன் காலத்தில்தான் பல்லவர்களுடன் போர்கள் துவங்கின எனலாம்.

3 செழியன் வேந்தன்: (625-640) மாறவர்மன் அவனி சூலமணியின் மகனான செழியன் வேந்தன் பாண்டியப் பேரரசின் வளர்ச்சிக்காக பெருமுயற்சி செய்தான்.

   (அ) இவன் பல்லவர்களுடன் போரைத் தொடர்ந்தான்

   (ஆ) சேரர்களைத் தோற்கடித்து வானவர் என்ற பட்டம் பெற்றான்.

   (இ) பல்லவர்களைத் தோற்கடிப்பதில் சாளுக்கியர்களுடன் நட்புப் பாராட்டினான்.

   (ஈ) இவனுடைய ஆட்சிக் காலத்தின் முடிவில் சீன யாத்திரிகர் யுவான் சுவாங் காஞ்சிக்கு வருகை புரிந்தான்.

4. மாறவர்மன் அரிகேசரி (640-670) செழியன் வேந்தனின் முடிவுக்குப் பின்னர் 640 ல் அவன் மகன் மாறவர்மன் அரிகேசரி அரசனானான்.

   (அ) இவனுக்கு கூன்பாண்டியன் மற்றும் சுந்தர பாண்டியன் என்ற பட்டங்கள் சூட்டப் பட்டன

   (ஆ) வேள்விக்குடி செப்புப்பட்டயங்களில் இவனுடைய வீர தீரப் பராக்கிரமங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவனை ஒரு மாபெரும் போர் வீரனாகவும் சித்தரிக்கின்றது.

   (இ) வடக்கே அமைந்திருந்த சோழ நாட்டின் உறையூரைக் கைப்பற்றினான்

   (ஈ) தென் பாண்டிய நாட்டின் குறு நில மன்னர்களை அடக்கினான்

   (உ) வடக்கே ஆண்டுவந்த சோழர்களையும் வெற்றி கொண்டான்

   (ஊ) மேற்கே ஆட்சி புரிந்த சேரர்களைத் தோற்கடித்தான்

   (எ) கொடும்பானூரில் ஆண்டு வந்த களப்பிர மன்னனைத் தோற்கடித்து அடக்கினான்.

   (ஏ) பல்லவர்களை சங்கரமங்கை என்ற இடத்தில் தோற்கடித்தான்

சமயப் பற்று: சமணனான அரிகேசரி- திருஞானசம்பந்தரின் ஆலோசனைப்படி சைவத்தைத் தழுவினான். பாண்டிய நாடு முத்து வாணிபத்தில் சிறந்து விளங்கியது. வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன முத்துக்கள். இதனால் பொருளாதார வளர்ச்சி மேம்பட்டது.

குறிப்பு

5. அரிகேசரி பராங்குச மாறவர்மன்(710-765) மாறவர்மன் அரிகேசரிக்குப் பின்னர் கோச்சடையான் ரணதீரன் பாண்டிய மன்னன் ஆனான். இவன் ஆட்சியில் மேலும் பாண்டியப் பேரரசின் எல்லைகள் விரிவடைந்தன.
   (அ) பல்லவர்களுடன் இவன் போரிட நேர்ந்தது. பல்லவ மன்னன் நந்திவர்மன் பாண்டிய நாட்டின் மேல் படையெடுத்தான். இப் போரில் பல்லவர்கள் தோற்கடிக்கப்பட்டனர்.
   (ஆ) மாளவ அரசனையும் பராங்குச மாறவர்மன் தோற்கடித்தான்
   (இ) கங்கர்களையும் தோற்கடித்து அவர்களைப் பாண்டிய அரசின் கீழ் கப்பம் கட்ட வைத்தான்.
   (ஈ) இவன் சைவ மதத்தினனாவான். இவன் ஆட்சியில் பாண்டிய நாடு பல வெற்றிகளை அடைந்து உயரங்களையும் எட்டிப் பிடித்தது.
6. நெடுஞ்செழியன் பராந்தகன்: (765-790) இவன் மிக்க வல்லமை கொண்டவனாக விளங்கினான். மற்ற அரசர்களைப் போலவே இவனும் பல இடங்களைக் கைப் பற்றி எல்லைகளை மேலும் விரிவு படுத்தினான்.
   (அ) இவன் பல்லவ அரசன் நந்திவர்மனை பெண்ணாடகம் என்ற இடத்தில் தோற்கடித்து அங்கு பாண்டிய ஆட்சியமைத்தான்.
   (ஆ) கொங்கு மன்னர்களுடன் போரிட்டு அவர்களைத் தோற்கடித்தான். கொங்கு நாடு பாண்டிய நாட்டில் சேர்க்கப் பட்டது.
   (இ) வயனாடு பகுதிகளை வென்று அங்கே சூறையாடிய பெருஞ் செல்வத்தைப் பாண்டிய நாட்டிற்குக் கொண்டு வந்தான்.
   (ஈ) முத்தரையர்களையும் தோற்கடித்தான். வேளிர் குல மன்னன் ஆய் தோற்கடிக்கப்பட்டான்.
   (உ) நெடுஞ்செழியன் பராந்தகன் ஒரு வைணவன் ஆவான். பாண்டிய அரசர்களிலேயே அதிக வல்லமை பெற்று பல இடங்களையும் நாடுகளையும் கைப்பற்றி அதிக அளவில் எல்லைகளை விரிவு படுத்தினான் என்று கூறப் படுகிறது.
   (எ) கொங்கு நாட்டில் ஒரு வைணவக் கோவிலைக் கட்டினான்
   (ஏ) ஆனைமலையில் ஒரு வைணவக் கோவில் கட்டப்பட்டது
   (ஐ) வைணவக் கோவில்களுக்கு தானங்கள் இவனால் அளிக்கப் பட்டு ஆதரிக்கப் பட்டன.
7. வரகுண பாண்டியன்: (800-830)
   (அ) இவனுடைய காலத்தில் சோழ நாடு முழுவதும் பாண்டியரின் ஆட்சி பரவியது.
   (ஆ) தஞ்சாவூரின் முத்தரையர் பாண்டிய ஆட்சியின் கீழ் வந்தனர்.
   (இ) பல்லவன் நந்திவர்மன் வரகுண பாண்டியனின் ஆட்சியில் தோற்கடிக்கப் பட்டான்.
   (ஈ) தொண்டை மண்டலத்தில் பெண்ணையாறு வரையில் பாண்டிய நாடு ஆட்சி அமைத்தது


ncs_t.indb 126 3/1/2019 8:35:36 AM

(உ) வரகுண பாண்டியன் சைவ மதத்தினனாவான். சமய வளர்ச்சிக்காக பெரும் நிதியுதவி அளித்து வந்ததாக குறிப்புக்கள் சொல்லுகின்றன.

8 சீமார சீவல்லபன் (830-862)

(அ) இவன் ஆட்சியில் சேர மன்னன் விழிஞம் என்ற இடத்தில் தோற்கடிக்கப் பட்டான்.

(ஆ) இலங்கை மீது படையெடுத்து முதலாம் சேனன் என்ற மன்னனைத் தோற்கடித்தான். அங்கே போரில் சூறையாடிய அளவற்ற செல்வத்துடன் பாண்டிய நாட்டை அடைந்தான்.

(இ) மூன்றாம் நந்திவர்மன் பல்லவர்களின் இழந்த கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டி பாண்டியர்களுடன் போர் தொடுத்தான். தொள்ளாறு என்ற இடத்தில் அவன் பாண்டியர்களைத் தோற்கடித்தான்.

(ஈ) சீமார சீவல்லபன் காலத்தில் பாண்டிய நாட்டின் வடபகுதி எல்லைகள் சுருங்கின.

9. இரண்டாம் வரகுண பாண்டியன் (862-880)

(அ) மீண்டும் தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றவும் வேறு இழந்த இடங்களைக் கைப்பற்றவும் இரண்டாம் வரகுண பாண்டியன் இடவை நகரத்தை முற்றுகையிட்டான்.

(ஆ) பல்லவர்களைச் சுற்றி நடந்த இந்த பாண்டிய ஆதிக்கம் குறைவதற்காக பல்லவ மன்னன் அபராஜிதன் சோழ மன்னன் ஆதித்தியனுடன் சேர்ந்து கொண்டு பாண்டிய நாட்டின் மேல் படையெடுத்தான். இரண்டாம் வரகுண பாண்டியனைத் தோற்கடித்து இழந்த இடங்களைக் கைப்பற்றினர்.

(இ) கங்கர் அரசர் முதலாம் பிருத்திவி ராஜபதி திருப்புறம்பியம் போரில் கொல்லப் பட்டார்.

(ஈ) திருப்புறம்பியம் போர் சோழன் மற்றும் பாண்டிய மன்னர்களின் எதிர்காலத்தை மாற்றி அமைத்தது எனலாம்.

(உ) இந்தப் போரின் மூலம் சோழர்கள் தங்கள் அரசின் எல்லைகளை விரிவாக்கி அடுத்த 200 ஆண்டுகளுக்கு வ்டக்கே துங்கபத்திரா நதி முதல் தெற்கில் குமரி முனை வரை ஆட்சி செய்யும் பெரிய வாய்ப்பு தோன்றியது எனலாம்.

(எ) அவன் தான தர்மங்கள் செய்வதில் சிறந்து விளங்கினான். திருச்செந்தூர் கோவிலுக்கு அன்றாட பூஜைக்காக பெரிய அளவில் தானம் கொடுத்தான்.

10 இரண்டாம் வரகுண பாண்டியனைத் தொடர்ந்து பராந்தக பாண்டியன் அரசனாகப் பதவி ஏற்றான்.

(அ) தஞ்சாவூர் மற்றும் கொடும்பானூர் கைப்பற்றப் பட்டன. அந்த சிற்றரசர்கள் அடக்கப் பட்டனர்.

குறிப்பு

குறிப்பு

(ஆ) பராந்தக பாண்டியன் சமண மதத்தைத் தழுவியதால் சமணப் பள்ளிகளுக்கு தானங்கள் கொடுக்கப் பட்டன.

(இ) வேலூர்ப் போரில் சோழர்கள் பாண்டியர்களைத் தோற்கடித்தனர். மதுரை கைப் பற்றப் பட்டது.

11 வீரபாண்டியன்: ராஜசிம்மனின் மகன் வீரபாண்டியன் அரச பதவிக்கு வந்தான்.

(அ) ராஷ்டிரகூடர்களிடம் சோழர்கள் கடும் போரில் ஈடுபட்டிருந்தபோது வீரபாண்டியன் மதுரையைச் சோழர்களிடமிருந்து திரும்பக் கைப்பற்றினான்.

(ஆ) ஆதித்திய சோழன் வீரபாண்டியனைக் கொன்று மீண்டும் மதுரையைக் கைப் பற்றினான்.

இந்தப் போருடன் முற்காலப் பாண்டியர்களின் ஆட்சி பாண்டிய நாட்டில் முற்றுப் பெற்றது எனலாம்.

### உங்களுடைய முன்னேற்றத்தைப் பரிசோதியுங்கள்:

1. களப்பிரர்களால் தோற்கடிக்கப்பட்ட பாண்டியர்கள் மீண்டும் எவ்வாறு ஆட்சியைப் பிடித்தனர்?
2. கூன் பாண்டியன்- சுந்தர பாண்டியன் என்ற பட்டப் பெயர்களில் எந்த அரசன் அழைக்கப் பட்டான்?

## 9.2.1 சமூக பொருளாதார மற்றும் கலாச்சார வளர்ச்சி:

சமூக நிலை: முற்காலப் பாண்டியர்கள் கிராமம் சார்ந்த அமைப்பை உருவாக்கி இருந்தனர். அதில் பிராம்மணர்கள் வேளாளர்கள் வைசியர்கள் பல்வேறு கொல்லர்களும் தொழில் வினைஞர்களும் சமுதாயத்தில் இடம் பெற்றிருந்தனர்.

பிராம்மணர்கள் உயர்ந்த சாதியாகக் கருதப்பட்டனர் வேளாளர்கள் இடைச் சாதியாகவும் ஏனையவர்கள் கீழ் சாதிகளாகவும் கருதப் பட்டனர்.

பிராம்மணர்கள்: வேத சாஸ்திரிகள் என்றும் குருக்கள் என்றும் அழைக்கப்பட்டனர். இவர்கள் வசித்த இடம் பிரம்மதேயம் எனப் பட்டது. கிராமக் குழுக்களை அமைத்து இவர்கள் அதன் தலைமையில் நிர்வாகம் செய்தனர். அரசர் பெருமானின் ஆதரவும் அவர்கள் பெற்றிருந்தனர். சிலர் வாணிபத்திலும் ஈடுபட்டிருந்தனர். இவர்களுடைய பெண்டிர் தனுர்மாதத்தில் விரதம் மேற்கொண்டும் வேறு பல விரதங்களில் ஈடுபட்டும் வாழ்ந்து வந்தனர். பிராம்மணர்கள் கிருஷ்ணரை முழு முதல் தெய்வமாக வணங்கி வந்தனர்.

வேளாளர்கள்: இவர்கள் விவசாயத்தில் ஈடு பட்டனர். குடும்பங்களாக வசித்து வந்தனர். தாய் தந்தைக்கு பெரும் முன்னுரிமை இருந்து வந்தது. இவர்கள் அரசர்களுக்கு கோவில்களைக் கட்டியும் சேவை செய்தனர். இவர்களின்



ncs_t.indb 128 3/1/2019 8:35:36 AM

கிராம குழுக்களில் இடம் பெற்று நிர்வகித்து வந்தனர். நிலமற்ற விவசாயிகள் நிலச் சுவான் தாரரை அண்டிப் பிழைத்திருந்தனர். மகசூலில் ஒரு பகுதியை கூலியாகப் பெற்றுக் கொண்டனர்.

இதர வைசியர்கள் பல்வேறு கொல்லர்களும் தொழில் வினைஞர்கள்: இவர்கள் கீழ் சாதிகளாகக் கருதப் பட்டனர். இவர்களில் இடையர்களும் தச்சர்களும் கொல்லர்களும் வாணிபம் செய்து வந்த வணிகர்களும் இருந்தனர்.

நாட்டார்கள் எனப் படும் நிலச் சுவான் தாரர்கள் முற்காலப் பாண்டியர்களின் அரசாட்சியில் கிராம அமைப்பின் தலைவர்களாக இருந்தது தெரிகிறது.

## பொருளாதாரம்

பொருளாதார இயக்கம் உற்பத்தியின் அடிப்படையிலிருந்தது. நிலச் சுவான் தாரர்களும் நிலமில்லா குடியானவர்களும் விளைச்சலைப் பகிர்ந்து கொண்டனர். கிராமங்களில் நிரந்தரமாகக் குடியேறினர். இதைத் தவிர தினக் கூலிக்காக நிலங்களில் வேலை செய்தவர்களும் இந்த கிராமங்களில் வசித்து வந்தனர். கூலியாக பொருட்கள் கொடுக்கப் பட்டன.

கால் நடைகளின் வியாபாரமும் இதில் இருந்தது. வெள்ளாளர்கள் ஆடு மாடுகளை வளர்த்து வந்தனர். பால் உற்பத்தி செய்யப்பட்டது. உற்பத்தி செய்த பொருட்கள் பண்ட மாற்று முறையில் வியாபாரம் செய்யப் பட்டன.

கோவில்களின் நிர்வாகத்திற்காக விளைச்சல் தானமாகக் கொடுக்கப் பட்டு அவை பொது மக்களிடையில் விற்பனைக்கு வைக்கப் பட்டன. இந்த நிதி கோவில்களின் செலவுக்காகப் பயன்படன.முற்காலப் பாண்டியரின் கோவில் சார்ந்த பொருளாதார முறை சிறப்பு அம்சமாகக் கொள்ளப் படுகின்றது.

நடைமுறையில் நெல் அளவையின் மேலான வேறு பொருட்களின் பண்டமாற்று மதிப்பு தீர்மானிக்கப் பட்டது. மக்களிடம் புழங்கி வந்தது காசு என்ப்பட்டது. இக் காசு பொன்னால் ஆனது. ஆகவே பொற்காசு என்றும் அழைக்கப் பட்டது.

சமுதாயம் மற்றும் கலாச்சாரப் பண்பாடு: முற்காலப் பாண்டியர் காலத்தில் சமயம் மற்றும் கலைத் திறன் நல்ல வளர்ச்சியடைந்தது எனலாம்.

சமயம்: மக்கள் முருகனை வழிபட்டனர். அவனுக்காக திருச்செந்தூர் திருப்பரங்குன்றம் மற்றும் ஆனைமலை போன்ற இடங்களில் கோவில்கள் எழுப்பப் பட்டன.

முதலாம் வரகுணவர்மன் திருஞானசம்பந்தரின் போதனையால் சைவத்தைத் தழுவினான். இதனால் சைவம் தழைத்தது. சமணம் வீழ்ச்சியுற்றது. மாணிக்கவாசகரின் இலக்கியங்களின் வாயிலாக சைவம் சைவ சித்தாந்தமாக பல்கிப் பெருகியது.

குறிப்பு

முற்காலப் பாண்டியர்களின் ஆட்சியில் சமணர்கள் அதிக அளவில் பள்ளிமடம் குரந்தை போன்ற இடங்களில் காணப்பட்டனர். பௌத்த சமயத்தின் தாக்கம் அவ்வளவாகக் காணப் படவில்லை என்றாலும் திரு நெல்வேலி யில் தர்ம பாலரும் வச்சிரபோதி என்ற பௌத்த போதகரும் பௌத்த இலக்கியங்களில் குறிப்பிடப் பட்டுள்ளனர்.

வைணவம் சைவத்தினைக் காட்டிலும் ஆதிக்கம் பெற்றிருந்தது: முற்காலப் பாண்டியர் காலத்தில் வைணவத்தின் ஆதிக்கம் மேன்மையிலும் சைவம் சற்றே குறைவாகவும் இருந்துவந்தது. நெடுஞ்செழியன் பராந்தகன் ஸ்ரீமார ஸ்ரீ வல்லபன் இருவரும் வைணவத்தை ஆதரித்து வந்தனர். ஸ்ரீவில்லிபுத்தூர் வைணவத்தின் மையமாகச் செயல்பட்டது.

ஆழ்வார்கள் வைணவ சித்தாந்தத்தைப் பரப்பி வந்தனர். நம்மாழ்வார் மதுர கவி ஆழ்வார் பெரியாழ்வார் மற்றும் ஆண்டாள் வைணவத்தைப் பரப்பிப் பெருமையடையச் செய்தனர்.

கட்டிடக் கலை நுட்பம்: பாண்டியர்கள் பல்வேறு கோவில்களைக் கட்டினர். இதனால் கட்டிடக் கலை வளர்ச்சி காணப் பட்டது.

## மூன்று வகையிலான கோவில்கள் எழுப்பப் பட்டன

1. குகைக் கோவில்கள்
2. ஒற்றைக் கல் கோவில்கள்
3. கோவில் அமைப்புக் கட்டிடங்கள்

கலை நயம்: கட்டிடக் கலை பல்லவர்கள் மற்றும் ராஷ்டிரகூடர்களின் மாதிரிகளைப் பின்பற்றுபவையாகக் காணப் படுகின்றன.

பிள்ளையார்ப் பட்டி கோவில் 6ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. சங்கரங்கோவிலை அடுத்து அமைந்த மலையடிக்குறிச்சி குகைக் கோவில் மற்றும் திருப்பரங்குன்றம் குகைக் கோவில்கள் பெருமை சேர்க்கும் கட்டிடக் கலை நுட்பங்களாகும்.

கழுகு மலையிலுள்ள ஒற்றைக்கல் கோவில் 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

இதைத்தவிர பாதிக் கல் பாதி செங்கல் முழுவதும் கல் என்ற முறையில் கோவில் அமைப்புக்கள் தோன்றின. இவர்கள் அஷ்டாங்க விமானங்களைக் கோவில்களில் அமைத்து சிறப்பு செய்தனர்.

## பாண்டியர் கோவில்கள்

1. அம்பாசமுத்திரம் எரிச்ச உடையார் கோவில்
2. கூடலழகர் கோவில் மதுரை
3. குற்றால நாதர் கோவில்
4. திருவாலீஸ்வரர் கோவில்



ncs_t.indb 130 3/1/2019 8:35:36 AM

## முடிவுரை

முற்காலப் பாண்டியர்கள் கோவில்களைக் கட்டுவதின் மூலம் சமயப் பற்றை வளர்த்து சீரமைத்தனர் எனலாம். பாண்டியர் கட்டிய பல்லவர் ராஷ்டிரகூடர்களின் கலை நயத்தை பிரதிபலிக்கும் கட்டுமானங்கள் இன்றும் அழியாப் புகழ் சேர்க்கின்றன. அஷ்ட விமானக் கலையும் தனித்தன்மை கொண்டது. விவசாயத்தை முதன்மையாகக் கொண்டு பல்வேறு உப தொழில்களால் சமுதாய முன்னேற்றம் சிறப்பாகக் காணப்பட்டது.

படையெடுப்புக்களின் மூலம் கிடைத்த போர்ச் செல்வங்கள் மற்றும் போர்களில் இழந்த எல்லைகளும் செல்வங்களும் முற்காலப் பாண்டியர்களின் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள்

ஆதித்த சோழனின் சூழ்ச்சியால் வீரபாண்டியன் கொல்லப் பட்டு மதுரை மீண்டும் கைப் பற்றப் பட்டது என்பது முற்காலப் பாண்டியர்களின் இறுதி ஆட்சிக் காலமாகும்.

### உங்களுடைய முன்னேற்றத்தைப் பரிசோதியுங்கள்

3. வேளாளர்கள் என்பவர்கள் யார்?
4. வைணவம் எவ்வாறு சைவத்தின் வளர்ச்சியை வீழ்த்தியது?

## 9.3 திறன் அடைவிற்கான பரிசோதனைக் கேள்விகளுக்கு பதில்கள்

1. பாண்டியன் கடுங்கோன்: (576-600): களப்பிரரின் ஆட்சி முடிவுக்கு வந்ததற்கு மன்னன் கடுங்கோன் மூல காரணமாவான். களப்பிரரையும் ஏனைய விரோத சக்திகளையும் பாண்டிய நாட்டிலிருந்து விரட்டியடித்து பாண்டியர் அரசாட்சியைக் கைப்பற்றினான். இதைத் தவிர பல குறு நில மன்னர்களைப் போரில் வென்று அவர்களையும் விரட்டி அடித்தான். இவன் பாண்டியர்களின் பெருமையை மீண்டும் நிலை நாட்டினான்.
2. பாண்டிய மன்னன் செழியன் வேந்தனின் மகன் மாற வர்மன் அரிகேசரி (640-670) கூன் பாண்டியன் மற்றும் சுந்தர பாண்டியன் என்ற பட்டங்களால் அழைக்கப் பட்டான்.
3. வேளாளர்கள் விவசாயத்தில் ஈடு பட்டனர். குடும்பங்களாக வசித்து வந்தனர். தாய் தந்தைக்கு பெரும் முன்னுரிமை இருந்து வந்தது. இவர்கள் அரசர்களுக்கு கோவில்களைக் கட்டியும் சேவை செய்தனர்.இவர்களின் கிராம குழுக்களில் இடம் பெற்று நிர்வகித்து வந்தனர். நிலமற்ற விவசாயிகளை கிராம குழுக்கள் மூலம் நிர்வகித்து வந்தனர்.
4. வைணவம் அரசர்களால் ஆதரிக்கப் பட்டது. நெடுஞ்செழியன் பராந்தகன் ஸ்ரீமார ஸ்ரீ வல்லபன் இருவரும் வைணவத்தை ஆதரித்து வந்தனர். ஸ்ரீவில்லிபுத்தூர் வைணவத்தின் மையமாகச் செயல்பட்டது. இதனால் சைவத்தின் எழுச்சி குறைந்தது.

## 9.4 உரைச் சுருக்கம்

குறிப்பு

1. பாண்டியன் கடுங்கோன்: (576-600): களப்பிரரின் ஆட்சி முடிவுக்கு வந்ததற்கு மன்னன் கடுங்கோன் மூல காரணமாவான்.
2. ஆதித்த சோழனின் சூழ்ச்சியால் வீரபாண்டியன் கொல்லப் பட்டு மதுரை மீண்டும் கைப் பற்றப் பட்டது என்பது முற்காலப் பாண்டியர்களின் இறுதி ஆட்சிக் காலமாகும்.
3. முற்காலப் பாண்டியர்கள் கிராமம் சார்ந்த அமைப்பை உருவாக்கி இருந்தனர். அதில் பிராம்மணர்கள் வேளாளர்கள் வைசியர்கள் பல்வேறு கொல்லர்களும் தொழில் வினைஞர்களும் சமுதாயத்தில் இடம் பெற்றிருந்தனர்.
4. பொருளாதார இயக்கம் உற்பத்தியின் அடிப்படையிலிருந்தது. நிலச் சுவான் தாரர்களும் நிலமில்லா குடியானவர்களும் விளைச்சலைப் பகிர்ந்து கொண்டனர். கிராமங்களில் நிரந்தரமாகக் குடியேறினர். இதைத் தவிர தினக் கூலிக்காக நிலங்களில் வேலை செய்தவர்களும் இந்த கிராமங்களில் வசித்து வந்தனர். கூலியாக பொருட்கள் கொடுக்கப் பட்டன.
5. சமயமும் கலாச்சாரமும் முற்காலப் பாண்டியர் காலத்தில் வெகுவாக வளர்ச்சி அடைந்தன.

## 9.5 சுய பரிசோதனை கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

### குறுகிய விடைகளுக்கான வினாக்கள்:

1. மாறவர்மன் அரிகேசரியின் குண நலன் கள் யாவை?
2. வரகுண பாண்டியனின் ஆட்சி குறித்து சிறு குறிப்பு வரைக
3. முற்காலப் பாண்டியர்களின் கட்டிடக் கலை நுட்பம் குறித்து சுருக்கமாகக் கூறவும்

### விரிவான விடைகளுக்கான வினாக்கள்:

1. கலாச்சாரம் பண்பாட்டு வளர்ச்சிக்கு முற்காலப் பாண்டியர்களின் பங்களிப்பு குறித்து விவரிக்கவும்
2. முற்காலப் பாண்டியர்களின் ஆட்சி அமைத்த அரசர்களின் வரலாற்றை விவரமாகக் குறிப்பிடவும்
3. சமுக அமைப்பு முற்காலப் பாண்டியர் காலத்தில் எவ்வாறு இருந்தது என்பதை விரிவாகக் கூறவும்.



ncs_t.indb 132 3/1/2019 8:35:36 AM

# அலகு 10 சோழ சாம்ராஜ்யம்



## அமைப்பு

10.0 அறிமுகம்
10.1 நோக்கங்கள்
10.2 சோழ சாம்ராஜ்யத்தின் தோற்றம்
10.2.1 சோழ மன்னர்கள்
10.2.2 மத்திய மற்றும் மாகாண நிர்வாக அமைப்பு
10.2.3 படை மற்றும் போர் முறைகள்
10.2.4 வரி வசூல் முறை
10.2.5 நிர்வாக அமைப்புக்கள்
10.2.6 கிராம உள்ளாட்சி முறை
10.3 சமூக பொருளாதார மற்றும் சமய நிலை
10.4 கலை மற்றும் கட்டிடக் கலை வளர்ச்சி
10.5 திறன் அடைவிற்கான பரிசோதனைக் கேள்விகள்
10.6 உரைச் சுருக்கம்
10.7 முக்கிய சொற்கள்
10.8 சுய பரிசோதனை கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
10.9 மேலும் படிக்க

## 10.0 அறிமுகம்

தமிழகத்தில் நீண்ட காலம் ஆட்சி புரிந்த பெருமை சோழ வம்சத்தினருக்கு உண். அவர்கள் ஆட்சி செய்த தமிழகம் இன்றைய கேரளா மற்றும் கர்நாடகத்தையும சேர்ந்த பகுதியாக இருந்தது. 2ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த கரிகால சோழன் மிகவும் சிறப்பான சோழ மன்னனாகக் கருதப் பட்டான். சங்க இலக்கியங்களும் அவன் புகழ் பரப்பின. அதற்குப் பின் பல ஆண்டுகள் பின்னடைந்த சோழர் ஆட்சி விஜயாலயன் ஆட்சியில் எழுச்சி பெற்றது எனலாம். அவன் தஞ்சாவூரைக் கைப்பற்றி அங்கே கோவில் ஒன்றை இந்த வெற்றியின் நினைவாகக் கட்டினான்.

இந்த அலகில் நீங்கள் தென் இந்தியாவில் சோழப் பேரரசின் தோற்றம்- அவர்தம் மன்னர்கள் விஜயாலயன் பராந்தகன் இராஜேந்திரன் போன்றோர் குறித்த விளக்கங்கள்- சோழராட்சியில் சமூக பொருளாதார மற்றும் சமய நிலைகள் இவற்றைப் பற்றி அறிந்து கொள்ளலாம். தவிர தமிழ் நாட்டில் சோழராட்சியின் கீழ் கலை கலாச்சாரம் கட்டிடக்கலை நுட்பம் போன்றவற்றின் வளர்ச்சியையும் அறிந்து கொள்ளலாம்.



ncs_t.indb 133 3/1/2019 8:35:36 AM

## 10.1 நோக்கங்கள்

குறிப்பு

இந்த அலகினைப் படித்து முடித்ததும் நீங்கள்

- சோழப் பேரரசின் தோற்றத்தை விளக்கமாகக் கூறலாம்.
- பல சோழ மன்னர்களின் சாதனைகளை விவாதிக்கலாம்.
- சோழர் ஆட்சியில் இருந்து வந்த சமூக பொருளாதார மற்றும் சமய நிலைகள் குறித்து விவரிக்கலாம்.
- சோழர்கால கலை மற்றும் கலாச்சாரம் கட்டிடக் கலை நுட்பம் இவற்றை திறம்பட கருத்தாய்வு செய்யலாம்.

## 10.2 சோழ சாம்ராஜ்யத்தின் தோற்றம்

சோழப் பேரரசு மிகவும் தொன்மையானதாகும். சோழர்களைக் குறித்து மகாபாரதத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. அசோகரின் கல்வெட்டுக்களிலும் மெகஸ்தனிஸ் பயணக் குறிப்புக்களிலும் சோழர்கள் குறித்த குறிப்புக்கள் உள்ளன. இதேபோல் காத்தியாயனர் சோழர் குறித்து குறிப்பிடுகிறார். சோழரின் இலங்கை மன்னர்களுடனான உறவு நிலை குறித்து மகாவம்சம் இலக்கியம் குறிப்பிடுகிறது. டோலமியும் (ீவழடநஅல) சோழர்கள் பற்றிக் குறிப்பிடுகிறார். சங்க கால இலக்கியங்கள் சோழ அரசர்களைப் பற்றியும் அவர்தம் நீதி நேர்மை கொடை குணங்கள் குறித்தும் குறிப்பிடுகின்றன. பண்டைய சோழ நாடு தற்போதைய தமிழ் நாடு கேரளா மற்றும் கர் நாடகத்தின் பெரும் பகுதிகள் அடங்கிய பேரரசாக விளங்கியது எனலாம்.

### 10.2.1 சோழ மன்னர்கள்

புகழ் பெற்ற சோழ மன்னர்களும் அவர்தம் சாதனைகளும் கீழ்க்கண்டவாறு இங்கே விவரிக்கப்படுகின்றன

1. விஜயாலய சோழன் (850-871) தஞ்சைச் சோழ வம்சத்தின் முதல் மன்னனாகத் தஞ்சையிலிருந்து ஆட்சி புரிந்தான். இவன் பாண்டியரின் குறு நில மன்னனாக இருந்தான். இவன் காவேரி பள்ளத்தாக்கையும் கோசல பள்ளத்தாக்கையும் வெற்றி கொண்டான். தஞ்சையின் வெற்றியின் நினைவாக கொற்றவை கோவில் ஒன்றைக் கட்டினான்.
2. முதலாம் ஆதித்த சோழன் (871-907) முதலாம் ஆதித்தன் சோழப் பேரரசை உருவாக்கினான். இவன் பல்லவ மன்னன் அபராஜிதனின் பலம் கொண்டு பாண்டியரை எதிர்த்தான். ஆனால் 893ல் அபராஜிதனைப் போரில் கொன்றுவிட்டான். தொண்டைமண்டலம் முழுவதுமாக ஆட்சி அமைத்தான்.பாண்டியர்களின் எல்லைகளிலும் ஆட்சி அமைத்தான். மேற்கு கங்கர்களை வெற்றி கொண்டான். தஞ்சை தலைநகரானது. நகரை அழகுபடுத்தி சிவபெருமானின் கோவில்களைக் கட்டினான். சோழர்களின் எழுச்சிக்கு அடிகோலியவன் முதலாம் ஆதித்தன்.



ncs_t.indb 134 3/1/2019 8:35:36 AM

குறிப்பு

3. முதலாம் பராந்தகன்: (907-953) இவன் ஆட்சியைப் பரப்ப மிகவும் ஆர்வமுள்ளவனாக தொடக்கத்திலிருந்தே போர்களில் ஈடுபட்டு வந்தான். மதுரையைக் கைப்பற்றியது இவனுடைய முக்கிய வெற்றி ஆகும். பாண்டிய மன்னன் இரண்டாம் இராஜசிம்மன் சிங்களரின் உதவியை நாடினான். பலவருடங்களான் போரில் ஈடுபட்டுவந்த அவன் இறுதியாக பராந்தகனின் ஆட்சிக்கு அடிபணிந்து மதுரையை இழந்தான். பராந்தகன் இரண்டாம் பிருத்விபதி என்ற மேற்கு கங்கரின் உதவியுடன் பாணர்களையும் வெற்றி கொண்டான். இதை வைத்து அவனுடைய ஆட்சியின் எல்லை மேலும் விரிவடைந்தது.

   இந்த எழுச்சியைக் கண்டு பொறுக்க முடியாமல் இராஷ்டிரகூடர்களின் மன்னன் மூன்றாம் கிருஷ்ணா சோழ நாட்டின் மேல் போர் தொடுத்து பராந்தகனை 949ல் தக்கோலம் என்ற இடத்தில் வென்றான். சோழருக்கு இது பெரும் பின்னடைவையும் ஒரு கடுமையான அதிர்ச்சியையும் கொடுத்தது. 32 ஆண்டு காலத்திற்கு அவர்கள் தமிழக அரசியலில் மிகவும் பலமிழந்து குறைந்த ஆதிக்கத்தில் இருந்தனர். இரண்டாம் பராந்தகனின்(சுந்தர சோழன்) ஆட்சியில்தான் தொண்டை மண்டலம் இராஷ்டிரகூடர்களிடமிருந்து மீட்கப்பட்டது.

4. முதலாம் இராஜராஜன் (985-1014) சோழர்களின் பெருமையை மீட்டு வரலாற்றில் உன்னத இடம் பிடித்த முதலாம் இராஜராஜ சோழன் சிறந்த அரசனாவான். இவனுடைய போர்க் கொள்கைகளில் மேற்கு கங்கர்கள் கிழக்கு சாளுக்கியர்கள்(வெங்கி) மதுரைப்பாண்டியர்கள் கலிங்கத்து கங்கர்கள் கேரளத்து சேரர்கள் ஆகியோர் தோற்கடிக்கப்பட்டு ஆட்சி தெற்கே விரிந்து பரவியது. தவிர கடற்படையின் பலம் பெருக்கி அதன்மூலம் கூர்க நாடு மலபார் கரையோர நாடுகள் மற்றும் இலங்கையை வெற்றி கொண்டான். மாலத்தீவுகளையும் வென்ற இவன் தென் கிழக்குத்தீவுகளையும் ஆக்கிரமித்தான். இவன் தென் கிழக்கு ஆசிய நாடான ஸ்ரீவிஜயப் பேரரசின் துங்கவாமனனிடன் நட்புக் கொண்டான். முதலாம் சக்திவர்மனின் சகோதரன் விமலாதித்தனை வெங்கி அரியணையில் இருத்தினான். இவனுடைய பெண்ணை அவனுக்கு மணம் செய்வித்து சோழருடன் கிழக்கு சாளுக்கியரின் சங்கமம் நிகழ்ந்தது.

   - இராஜராஜன் மிகச் சிறந்த அரசன்.இவனுடைய ஆட்சியில் நாம் காண்பது:
   - போர் வெற்றிகளினால் விரிவாக்கப்பட்ட எல்லைகள்
   - இராஜ ராஜன் பலமுள்ள வீரமுள்ள ஒரு சிறந்த போர்வீரன்
   - தென் கிழக்கு ஆசியாவின் பலமுள்ள கடற்படையை நிறுவினான்
   - இந்த பலமுள்ள கப்பற்படை பிற்கால சோழர்களின் வெற்றிக்கு அடிகோலியது



ncs_t.indb 135 3/1/2019 8:35:36 AM

குறிப்பு

- பேரரசை நிர்மாணிப்பதில் வல்லவன்
- திறமையான ஆட்சியாளன்
- கலை இலக்கியங்களை ஆதரித்தவன்
- உள்ளாட்சி முறைகளை அறிமுகப்படுத்தியவன்

இராஜராஜன் சைவ மதத்தினன் ஆவான். இவன் பிற மதங்களின் மீதும் சகிப்புத் தன்மை கொண்டு ஆதரித்து வந்தான். ராஜமாஜேஸ்வரி சிவன் கோவிலைக் கட்டினான். புத்த விகாரங்களையும் அமைத்துக் கொடுத்தான்.

5. முதலாம் இராஜேந்திரன் (1014-1044) தந்தையின் அடிச் சுவட்டைப் பின்பற்றிய இம் மன்னன் சோழர்களின் பெருமையை மேலும் புகழின் உச்சிக்குக் கொண்டு சென்றான். இவன் சேர நாடு பாண்டிய நாடுகளை வென்று இலங்கையிலும் ஆட்சி அமைத்தான். எனினும் 1029ல் இலங்கையைத் தன் ஆட்சியிலிருந்து விடுவித்தான். சாளுக்கிய அரசன் ஜெயசிம்மனின் வெங்கிப் படையெடுப்பை முறியடித்தான்.பின்னர் சாளுக்கிய அரசன் முதலாம் சோமேஸ்வரனைத் தோற்கடித்து மேற்கு சாளுக்கியர்கள் துங்கபத்திரா நதியை எல்லையாக ஒப்புக்கொள்ள வைத்தான். இவன் கலிங்கத்தின் வழியாகச் சென்று ஒரிஸ்ஸா பாஸ்தராவைக் கடந்து மேற்கு வங்காளத்தின் பால வமிச அரசன் மகிபாலனைத் தோற்கடித்தான். ஆயினும் வட இந்தியாவில் இவன் எல்லைகளை அமைக்கவில்லை. இவனுடைய கடற்படைகள் ஸ்ரீவிஜயப் பேரரசைத் தோற்கடித்து இவர்களுக்கு அடி பணிய வைத்தது. இதன் மூலம் அரேபியக் கடலில் இருந்த சோழர் கடற்படையின் ஆதிக்கத்தினால் அயல் நாட்டு வாணிபமும் காப்பாற்றப்பட்டு வளர்ச்சி அடைந்தது.

   இவன் சிறந்த வெற்றி வீரன். அரபிக் கடலில் கடலாதிக்கம் செய்த முதல் இந்திய மன்னன் இவன் ஆவான். சிறந்த ஆட்சியாளன் நிர்வாகச் சிறப்பு பெற்றவன். கலை கல்வியில் நாட்டம் செலுத்தி ஆதரித்தான். கல்விக்கூடங்களுக்கு நிதி வழங்கினான். கங்கை கொண்ட சோழபுரம் நகரை நிர்மாணித்து அதனைத் தலை நகராக்கினான். பெரிய அரண்மனை மாளிகைகளையும் கோவில்களையும் கட்டுவித்து சோழ கங்கம் என்ற பெயரில் மிகப் பெரிய தடாகத்தை 16 மைல்கள் நீளத்தில் அமைத்தான்.

   தந்தையை விடவும் அதிக அளவில் புகழ் பரப்பி சோழ நாட்டின் பெருமையை உயர்த்தி அதன் எல்லைகளை விரிவடையச் செய்து புகழ் வானின் உச்சிக்குக் கொண்டு சென்றான் இராஜேந்திர சோழன்.

6. முதலாம் ராஜாதிராஜன்: (1044-1052)

   முதலாம் ராஜாதிராஜன் இராஜேந்திர சோழனை அடுத்து மன்னன் ஆனான். இலங்கையிலும் பாண்டியர் நாட்டிலும் ஏற்பட்ட புரட்சிகளை அடக்குவதில் இவன் கவனம் செலுத்த வேண்டியிருந்தது. 1052ல் சோமேஸ்வரர் என்ற சாளுக்கிய மன்னரைத் தோற்கடித்தான். ஆயினும்



ncs_t.indb 136 3/1/2019 8:35:37 AM

போரில் உயிர் நீத்தான். இவனுடைய தம்பி இரண்டாம் இராஜேந்திரன் அரசனானான்.

குறிப்பு

7. இரண்டாம் இராஜேந்திரன் (1052-1063) இவனுடைய ஆட்சியில் இலங்கை அரசனுடன் ஏற்பட்ட போரும் மேற்கு சாளுக்கியரின் படையெடுப்புக்களை முறியடிப்பதிலுமான வீரச் செயல்கள் காணப் படுகின்றன. எல்லைகளைக் காப்பாற்ற இவன் பாடுபட்டான் எனத் தெரிகிறது.
8. முதலாம் வீரராஜேந்திரன் (1063-1070) இவன் இலங்கை மற்றும் ஸ்ரீவிஜயப் பேரரசின் மேலிருந்த ஆதிக்கத்தை வலுப்படுத்தினான். முதலாம் சோமேஸ்வரன் இரண்டாம் சோமேஸ்வரன் இருவரையும் தோற்கடித்தான்.
9. ஆதி ராஜேந்திரன் (1070) முதலாம் வீரராஜேந்திரனைத் தொடர்ந்து ஆதி ராஜேந்திரன் மன்னனானான். சில மாதங்களில் இவன் இறந்து போனான். குகூர் கல்வெட்டுக்கள் இவன் கொடிய நோயால் இறந்தான் என்று குறிப்பிடுகின்றன. இவனுடன் தஞ்சைச் சோழராட்சி முடிவுக்கு வந்தது எனலாம். இதன் பின்னர் வந்த குலோத்துங்க சோழன் கீழைச் சாளுக்கிய மரபைச் சேர்ந்த சோழன் ஆவான்.
10. முதலாம் குலோத்துங்கன்: (1070-1118) இவன் பாண்டிய நாட்டை வென்றான். கேரளத்து சேர நாட்டு மன்னர்களையும் தோற்கடித்தான். நிலையான ஆட்சியை வழங்கினான். இலங்கை அரசகுமாரியை மணமுடித்தான். சீனா பர்மா கனுஜ் கம்போஜா போன்ற அரசுகளுடன் நல்லுறவு வைத்துக் கொண்டான். இவன் ஆட்சியில் நாடு வளமடைந்தது.
11. விக்கிரம சோழன்
12. இரண்டாம் குலோத்துங்கன்
13. இரண்டாம் இராஜராஜன்
14. இரண்டாம் இராஜாதிராஜன்
15. மூன்றாம் குலோத்துங்கன்
16. மூன்றாம் இராஜராஜன்
17. மூன்றாம் இராஜேந்திரன்

இவர்கள் முறையே ஒரு நூற்றாண்டுக்காலம் ஆட்சி புரிந்தனர். ஆனால் இவர்களுடைய ஆதிக்கம் வீழ்ச்சியை நோக்கிப் பயணித்தது. பாண்டியர் ஹோய்சாலர் கக்கட்டியர் மற்றும் கிழக்கிலிருந்த கங்கர்கள் தொடர்ந்து எல்லை ஆக்கிரமிப்புக்கள் செய்து வந்தவண்ணமிருந்தனர். இறுதியில் 1258ல் சுந்தர பாண்டியன் மூன்றாம் இராஜேந்திரனை அடிபணிய வைத்தான். சோழர் வமிசத்தின் தனிப்பட்ட செங்கோலாட்சியின் ஆளுகை அத்துடன் முடிவு பெற்றது. சோழர்களின் பெருமையும் வீழ்ச்சியடைய ஆரம்பித்தது.

சோழர்களின் முக்கியத்துவம்: சோழர்களின் ஆட்சிமுறை நிர்வாகத் திறமை அனைத்தும் இன்றளவும் போற்றப்படுகிறது. அவர்களின் ஆட்சியில் கடற்படை ஆதிக்கமும் உள்ளாட்சி நிர்வாக முறையும் மிகவும் சிறந்ததாகக் கருதப் படுகின்றது.

## 10.2.2 மத்திய மற்றும் மாகாண நிர்வாக அமைப்பு

**குறிப்பு**

அரசன் நிர்வாகத்தின் தலைவனாக இருந்தான். எல்லா அதிகாரங்களும் அவனிடம் இருந்து வந்தன. பல்வேறு பட்டங்களைச் சூட்டிக்கொண்டு இம்மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். தஞ்சாவூர் கங்கைகொண்ட சோழபுரம் முடிகொண்டான் மற்றும் காஞ்சி இவர்களுடைய தலை நகரங்களாக இருந்து வந்தன.ஆட்சி வளமானதாகவும் சிறப்பானதாகவும் இருந்ததால் மன்னர்கள் பெருமை மிக்க செல்வாக்கைப் பெற்றிருந்தனர். மன்னர் மற்றும் அரசியின் உருவங்கள் கோவில்களில் வைக்கப்பட்டிருந்ததால் அவர்கள் வணக்கதிற்குரியவர்கள் தெய்வத்திற்குச் சமமானவர்கள் என்ற பாவனை இருந்தது. இருப்பினும் சோழ மன்னர்கள் தம் குடிகளின் நன்மையில் நாட்டம் செலுத்தி வந்தனர். பட்டத்து இளவரசனைத் தேர்ந்தெடுத்து அவனைத்தம் வாழ் நாளிலேயைப் அரச அலுவல்களில் ஈடுபட வைத்தனர் மன்னர்கள். சோழ மன்னர்களின் உரிமைப் போர்கள் மிகவும் குறைவு எனலாம். வயது காரணமாக இருப்பினும் தகுதிக்கு ஏற்ப இளவரசர் பட்டங்கள் கொடுக்கப் பட்டன. சோழர்களின் அரசு அமைச்சர் மற்றும் அதிகாரிகளின் கீழ் நடத்தப் பட்டது. ஜாகீர்களும் பல விசேடப் பட்டங்களும் பதவிகளும் கொடுக்கப் பட்டு அதிகாரிளைக் கொண்ட ஒரு அரசாங்க அமைப்பு உருவாக்கப் பட்டது. இது அந்த நிர்வாகம் வெற்றியடைய ஏதுவானது.

## 10.2.3 படை மற்றும் போர் முறைகள்

சோழர் காலத்தில் வலிமையான படைகளும் கப்பற்படைகளும் உருவாக்கப் பட்டன. காலாட்படை குதிரைப் படை யானைப்படைகள் முக்கியமான அங்கங்கள். 70 படை அணிகளும் 150000 படை வீரர்களும் 60000 போர் யானைகளும் இருந்தன. அரபிக் குதிரைகளைக் கொண்ட குதிரைப்படை சிறப்பானதாக இருந்தது. அரசனைப் பாதுகாக்க வேலைக்காரர்கள் இருந்தனர். இவர்கள் தம் உயிரையும் பொருட்படுத்தாமல் அரசனின் உயிரைப் பாதுகாத்துவந்தனர். போரில் வெற்றி பெற்றவர்கள் சத்திரிய சிகாமணி பட்டங்களினால் கௌரவிக்கப் பட்டனர். சோழமன்னர்களின் கடற்படை இந்திய மன்னர்களால் முதன் முதலாக அரபிக்கடலில் உருவாக்கப் பட்ட சிறந்த படை ஆகும. இதன் மூலம் தென் கிழக்கு நாடுகளிலும் இலங்கை மாலத்தீவு நாடுகளிலும் சென்று சோழர்கள் ஆக்கிரமித்தனர். அரபிக் கடல் வங்காள விரிகுடாவில் கடலாதிக்கம் பெருகியது. அயல் நாட்டு வாணிபம் பெருகியது.

சோழ அரசர்கள் போர் தர்மங்களைக் கடைப் பிடிக்காததால் இவர்களுடைய படைகள் போருக்குப் பின் கொலை கொள்ளை கற்பழிப்பு தீக்கிரை போன்ற அழிவுச் செயல்களில் ஈடுபட்டனர். எதிரி நாட்டை அழித்தனர் எனலாம்.



ncs_t.indb 138 3/1/2019 8:35:37 AM

குறிப்பு

### 10.2.4 வரி வசூல் முறை

நிலவரிதான் அரசின் முக்கியமான வருவாயாக இருந்தது.முதலாம் இராஜராஜன் தம் குடிகளின் விளைச்சலில் மூன்றில் ஒரு பங்கை வரியாக எடுத்துக் கொண்டான். வரி பணமாகவோ பண்டமாற்று முறையாலோ செலுத்தப் பட்டது. விளை நிலங்கள் தரவாரியாகப் பிரிக்கப்பட்டு தரத்திற்குத் தகுந்த வரி நிர்ணயம் செய்யப்பட்டு விளைச்சலின் அளவின் பேரில் வரி வசூல் செய்யப் பட்டது். சில இடங்களில் ஒரு முழு கிராமமே கணக்கில் எடுக்கப் பட்டு வரி விதிக்கப்பட்டது. வரி வசூல் கடுமையாக இருந்தது. சோழ அரசு நீர்ப்பாசன வசதிகளையும் செய்து வந்தது. காவேரியின் குறுக்கே அணைகள் கட்டப் பட்டன. குளங்களும் ஏரிகளும் உருவாக்கப் பட்டன.நில வரியைத் தவிர அரசு வியாபாரம் தொழில் காடுகள் சுரங்கங்கள் உப்பு போன்றவை மீதும் வரி விதித்தது. அரசின் முக்கிய செலவுகள் அரசன் அரண்மனை இராணுவம் பொதுப் பணி நிர்வாகம்˙ நிர்வாக அதிகாரிகள் செலவுகள் போன்றவைதான்.

### 10.2.5 நிர்வாக அமைப்புக்கள்

பேரரசு பல நிர்வாக மண்டலங்களாகப் பிரிக்கப் பட்டன. ஏழு அல்லது எட்டு பிரிவுகள் இருந்தன. மண்டலங்கள் நாடுகளாகவும் நாடுகள் குர்ரம(கோட்டம்) ஆகவும் கோட்டங்கள் கிராமங்களாகவும் பிரிக்கப் பட்டு ஆளப்பட்டன.

### 10.2.6 கிராம உள்ளாட்சி முறை

சோழர்களின் தனிப்பட்ட வெற்றி எனப்படுவது கிராம உள்ளாட்சி முறை நிர்வாகத்தின் மூலமாகத்தான் எனப் படுகிறது. இந்த அளவிலான ஆயத்தங்களுடன் கிராம உள்ளாட்சி முறை இந்தியாவின் எந்தப் பகுதியிலும் எந்த மன்னனாலும் ஆட்சியாலும் கடைப்பிடிக்கப்பட்டதாகச் சரித்திரம் இல்லை எனலாம். கிராமத்தின் மகாசபை முக்கியப் பங்கேற்று கிராம நிர்வாகத்தில் உதவியது. இதே போல குர்ரம் நாடு மண்டலம் ஆகிய அமைப்புக்களிலும் நிர்வாகத்தின் அமைப்புக்கள் செயல் பட்டன. கிராம உள்ளாட்சி முறையை செவ்வனே அறிய மகாசபையின் கடமைகளும் உரிமைகளும் தகுதிக் கட்டுப்பாடுகளும் பின்வருமாறு:

- இந்தக் கிராமங்கள் 30 வார்டுகளாகப் பிரிக்கப் பட்டன.
- ஒன்றரை ஏக்கர் நிலம் இருப்பவர்
- சொந்த மனையில் வீடு கட்டி வசிப்பவர்
- அரசால் தண்டனை பெறாத குடும்பத்தைச் சேர்ந்தவர் குற்றம் செய்யாதவர்
- ஒரு வேதம் தெரிந்தவர்
- ஒரு பாஷ்யம் தெரிந்தவர்
- 25 முதல் 70 வயதிற்குள் இருப்பவர்



ncs_t.indb 139 3/1/2019 8:35:37 AM

- தொடர்ந்து 3 ஆண்டுகளாக இந்த சபையில் இருத்தல் கூடாது
- கணக்குகளைக் காட்டாதவராக இருத்தல் கூடாது

**குறிப்பு**

இதில் முன்மொழியப்பட்டவர்கள் குடவோலை முறையில் வார்டுக்கு ஒருவராக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். மொத்தத்தில் 30 உறுப்பினர்களைக் கொண்ட இந்த கிராம மகாசபைகள் படித்தவர்களையும் பண்டிதர்களையும் கொண்டது ஆகும். வெவ்வேறு குழுக்களும் இருந்தன. நீதிக் குழு நீர்ப்பாசனக் குழு தோட்டக்கலை குழு போன்ற குழுக்கள் ஏற்படுத்தப் பட்டன.

மகாசபையின் நீதிக்குழு நியாயத்தார் என்று அழைக்கப் பட்டது. இது சிவில் கிரிமினல் வழக்குகளை விசாரித்து தக்க தீர்ப்புக்கள் அளித்தன. சாலைகள் நீர் நிலைகள் சுத்தம் சுகாதாரம் பாதுகாப்பு இவற்றைப் மேற்பார்வையிட்டனர்.

மகாசபையின் அதிகாரங்கள் தேவைப் படும் அளவிற்கு வரையறுத்து அமைக்கப் பட்டிருந்தன. இதில் வரி வசூல் நில உரிமைகள் மாறுதல்கள் குற்ற வழக்குகளை விசாரித்து தீர்ப்பளித்தல் போன்ற அனைத்து அம்சங்களும் இடம் பெற்றிருந்தன. இவை சிறிய குடி அரசுகளாகச் செயல் பட்டதில் வியப்பில்லை.

ஒரு இந்து நாட்டில் அக்காலத்தில் அமைந்திருந்த செம்மையான நீதி வழுவாத திறமை மிக்க நிர்வாகம் எங்கும் காணப்படவில்லை என்று கூறுகிறார் டாக்டர்.கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி. ஆங்கிலேயரும் இதனை வியந்தனர் என்றால் மிகையில்லை.

### உங்கள் முன்னேற்றத்தைப் பரிசோதியுங்கள்

1. இராஜராஜனின் வெற்றிகளைப் பற்றி குறிப்பு வரைக
2. சோழர் வம்சம் பெயர் பெற்ற காரணம் என்ன?
3. சோழர் கால இராணுவத்தின் அமைப்பில் முக்கியமானவை யாவை?

## 10.3 சமூக பொருளாதார மற்றும் சமய நிலை

சமூகத்தில் வர்ணாசிரம முறைப்படி வெவ்வேறு சாதிகள் இருந்தன. ஆயினும் அவர்களிடையே வேற்றுமை இன்றி சமத்துவம் இருந்தது. சாதிக் கலப்பு மணங்களும் காணப்பட்டன. இதனால் உப சாதிகள் ஏற்பட்டன. பெண்கள் நிலை உயர்ந்திருந்தது. அவர்கள் இப்போதைய பெண்களின் மேலுண்டான இந்து மதக் கட்டுப்பாடுகளின்றி அப்போது சுதந்திரமாக இருந்தனர். பர்தா அணியும் வழக்கமும் இருக்கவில்லை. எல்லா சமய சடங்குகளிலும் பெண்கள் கலந்து கொண்டனர். அவர்கள் தம் பெயரில் சொத்துகளின் வாரிசுகளாகப் பங்கு பெற்றனர். தங்கள் பெயரிலேயே சொத்துக்களையும் வைத்துக் கொண்டனர். சதி எனப்படும் உடன் கட்டை ஏறுதல் அவ்வளவாக இல்லை எனலாம். ஒருவனுக்கு ஒருத்தி முறை திருமண முறையானது. ஆயினும் அரசர்



ncs_t.indb 140 3/1/2019 8:35:37 AM

குலம் மற்றும் பிரபுக்கள் செல்வந்தர்கள் ஒன்றுக்கு அதிகமான மனைவிகளை மணமுடித்தனர். தேவதாசி முறையும் இருந்தது. விலை மாதர்களும் இருந்து வந்தனர். அடிமை முறையும் இருந்தது.

குறிப்பு

பொருளாதாரம்: சோழர்கள் காலத்தில் நாட்டில் வளம் கொழித்தது. பயிர்கள் செழித்தன. பாசனவசதி அதிக அளவில் இருந்தது. விளைச்சலில் அதிக ஆதாயம் கிடைத்தது. நிறைய தரிசு நிலங்கள் சாகுபடி செய்யப் பயன்படுத்தப் பட்டன. நாட்டில் அமைதியும் பாதுகாப்பும் நிறைந்து இருந்ததால் வாணிபம் செழித்தது. கடற்படை உதவியால் கடலாதிக்கம் அதிகமானது. அயல் நாட்டு வாணிபம் நன்றாகவே நடந்தது. நல்ல சாலைகள் அமைந்திருந்தபடியால் பயணம் வியாபாரம் எளிதானது.சீனா மலேயா தென் கிழக்கு ஆசிய நாடுகள் மத்தியத் தரைகடல் வளைகுடா நாடுகள் இவற்றில் சோழ நாட்டினர் வியாபாரம் மேற்கொண்டனர். அதிக அளவில் தொழிற்சாலைகளும் நிறுவப் பட்டன. துணி நெய்தல் ஆபரணங்கள் செய்தல் உலோக பட்டறைகள் உப்பு கட்டுமானப் பணிகள் கோவில் கட்டுதல் போன்ற பல துறைகள் முன்னேறின.

சமயம்: சோழ மன்னர்கள் சைவர்களாவர். சிவபெருமானின் கோவில்கள் பல கட்டி வந்தனர்.முதலாம் பராந்தகன் முதலாம் இராஜராஜன் இராஜேந்திரன் ஆதித்தியா மற்றும் இராணி செம்பியன் மாதேவி சைவம் வளர பக்தி மார்க்கம் பெருக அதிக அளவில் உதவி செய்தனர். பராந்தகந் காலத்தில் சிதம்பரம் கோவில் பொன்னால் வேயப் பட்டது. முதலாம் இராஜராஜன் தஞ்சை பிரகதீசுவரர் கோவிலைக் கட்டினான். இலங்கையிலும் சிவன் கோவில் கட்டினான். கங்கைகொண்ட சோழ புரம் கோவில் கட்டப் பட்டது.

இவர்கள் மற்ற மதங்களின் மேல் சகிப்புத் தன்மை கொண்டிருந்தனர். மாசிமகம் மகாமகம் கார்த்திகை தைபூசம் சிவராத்திரி சித்திரை விழா ஐப்பசி விழா போன்றவை சோழர்களின் முக்கிய சமய விழாக்களாம்.தஞ்சை கும்பகோணம் ஆவுடையார்கோவில் காளஹஸ்தி திருக்கடையூர் மற்றும் காஞ்சி முக்கிய தலங்களாகும்.

## 10.4 கலை மற்றும் கட்டிடக் கலை வளர்ச்சி

சோழர்கள் மிகவும் போற்றப்படும் ஒரு வம்சமாகும். திராவிடக் கலை மற்றும் கட்டிடக் கலை சோழர் காலத்தில் செழித்தது. சோழர்கள் போரின் மூலம் கொள்ளையடித்த செல்வங்களை கோவில் கட்டவும் சிலைகள் எழுப்பவும் செலவு செய்தனர்.

கோவில் கட்டுதலில் பல்லவர் வழியைப் பின் பற்றி வந்த சோழர்கள் எல்லா இடங்களிலும் கோவில்களைக் கட்டுவதில் ஈடுபட்டனர். சிறிது காலத்தில் திராவிடக் கலையில் கோவில்கள் எழுப்புவது வழக்கமானது. கோவில்களைத் தவிர வேறு பொதுக் கட்டிடங்களும் எழுப்பப் பட்டன. ஆதித்த கரிகாலன் தன் தந்தை சுந்தர சோழனுக்காக தங்க மாளிகை ஒன்றை எழுப்பினான்.



ncs_t.indb 141 3/1/2019 8:35:37 AM

குறிப்பு

## முற்கால சோழர் கலை:

- உபயோகித்த கலை திராவிடக் கலையாகும்
- கோவில்கள் சிறியதாகக் தோன்றுகின்றன (முதலாம் ஆதித்தன் முதலாம் பராந்தகன்)
- அவை செங்கள் மற்றும் சுண்ணாம்புக் கலவையினால் கட்டப் பெற்றன.
- விஜயாலய சோழேச்சரம் - பிரகாரம் சதுரமாகவும் சன்னதி வட்டமாகவும் அமைந்தது. கலசம் கல்லினால் ஆனது



படம் 10.1 விஜயாலய சோழேச்சரம் கோவில்

- காவேரிக் கரையிலான சீனிவாச நல்லூர் கொரங்கனாதர் கோவில்- முதலாம் பராந்தக சோழன் காலத்தது. சிறிய கோவிலானாலும் அழகிய சிற்பங்களைக் கொண்ட கோவில் இது. சோழர் கால கட்டிடக் கலை வெளிப்படுகிறது.
- மூவர் கோவில் இரண்டாம் பராந்தக சோழனின் குறு நில மன்னனால் கட்டப்பட்டது. மூன்றில் இரண்டு கோபுரங்கள் மட்டும் இப்போது நாம் காண முடிகிறது.

## இடைக்கால சோழர் கலை:

- இராஜராஜ சோழன் மற்றும் முதலாம் இராஜேந்திர சோழன் பல கோவில்களைக் கட்டுவதை ஆதரித்து வந்தனர். திருவாலீஸ்வரம்- உத்திர கைலாச கோவில் (தஞ்சை) மற்றும் வைத்திய நாத கோவில் (திருமழவாடி) இவற்றை ஒரே மாதிரியான கலை நயத்தில் கட்டினர்.
- கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் கட்டப்பட்ட பிரும்மாண்டமான கோவில்கள் வரிசையில் தஞ்சைப் பெரிய கோவில் மற்றும் கங்கைகொண்ட சோழபுரம் கோவில் சோழர் காலக் கட்டிடக் கலை நயத்தைப் பறைசாற்றுகின்றன.



ncs_t.indb 142 3/1/2019 8:35:37 AM

குறிப்பு



படம் 10.2 தஞ்சைப் பெரிய கோவில்
கோபுரம் காண்க. தஞ்சைப் பெரிய கோவில் பெரியதும் உயரமானதும் ஆகும்.

இக்கோவிலில் இரண்டு கோபுரங்கள் ஒரே திசையில் அமைக்கப் பட்டுள்ளன. விமானம் 190அடி உயரமுள்ளது. இவை கல்வெட்டின் குறிப்புக்களில் இராஜராஜன் திருவாசல் என்றும் கேரளாந்தகன் திருவாசல் என்றும் அழைக்கப் பட்டுள்ளன. இக் கோவில் கட்ட 6 வருடங்கள் ஆயின என்ற குறிப்பும் உள்ளது.

இக்கோவில் மராட்டியர்களாலும் நாயக்கர்களாலும் போற்றப் பட்டு மேலும் கட்டுமானங்கள் செய்யப் பட்டன. முதலில் பெருவுடையார் கோவில் என்றழைக்கப்பட்ட இந்தக் கோவில் பின்னர் பிரகதீஸ்வரர் கோவில் என்ற பெயரை அடைந்தது.




படம் 10.3. பிரகதீஸ்வரர் கோவில் தஞ்சாவூர்

குறிப்பு

இக் கோவிலின் கட்டிட நிர்வாகம் மற்றும் நிதி நிர்வாகம் குறித்து கல் வெட்டுக்களில் நிறைய விவரங்கள் அறிவிக்கப் பட்டிருக்கின்றன. 66 உலோக உருவங்கள் உள்ளன. இவற்றைக் குறித்தும் கல் வெட்டுக்களில் விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இக் கோவிலின் கலசம் 3.8 மீட்டர் உயரம் உள்ளது. மூலவரான சிவலிங்கம் மிகப் பெரியதாகும். இரண்டு அடுக்குகளையுடைய கர்ப்பக் கிருகத்தைச் சுற்றிலும் சுவர்ச் சித்திரங்களும் சிற்பங்களும் அலங்கரிக்கின்றன.

இதன் சிறப்பு என்னவென்றால் இக் கோவில் கருங்கற்களைக் கொண்டுதான் கட்டப் பட்டது ஆனால் இக் கோவிலைச் சுற்றுவட்டாரத்தில் எங்கும் கருங்கற்களின் செல்வங்கள் கிடைப்பதாகத் தெரியவில்லை.



படம் 10.4 கங்கை கொண்ட சோழபுரம் கி.பி1030

கங்கைகொண்ட சோழபுரம் ஒரு கலைத்திறன்மிக்க அலாதியான படைப்பாகும். இந்த எழில்மிக்க கோவில் தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயத்திற்கு அடுத்தபடியாக அமைந்துள்ள சோழர்காலக் கலைச்சின்னமாகும். இராசேந்திர சோழன் இந்த ஆலயத்தை பிரகதீஸ்வரர் ஆலயத்திற்கு இணையாக வாழ்நாளிற்கு அப்பாற்பட்ட சின்னமாக அமைக்க ஆசைப்பட்டதில் வியப்பில்லை.

கங்கைகொண்ட சோழபுரம் தஞ்சாவூரில் கி.பி.11ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இராசேந்திரசோழனால் கட்டப்பட்டது. இவர் ராஜராஜசோழனின் மகனாவார்.

கி.பி.1025 ஆம் ஆண்டில் வெற்றி வாகையுடன் வடக்கிலிருந்து திரும்பி வந்த இராசேந்திர சோழன் இந்த “கங்கை கொண்ட சோழேச்சரம்” கோவிலை உருவாக்கி அதில் தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய சிவ லிங்கம் ஒரு கலைச்சின்னமாக விளங்குகிறது.

குறிப்பு

"கங்கை கொண்ட சோழேச்சரம்" மற்றும் சோழகங்கை இராசேந்திர சோழனின் வெற்றியைக் கொண்டாடும் நினைவுச்சின்னங்களாகும்.

கங்கைக் கரையில் சோழர்களின் புலிக் கொடியைப் பறக்கவிட்ட தமிழரின் வீர சாகஸம் கங்கைகொண்ட சோழபுரத்தின் வெற்றிச்சின்னத்தின் மூலம் வெளிப்படுகிறது. தஞ்சையை மிஞ்சி சுமார் 256 வருடங்களுக்கு சோழ நாட்டின் புதிய தலை நகராக விளங்கிய இந்த நகரம் கலிங்கத்துப்பரணி ஒட்டக்கூத்தர் ஜெயம்கொண்டார் மூவருலாவில் வெகுவாகப் புகழப்படுகிறது. இந்த நகரம் இடைக்கால சோழர்களின் கலை நயத்தைக்காட்டும் மிகப் பிரும்மாண்டமான எழில் ஓவியங்காளாகத் திகழ்கின்றன.

சிவபெருமானின் 4 மீட்டர் உயரமுள்ள சிலையினை அடக்கியுள்ள இறைப்புனித இடமானது இரண்டு சுவர்களால் சூழப்பட்டது. அரசகுலத்தினருக்கான தனிப்பட்டவணங்குமிடம் இந்த இரண்டு சுவர்களுக்கிடையில் காணப்பட்டது. இந்த வாயிலில் அழகிய சரஸ்வதி எழுந்தருளியுள்ளாள்.

சாளுக்கியரின் கலை நயம் இந்தக் கோவில்களில் "சூர்யபிதா" "நவக்ருஹா" போன்றவை மூலம் வெளிப்படுகின்றன.

இக் கோவிலின் நீளம் 600 அடியும் அகலம் 450 அடியுமாகும். சுவர்கள் எல்லாம் கற்களால் உருவாக்கப் பட்டவை.

சோழ சாம்ராஜ்யத்தின் வீர தீரச் செயல்களை செப்புப் பட்டயங்களின் மூலமாக கோவிற் சுவர்களின் மேல் பறைசாற்றப்பட்டுள்ளன.

இந்தக் கோவில் பெருமளவில் அன்னியர் படையெடுப்பினால் சீர்குலைந்தாலும் அடிப்படைக் கலை நயமும் கட்டிடக் கலைச் சிறப்பும் வெகுவாகப் பாதிக்கப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கங்கை கொண்ட சோழேச்சரம் சிற்பக்கலைஞர்களுக்கும் சிற்பிகளுக்குமான ஒரு நினைவு அஞ்சலி எனக் கொள்ளலாம். இதன்மூலம் அவர்கள் ஒரு பிரும்மாண்டமான கலை வாழ்க்கைச் சாசனத்தை விட்டுச் சென்றிருக்கிறார்கள் வருங்காலத்தினருக்காக.

## பிற்காலச் சோழர் கலை:

இன்னும் ஒரு நூற்றாண்டிற்கும் சோழர்களின் கலை நயம் தொடர்ந்தது எனலாம். இரண்டாம் இராஜராஜசோழன் 12ஆம் நூற்றாண்டில் கட்டிய ஐராவதேஸ்வரர் கோவில் தாராசுரத்தில் அமைந்துள்ளது. யுனெஸ்கோவினால் உலக புராதனச்சின்னமாக அறிவிக்கப்பட்ட கோவிலாகும் இது. (யுனெஸ்கோ-ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார விஞ்ஞான கலாச்சார அமைப்பாகும்). தாராசுரம் அடைந்த புகழ் இக் கோவிலுக்கு உரியது.

இக் கோவிலில் கலை மற்றும் கட்டிடக்கலை நுட்பம் செழித்துக் காணப்படுகிறது. 85 அடி உயரத்தில் விமானம் அமைக்கப்பட்டுள்ளது. முன் மண்டப அரங்கு பல குதிரைகளால் இழுத்துச் செல்லப்படும் மிகப் பெரிய

இரதம் போல் அமைக்கப்பட்டுள்ளது. கல்லில் வடித்த சிறப்பான சித்திரங்கள் இங்கே காணப்படுகின்றன.

குறிப்பு

மூலவர் ஐராவதேஸ்வரரின் துணைத் தெய்வமான பெரிய நாயகி அம்மனின் சன்னதியும் கோவிலும் தனியாக பக்கத்தில் அமைந்துள்ளது. இக் கோவில் ஐதீகப் படி ஐராவதம் லிங்கத்தை வணங்கியதால் மூலவர் ஐராவதேஸ்வரர் எனப்படுகிறார். அதே போல அன்னைக்கு தெய்வநாயகி என்ற பெயரை சூட்டிக்கொண்டிருக்கிறாள்.

வெளிப்பிரகரத்தின் உட்சுவர்களில் காணப் படும் சிற்பங்கள்தாம் இக் கோவிலில் அமைந்த சிற்பத்திறன். இவை ஆண் பெண் உடற்பயிற்சி சாகசங்களைச் சித்தரிக்கின்றன. பல்வேறு விதமான பயிற்சிமுறைகளையும் இந்த சிற்பங்களின் மூலம் வெளிப்படுத்துகின்றன. இவை பெரும்பாலும் தெருக்கூத்து விளையாட்டுக்களைக் காண்பிக்கும் நாடோடி மக்கள் போல காட்சிகள் சித்தரிக்கப்பட்டுள்ளன.

பிரதான மண்டபம் ராஜ கம்பீரம் எனப்படுகிறது.இந்த இரதத்தைக் கட்டி இழுப்பது யானையாகும். மேற்கூரையை அலங்கரிக்கும் வண்ண ஓவியத்தில் இடம் பெற்றிருப்பது மலர்ந்த தாமரைக்குள் காணும் வகையில் சிவ பார்வதியின் சித்திரங்கள். மற்றொரு சித்திரத்தில் இடம் பெற்றிருப்பது ஒரு கிராமத்தில் நடக்கும் பிரசவம் அதில் உதவும் மற்ற கிராமியப் பெண்கள் என்ற காட்சி. இதன் மூலம் நமக்கு அந் நாட்டின் பழக்க வழக்கங்களைப் பற்றி அறிந்து கொள்ள இயலுகிறது.கைலாச மலையைச் சுமந்து செல்லும் இராவணன் சித்தரிக்கப்பட்ட சிற்பங்கள் வேலைப்பாட்டிற்கு ஒரு எடுத்துக்காட்டு. வீணை இல்லா சரசுவதி புத்தர் பிக்ஷாடனர் அர்த்தனாரீஸ்வரர் பிரம்மா மற்றும் சூரியன் இச் சிற்பங்களும் அலங்கரிக்கின்றன. தாரசுரம் அதிக அளவில் கற்றூண்களைக் கொண்டது. இவற்றில் செதுக்கப் பட்டிருக்கும் சிற்பங்களும் சித்திரங்களும் எண்ணிலடங்கா.



படம் 10.5 தேர்ச் சக்கரம் தாரசுரம் கோவில் கி.பி 1200



ncs_t.indb 146 3/1/2019 8:35:38 AM

குறிப்பு



படம் 10.6 ஐராவதேஸ்வரர் கோவில் தாராசுரம்- வேலைப்பாடுடைய தூண்

மூன்றாம் குலோத்துங்க சோழன் கட்டுவித்த கோவில் கம்பஹரீஸ்வர கோவில். இது திருபுவனத்தில் அமைந்துள்ளது. தாராசுரம் கங்கைகொண்ட சோழ புரம் மற்றும் தஞ்சாவூர் கோவில் கட்டுமானக் கலை நுட்பத்திற்கு இணையானது.

வெண்கலச் சிலைகள்: சோழர்காலத்தின் உலோகச் சிலைகள் சிறந்த வேலைப்பாடுள்ளவையாகக் கருதப் படுகின்றன.11ஆம் 12ஆம் நூற்றாண்டுகளில் சிற்பிகளுக்குக் கிடைத்த சுதந்திரமும் கலை நயத்திற்கான ஆதரிப்பும் இந்த சிற்பங்களையும் சிலைகளையும் பார்க்கையில் தெரிகின்றது.



படம் 10.7 சிவ பார்வதி சிலை வெண்கலச் சிலை கி.பி.1200

விக்கிரகங்களின் பயன்: இந்த வெண்கல விக்கிரகங்கள் (சிலைகள்) வழிபாட்டின்போது அலங்காரம் மற்றும் ஊர்வலம் வர உபயோகப் பட்டன எனலாம். வெண்கலச் சிலைகளை அலங்கரிக்கும் வழக்கம் 1000 ஆண்டுகளுக்கு முன்னரே இருந்ததாகக் கருதப் படுகிறது.



ncs_t.indb 147 3/1/2019 8:35:38 AM

குறிப்பு



படம் 10.8. பிரகதீஸ்வரர் கோவிலில் இருக்கும் முதலாம் இராஜேந்திர சோழனின் சிலை

## இழந்த மெழுகு முறை

வெண்கலச்சிலைகளை உருவாக்கும் கலையான இழந்த மெழுகு முறை பெரும்பாலும் பின்பற்றப் பட்டது. இதில் தேன்மெழுகும குங்கிலியமும் கலந்த ஒரு கலவை எண்ணை கலந்து பிசையப் படும். சிலைகளின் வடிவங்களும் அதன் நுட்பமான வேலைப்பாடுகளும் செய்யப் பட்டபின்னர் சிலைகள் பஞ்ச லோகத்தில் வார்க்கப் பட்டு எடுக்கப்படும் இந்த முறையில் மெழுகு உருகி ஆவியாகிவிடும்.

கம்பீர காட்சி முறை: நடனமாடும் நடராசர் சிலையைப் பார்த்தால் அதன் நுண்ணிய வேலைப்பாடுகள் சிறு அலங்காரங்கள் மற்றும் ஆயுதங்கள் ஆபரணங்கள் போன்றவை காணப்படுகின்றன. இதைத்தவிர நாம் கூர்ந்து பார்த்தால் அதன் சமய தத்துவங்களும் புரிபடும். இது கம்பீர காட்சி முறை சிலைகளாகக் கருதப் படுகின்றன.



படம்:10.9 சோழரின் வெண்கல நடராசர் சிலை- அமெரிக்க அருங்காட்சியகத்தில்

சோழர்களின் ப்ரெஸ்கோ சித்திரங்கள்: 1931 ஆம் ஆண்டில் தஞ்சைப் பெரிய கோவிலின் பிரகாரத்தில் சுவர்ச்சித்திரங்கள் கண்டுபிடிக்கப் பட்டன. இவை ஆராய்ச்சியாளர்களின் பார்வையில் ப்ரெஸ்கோ என்ற வகைக் கலையைச்



ncs_t.indb 148 3/1/2019 8:35:38 AM

சேர்ந்தது என்று கருதுகின்றனர். இந்த முறையில் சுண்ணாம்புக்கலவையைத் தெளித்து அது காயும் முன் வண்ணக் கலவைகளைக் கொண்டு வரையப் படும் சித்திரங்கள்தான் இவை.





படம் 10.10 நடனமாடும் பெண்டிர் பிரகதீஸ்வரர் கோவில் கி.பி 1100



படம் 10.11 இன்னொரு சித்திரம் தஞ்சை பிரகதீஸ்வரர் கோவில் பிரகாரத்தில் உள்ளது

### உங்கள் முன்னேற்றத்தைப் பரிசோதியுங்கள்

4. சோழர் காலத்தில் அரசாங்கத்தின் முக்கிய வருவாய் எந்தத்துறையிலிருந்து வசூலிக்கப்பட்டது?
5. மகாசபையின் நீதிக் குழுவினரைப் பற்றி சிறு குறிப்பு வரைக
6. சோழர் காலத்தில் ஆதரிக்கப்பட்ட தொழிற்சாலைத் தொழில்கள் யாவை?

## 10.5 திறன் அடைவிற்கான பரிசோதனைக் கேள்விகளுக்கு விடைகள்

1. முதலாம் இராஜராஜன் (985-1014) சோழர்களின் பெருமையை மீட்டு வரலாற்றில் உன்னத இடம் பிடித்த முதலாம் இராஜராஜ சோழன் சிறந்த அரசனாவான். இவனுடைய போர்க் கொள்கைகளில் மேற்கு

குறிப்பு

கங்கர்கள் கிழக்கு சாளுக்கியர்கள்(வெங்கி) மதுரைப்பாண்டியர்கள் கலிங்கத்து கங்கர்கள் கேரளத்து சேரர்கள் ஆகியோர் தோற்கடிக்கப்பட்டு ஆட்சி தெற்கே விரிந்து பரவியது. தவிர கடற்படையின் பலம் பெருக்கி அதன்மூலம் கூர்க நாடு மலபார் கரையோர நாடுகள் மற்றும் இலங்கையை வெற்றி கொண்டான். மாலத்தீவுகளையும் வென்ற இவன் தென் கிழக்குத்தீவுகளையும் ஆக்கிரமித்தான். இவன் தென் கிழக்கு ஆசிய நாடான ஸ்ரீவிஜயப் பேரரசின் துங்கவாமனனிடன் நட்புக் கொண்டான். இவன் மற்ற மதங்களிடம் சகிப்புத்தன்மையைக் காட்டியதால் எல்லா மதங்களும் வளர்ச்சியடைந்தன.

2. சோழர்களின் முக்கியத்துவம்: சோழர்களின் ஆட்சிமுறை நிர்வாகத் திறமை அனைத்தும் இன்றளவும் போற்றப்படுகிறது. அவர்களின் ஆட்சியில் கடற்படை ஆதிக்கமும் உள்ளாட்சி நிர்வாக முறையும் மிகவும் சிறந்ததாகக் கருதப் படுகின்றது.
3. காலாட்படை குதிரைப் படை யானைப்படைகள் முக்கியமான அங்கங்கள். 70 படை அணிகளும் 150000 படை வீரர்களும் 60000 போர் யானைகளும் இருந்தன. அரபிக் குதிரைகளைக் கொண்ட குதிரைப்படை சிறப்பானதாக இருந்தது.
4. நிலவரிதான் அரசின் முக்கியமான வருவாயாக இருந்தது.முதலாம் இராஜராஜன் தம் குடிகளின் விளைச்சலில் மூன்றில் ஒரு பங்கை வரியாக எடுத்துக் கொண்டான். வரி பணமாகவோ பண்டமாற்று முறையாலோ செலுத்தப் பட்டது. விளை நிலங்கள் தரவாரியாகப் பிரிக்கப்பட்டு தரத்திற்குத் தகுந்த வரி நிர்ணயம் செய்யப்பட்டு விளைச்சலின் அளவின் பேரில் வரி வசூல் செய்யப் பட்டது.
5. மகாசபையின் நீதிக்குழு நியாயத்தார் என்று அழைக்கப் பட்டது. இது சிவில் கிரிமினல் வழக்குகளை விசாரித்து தக்க தீர்ப்புக்கள் அளித்தன. சாலைகள் நீர் நிலைகள் சுத்தம் சுகாதாரம் பாதுகாப்பு இவற்றைப் மேற்பார்வையிட்டனர்.
6. அதிக அளவில் தொழிற்சாலைகளும் நிறுவப் பட்டன. துணி நெய்தல் ஆபரணங்கள் செய்தல் உலோக பட்டறைகள் உப்பு கட்டுமானப் பணிகள் கோவில் கட்டுதல் போன்ற பல துறைகள் முன்னேறின.

## 10.6 உரைச் சுருக்கம்

- தமிழகத்தில் நீண்ட காலம் ஆட்சி புரிந்த பெருமை சோழ வம்சத்தினருக்கு உண். அவர்கள் ஆட்சி செய்த தமிழகம் இன்றைய கேரளா மற்றும் கர்நாடகத்தையும சேர்ந்த பகுதியாக இருந்தது.
- சோழப் பேரரசு மிகவும் தொன்மையானதாகும். சோழர்களைக் குறித்து மகாபாரதத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. அசோகரின் கல்வெட்டுக்களிலும் மெகஸ்தனிஸ் பயணக் குறிப்புக்களிலும் சோழர்கள் குறித்த குறிப்புக்கள்



ncs_t.indb 150 3/1/2019 8:35:39 AM

உள்ளன. இதேபோல் காத்தியாயனர் சோழர் குறித்து குறிப்பிடுகிறார். சோழரின் இலங்கை மன்னர்களுடனான உறவு நிலை குறித்து மகாவம்சம் இலக்கியம் குறிப்பிடுகிறது. டோலமியும் ரீவழடநஅல) சோழர்கள் பற்றிக் குறிப்பிடுகிறார். சங்க கால இலக்கியங்கள் சோழ அரசர்களைப் பற்றியும் அவர்தம் நீதி நேர்மை கொடை குணங்கள் குறித்தும் குறிப்பிடுகின்றன.

- பண்டைய சோழ நாடு தற்போதைய தமிழ் நாடு கேரளா மற்றும் கர் நாடகத்தின் பெரும் பகுதிகள் அடங்கிய பேரரசாக விளங்கியது எனலாம்.
- விஜயாலய சோழன் (850-871) தஞ்சைச் சோழ வம்சத்தின் முதல் மன்னனாகத் தஞ்சையிலிருந்து ஆட்சி புரிந்தான். இவன் பாண்டியரின் குறு நில மன்னனாக இருந்தான். இவன் காவேரி பள்ளத்தாக்கையும் கோசல பள்ளத்தாக்கையும் வெற்றி கொண்டான்.
- முதலாம் ஆதித்த சோழன் (871-907) தொண்டைமண்டலம் முழுவதுமாக ஆட்சி அமைத்தான்.பாண்டியர்களின் எல்லைகளிலும் ஆட்சி அமைத்தான். மேற்கு கங்கர்களை வெற்றி கொண்டான். தஞ்சை தலைநகரானது. நகரை அழகுபடுத்தி சிவபெருமானின் கோவில்களைக் கட்டினான். சோழர்களின் எழுச்சிக்கு அடிகோலியவன் முதலாம் ஆதித்தன்.
- முதலாம் பராந்தகன்: (907-953) இவன் ஆட்சியைப் பரப்ப மிகவும் ஆர்வமுள்ளவனாக தொடக்கத்திலிருந்தே போர்களில் ஈடுபட்டு வந்தான். மதுரையைக் கைப்பற்றியது இவனுடைய முக்கிய வெற்றி ஆகும்.
- இந்த எழுச்சியைக் கண்டு பொறுக்க முடியாமல் இராஷ்டிரகூடர்களின் மன்னன் மூன்றாம் கிருஷ்ணா சோழ நாட்டின் மேல் போர் தொடுத்து பராந்தகனை 949ல் தக்கோலம் என்ற இடத்தில் வென்றான். இது பெரும் பின்னடைவையும் ஒரு கடுமையான அதிர்ச்சியையும சோழர்களுக்குக் கொடுத்தது.
- முதலாம் இராஜராஜன் (985-1014) சோழர்களின் பெருமையை மீட்டு வரலாற்றில் உன்னத இடம் பிடித்த முதலாம் இராஜராஜ சோழன் சிறந்த அரசனாவான். இவனுடைய போர்க் கொள்கைகளில் மேற்கு கங்கர்கள் கிழக்கு சாளுக்கியர்கள்(வெங்கி) மதுரைப்பாண்டியர்கள் கலிங்கத்து கங்கர்கள் கேரளத்து சேரர்கள் ஆகியோர் தோற்கடிக்கப்பட்டு ஆட்சி தெற்கே விரிந்து பரவியது
- முதலாம் இராஜேந்திரன் (1014-1044)இம் மன்னன் சோழர்களின் பெருமையை மேலும் புகழின் உச்சிக்குக் கொண்டு சென்றான். இவன் சேர நாடு பாண்டிய நாடுகளை வென்று இலங்கையிலும் ஆட்சி அமைத்தான். சாளுக்கிய அரசன் முதலாம் சோமேஸ்வரனைத் தோற்கடித்து மேற்கு சாளுக்கியர்கள் துங்கபத்திரா நதியை எல்லையாக ஒப்புக்கொள்ள வைத்தான்.இவனுடைய கடற்படைகள் ஸ்ரீவிஜயப் பேரரசைத் தோற்கடித்து இவர்களுக்கு அடி பணிய வைத்தது. இதன் மூலம் அரேபியக் கடலில் இருந்த சோழர் கடற்படையின்

குறிப்பு

ஆதிக்கத்தினால் அயல் நாட்டு வாணிபமும் காப்பாற்றப்பட்டு வளர்ச்சி அடைந்தது.

- முதலாம் ராஜாதிராஜன் இராஜேந்திர சோழனை அடுத்து மன்னன் ஆனான். இலங்கையிலும் பாண்டியர் நாட்டிலும் ஏற்பட்ட புரட்சிகளை அடக்குவதில் இவன் கவனம் செலுத்த வேண்டியிருந்தது
- சோழர்களின் ஆட்சிமுறை நிர்வாகத் திறமை அனைத்தும் இன்றளவும் போற்றப்படுகிறது. அவர்களின் ஆட்சியில் கடற்படை ஆதிக்கமும் உள்ளாட்சி நிர்வாக முறையும் மிகவும் சிறந்ததாகக் கருதப் படுகின்றது
- பேரரசு பல நிர்வாக மண்டலங்களாகப் பிரிக்கப் பட்டன. ஏழு அல்லது எட்டு பிரிவுகள் இருந்தன. மண்டலங்கள் நாடுகளாகவும் நாடுகள் குர்ரம(கோட்டம்) ஆகவும் கோட்டங்கள் கிராமங்களாகவும் பிரிக்கப் பட்டு ஆளப்பட்டன.
- முன்மொழியப்பட்டவர்கள் குடவோலை முறையில் வார்டுக்கு ஒருவராக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். மொத்தத்தில் 30 உறுப்பினர்களைக் கொண்ட இந்த கிராம மகாசபைகள் படித்தவர்களையும் பண்டிதர்களையும் கொண்டது ஆகும்.
- சமூகத்தில் வர்ணாசிரம முறைப்படி வெவ்வேறு சாதிகள் இருந்தன. ஆயினும் அவர்களிடையே வேற்றுமை இன்றி சமத்துவம் இருந்தது. சாதிக் கலப்பு மணங்களும் காணப்பட்டன. இதனால் உப சாதிகள் ஏற்பட்டன
- சோழ மன்னர்கள் சைவர்களாவர். சிவபெருமானின் கோவில்கள் பல கட்டி வந்தனர்.முதலாம் பராந்தகன் முதலாம் இராஜராஜன் இராஜேந்திரன் ஆதித்தியா மற்றும் இராணி செம்பியன் மாதேவி சைவம் வளர பக்தி மார்க்கம் பெருக அதிக அளவில் உதவி செய்தனர். பராந்தகந் காலத்தில் சிதம்பரம் கோவில் பொன்னால் வேயப் பட்டது
- சோழர்கள் மிகவும் போற்றப்படும் ஒரு வம்சமாகும். திராவிடக் கலை மற்றும் கட்டிடக் கலை சோழர் காலத்தில் செழித்தது. சோழர்கள் போரின் மூலம் கொள்ளையடித்த செல்வங்களை கோவில் கட்டவும் சிலைகள் எழுப்பவும் செலவு செய்தனர்.
- கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் கட்டப்பட்ட பிரும்மாண்டமான கோவில்கள் வரிசையில் தஞ்சைப் பெரிய கோவில் மற்றும் கங்கைகொண்ட சோழபுரம் கோவில் சோழர் காலக் கட்டிடக் கலை நயத்தைப் பறைசாற்றுகின்றன.
- வெண்கலச் சிலைகள்: சோழர்காலத்தின் உலோகச் சிலைகள் சிறந்த வேலைப்பாடுள்ளவையாகக் கருதப் படுகின்றன.11ஆம் 12ஆம் நூற்றாண்டுகளில் சிற்பிகளுக்குக் கிடைத்த சுதந்திரமும் கலை நயத்திற்கான ஆதரிப்பும் இந்த சிற்பங்களையும் சிலைகளையும் பார்க்கையில் தெரிகின்றது.



ncs_t.indb 152 3/1/2019 8:35:39 AM

## 10.6 சுய பரிசோதனை கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

குறிப்பு

### குறுகிய விடைகளுக்கான வினாக்கள்

1. சோழ அரசு பற்றி ஒரு சிறு குறிப்பு வரைக
2. இராஜராஜ சோழன் எவ்வாறு தன் எல்லைகளை விரிவு படுத்தினான் ?
3. சோழர் காலத்தில் திராவிடர் கட்டிடக் கலை நுட்பம் எவ்வாறு வளர்ந்தது?
4. இழந்த மெழுகு முறை யாவது?

### விரிவான விடைகளுக்கான வினாக்கள்

1. சோழர்களின் நிர்வாக முறையின் சிறப்புக்கள் யாவை?
2. மகாசபை உறுப்பினர்கள் எவ்வாறு தேர்வு செய்யப்படுகின்றனர்?
3. உள்ளாட்சி முறை சிறந்த சோழர் முறை என்று புகழப் படுகிறது- இது உண்மையா? விவரிக்கவும்
4. கலை மற்றும் கட்டிடக் கலை சோழரின் பங்களிப்பு என்ன?

# அலகு 11 பிற்காலப் பாண்டியர்கள் (1216-1345)

குறிப்பு

**அமைப்பு**

11.0 அறிமுகம்
11.1 நோக்கங்கள்
11.2 பிற்காலப் பாண்டியர்களின் தோற்றம்
11.2.1 முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (1216-1238)
11.2.2 இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (1239-1251)
11.2.3 ஜாதவர்மன் சுந்தர பாண்டியன˙(1251-1268)
11.2.4 முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன˙(1268-1311)
11.2.5 மார்க்கோ போலோவின் வருகை
11.2.6 சமூக பொருளாதார மற்றும் சமய நிலை
11.2.7 கலை மற்றும் கட்டிடக் கட்டுமானக் கலை
11.3 திறன் அடைவிற்கான பரிசோதனைக் கேள்விகள்
11.4 உரைச் சுருக்கம்
11.5 முக்கிய சொற்கள்.
11.6 சுய பரிசோதனைக் கேள்விகள் மற்றும் பயிற்சிகள்.
11.6.1 குறுகிய விடைகளுக்கான வினாக்கள்:
11.6.2 விரிவான விடைகளுக்கான வினாக்கள்:
11.7 மேலும் படிக்க

## 11.0 அறிமுகம்

கி.பி 879 ல் திருப்புறம்பியம் போரில் முற் காலப் பாண்டிய மன்னன் வரகுணவர்ம பாண்டியனைத் தோற்கடித்த சோழர்களுக்குக் கிடைத்த வெற்றியினால் அவர்கள் வடக்கில் துங்கபத்திரா நதியில் தொடங்கி தெற்கே கன்னியாகுமரி வரை 200ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சி புரிய ஒரு கம்பீரமான வலுவான ஆட்சி ஏற்பட்டது. சங்க காலப் பாண்டிய மன்னர்களுள் முற்காலப் பாண்டியர்களாக சிறப்பாக ஆண்ட இறுதி மன்னன் கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி ஆவான். இவனுக்குப் பின் பாண்டிய ஆட்சி முடிவுக்கு வந்தது.

மீண்டும் பிற்காலப் பாண்டியர்களால் 1216 முதல் 1345 வரையிலான கால கட்டத்தில் பாண்டிய ஆட்சி நடத்தப்பட்டது. இரண்டாம் குலோத்துங்க சோழன் 1218ல் இறக்கும் தறுவாயிலும் பாண்டிய நாடு சோழர்களின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. மூன்றாம் குலோத்துங்க சோழனின் காலத்தில்தான் பாண்டிய நாட்டின் மீதான சோழர்களின் பிடி தளர்ந்தது. 1231ல் சுந்தரபாண்டியன்



ncs_t.indb 154 3/1/2019 8:35:39 AM

குறிப்பு

இராஜராஜனை வெற்றி கொண்டதால் சோழ நாட்டின் முடி கொண்ட சோழபுரத்தில் முடிசூடிக் கொண்டான். மூன்றாம் இராஜராஜனுக்குப் பின் வந்த இராஜேந்திரனை சடையவர்மன் சுந்தரபாண்டியன் தோற்கடித்தான். இதனால் சோழப் பேரரசு வீழ்ச்சியுற்றது. பின்னர் ஏற்பட்ட நிகழ்வுகளால் குலசேகர பாண்டியனின் மகன் களான வீரபாண்டியனுக்கும் சுந்தரபாண்டியனுக்கும் வாரிசுரிமைக்கான உள்பூசல் நிலவி வந்தது. அப்போது படையெடுத்து வந்த மாலிக் கபூர் மதுரையைச் சூறையாடி பாண்டியர்களின் ஆட்சியின் அஸ்தமனத்திற்கும் அடி கோலினான். 1330ல் தில்லி சுல்தானியத்தின் கீழ் மதுரையில் ஆட்சி ஏற்பட்டது.

## 11.1 நோக்கங்கள்

இந்த அலகில் உள்ள விவரங்களின் மூலம் நீங்கள்

- பிற்காலப் பாண்டியர்களின் பின்னணியை விவரிக்க இயலும்
- பிற்காலப் பாண்டியர்களின் பங்களிப்பை ஆராய இயலும்
- வருங்கால சந்ததியினரின் மீது உண்டான பிற்காலப் பாண்டியர்களின் தாக்கம் குறித்து விரிவாக அறிய இயலும்

## 11.2 பிற்காலப் பாண்டியர்களின் தோற்றம்

13ஆம் நூற்றாண்டு பாண்டிய ஆட்சியின் வரலாற்றில் மிக முக்கியமான காலமாகும். இக் காலத்தில்தான் தமிழ் நாடு 7 பாண்டிய மன்னர்களின் எழுச்சியையும் உயர்வையும் ஒருசேரக் கண்டது. இந்த அரசர்கள் அனைவர்க்கும் நாயகர்களாகக் கருதப்பட்டனர். முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் 13ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உருவாக்கிய அடித்தளத்தின் மேல் எழுப்பிய பாண்டிய சாம்ராஜ்ஜியம் ஜாதவர்மன் சுந்தர பாண்டியனின் கீழ் 13ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் விரிவடைந்து எழுச்சி பெற்று புகழின் உச்சத்தை எட்டிப் பிடித்தது. இறுதியில் ஏற்பட்ட வாரிசுரிமைப் போரினால் பாண்டிய நாடு தில்லி சுல்தானியத்தின் ஏகாதிபத்தியத்தின் கீழ் அடிமைப்படுத்தப்பட்டது. இதன் காரணகர்த்தா சுந்தரபாண்டியனாவான். கண்ணகியின் கற்புக் கனலில் எரிந்த மதுரை மீண்டும் காலம் காலமாகக் கண்ணீர் சிந்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

பாண்டிய மன்னர்களின் வரிசையில் இடம் பெறும் மன்னர்கள்:

- இரண்டாம் பராக்கிரம பாண்டியன் (1212-1215)
- மாறவர்மன் சுந்தரபாண்டியன் (1216-1238)
- இரண்டாம் சுந்தரவர்மன் குலசேகரன் (1238-1240)
- இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (1238-1251)
- முதலாம் ஜடையவர்ம சுந்தர பாண்டியன் (1251-1268)
- முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் (1268-1310)

குறிப்பு

- நான்காம் சுந்தரபாண்டியன் (1309-1327)
- நான்காம் வீரபாண்டியன் (1309-1345)

மாறவர்மன் சுந்தர பாண்டியன் (1216-1238) காலமும் ஜாதவர்மன் சுந்தரபாண்டியன் காலமும் (1251-1268) பிற்காலப் பாண்டியர்களின் பொற்காலமாகக் கருதப் படுகிறது. இவர்கள் தெலுங்கு நாட்டை வென்றனர். கலிங்க நாட்டை வென்று இலங்கையையும் கைப்பற்றினர்.

இவர்கள் காலத்தில் தென் கிழக்கு ஆசியாவின் கடல் வாணிபப் பேரரசர்களான ஸ்ரீவிஜயா மற்றும் அவர்களின் வழித் தோன்றல்களுடன் வாணிபம் நடந்து வந்தது. பாண்டியர்கள் இலக்கியத்திலும் வாணிபத்திலும் சிறந்து விளங்கினர். இவர்கள் முத்துக் குளித்தலையும் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். இலங்கை இந்தியா இடையே இருந்த கடலில் கிடைக்கின்ற அருமையான முத்துக்கள் இன்றும் விலையுயர்ந்தவையாகக் கருதப் படுகின்றன.

### 11.2.1 முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (1216-1238)

இவன் மிகவும் திறமைசாலியானாலும் அதிக அளவில் பேராசை பிடித்த போக்கு இருந்தபடியால் போர்களிலும் அதன் மூலம் கைப்பற்றப்படும் செல்வத்தின் மீதும் அதிக நாட்டம் செலுத்தி வந்தான். 1219ல் இவன் சோழ நாட்டின் மீது படையெடுத்து மூன்றாம் இராஜராஜனைத் தோற்கடித்தான். அதன் பின்னர் மூன்றாம் இராஜராஜனைக் குறு நிலமன்னனாக ஏற்றுக் கொண்டு கப்பம் பெற்று வந்தான். வலிமை வாய்ந்த ஹொய்சாலர்களுடன் மண உறவை ஏற்படுத்திக் கொண்ட சோழர்கள் அதை வைத்து பாண்டியர்களை முறியடிக்கும் தருணத்தை நோக்கியிருந்தனர். இதனால் உறையூர் தஞ்சாவூர் நகரங்கள் தீக்கிரையாக்கப் பட்டன.

### 11.2.2 இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன்(1239-1251)

இவனுடைய ஆட்சிக் காலத்தில் சோழ நாட்டில் மூன்றாம் இராஜேந்திரன் ஆட்சி புரிந்து வந்தான். இவன் பாண்டிய நாட்டின் மீது சில வெற்றிகளையும் பெற்றான். இதற்கிடையே இரண்டாம் சுந்தர பாண்டியன் ஹொய்சால மன்னன் வீர சோமேஸ்வரனுடன் உடன்படிக்கை செய்துகொண்டு சோழர்களை விரட்டியடித்தான்.

### 11.2.3 முதலாம் ஜடையவர்மன் சுந்தர பாண்டியன் (1251-1268)

இவனது காலத்தில் பாண்டிய நாடு மிகவும் புகழ் பெற்று விளங்கியது. ஆட்சியின் எல்லை விரிவடைந்தது. வடக்கில் நெல்லூர் கடப்பா ஆகிய தெலுங்கு நாடுகளிலும் பரவியது. பேரரசாகப் பரிணமித்தது. முக்கிய அம்சங்களாக இவன் ஆட்சியில்:



ncs_t.indb 156 3/1/2019 8:35:39 AM

- பாண்டிய அரசு புகழின் உச்சியைத் தொட்டது. அதிகாரம் கொடிகட்டிப் பறந்தது.
- வடக்கில் எல்லை விரிவடைந்தது
- பேரரசாக உருவாகியது
- 1258-60ல் மூன்றாம் இராஜேந்திர சோழனை அடக்கி வைத்தான்
- ஹொய்சாலர்கள் தோற்கடிக்கப்பட்டு அவர்களுடைய படைத்தளபதி சிங்கணர் என்பவர் கொல்லப் பட்டான். கொப்பா கோட்டை கைப்பற்றப் பட்டது.
- இலங்கை மீதும் படையெடுத்துச் சென்று சிங்களர்கள் தோற்கடிக்கப் பட்டனர். அங்கிருந்து ஏராளமான குதிரைகள் யானைகள் முத்துக்கள் கைப்பற்றப்பட்டன.
- கடவ மன்னர் கோப்பெருஞ்சிங்கன் தோற்கடிக்கப்பட்டு சேத்தமங்கலம் கோட்டை கைப்பற்றப் பட்டது.
- பாணர்கள தோற்கடிக்கப்பட்டு கொங்கு நாடு பாண்டிய நாட்டுடன் இணைக்கப்பட்டது.
- தெலுங்கு நாட்டில் சோழக் குறு நில மன்னர் கந்த கோபாலன் தோற்கடித்துக் கொல்லப்பட்டார்.
- காஞ்சி கைப்பற்றப்பட்டு பாண்டிய நாட்டின் இரண்டாம் தலை நகராக அறிவிக்கப்பட்டது.
- ககாட்டிய மரபு மன்னர் கணபதி வாரங்கல் நாட்டில் தோற்கடிக்கப்பட்டார். அந்த நாடும் பாண்டிய நாட்டுடன் இணைக்கப் பட்டது.

ஜடையவர்ம சுந்தரபாண்டியனின் பெருமை: இவன் இந்து மதத்தை ஆதரித்தான். ஸ்ரீரங்கம் மற்றும் சிதம்பரம் கோவில்களுக்கு நன் கொடை வழங்கிவந்தான். இக் கோவில்களின் மேற்கூரைகள் பொன் தகட்டினால் வேயப் பட்டன. இதனால் பொன் வேய்ந்த பெருமாள் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றான். பல சமணப் பள்ளிகளுக்கு நன்கொடை வழங்கப் பட்டது. இவனுடைய ஆட்சி இரண்டாம் பாண்டியப் பேரரசின் பொற்காலம் என்று கருதப்படுகிறது..

## 11.2.4 முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் (1268-1311)

பாண்டியப் பேரரசின் கடைசி சிறந்த அரசன் ஆவான். சிறந்த வெற்றி வீரன். சேரனைத் தோற்கடித்து கொல்லத்தைக் கைப்பற்றியதால் கொல்லம் கொண்டான் என்றும் அழைக்கப் படுகிறான். இலங்கை மீது படையெடுத்து பெரும் அழிவை ஏற்படுத்தினான். புத்த பெருமானின் பல நினைவுச் சின்னங்களை ஆர்வத்துடன் கவனித்துக் கவர்ந்தும் வந்தான்.

இவனுடைய காலத்தில்தான் வெனீஸ் நகர பயணியான மார்க்கோபோலோவும் முஸ்லீம் வரலாற்று ஆசிரியரான வாசப் என்பவரும் வருகை புரிந்தனர்.

குறிப்பு

இவனுடைய இறுதிக்காலம் அத்தனை இனிமையாகக் கழியவில்லை என்பர். இவனுடைய இரண்டு தாரங்களின் மகன்கள் வாரிசுரிமைப் போரில் இறங்கி மகன் நான்காம் சுந்தர பாண்டியன் 1310ல் தந்தையைக் கொலை புரிந்தான். கூர் மதியும் போர்த்திறமையும் உள்ள இன்னொரு மகன் வீரபாண்டியனுடன் ஏற்பட்ட போரில் சுந்தரபாண்டியன் தோற்றான். அதன் விளைவாக 1311ல் மதுரை மேல் படையெடுத்த மாலிக் கபூர் என்ற தில்லி சுல்தானிய தளபதியிடம் முறையிட்ட சுந்தரபாண்டியன் சொக்க நாதர் கோவில் தீக்கிரையாக்கவும் மதுரை நகரைச் சூறையாடவும் தீக்கிரையாக்கவும் பெருங்காரணமானான் எனப்படுகிறது. இந்தத் தீய செயல்களால் மதுரை பொலிவை இழந்தது. பாண்டியப் பேரரசு கி.பி. பதினோராம் நூற்றாண்டில் தமிழக வரலாற்றிலிருந்து மறைந்து ஒழிந்தது.

## 11.2.5 மார்க்கோ போலோவின் வருகை:

1291ல் மார்க்கோ போலோ சீனாவிலிருந்து இலங்கை வழியாக மதுரையை அடைந்தார் எனப் படுகிறது.

இவர் பாண்டியப் பேரரசில் நிலவிய பொருளாதார சமூக மற்றும் அரசியல் வாழ்க்கை முறை குறித்து பயணக் குறிப்புகள் எழுதியுள்ளார். இவருடைய குறிப்புக்களில் முக்கிய அம்சங்கள் :

- முத்துக்குளித்தல்
- குதிரை வர்த்தகம்
- ஆடை ஆபரணங்கள்
- மன்னர்களின் ஆடம்பர வாழ்வினைக் குறித்து
- உடன் கட்டை ஏறிய மன்னர்களின் மனைவிமார்கள்
- அயல் நாட்டு வாணிபம்
- பாண்டிய நாட்டின் செல்வம்
- நீதி முறை
- சோதிட முறை
- கோவில்கள்
- தேவதாசி முறை
- சமூகப் பழக்கவழக்கங்கள்
- சமய நிலை

வாசப்பின் குறிப்புக்கள்: இவருடைய குறிப்புக்களின்படி



ncs_t.indb 158 3/1/2019 8:35:39 AM

- கருவூலத்தில் அதிக பட்சம் பணம் 1200 கோடிப் பொன் இருந்தது என்று தெரிவிக்கிறார்
- முக்கியத்துறைமுகக் காயல்பட்டிணம்
- மலைகள் போன்ற மிகப் பெரிய கப்பல்கள்
- ஏடன் மற்றும் அரேபியாவிலிருந்து குதிரைகளையும் வேறு பொருட்களையும் சுமந்து வந்தவண்ணம் இருந்தன இந்தப் பாய்மரக் கப்பல்கள்
- அரசன் செல்வச் செழிப்புடன் திகழ்ந்தான்
- மன்னர் ஆட்சியில் நீதி தவறவில்லை
- அன்னியப் படையெடுப்புக்கள் நடைபெறவில்லை
- முத்து மாணிக்கம் நீலம் பச்சை போன்ற இரத்தினங்கள் குவிந்து கிடந்தன.
- மன்னர் ஒருமுறையேனும் நோய்வாய்ப்படவில்லை

என்று குறிப்பிடுகிறார்.

குறிப்பு

### உங்களுடைய முன்னேற்றத்தைப் பரிசோதியுங்கள்

1. சோழப் பேரரசின் எல்லைகள் யாவதாக இருந்தன?
2. ஜடைய வர்மன் யார்?
3. பாண்டிய வம்சத்தின் திறமையான கடைசி அரசன் யார்?

## 11.2.6 சமூக பொருளாதார மற்றும் சமய நிலை

- ஜாதி அடிப்படையில் பிராம்மணர்கள் உன்னத நிலையிலும் விவசாயிகளும் தொழிலாளிகளும் இடை நிலையிலும் மற்றையவர் கடை நிலையிலும் பிற்படுத்தப்பட்டனர்.
- பொதுவாக ஜாதிப் பிரிவினைகள் அதிகம் தென்பட்டன
- இவர்களுக்கிடையிலான சமுதாய உறவுமுறை அவ்வளவு சிறப்பாகக் காணப் படவில்லை
- பிராம்மணர்களின் மீதான வன்முறை காணப்பட்டது.

**பொருளாதாரம்:** விவசாயமும் ஏனைய வாணிபத் தொழில்களும் பிற்காலப் பாண்டியர்களின் முக்கிய கவனமாக இருந்தது. கரும்பு போன்ற வியாபாரப் பயிர்கள் தேர்வு செய்யப்பட்டன. நெல் மற்றும் தானியங்களுக்கு அத்தனை ஊக்கமில்லை எனலாம்.

மரங்கள் வளர்க்கப் பட்டன. நீர்ப்பாசனம் திருத்தி அமைக்கப்பட்டது.

வியாபாரம்-வணிகம்:உள் நாட்டு மற்றும் வெளி நாட்டு வர்த்தகங்கள் சிறந்து விளங்கின. அராபியர்களுக்கு முத்துக்குளித்தலுக்கான அனுமதி வழங்கப் பட்டது.



ncs_t.indb 159 3/1/2019 8:35:39 AM

குறிப்பு

காயல் பவித்ர மாணிக்க பட்டினம் ஸ்ரீ வல்லவபட்டினம் என்பவை முக்கிய துறைமுக நகரங்களாக விளங்கின.

**செலாவணி:** பணம் என்றும் தங்க நாணயங்கள் என்றும் கூறப்பட்ட காசு கழஞ்சு என்றும் செம்பொன் என்றும் பெயரிடப்பட்டன. பண்டமாற்று முறை மாறி ஆங்கே பணப்புழக்கம் ஏற்பட ஆரம்பித்தது. பணத்தின் மதிப்பை வைத்து பொருட்கள் வாங்க விற்க வழி வகை ஏற்பட்டது.

**சமயம்:** சமய நிலையில் சைவம் முக்கியமானதாகப் பட்டது. வைணவமும் இருந்தது. சமணம் பௌத்தமும் இருந்து வந்தன. கோவில்களும் மத போதனை கட்டிடங்களும் கட்டப் பட்டன.சிவபெருமானைக் குறித்து பல இலக்கியங்கள் வெளியாயின.

ஹொய்சாலர்களின் ஈடுபாட்டினால் வைணவமும் தழைத்தது.

மாறவர்மன் சுந்தரபாண்டியன் சமண மதத்தை ஆதரித்தான். சமணர் கற்படுக்கைகளைப் பெருமளவில் காண நேர்ந்தது.

பௌத்தத்தின் வளர்ச்சி குறைவானதாக இருந்தது.

பொதுவாக பக்தி வளர்ச்சி மற்றும் இறையுணர்வில் அதிகப் படியான ஈடுபாடு இவையெல்லாம் மலிந்து காணப் பட்டன.

கோவிலில் திருவிழாக்கள் எடுத்து நடத்தப்பட்டன.

கடவுள் யாகங்கள் மற்றும் வழிபாடுகள் பொது இடங்களில் நடத்தப்பட்டன. பக்தி இயக்கத்தின் வளர்ச்சியும் மாலிக் கபூரின் வரவு வரையிலான காலத்தில் முற்றுப் பெற்றது எனலாம்.(1311)

### உங்களுடைய முன்னேற்றத்தைப் பரிசோதியுங்கள்

4. பாண்டிய சாம்ராஜ்யத்தின் முக்கிய துறைமுக நகரங்கள் யாவை?
5. பாண்டியரின் ஆட்சியில் எந்த மதம் சிறிதும் வளர்ச்சியடையவில்லை?

## 11.2.7 கலை மற்றும் கட்டிடக் கட்டுமானக் கலை

- கலை நயமும் கட்டுமானக் கலைத்திறமையுள்ள பல கோவில்கள் கட்டப்பட்டன
- பல்வேறு சிற்பங்களும் இக் கோவில்களில் கலை நயத்தை அதிகமாகப் பறைசாற்றின.
- பாண்டியர்களின் கோவில்களில் மதில் சுவர்கள் கோபுரங்கள் தூண்கள இவையெல்லாம் முக்கிய அம்சங்களாகும
- பிற்காலப் பாண்டியர்களால் கட்டப்பெற்றவைதாம் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலின் கர்ப்பக்கிருகம் கோபுரம் மற்றும் விமானம் மண்டபங்கள்



ncs_t.indb 160 3/1/2019 8:35:39 AM

முடிவுரை: பாண்டியனாலேயே காட்டிக் கொடுக்கப் பட்டு பாண்டிய வம்சம் அவர்களின் கோட்டையான மதுரையை விட்டு 1311ல் வெளியேறியது. அப்போது தான் மாலிக் கபூரின் படையெடுப்பு நடந்தது.

குறிப்பு

மதுரை நகரின் வளம் பொலிவு மற்றும் சிறப்பு எல்லாம் மாலிக் கபூரின் படையெடுப்பால் கதையாகிப் போயின. அத்துடன் பாண்டிய நாட்டின் பாண்டிய வம்சம் அடைந்திருந்த பொற்காலச் சிறப்புக்கள் அனைத்தும் தில்லி சுல்தானால் சூறையாடப்பட்டு கானல் நீரென மாறி விட்டன.

விஜயநகரப் பேரரசின் குமார கெம்பணா நல்ல காலத்தைக் கொண்டு வரும்வரை மதுரை மீண்டும் தூங்கா நகரமாகக் காத்திருக்க வேண்டியதாயிற்று.

### உங்களுடைய முன்னேற்றத்தைப் பரிசோதியுங்கள்

6. பாண்டியர்களால் எந்தெந்த கோவில்கள் எப்போது கட்டப்பட்டன?
7. பாண்டியரின் ஆட்சி முடிவுறும் தருவாயில் 1311ல் மதுரை மீது படையெடுத்தது யார்?

## 11.3 திறன் அடைவிற்கான பரிசோதனைக் கேள்விகளுக்கான விடைகள்

1. சோழ நாட்டின் எல்லைகள் வடக்கே துங்கபத்ரா நதியும் தெற்கே கன்னியாகுமரியும் சுமார் 200 ஆண்டுகளுக்கு பரவிக் கிடந்தன.
2. ஜடையவர்மன் என்பது முதலாம் ஜாதவர்ம சுந்தர பாண்டியனின் மற்றொரு பெயராகும்.
3. முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் சேர நாட்டைக் கைப்பற்றி கொல்லம் கொண்டான் என்ற பெயர் பெற்று கடைசி சிறந்த அரசனாகக் கருதப் பட்டான்
4. காயல் பவித்ரா மாணிக்க பட்டிணம் ஸ்ரீவல்லவபட்டிணம் இவையெல்லாம் பாண்டிய நாட்டின் துறைமுக நகரங்களாகும்
5. பௌத்த மதம் பாண்டியர் ஆட்சியில் சிறப்பான வளர்ச்சி பெறவில்லை என்பர்
6. பாண்டியர்களால் கட்டப்பெற்றவை என்று பார்த்தால் மீனாட்சி கோவில் சுந்தரேஸ்வரர் கர்ப்பக்கிருகம் மற்றும் கோபுரங்கள் இவை எல்லாம் அடங்கும்.
7. தில்லி சுல்தானின் தளபதி மாலிக் கபூர் 1311ல் மதுரை மீது படையெடுத்தான்.



ncs_t.indb 161 3/1/2019 8:35:40 AM

## 11.4 உரைச் சுருக்கம்

குறிப்பு

- 13 ஆம் நூற்றாண்டு பாண்டியப் பேரரசின் சிறப்பான காலமாகும். இதில் 7 முக்கிய அரசர் பெருமான்களை ஒரு சேரக் கண்டது சிறப்பாகும்.
- பிற்காலப் பாண்டியர்கள் (1216-1345) மாறவர்மன் சுந்தரபாண்டியனின் காலத்தில்(1216-1238) பொற்காலத்தை தொடங்கியது எனலாம். ஜடையவர்மன் சுந்தரபாண்டியன் (1251-1268) காலத்திலும் இது தொடர்ந்தது தெலுங்கு நாட்டை வென்று கலிங்கத்தையும் வென்ற இவன் இலங்கையையும் வெற்றி கொண்டான். பொற்காலத்தை நிலை நிறுத்தினான் எனலாம்.
- முதலாம் ஜடையவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தை பிற்காலப் பாண்டியர் ஆட்சியின் பொற்காலம் என்று போற்றுகின்றனர்.
- மாறவர்மன் குலசேகர பாண்டியனின் மகன்கள் வீரபாண்டியன் மற்றும் சுந்தரபாண்டியன் இடையிலான வாரிசுரிமைப் போர்கள் பாண்டியப் பேரரசின் வீழ்ச்சியின் இறுதி கட்டமாக அமைந்தது.

## 11.5 சுய பரிசோதனைக் கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

1. குறுகிய விடைகளுக்கான வினாக்கள்

- பிற்காலப் பாண்டிய மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடுக
- இளவரசர்களின் வாரிசுரிமைப் போர் குறித்து சிறு குறிப்பு வரைக
- முதலாம் ஜடையவர்மன் சுந்தரபாண்டியனின் ஆட்சிச் சிறப்புக்களைக் குறிப்பிடுக

2. விரிவான விடைகளுக்கான வினாக்கள்:

- பிற்காலப் பாண்டியர் காலத்தில் இருந்த கட்டிடக் கலை நுட்பம் குறித்து விவரிக்கவும்
- பிற்காலப் பாண்டியர் காலத்தின் சமய நிலையை விவாதிக்கவும்
- வரலாற்றில் பாண்டியப் பேரரசின் சிறந்த காலமாக 13ஆம் நூற்றாண்டு கருதப் படுகிறது- மதிப்பீடு செய்யவும்



ncs_t.indb 162 3/1/2019 8:35:40 AM

# அலகு 12 மதுரை சுல்தானியம் அமைப்பும் கலாச்சார பண்பாடு விகிதாச்சாரமும்

குறிப்பு

**அமைப்பு**

12.0 அறிமுகம்
12.1 நோக்கங்கள்
12.2 மதுரை சுல்தானியம் அமைப்பு (தோற்றம்)
12.3 பொருளாதாரம் மற்றும் கலாச்சார நிலை
12.4 திறனடைவுக் கேள்விகளுக்கான விடைகள்
12.5 உரைச் சுருக்கம்
12.6 சுய பரிசோதனை-கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

## 12.0 அறிமுகம்

மதுரை சுல்தானியம்: தில்லியில் துக்ளக்கின் ஆட்சி நடக்கையில் 1335ல் மதுரை சுல்தானியம் அறிவிக்கப்பட்டது. தில்லி சுல்தானியத்தின் மண்டல ஆட்சியராக இருந்த ஜலாலுத்தின் அசான் ஷா தில்லியிலிருந்து சுதந்திரமடைந்ததாகவும் அறிவித்தார். 1378 வரையிலான 43 ஆண்டுகள் இவர்களின் ஆட்சி மதுரை மாநகரில் நடந்தது. கடைசியாக ஆட்சிபுரிந்த அலாவுத்தீன் சிக்கந்தர் ஷா குமார கெம்பணா தலைமை வகித்த விஜய நகரப் பேரரசின் படைகளிடம் படுதோல்வியடைந்தார். அத்துடன் மதுரை சுல்தானியம் ஆட்சி முடிவுற்றது. இந்த 43 ஆண்டுகளில் 8 அரசர்களைக் கண்டது மதுரை. அதற்குள்ளாகவே இந்த சுல்தானியம் மதுரையைச் சின்னா பின்னமாக்கி மதுரை மா நகரின் செல்வங்களைப்போலவே பொலிவும் காணாமல் போனது. இந்து மதம் அழித்து ஒடுக்கப் பட்டது. இந்துக்கள் துன்புறுத்தப்பட்டு கொல்லப்பட்டனர். முஸ்லிம் மன்னர்கள் கொடுக்கோலர்களாக இருந்தது மட்டுமல்லாமல் மக்களையும் அவர்களின் உணர்வுகளையும் சிதைத்தனர்.

இந்தக் கொடுங்கோலர்களில் சிலர் 40 நாட்கள் மன்னர்களாகக் கூட இருந்தனர். சிலர் 4 வருட காலம் ஆட்சிபுரிந்தனர். இவர்கள் அனைவருடைய குறிக்கோளும் இஸ்லாமைப் பரப்பி இந்துக்களையும் இந்து மதத்தையும் அழிப்பதுதான். மொத்தத்தில் இவர்கள் அனைவரிடமும் மதவெறுப்பு குரூர ரத்தவெறி அடக்குமுறை நயவஞ்சகம் ஆகிய கொடூர குண நலங்கள் ஒருங்கே அமையப் பெற்றிருந்தன.

1. சுல்தான் ஜலாலுத்தீன் அசான் ஷா (1335-1340)
2. அலாவுத்தீன் உதாஜி (1340)

குறிப்பு

3. குத்புத்தீன்
4. கியாசுத்தீன் தாமகன் ஷா (1341-1342)
5. சுல்தான் நசிருத்தீன் (1334)
6. சுல்தான் அடில் ஷா (1356-1361)
7. ஃபக்ருத்தீன் முபாரக் ஷா (1361-1370)
8. அலாவுத்தீன் சிக்கந்தர் ஷா (1370-1378)

1335 முதல் 1356 வரையிலான இந்த வரலாற்றில் ஒரு முறிவு ஏற்பட்டுள்ளது. கால நிர்ணயத்தில் வேறுபாடுகள் காணப் படுகின்றன.

விஜய நகரப் பேரரசின் கீழ் படையெடுத்து வந்த குமார கெம்பணா சுல்தான்களிடமிருந்து மதுரையை மீட்டு எடுக்கும்வரை அந்த தூங்கா நகரம் கண்ணீரில் கரைந்து கொண்டிருந்தது எனலாம். மதுரையின் பெருமை அதன் கம்பீரம் சிறப்பு இதன் பின்னர் திரும்பக் கிடைத்தது எனலாம்.

இந்த அலகில் நீங்கள் படிக்கப் போவது மதுரை சுல்தானியத்தைக் குறித்தும் அதன் தோற்றம் சமூக பொருளாதார மற்றும் கலாச்சார சமய நிலைகளைக் குறித்துமான வரலாற்று உண்மைகளைத்தான்.

## 12.1 நோக்கங்கள்

இப் பகுதியில் நீங்கள் அறிந்து கொள்ளப் போவது

- மதுரை சுல்தானியத்தின் விரிவான வரலாறு
- மதுரை சுல்தானியம் தோன்றிய பின்னணியும் காரணிகளும் குறித்து
- இந்த ஆட்சியில் ஏற்பட்ட சமூக பொருளாதார கலாச்சார மற்றும் சமய நிலைகளைக் குறித்து

## 12.2 மதுரை சுல்தானியம் அமைப்பு (தோற்றம்)

14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழகத்தின் மேல் தில்லி சுல்தானால் தொடர்ந்து மேற்கொண்ட படையெடுப்புக்களினால் தென் இந்தியாவில் அசாதாரண நிலை இருந்துவந்தது. பதினைந்து ஆண்டுகளில் மூன்று முறை இப் படையெடுப்புக்கள் நடத்தப்பட்டன.1311ல் மாலிக் கபூர் மதுரையை சூறையாடினான். இதைத் தொடர்ந்து மேலும் இரண்டு படையெடுப்புக்கள் நடந்தன. 1314ல் குஸ்ரவ் கான் என்பவனும் 1323ல் உலுக் கான் என்பவனும் மதுரையையும் பாண்டிய அரசையும் கொள்ளையடித்துச் சின்னாபின்னமாக்கியதும் அல்லாமல் உலுக் கான் படையெடுப்பின் போது மதுரை தில்லி சுல்தானியத்துடன் இணைக்கப் பட்டு மா’பார்(மதுரை சுல்தானியத்தின் பாரசீக மறு பெயர்) என்ற மாகாணமாக அறிவிக்கப் பட்டது. தென் இந்தியா முழுதும் ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு தேவகிரி திலிங்க் கம்பிலி தொரசமுத்திரம மற்றும் **‘மா பார்’** என்ற பெயர்களால் அழைக்கப்பட்டன.

குறிப்பு

1325ல் உலுக் கான் முகம்மது பின் துக்ளக் என்ற பெயரால் அழைக்கப்பட்டு தில்லி சுல்தான் ஆனான். பாரசீகம் கொரசான் போன்ற நாடுகளை ஆக்கிரமிக்க எண்ணியதால் கஜானா காலியானது. தங்கம் வெள்ளிக்குப் பதில் பித்தளை செம்பு உலோகங்களில் டோக்கன் நாணயங்கள் முறை உருவானது. மக்களிடம் ஏற்பட்ட பணத் தட்டுப்பாட்டால் வீட்டுக்கு வீடு நாணயங்களை முத்திரை இடும் பட்டறைகள் தொடங்கின. அதிக தூரத்தில் உள்ள மாகாணங்களுக்கு நிதி அளிப்பதில் பற்றாக்குறை ஏற்பட்டதால் ஆங்காங்கே கிளர்ச்சிகள் தொடங்கின. இத் திட்டம் இதன் விளைவுகளால் கைவிடப்பட்டது. வங்காளத்தில் ஆரம்பித்த கிளர்ச்சி தெற்கே மதுரையில் தொடங்கியது. இதனால் மதுரை மாகாணத்தின் ஆட்சியராக இருந்த ஜலாலுத்தீன் அசன் ஷா தில்லியிலிருந்து சுதந்திரம் அடைந்ததாகக் கூறி மதுரை சுல்தானியம் என்ற தனி சுல்தானியத்தை அறிவித்தான் எனப்படுகிறது. இந்த கால நிர்ணயம் சரியாகப் புலப்படாததால் சில நாணய வெளியீடுகளில் பொறித்துள்ள வருடக் குறியீடுகளை வைத்து 1335ல் இந்த மதுரை சுல்தானியம் தோற்றுவிக்கப் பட்டது எனக் கருதலாம். இருப்பினும் ஃபிரிஸ்டா என்ர பாரசீக வரலாற்று அறிஞர் இந்த மா பார் புரட்சி 1340ஆம் ஆண்டில் ஏற்பட்டதாகக் கருதுகிறார்.

இந்தக் குறுகிய கால முகலாய வம்ச ஆட்சி மா பாரில் (மதுரை சுல்தானியத்தில்) ஏற்பட்ட முக்கிய காரணம் பிற்காலப் பாண்டியர்களிடையே ஏற்பட்ட வீழ்ச்சி. 48 ஆண்டுகளே நடந்த இந்த ஆட்சி விஜய நகரப் பேரரசுவின் கீழ் வரும்வரை மதுரையும் மக்களும் பல்வேறு கொடுமைகளைச் சந்தித்த பரிதவிப்பில் இருந்தனர்.1371ல் குமார கெம்பண்ணா என்பவர் மதுரையை வென்று முகலாய வம்சத்தின் தென் இந்திய ஆட்சிக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தார். அவருக்குப் பின் வந்தவர்கள் மதுரை நாயக்கர்கள்.

## மதுரை சுல்தானியத்தின் சுல்தான்கள்

1. சுல்தான் ஜலாலுத்தீன் அசான் ஷா (1335-1340): 1340 வரை ஆட்சி புரிந்த இந்த மதுரை சுல்தான் அவனுடைய அமைச்சாரால் (அலாவுத்தீன் உதாஜி) 1340ல் கொல்லப் பட்டான். இவனுடைய பெயரில் நாணயங்கள் வெளியிடப்பட்டுள்ளன.
2. அலாவுத்தீன் உதாஜி (1340) இந்த சுல்தான் ஜலாலுத்தீன் அசான் ஷாவைக் கொன்று ஆட்சியைப் பிடித்தான். இந்துக்களின் மேலான புனிதப் போரை மேற்கொண்டு ஒரு உண்மை முஸ்லீமாகத் தன்னைக் காட்டிக் கொண்டான். இந்து மன்னர்கள ஆண்ட நாடுகளின் மீதும் இந்துக் குறு நில மன்னர்கள் மீதும் படை எடுத்து வந்தான். திருவண்ணாமலையை ஆக்கிரமித்து மூன்றாம் வீர வெள்ளாளன் என்ற குறு நில மன்னனை 1340 ல் தோற்கடித்தான. இருப்பினும் போரின் முடிவில் தற்செயலாக அவன் தலைக்குள் பாய்ந்த அம்பினால் மாண்டான் என்பது சரித்திரம்.



ncs_t.indb 165 3/1/2019 8:35:40 AM

**குறிப்பு**

3. குத்புத்தீன்: சுல்தான் ஜலாலுத்தீன் அசான் ஷாவின் மருமகன் குத்புத்தீன் வெறும் 40 நாட்களே ஆட்சிபுரிந்தான். மக்களின் ஆதரவை இழந்த இவன் கொல்லப்பட்டான்.

4. கியாசுத்தீன் தாமகன் ஷா (1341-1342) இந்துக்களை வெறுத்து ஒறுப்பதில் குத்புத்தீனை விட எள்ளளவும் குறைந்தவனல்லன் கியாசுத்தீன். இந்துக்களைக் கொடூரமாகத் தாக்கிக் கொடுமைக்குள்ளாக்கிக் கொன்றான் என்று தெரிகிறது. இவனுடைய கொடூர நடவடிக்கைகள் குறித்து இபின் பதூதா என்னும் வெளி நாட்டுப் பயணி தன் குறிப்புக்களில் தெரிவிக்கும் செய்திகள் இதயத்தை வலிக்கச் செய்கிறது. இவரின் குறிப்புப் படி இந்துக் குழந்தைகளின் கழுத்துக்கள் வெட்டப்பட்டு கொல்லப்பட்டனர் என்றும் இந்துக்கள் பொதுவாக இரக்கமில்லாத வகையில் மனிதாபிமானமின்றி சித்திரவதைக்குள்ளாக்கப் பட்டு கொல்லப்பட்டனர் என்றும் இவர் குறிப்பிட்டுள்ளது மிகவும் வேதனையைத் தருகிறது. இவர்களின் துண்டித்த தலைகள் மாலைகள் போல் கோர்க்கப் பட்டு திரிசூலங்களின் மேல் தொங்கவிடப்பட்டனவாம்.

   இந்துக்களின் மேலான புனிதப் போரை மேற்கொண்டு ஒரு உண்மை முஸ்லீமாக இவனும் தன்னைக் காட்டிக் கொண்டான். திருக் குர் ஆனில் கண்டுள்ளபடி முஸ்லீம் அல்லாத மன்னர்களின் மேல் போர் தொடுத்து வெற்றி பெறுவதையும் ஒரு கடமையாகவும் கட்டளையாகவும் வைத்துக் கொண்டிருந்தான். ஹொய்சால மன்னனின் கண்ணூர் கொப்பா கோட்டையை ஆக்கிரமித்து அங்கிருந்து தாக்குப்பிடிக்க இயலாத முஸ்லிம் படைகள் வெளியேற மூன்றாம் பல்லால தேவன் முஸ்லீம் படைகள் கோட்டையைத் தன் வசம் திரும்ப ஒப்படைத்தால் வெளியேறலாம் என்று நிபந்தனை இட்டான். இதற்கு ஒவ்வாத கியாசுத்தீன் இரகசியமாக 4000 வீரர்களைக் கொண்ட படையை வைத்து ஹொய்சாலர்களை அவர்களுடைய இருப்பிடங்களில் சென்று (பாசறைகளில்) தாக்கித் தோற்கடித்தான். தோற்ற மன்னன் மூன்றாம் பல்லால தேவன் சிறைப்பிடிக்கப்பட்டு மதுரைக்கு இழுத்து வரப்பட்டான். இபின் பதூதாவின் கண் முன்னே அந்த அரசன் கொடூரமாகச் சித்திரவதை செய்யப்பட்டான். 1342ல் கொல்லப்பட்ட பல்லால தேவனின் உடலின் மேலிருந்த தோல் உரிக்கப்பட்டு அவனுடைய உடல் மதுரை கோட்டை வாயிலில் தொங்கவிடப்பட்டது என்று இயம்புகிறார் இபின் பதூதா. இதன் இடையில் மதுரை நகரில் ஏற்பட்ட காலரா நோயினால் கியாசுத்தீனின் ஒரே மகனும் தாய் மற்றும் மனைவியும் உயிரிழந்ததாகக் குறிப்புக்கள் உள்ளன. கியாசுத்தீனும் திடீரென இறந்து போனான் என்றும் தெரிகிறது. அவன் பெயரிட்ட காசுகள் ஹிஜிரா 741 என்ற ஆண்டைக் குறிக்கின்றன.

5. சுல்தான் நசிருத்தீன் (1334): கியாசுத்தீனின் சகோதரன் மகன் நசீருத்தீன் இபின் பதூதாவின் சைனா பயணத்திற்காகப் பெரும் செலவும் அரசைக்



ncs_t.indb 166 3/1/2019 8:35:40 AM

குறிப்பு

கைப்பற்றவென அமைச்சர்களுக்காக பெரும் பொருள் செலவும் செய்தது குறிப்புக்களில் காணப் படுகிறது. இவனும் இவன் பெயரில் நாணயங்களை வெளியிட்டான். அவற்றில் ஹிஜிரா 745 என்ற முத்திரை உள்ளது. இதன்மூலம் கி.பி 1334 என்று கால நிர்ணயம் செய்யப்படுகிறது. எனினும் வரலாற்று வல்லுனர்கள் சுல்தானிய ஆட்சியின் காலத் தொடர்வில் 1334 முதல் 1356 வரையிலான விபரங்கள் சரிவர சேர்க்கப்படவில்லை என்ற கருத்தை முன் வைத்து கிடைத்த ஆதாரங்களைக் கொண்டும் ஊகங்களின் மேலும் கணிப்புக்கள் செய்யப் பட்டுள்ளன என்றும் தெரிவிக்கின்றனர்.

6. சுல்தான் அடில் ஷா(1356-1361) 1356ல் தொடங்கிய இவனுடைய ஆட்சி 1361 வரையில் தொடர்ந்தது என்று கருதப் படுகிறது.

7. ஃபக்ருத்தீன் முபாரக் ஷா (1361-1370) இவனுடைய ஆட்சிக்காலத்தில் தான் குமார கெம்பணா என்னும் விஜய நகரப் பேரரசின் வாரிசு மன்னன் மதுரை நகர் மீது படையெடுத்து அதை வென்று பாண்டிய நாட்டிலும் தமிழகத்திலும் அமைதியை நிலை நாட்டவும் இந்துக்களையும் இந்து மதத்தையும் காப்பாற்றவும் வழி கோலினான் என்பது குறிப்பிடத்தக்கது.

   மதுரை சுல்தானியத்தில் இந்துக்களின் நிலை குறித்து கங்காதேவி என்பவர் மதுரை விஜயம் என்ற கவிதை நூலை இயற்றினார். இவருடைய குறிப்பில் மதுரை நகரையும் அதன் மக்களையும் காப்பாற்றவேண்டி ஒரு மந்திர வாள் குமார கெம்பணாவிடம் ஒரு தெய்வச் சிறுமியால் ஒப்படைக்கப்பட்டது. அதன்மூலம் கொடுங்கோல் ஆட்சியை அழித்த அவன் மக்களின் பொது விரோதியான சுல்தானை ஒழித்து அமைதியை நிலை நாட்டினான். 1371ல் முபாரக் ஷாவைத் தோற்கடித்து அவனைக் கொன்று தன் குறிக்கோளை நிறைவேற்றவும் செய்தான்.

   இந்துக்களின் காவலனாக பழிக்குப் பழி என்ற குறிக்கோளுடன் விஜய நகரப் பேரரசு முடிவு செய்த மதுரை ஆக்கிரமிப்பு குமார கெம்பணா உடையாரால் செவ்வனே நிறைவேற்றப்பட்டது.

8. அலாவுத்தீன் சிக்கந்தர் ஷா (1370-1378): முபாரக் ஷாவின் மரணத்திற்குப் பின்னர் 1378 வரை இவன் மதுரை சுல்தானியத்தின் ஒரு சிறு பகுதியை ஆட்சி புரிந்து வந்தான். இவனுடன் மதுரை சுல்தானியமும் முற்றுப் பெற்றது. தமிழகத்தில் முஸ்லீம் ஆட்சியும் முடிவடைந்தது.

விஜய நகரப் பேரரசின் அரசன் முதலாம் புக்க ராயன் தென் இந்தியாவை வெல்ல கடின முயற்சிகளில் இறங்கி இருந்தான் 14ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் பல்வேறு படையெடுப்புக்கள் நடைபெற்றன. அவற்றில் சுல்தானியத்தின் ஆட்சியைக் கட்டுப்படுத்துவது முதலில் நடந்தது. பின்னர் சுல்தானியம் ஆட்சியை முடிவுறச் செய்யவும் விஜய நகரப் பேரரசு பெரும் பாடு பட்டது. கெம்பணா உடையார் முதலில் காஞ்சிபுரம் சம்புவரையர் வம்சத்தைக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தான். இறுதியில் கெம்பணா



ncs_t.indb 167 3/1/2019 8:35:40 AM

உடையார் மதுரையை மட்டுமல்லாது தென்னகத்தையும் வெற்றி கொண்டான். இதை அவனுடைய மனைவியாகிய கங்காதேவி சமஸ்கிருதத்தில் எழுதிய வரலாற்றுக் கவிதையான மதுர விஜயம் தெள்ளெனத் தெரிவிக்கின்றது.

குறிப்பு

## 12.3 பொருளாதாரம் மற்றும் கலாச்சார நிலை

முஸ்லீம் படையெடுப்புக்கள் மதுரையின் பொருளாதாரத்தையும் வாழ்க்கை முறைகளையும் வெகுவாக பாதித்தன எனலாம். இந்துக் கோவில்கள் இடிப்பும் செல்வங்களைச் சூறையாடலும் இந்துக்களை வெறித்தனமாகத் துன்புறுத்தலும் அவர்களை இரும்புக் கம்பிகளால் கழுவேற்றிக் கொல்வதும் சேர்ந்த ஓர் முஸ்லீம் கொடுங்கோல் ஆட்சியாக இருந்தது என்பர். மக்களின் பொது விரோதி சுல்தான்தான். சுல்தானின் ஒரே விரோதி இந்துக்கள் மற்றும் முஸ்லீம் அல்லாதவர்கள்தான் என்றும் கருத்துக்கள் உள்ளன.

மதுரை சுல்தானியத்தின் வாயிலாக ஏற்பட்ட மாற்றங்கள் அனைத்தும் நன்மை பயக்கவில்லை என்றாலும் சுல்தானியத்தின் கீழ் சில மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன என்பது உண்மை. மொத்தத்தில் மதுரை சுல்தானியத்தால் உண்டான நிகர நன்மைகளைப் பார்க்கப் போனால் ஏமாற்றமும் வேதனையும் தான் மிஞ்சுகிறது. மக்களின் மீது அவிழ்த்து விடப் பட்ட கோரக் கொடூரங்கள் மற்றும் மதவெறி ஆட்சியில் அதிக அளவில் பெற்றவை தீமைகள்தாம் என்பது உறுதி. குமார கெம்பணா வரும் வரையிலான கால கட்டம் விடுதலையை எதிர் நோக்கி இருந்த மதுரையின் சோதனையும் வேதனையும் மிகுந்த காலமாகக் கருதப் படுகிறது.

சில துறைகளிலான குறிப்புக்களை ஆராய்ந்தால் நமக்கு மேலும் பல விவரங்கள் கிடைக்கின்றன:

1. கலை மற்றும் கட்டுமானக் கலை: இந்து மற்றும் இஸ்லாமிய கட்டிடக் கலை ஒன்றுபட்டு புதிய கலை நுட்பம் உருவானது
   - இந்தத் கட்டிடக் கலை நுட்பம் சரசானிக் கட்டுமான முறை என்று வழங்கப் பட்டது. இதில் அதிகமாகக் காணப்பட்டவையான கைவினைஞர்களின் வேலைத் திறன் மற்றும் அலங்காரங்கள் பெரிதும் கண்ணைக் கவர்ந்தன.
   - இந்தப் புதிய மாற்றங்களினால் இந்துக்களின் கோவில்களிலும் இஸ்லாமிய வழிபாட்டு இடங்களிலும் கட்டிடங்கள் தோற்றத்திலும் தரத்தில் உயர்ந்தவையாகவும் கட்டிடக் கலை நுட்பத்தில் சிறந்து விளங்கியதாகவும் இருந்தன எனலாம்.
2. மொழி வளர்ச்சி: மொழி வளர்ச்சிக்கு இந்த அரசுகள் பெரிதும் ஊக்கமளித்தன. இதன் பயனாக இரண்டு கலாச்சாரங்கள் சார்பிலும் இலக்கியங்கள் வெளியாயின.



ncs_t.indb 168 3/1/2019 8:35:40 AM

குறிப்பு

- இந்து முஸ்லீம் கலாச்சாரங்களின் இணைப்பினால் உருது மொழி பிறந்தது. அதன் வளர்ச்சியும் இயற்கையாகவே காணப் பட்டது
- பாரசீக மொழியும் இலக்கியச் சிறப்புப் பெற்றது. சுயசரிதம் கடிதங்கள் வரலாற்றுக் குறிப்புக்கள் எனப் பட்டவை பாரசீக மொழியில் தயாரிக்கப் பட்டன.
- காகிதத்தின் உபயோகம் மூலம் அச்சடித்தலும் உருவங்கள் பொறிப்பதும் சுலபமாயின.

3. கல்வி: முஸ்லீம் ஆட்சியாளர்கள் அறிஞர்களையும் கற்றவர்களையும் ஆதரித்தனர். இதனால் கல்வி கற்றவர்களுக்குத் தனி மதிப்பு கிடைத்தது.
   - பெண்கள் கல்வி மறுக்கப் பட்டனர்
   - கல்வி நிறுவனங்கள் மற்றும் நூலகங்கள் நாடு முழுவதும் ஏற்படுத்தப்பட்டன.
   - கவிஞர்கள் எழுத்தாளர்கள் தத்துவ ஞானிகள் எல்லோரும் அவையை அலங்கரித்தனர்.
   - அரபி மொழி கட்டாயப் பாடமாக்கப் பட்டது.
   - சமயக் கல்வி எல்லா கல்விக் கூடங்களிலும் கட்டாயப் பாடமாக்கப் பட்டது
4. தமிழ் முஸ்லீம்: இஸ்லாமியரும் தமிழரும் இணைந்த தமிழ் முஸ்லீம் இனம் புதியதாகத் தோன்றியது.
5. ஜாதி அடிப்படையிலான சில கண்டிக்கத்தக்க செயல்கள் முஸ்லீம் ஆட்சிக்கு முன்பு நடைமுறையிலிருந்தது. முஸ்லீம் ஆட்சிக்குப் பின் பிராமணர்களும் கோவில்களும் பொலிவிழந்து வருமானத்தையும் இழந்தன. ஜாதி வேறுபாடுகள் மறையத்தொடங்கின. ஏனைய ஜாதிகள் ஒருங்கிணைந்து கொண்டன.
6. சமூகத்திலிருந்த கலப்பில்லாத மரபு சுத்தம் பெரும்பாலும் கேள்விக்குறியானது. முஸ்லீம் ஆண்கள் இந்துப் பெண்களை மதம் மாற்றி மணந்து கொண்டனர். ஆனால் இவை கட்டாய மத மாற்றத்தின் கீழ் நடைபெற்றன. இதனால் இந்துக்கள் பெரிதும் கவலையில் ஆழ்ந்தனர்.
7. இஸ்லாமிய வளர்ச்சி: சமயத்தைப் பொறுத்த அளவில் இஸ்லாம் வெகுவேகமாக வளர்ச்சியடைந்து வந்தது. கட்டாய மத மாற்றங்களும் அதிக அளவில் உருவான மசூதிகள் எல்லாம் இந்து சமயத்தை அச்சுறுத்தின. இதனால்தான் பக்தி இயக்கம் அசுர வேகத்தில் வளர்ந்து உருப்பெற்றது எனலாம்.
8. தமிழர்களின் வெளியுறவுத் தொடர்புகள்: இஸ்லாமிய வரவால் தமிழ் மக்களின் வெளியுறவுத் தொடர்புகள் பன்மடங்காயின. இதன் மூலம் தமிழருக்கு வெளியுலகம் புரிய ஆரம்பித்தது. நல்லவையும் அல்லவையும் தெரிந்து கொள்ள ஒரு நல்வாய்ப்பு அமைந்தது.

9. இந்துக்களின் மீதான வன் கொடுமைகள்: இந்துக்கள் ஒடுக்கப்பட்டனர். இந்துக்கள் ஈவு இரக்கமின்றி தாக்கிக் கொல்லப்பட்டனர். இந்துக் கோவில்கள் சூறையாடப்பட்டன. இந்துக் கடவுள் விக்கிரகங்கள் உடைக்கப்பட்டன. சின்னாபின்னமாக்கப்பட்டன. இந்துப் பெண்டிர் பர்தா அணியவும் கட்டாயமாக்கப் பட்டது.
10. இந்துக்களின் மீதான வரிச் சுமை: ஜிசியா வரி வருமான வரி வீட்டு வரி சுங்க வரி போன்ற வரிகள் இந்துக்களின் மீது புதியதாகச் சுமத்தப்பட்டது. வரி வசூலிப்பவர் இந்துவானாலும் அவரும் இதைக் கட்ட வேண்டியிருந்தது என்பர்.
11. விவசாயம் புறக்கணிக்கப் பட்டது. தென்னந்தோப்புக்கள் கல்லறைகளாக மாறிக்கொண்டிருந்த அவலம் இக் காலத்தில் உண்டானது. இந்துக்கள் தென்னந்தோப்புக்களில் கம்பிகளை ஊன்றிக் கழுவேற்றிக் கொல்லப்பட்டனர்.
12. முஸ்லீம் சுல்தான்கள் ஆடம்பரச் செலவுகளிலும் கேளிக்கைகளிலும் பெரும்பாலும் ஈடுபட்டனர். அரசவைகளிலும் பணம் கணக்கிலடங்காச் செலவாகக் குறிப்பிடப் படுகிறது.

சமூக நிலை வாழ்க்கை முறை மற்றும் பொருளாதார நிலை குறித்துப் பல இலக்கியங்களில் குறிப்புக்களின் கண்ணோட்டத்தில் தள நிலையில் கிடைத்த திருப்தி-மகிழ்ச்சி- விடுதலையை எதிர் நோக்கியிருக்கும் இலக்கு- ஒரு காரிய சாதனைக்காகக் காப்பாற்றி வந்த உயிர் இவையெல்லாம் அடங்கிய ஒரு வாழ்க்கைமுறையைத் தெரிவிக்கிறது.

இலக்கியங்கள் வாழ்க்கை முறையைத் துல்லியமாகக் காட்டும் மாயக் கண்ணாடியாகும். இரண்டு இலக்கியங்களிலான குறிபபுக்களின் மூலம் நாம் இந்த மதுரை சுல்தானியத்தின் ஆட்சியால் உண்டான நன்மை தீமைகளைத் திறம்பட அறிய முடிகிறது.

1. குமார கெம்பணாவின் மனைவியார் கங்காதேவி மதுரை விஜயம் என்ற நூலை இயற்றினார். இதில் உள்ள குறிப்பில் 1371ல் ஸ்ரீரங்கம் கோவில் அதன் பண்டைய பெருமையைப் பெறும் வகையில் கெம்பணாவின் வெற்றி அமைந்தது என்கிறார். 1378ல் விஜய நகர சாம்ராஜ்யம் மதுரை தம் ஆளுகைக்குக் கீழ் உள்ளது என்று அறிவித்தனர்.
2. மதுரையில் இருந்த சமூக நிலை குறித்து எழுதிய கங்காதேவியார்:

   —நான் பெரிதும் வேதனைப்படும் ஒரு விஷயம் என்னவென்றால் மதுரை நகரின் தோப்புக்களில் தென்னைக்குப் பதிலாக வரிசை வரிசையாகப் புதிதாக ஊன்றப்பட்டுள்ள இரும்புக்கம்பிகளின் முனைகளின் மேல் ஊசலாடிக் கொண்டிருக்கும் மனித மண்டையோடுகளின் அவலக் காட்சிதான்-- என்று வேதனையுடன் குறிப்பிடுகிறார்.



ncs_t.indb 170 3/1/2019 8:35:40 AM

**குறிப்பு**

—முற்காலங்களில் நெடுஞ்சாலைகளில் ஒலித்துக் கொண்டிருந்த அழகிய பெண்டிரின் இனிமையான கொலுசு ஒலிகள் மாய்ந்து போய் தற்போது தெருவில் இழுத்து வரப்பட்டு இரும்புச் சங்கிலிகளால் கட்டி உருட்டப்படும் அந்தணர்களின் காதைக் கிழிக்கும் மரண ஓலங்கள்தான் இடைவிடாமல் கேட்கும் சத்தங்களாகும்-- என்றும் எழுதியுள்ளார்.

—தாமிரபரணியில் ஒரு காலத்தில் அழகிய பெண்களின் மார்பகங்களிலிருந்து உதிர்ந்த சந்தனத்தை அடித்துச் சென்று வெள்ளையாக ஓடிய தண்ணீர்-- இன்று கொன்று குவித்த பசுக்களின் குருதியை அடித்துச் சென்று சிவப்பாகப் பாய்ந்தோடுகிறது என்றும் குறிப்பிடுகிறார்.

3. இபின் பதூதா என்ற மொராக்கோ பயண ஆராய்ச்சியாளர் ஆப்பிரிக்கா ஆசியா பயணங்களை மேற்கொண்டவர். ஜலாலுத்தீன் அசான் ஷாவின் மகளை மணம் புரிந்தவர். சைனாவிற்குச் செல்லும் வழியில் அவர் கியாசுத்தீனின் அரசவைக்கு வருகை புரிந்தார். இவரின் குறிப்புக்கள் கியாசுத்தீனின் ஆட்சியில் நடந்த கொடுங்கோலாட்சியைப் புரிய வைக்கிறது. அவர் கூற்றின் படி இவனுடைய குடிகள் கீழ்த்தரமாகவும் கொடுமைகளுக்கு உள்ளாக்கப் பட்டும் நடத்தப் பட்டனர். இவனுடைய படைகளுக்கு தனிப்பட்ட முறையில் அளிக்கப்பட்ட அரசாணையின் படி தொடர்ச்சியாக அவர்கள் பக்கத்து கிராமங்களில் உள்ள மக்களைத் துன்புறுத்தி இழுத்து வந்து மரங்களால் ஆன கம்புகளில் கழுவேற்றப் பட்டு கொன்று குவிக்கப்பட்டனர்.(ரிஹிலா என்ற பிரசுரத்தில் வெளியிடப்பட்ட குறிப்பு இது)

   இபின் பதூதாவின் மற்றொரு செய்தி மதுரை நகரை வருத்திய பிளேக் நோய் குறித்ததாகும். நான் மதுரைக்கு வந்த சமயம் மக்களை உடன் கொல்லக் கூடிய தொற்று வியாதி ஒன்று காணப்பட்டது. இதனால் பீடிக்கப் பட்டவர்கள் இரண்டு மூன்று நாட்களில் இறந்தனர். தப்பினால் நான்காம் நாள் இறப்பது நிச்சயம். நான் தங்குமிடத்திலிருந்து வெளியே வந்தாலே நோயாளிகளையோ அல்லது இறந்தவர்களையோதான் காணமுடிந்ததுஎன்று எழுதியுள்ளார்.

4. கங்காதேவியும் இபின் பதூதாவின் குறிப்புக்களை ஒப்புக்கொள்கிறார்.-- இறப்புக் கடவுள் யவனர்கள் மாய்க்காமலிருந்ததால் மிச்சமிருக்கும் உயிர்களையும் அதிக அளவில் தன்னுடைய பங்கையும் சேர்த்து எடுத்துச் செல்கிறார்- என்று இவர் சிலேடையாகக் குறிப்பிடுகிறார்.

   மொத்தத்தில் வரலாற்று இலக்கியங்கள் பயணக் குறிப்புக்கள் மூலமாக நாம் அறிவது மதுரை சுல்தானியத்தின் ஒவ்வொரு சுல்தானும் மூர்க்கமான கொடுங்கோலனாகவும் இந்துக்களை வதைக்கும் இம்சை அரசனாகவும் தன்னைப் பிரகடனப் படுத்தியுள்ளான். கொடுங்கோலாட்சிக்கு எதிராக



ncs_t.indb 171 3/1/2019 8:35:40 AM

குறிப்பு

எழுச்சிகள் அவ்வளவாக குறிப்பிடப்படவில்லை என்றாலும் இந்த ஆட்சிக்கு முற்றுப்புள்ளி இட விஜய நகரப் பேரரசு பல ஆண்டுகாலமாக திட்டம் தீட்டி வந்தது என்று தெரிய வருகிறது. மதுரையும் அதன் மக்களும் ஒரு பக்கம் கொடுங்கோலாட்சியிடமும் மற்றொரு பக்கம் கொடிய பிளேக் நோயிடமும் சிக்கித்தவித்தனர். இதற்கான விடியல் குமார கெம்பணாவின் மூலம் 1378ல் ஏற்பட்டது என்பது வரலாற்றுச் சிறப்பு என்றால் மிகையாகாது.

### திறன் அடைவிற்கான பரிசோதனைக் கேள்விகள்

1. தில்லி சுல்தானியம் தோற்றுவித்த தென் இந்தியாவின் ஐந்து மாகாணங்கள் யாவை?
2. மதுரை சுல்தானியம் எப்போது தோற்றுவிக்கப்பட்டது?
3. கியாசுத்தீன் தமாகன் ஷாவிற்கு இந்துக்களின் மீதான கொள்கை என்னவாக இருந்தது?
4. குமார கெம்பணா என்பவர் யார்? சரித்திரத்தில் இவருடைய பங்கு என்ன?
5. இஸ்லாமிய ஆட்சியில் இந்துக்களின் மீது சுமத்தப் பட்ட வரிகள் யாவை?

## 12.4 திறனடைவுக் கேள்விகளுக்கான விடைகள்

1. உலுக் கான் பாண்டிய அரசைக் கைப்பற்றி தில்லி சுல்தானியத்தில் இணைத்தபோது பெருவாரியாக தென் இந்தியா தில்லியின் கீழ் வந்தது. ஆட்சியமைப்பாக அவர்கள் தென் இந்தியாவில் ஐந்து மாகாணங்களைத் தோற்றுவித்தனர்.

   (1. தேவகிரி 2. திலிங்க் 3 கம்பிலி 4. தொரசமுத்திரம் 5 மா பார் (மதுரை))
2. ஜலாலுத்தீன் அசான் ஷா தில்லி சுல்தானியத்திலிருந்து விடுபட்டு மதுரை சுல்தானியம் ஒன்றைத் தோற்றுவித்தான். நாணய வெளியீட்டுக் குறிப்புகள் படி இது 1335ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிகழ்ச்சியாகும்.
3. கியாசுத்தீன் தாமகன் ஷா (1341-1342) இந்துக்களை வெறுத்து ஒறுப்பதில் குத்புத்தீனை விட எள்ளளவும் குறைந்தவனல்லன். இந்துக்களைக் கொடூரமாகத் தாக்கிக் கொடுமைக்குள்ளாக்கிக் கொன்றான் என்று தெரிகிறது. இவனுடைய கொடூர நடவடிக்கைகள் குறித்து இபின் பதூதா என்னும் வெளி நாட்டுப் பயணி தன் குறிப்புக்களில் தெரிவிக்கும் செய்திகள் இதயத்தை வலிக்கச் செய்கிறது. இவரின் குறிப்புப் படி இந்துக் குழந்தைகளின் கழுத்துக்கள் வெட்டப்பட்டு கொல்லப்பட்டனர் என்றும் இந்துக்கள் பொதுவாக இரக்கமில்லாத வகையில் மனிதாபிமானமின்றி



ncs_t.indb 172 3/1/2019 8:35:41 AM

சித்திரவதைக்குள்ளாக்கப் பட்டு கொல்லப்பட்டனர் என்றும் இவர் குறிப்பிட்டுள்ளது மிகவும் வேதனையைத் தருகிறது. இவர்களின் துண்டித்த தலைகள் மாலைகள் போல் கோர்க்கப் பட்டு திரிசூலங்களின் மேல் தொங்கவிடப்பட்டனவாம்.

**குறிப்பு**

4. விஜய நகரப் பேரரசின் படைத்தளபதியான குமார கெம்பணர் முதலாம் புக்கரின் மகனாவான். கெம்பணாவின் மனைவி கங்காதேவி மதுரை விஜயம் என்ற கவிதை நூலை இயற்றினார். இவருடைய குறிப்பில் மதுரை நகரையும் அதன் மக்களையும் காப்பாற்றவேண்டி ஒரு மந்திர வாள் குமார கெம்பணாவிடம் ஒரு தெய்வச் சிறுமியால் ஒப்படைக்கப்பட்டது. அதன்மூலம் கொடுங்கோல் ஆட்சியை அழித்த அவன் மக்களின் பொது விரோதியான சுல்தானை ஒழித்து அமைதியை நிலை நாட்டினான். 1371ல் முபாரக் ஷாவைத் தோற்கடித்து அவனைக் கொன்று தன் குறிக்கோளை நிறைவேற்றவும் செய்தான் என்ற செய்திக்குறிப்பு நமக்கு விளங்குகிறது.
5. இஸ்லாமியக் கோட்பாடுகளை அனுசரித்து அனைத்து சுல்தான்களும் இந்துக்களின் மீது புனிதப் போரைத் தொடர்ந்து நடத்தி வந்தனர். மதவெறியால் இந்துக்கள் மக்களானாலும் மன்னர்களானாலும் ஒடுக்கப்பட்டனர். இம்சைக்குள்ளாயினர். ஜிசியா வரி வருமான வரி வீட்டு வரி சுங்க வரி போன்ற வரிகள் இந்துக்களின் மீது புதியதாகச் சுமத்தப்பட்டது.

## 12.5 உரைச் சுருக்கம்

- மதுரை மாகாணத்தின் ஆட்சியராக இருந்த ஜலாலுத்தீன் அசன் ஷா தில்லியிலிருந்து சுதந்திரம் அடைந்ததாகக் கூறி மதுரை சுல்தானியம் என்ற தனி சுல்தானியத்தை அறிவித்தான் எனப்படுகிறது. இந்த கால நிர்ணயம் சரியாகப் புலப்படாததால் சில நாணய வெளியீடுகளில் பொறித்துள்ள வருடக் குறியீடுகளை வைத்து 1335ல் இந்த மதுரை சுல்தானியம் தோற்றுவிக்கப் பட்டது எனக் கருதலாம். இருப்பினும் ஃபிரிஸ்டா என்ர பாரசீக வரலாற்று அறிஞர் இந்த மா பார் புரட்சி 1340ஆம் ஆண்டில் ஏற்பட்டதாகக் கருதுகிறார்.
- 43 ஆண்டுகளில் 8 சுல்தான்களைக் கண்டது இந்த மதுரை சுல்தானியம். இதில் ஒரு சுல்தான் வெறும் 40 நாட்களே ஆட்சி புரிந்தான். அதிக பட்சமாக ஒரு சுல்தான் 4 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான் என்று கொள்கிறோம்.
  - ■ சுல்தான் ஜலாலுத்தீன் அசான் ஷா (1335-1340)
  - ■ அலாவுத்தீன் உதாஜி (1340)
  - ■ குத்புத்தீன்
  - ■ கியாசுத்தீன் தாமகன் ஷா (1341-1342)

■ சுல்தான் நசிருத்தீன் (1334)

■ சுல்தான் அடில் ஷா (1356-1361)

■ ஃபக்ருத்தீன் முபாரக் ஷா (1361-1370)

■ அலாவுத்தீன் சிக்கந்தர் ஷா (1370-1378)

**குறிப்பு**

- 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழகத்தின் மேல் தில்லி சுல்தானால் பதினைந்து ஆண்டுகளில் மூன்றுமுறை படையெடுப்புக்கள் நடத்தப்பட்டன. 1311ல் மாலிக் கபூர் மதுரையை சூறையாடினான். இதைத் தொடர்ந்து மேலும் இரண்டு படையெடுப்புக்கள் நடந்தன. 1314ல் குஸ்ரவ் கான் என்பவனும் 1323ல் உலுக் கான் என்பவனும் மதுரையையும் பாண்டிய அரசையும் கொள்ளையடித்துச் சின்னாபின்னமாக்கியதும் அல்லாமல் உலுக் கான் படையெடுப்பின் போது மதுரை தில்லி சுல்தானியத்துடன் இணைக்கப் பட்டு மாபார்(மதுரை சுல்தானியத்தின் பாரசீக மறு பெயர்) என்ற மாகாணமாக அறிவிக்கப் பட்டது. தென் இந்தியா முழுதும் ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு தேவகிரி திலிங்க் கம்பிலி தொரசமுத்திரம் மற்றும் மா பார் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டன.
- மதுரை சுல்தானியம் விஜய நகரப் பேரரசால் தோற்கடிக்கப்பட்டு அழிக்கப் பட்டது. பின்னர் மதுரை நாயக்கர்களின் ஆட்சியின் கீழ் வந்தது.
- முஸ்லீம்களின் படையெடுப்புக்களினால் பெருமளவில் பொருளாதாரம் வாழ்க்கை முறை சமூக நிலை மாறின. ஆயினும் இந்துக்கள் இம்சை செய்யப்பட்டு கழுவிலேற்றிக் கொல்லப்பட்டனர். பெருஞ் செல்வங்கள் சூறையாடப்பட்டன. இந்துக் கோவில்கள் இடிக்கப்பட்டன.
- மொழிவளர்ச்சியில் முன்னேற்றம் காணப்பட்டது. உருது தோன்றியது. இந்து இஸ்லாமிய இலக்கியங்கள் தோன்றின. இரு கலாச்சாரப் பிணைப்புக்களும் காணப்பட்டன.
- தமிழ் முஸ்லீம்கள் என்ற ஒரு புதிய சமுதாயம் உருவானது. இதிலும் இரு கலாச்சார இணைப்பு காணப்பட்டது.
- சாதிமுறை பாகுபாடுகள் குறைந்தன எனலாம். இந்துக்கள் ஒடுக்கப்பட்டனர். அனைத்து இந்துக்களும் ஒன்றாகி நின்றனர்.
- இந்துப் பெண்டிர் பர்தா அணியும் கட்டாயம் ஏற்பட்டதுj. இந்துக்களின் மேல் வரிகள் அதிகப் படியாகச் சுமத்தப் பட்டன.
- மதுரை சுல்தானியத்தின் தோற்றமும் அமைப்பும் இந்துக்களைப் பெரிதும் பாதித்தது. சித்திரவதைகளை அனுபவித்த அவர்களின் இழப்புகளில் தன்மானம் உயிர் உடமைகள் மாத்திரமல்லாமல் இந்துக் கோவில்களும் செல்வங்களும் சூறையாடப் பட்டு ஒரு அன்னிய நாட்டில் வசிப்பது போன்ற அவல நிலை ஏற்பட்டது என்று குறிப்புக்களிலிருந்து



ncs_t.indb 174 3/1/2019 8:35:41 AM

அறிகிறோம். பெருவாரியான கட்டாய மதமாற்றங்களும் ஏற்பட்டன என்று குறிப்பிடுகின்றனர்.



## 12.6 சுய பரிசோதனை-கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

### குறுகிய விடைக்கான வினா

1. மதுரை சுல்தானியத்தின் எட்டு சுல்தான்கள் யாவர்?
2. மதுரை சுல்தானியத்தின் தோற்றத்தைப் பற்றி சிறு குறிப்பு வரைக
3. மதுரையில் இஸ்லாமிய ஆட்சியின் விளைவுகள் என்ன?
4. மதுரையில் விஜய நகரப் பேரரசின் ஆட்சி எவ்வாறு ஏற்பட்டது?
5. புதிய கட்டிடக் கலை மற்றும் மொழி குறித்து குறிப்பு வரைக

### விரிவான விடைக்கான வினா:

1. மதுரை சுல்தானியத்தின் ஆட்சியில் பொருளாதார மற்றும் கலாச்சார நிலை எவ்வாறு இருந்தது?
2. சுல்தானியத்தின் கீழ் இஸ்லாமிய வளர்ச்சி எவ்வாறு இருந்தது?
3. மதுரை சுல்தானிய ஆட்சியில் கலை மற்றும் கட்டிடக் கலை நுட்பம் எப்படி இருந்தது?

# அலகு 13 கலாச்சார பண்பாட்டு மையங்கள் 1

குறிப்பு

**அமைப்பு**

13.0 அறிமுகம்
13.1 நோக்கங்கள்
13.2 மகாபலிபுரம் (மாமல்லபுரம்)
13.3 காஞ்சீபுரம் (காஞ்சி)
13.4 தஞ்சாவூர் (தஞ்சை)
13.5 தாரசுரம்
13.6 திறன் அடைவிற்கான பரிசோதனைக் கேள்விகள்
13.7 உரைச் சுருக்கம்
13.8 முக்கிய சொற்கள்
13.9 சுய பரிசோதனை கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
13.10 மேலும் படிக்க

## 13.0 அறிமுகம்

தமிழகத்தை ஆண்டு வந்த பல்வேறு மன்னர்கள் வருங்காலச் சந்ததியினருக்காக விட்டுச் சென்ற அழியாச் செல்வங்கள் இந்த கலைக் கோவில்களும் பண்பாட்டைப் பறைசாற்றும் கலை நயம் மிக்க இடங்களும்தான். இவற்றின் மூலம் பண்டைய தமிழரின் பாரம்பரியம் கலை கலாச்சாரம் பக்தி பொருளாதாரம் வாழ்க்கைமுறை இவை யாவும் நமக்கு கண்கூடாகக் காட்சி அளிக்கும் வரலாற்றுச் சாட்சிகள். இந்த வரலாற்றுச் சான்றுகள் மூலம் நாம் அடைந்த அழியாப் புகழ் மற்றும் நம் கலாச்சாரத் தொன்மை இவற்றை நேரிடையாகப் பதிவு கொள்ள இயலுகிறது. இந்தச் சின்னங்கள் வெறும் கட்டிடங்கள் அல்ல. அவை எல்லாம் சரித்திரம் பேசும் பாடம் புகட்டும் வரலாற்று உண்மைகள். கலைக்களஞ்சியங்கள்

வருங்கால சந்ததியினருக்கு அக்கால மன்னர்களின் கலை நயங்களையும மக்களின் கலாச்சார உணா்வுகளையும் வருங்காலத்தினருக்கான செய்திகளையும் ஒட்டு மொத்தமாக வெளிப்படுத்தும் சான்றுகள்தான் இந்தப் பொக்கிஷங்கள்.

இரண்டு விதமான விளக்கங்களைக் கொண்டவை இவை:

1. கற்களுக்கு உயிர் கொடுத்துக் கலை நயம் மிக்க கலைககூடங்களாக நமக்கு அளித்த அரச வம்சங்களின் கலாச்சார மற்றும் பொருளாதாரப் பின்னணி
2. இந்த விலைமதிப்பற்ற வேலைப்பாடுகளின் சிறப்பு

சரித்திர உண்மைகளைக் காட்டிலும் அதிக அளவில் நாம் இதன் மூலம் பயிலுவது கலை நயம் மற்றும் சிறப்புமிக அமைந்துள்ள கலைக்கூடங்கள் மற்றும் சிற்பங்கள் வருங்கால கட்டிடக் கலை மற்றும் சிற்பக் கலைக்கு ஒரு அளவுகோலாகவும் எடுத்துக்காட்டாகவும் அமைந்துள்ளது அளப்பரியது.



இந்த அலகு உங்களுக்கு மாமல்லபுரம் காஞ்சிபுரம் தஞ்சாவூர் தாராசுரம் குறித்த கலை மற்றும் பண்பாடு நயங்களை விளக்குகிறது.

## 13.1 கற்றலின் நோக்கங்கள்: இந்த அலகின் மூலம் நீங்கள் அடைவது:

- தமிழ் நாட்டின் கலாச்சார பாரம்பரியத்தைப் பற்றி ஒரு கண்ணோட்டம்
- பல்வேறு இனங்களின் பல்வேறு இடங்களில் காணப்பட்ட பாரம்பரியம் மற்றும் கலாச்சாரம் குறித்த விவாதம்
- தமிழர் கலாச்சாரத்திற்கு பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு இனங்களின் காணிக்கை

## 13.2 மகாபலிபுரம் (மாமல்லபுரம்)

பல்லவர் காலத்தில் மாமல்லபுரம் சிறப்புப் பெற்றது. 6ஆம் நூற்றாண்டின் இறுதியில் சேரர் சோழர் மற்றும் பாண்டியர்களுக்கிடையே ஏற்பட்ட அரசியல் போட்டியும் சமய நிலையில் பற்றுதல்களும் இணைந்த பல்லவ மன்னன் சிம்மவிஷ்ணுவின் காலத்திலும் அவனுடைய மகன் முதலாம் மகேந்திரவர்மன் (கி.ப ி600-630)காலத்திலும் ஏராளமான கலைக் கூடங்கள் உருவாக்கப்பட்டன எனலாம். இதன் பின்னணியில் இருந்தது 6-8ஆம் நூற்றாண்டுவரையிலான எழுச்சிமிக்க பக்தி இயக்கம்- ஆழ்வார்களும் நாயன்மார்களும சிறப்படைந்த காலம். முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி600-630) மகன் முதலாம் நரசிம்ம வர்மன் பல கலைப் பொக்கிஷங்களை உருவாக்கினான் என்று அறிஞர்களால் ஒப்புக் கொள்ளப்படுகிறது.சிறிதே தடைப்பட்ட கட்டுமானப் பணிகளும் இராஜசிம்மனின் (இரண்டாம் நரசிம்மவர்மன் 690-728) காலத்தில் நிறைவு பெற்றன.

நரசிம்ம வர்மனால் கொண்டுவரப்பட்ட மகாபலிபுரத்தின் கடற்கரைக் கற்கோவில்கள் கலை நயத்திலும் தரத்திலும் சிறப்பான இடத்தைப் பெற்றவை. அவை வெறும் கற்களும் பாறைகளும் அல்ல. அவை கதை சொல்லும் கலை நயம் மிக்க கற்கள். பல்லவர்களின் புகழ் பரப்பும் கலைச் சின்னங்கள்.

கட்டுமானச் சிறப்பும் கலை நயச் சிறப்பும் செவ்வனே அமையப்பெற்ற இந்த கற் கோவில்கள் உயிரோவியங்கள் எனலாம்.

சென்னையிலிருந்து சுமார் 60 கி.மீ தூரத்தில் அமைந்துள்ள இந்த கடற்கரைக் கோவில்கள 7ஆம் 8ஆம் நூற்றாண்டுகளின் கலை மற்றும் சமய

வெளிப்பாடுகள். பல்லவர்களின் சமயப்பற்று மற்றும் கலை நேர்த்தியைப் பறை சாற்றும் கலைஞர்கள் கைவண்ணம.

**குறிப்பு**

இந்த இடத்தில் சுமார் 400 தொன்மைவாய்ந்த சின்னங்களும் இந்துக்களின் கோவில்களும் உள்ளன. இதில் இடம்பெற்றிருக்கும் மிகப்பெரிய தனித்து நிற்கும் பாறைக்கல் கோவில்கள் உலகப் புகழ் பெற்றவையாகும். கங்கைக்கரை அருங்காட்சி அர்சுனன் தவம் இவற்றைக் காணும்போது பல்லவர்களின் கண்ணைவிட்டு நீங்காத சிறப்பு மிக்க கலைநயம் நமக்குப் புலப்படுகிறது.

பஞ்சபாண்டவர் இரதங்கள் எனப்படும் ஒற்றைக்கல் கோவில்கள் 630-668 ஆண்டிற்கு இடையில் கட்டப்பட்டவைகளாகும்.குகைக் கோவில்களில் புராண இதிகாசங்களிலிருந்து தொகுக்கப்பட்ட காட்சிகளை ஓவியங்களாகவும் சித்திரங்களாகவும் சிற்பங்களாகவும் கொடுத்த பல்லவர் கால கலைத்திறன் அனைவர் கண்ணையும் கருத்தையும் கவர்வதாக இருக்கிறது. சைவ வைணவக் கல்வெட்டுக்களில் மகாபாரதம் மற்றும் சக்தியைக் குறித்து செய்திகள் பல்வேறு இந்திய மொழிகளில் பொறிக்கப்பட்டுள்ளன. 695 முதல் 722 வரையிலான காலத்தில் குகைக் கோவில்கள் கட்டப்பெற்றுள்ளதாகக் கருதலாம். எனினும் அகழ்வாராய்ச்சிகளின் கூற்றுப்படி இவை 6ஆம் நூற்றாண்டும் அதற்கு முற்பட்ட காலத்திலும் கட்டப்பட்டவையாகும். மாமல்லபுரம் கோவில்கள் என்றழைக்கப்படும் இந்தக் கோவில்கள அமைந்துள்ள சிறப்புமிக்க 7 pakodas பல்லவர்களின் கட்டிடக்கலைக்கு ஓர் வாழும் சான்றாகக் கொள்ள வேண்டும்.

நரசிம்மனுடைய சிறப்புப் பெயரான “மாமல்லன்” என்பதே மாமல்லபுரம் என்றும் காலப் போக்கில் மகாபலிபுரம் என்றும் திரிபு பெற்றது.

இந்தச் சிறப்பு எப்படி அமைந்தது? மாமல்லபுரம் ஒரு திறந்தவெளிக் கலைக்கூடமாகும்.இதில் காணப்படும் எழில்மிக்க சித்திரங்கள் சிற்பங்கள் குகைக்கோவில்கள் கற்பாறைக் கோவில்கள் மற்றும் எழிற் காட்சிகள் அனைவரையும் ஈர்ப்பதாக அமைந்துள்ளன. ஏனெனில் இவை கட்டிடக்கலை சிற்பக்கலை சித்திரக்கலை அனைத்திலும் சிறப்பானதாகத் தெரிகிறது.

மகாபலிபுரம் கலா இரசிகர்களின் ஒரு சிறந்த கலாலயம் ஆகும். இதில் காணப்படும் பல்வேறு மதங்களின் கோட்பாடுகளைச் சித்தரிக்கும் வண்ண ஓவியங்கள் சித்திரங்கள் சிற்பங்கள் கற்கோவில்கள் குகைக்கோவில்கள் அனைத்தும் இயற்கையும் ஓவியமும் சிற்பமும் இணைந்த காவியங்கள்.

இதில் அமைந்துள்ள சுமார் 40 சின்னங்கள் 5 விதங்களில் அமைந்துள்ளன:

1. ரதக் கோவில்கள்
2. மண்டபங்கள்-குகைக் கோவில்கள்
3. ஒற்றைக்கல் பாறைகள்

குறிப்பு

4. கோவில் கட்டிடங்கள்
5. அகழ்வுகள்

1. **குகைக் கோவில்கள்:** இவை மலைச்சரிவுகளின் உச்சியிலும் இல்லாமல் அடிவாரத்திலும் இல்லாமல் மலையிடைப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன.

   இவை மூன்றும் நரசிம்ம பல்லவனின் கட்டிடக்கலை மாட்சிக்கு சாட்சிகளாகும்.

   (அ) மகிஷாசுரமர்த்தினி நடன மண்டபம்

   (ஆ) வராக மண்டபம்

   (இ) திருமூர்த்தி மண்டபம்

   அர்ச்சுனன் தவம் மகிஷாசுர வதம் துர்க்கை போன்ற புராணச் செய்திகளை இக் குகைக் கோவில்களில் அமைத்துள்ளான் நரசிம்ம வர்மன்.

2. **தூண்கள்:** பல்லவர்களின் கற்றூண்கள் சதுர வடிவில் இருக்கும். இவை கலை நயமும் சிற்ப வேலைப்பாட்டுடனும் காணப்படுகின்றன.

3. **சிற்பங்கள்:** மகிஷாசுர வதம் குறித்த சிற்பம் மிகவும் கண்ணைக்கவர்வதாக இருக்கின்றது. சிம்ம வாகனத்தின் மேல் போர்க்கோலத்துடன் வீற்றிருக்கும் துர்க்கை சிறந்த கலை நயத்துடனும் எளிமையாகவும் தத்ரூபமாகவும் காணப்படுகின்றன.

4. ஒற்றைக்கல் கோவில்கள் நரசிம்ம பல்லவனின் தனிக் கலை ஆர்வத்தினால் உருவானது. பஞ்சபாண்டவர்களின் இரதங்கள் எனப்படும் ஒற்றைக்கல் கோவில்கள் பண்டைக்காலக் கோவில்களின் அமைப்பிற்கேற்ப கட்டப்பட்டுள்ளன. இவை கட்டுமானக் கலையின் சிறப்பு அம்சம் எனலாம்.

5. கற்களின் மூலம் கதை சொல்லும் பல்லவர் பாணியில் புராணக் கதைகள் சிற்பங்களின் வாயிலாகத் தெரிவிக்கப்படுகின்றன.

   (அ) கோவர்த்தனகிரியைத் தலையின் மேல் குடை பிடித்து மழையிலிருந்து மக்களையும் ஆவினங்களையும் காப்பாற்றும் பால கிருஷ்ணன்

   (ஆ) கங்கை நதிக் கரையின் மருங்குகளிலும் காணப்படும் இனிய அழகிய காட்சிகள்

   (இ) ஆற்றங்கரை ஓரத்தில் நீரைப் பருகக் காத்திருக்கும் மான் கூட்டம்

   (உ) அணிவகுத்துச் செல்லும் அன்னப் பறவைகள் மற்றும் மணிக்கோவை வடங்கள் ஆகியவை கல்லில் வடிக்கப்பட்டுள்ளன

   (ஊ) வைணவக் கோவிலை வலம் வரும் சாந்தமான சன்னியாசிகள் கலை நயம் மிக்கதாக வடிக்கப்பட்டுள்ளன.

இவற்றைக் கண்டு பாராட்டாதவர் இல்லை எனலாம். நரசிம்ம பல்லவனின் கட்டிடம் மற்றும் ஓவியம் சிற்பக் கலைத்திறன் இதன் மூலம் நன்கு பறைசாற்றப்பட்டுள்ளன.

குறிப்பு

**உங்களுடைய முன்னேற்றத்தைப் பரிசோதியுங்கள்**

1. மாமல்லபுரம் கட்டுமானக் கலையுடன் இணைக்கப்பட்ட கலையின் சிற்பியான மன்னன் யார்?
2. மாமல்லபுரம் ஏன் அப்பெயரினால் அழைக்கப் படுகிறது?

## 13.3 காஞ்சீபுரம்

காஞ்சீபுரம் (காஞ்சி) என்று அழைக்கப்படும் காஞ்சி கவி காளிதாசனால் புகழப்படும் ஒரு ஊராகும்-நகரமென்றால் அது காஞ்சியைப் போல இருக்கவேண்டும் ("நகரேஷு காஞ்சி")என்று. காஞ்சி காமாட்சி அம்மன் காஞ்சிப்பட்டு சங்கர மடம் இவை எல்லாம் காஞ்சி நகருக்குப் பெருமை சேர்ப்பவையாகும். பல்வேறு அரசுகளின் தலை நகராகத்திகழ்ந்த்தும் காஞ்சிதான். சமண பௌத்த மதங்களின் பள்ளிகள் அதிகரித்த இடமும் காஞ்சிதான்.

வேகவதி ஆற்றின் கரையில் அமைந்த இந்த நகரம் பல்லவர் இடைக்கால சோழர் பிற்காலச் சோழர் பிற்காலப்பாண்டியர் விஜய நகரப் பேரரசு கர்நாடக அரசர்கள் ஆங்கிலேயர் போன்ற அனைத்து ஆட்சிமுறைகளையும் கண்ட நகரம் காஞ்சி.

கைலாசநாதர் கோவில் மற்றும் வைகுண்டப்பெருமாள் கோவில் காஞ்சியின் வரலாற்று சிறப்புமிக்க கலை நயம் படைத்த கோவில்களாகும்.

வரலாற்றில் காஞ்சி சிறப்புற மற்றொரு காரணமும் உண்டு. பௌத்தர்களும் சமணர்களும் 1 முதல் 5ஆம் நூற்றாண்டு வரை காஞ்சியில் மடாலயங்களை அமைத்தனர். இங்கே கடிகைத்தானம் என்ற கல்விக் கூடங்கள் சிறப்புப் பெற்றன. யுவான் சுவாங் கி.பி. 7ம் நூற்றாண்டில் வந்தபோது சுமார் நூறு புத்த மடாலயங்களும் அவற்றில் பத்தாயிரம் புத்த பிக்குக்கள் இருந்ததாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

காஞ்சி சமணர்களின் முக்கிய மையமாக விளங்கியது எனலாம். இங்கே அமைந்திருந்த சமண மடாலயங்கள் காஞ்சியைச் சுற்றி வசித்து வந்த சமணர்களுக்கு ஏதுவாக செயல்பட்டன. வாணிகர்கள் பாறைகளைக் குடைந்து சமண மதத்தினருக்கான கற்படுக்கைகளை ஏற்படுத்திக் கொடுத்தனர்.

காஞ்சி முற்கால சோழர்களின் தலை நகராக விளங்கியதென சொல்லப்படுகிறது. ஆயினும் வரலாற்று ஆராய்ச்சியாளர் பி.டி.சீனிவாச ஐயங்கார் இதை ஏற்க மறுக்கிறார். கி.மு 3ஆம் 2ஆம் நூற்றாண்டுகளுக்கிடையில் வாழ்ந்த பதஞ்சலியின் இலக்கண நூலில் காஞ்சியைப் பற்றின குறிப்பு



ncs_t.indb 180 3/1/2019 8:35:41 AM

உள்ளது. இதேபோல காஞ்சி தென்னிந்திய பனாரஸ் என்று கருதப்படும் பெருமை பெறுகிறது.

குறிப்பு

6ஆம் நூற்றாண்டில் தெற்கு ஆந்திராவில் ஆட்சி புரிந்து வந்த பல்லவர்கள் தொடர்ந்து வந்த வடக்கின் ஆக்கிரமிப்புக்களைத் தடுக்கவென்று தலை நகரைத் தெற்கில் மாற்றி அமைத்தனர். காஞ்சியில் தலை நகரை அமைத்துக் கொண்டனர். கோட்டை மதில்களை எழுப்பி சீர்மிகு சாலைகளையும் எழில்மிகு கோவில்களையும் அமைத்தனர். பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசி (610-642) பல்லவ நாட்டின் மேல் படையெடுத்து காவேரி ஆற்றினருகில் நெருங்கிவிட்டான்.தொடர்ந்து காவேரியைக் கடந்து காஞ்சியைக் கைப்பற்ற முயற்சி செய்த சாளுக்கியர்களை பல்லவர்கள் தோற்கடித்தனர். இரண்டாம் முறையும் இந்த முயற்சி முறியடிக்கப்பட்டு இரண்டாம் புலிகேசி வாதாபி நகருக்குப் புறமுதுகிட்டான். வாதாபி நகரம் முற்றுகையிடப்பட்டதால் இரண்டாம் புலிகேசி மன்னன் முதலாம் மகேந்திரவர்மனின் (600-630) மகன் முதலாம் நரசிம்மவர்மனால் (630-668) வாதாபிப் போரில் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டான்.

காஞ்சி பல்லவர்களின் ஆட்சியில் பெருமையும் சிறப்பும் பெற்றது. இந்துக்கள் மற்றும் பௌத்தமதக் கல்வியில் காஞ்சி மையமாகச் செயல்பட்டது. இரண்டாம் நரசிம்மவர்மன் (இராஜசிம்மன் 680-720) கைலாச நாதர் கோவில் மற்றும் வரதராஜ பெருமாள் கோவில் ஐராவதேஸ்வரர் கோவில் இவற்றைக் கட்டினான். சீன யாத்ரிகர் யுவான்சுவாங் (கி.பி 640) குறிப்பின்படி காஞ்சி நகரம் 6 மைல்கள் (9.7கி.மீ) சுற்றளவில் அமைந்த ஒன்றாகும். மக்கள் வீரமும் இறையுணர்வும் கல்வியில் ஆர்வமுள்ளவர்களாகவும் நியாயத்தை விரும்பியவர்களாகவும் குறிப்பிடப்படுகிறார்கள்.

முதலாம் ஆதித்ய சோழன் பல்லவ மன்னன் கி.பி 890ல் அபராஜிதவர்மனைத் தோற்கடித்து (880-897) காஞ்சியைக் கைப்பற்றினான். முதலாம் இராஜ இராஜ சோழனின் காலத்தில் (985-1014) காஞ்சி நகரம் உள்ளிட்ட பல பகுதிகள் ஜெயம்கொண்ட சோழமண்டலம் என்ற புதிய பெயரால் அழைக்கப்பட்டு காஞ்சி வடக்கு மண்டலத்தின் தலை நகரமாக இருந்துவந்தது. கச்சபேஸ்வரர் கோவிலைக் கட்டிய முதலாம் இராஜ இராஜ சோழன் காமாட்சி அம்மன் கோவிலைப் புனரமைப்பு செய்தான். அவன் மகன் முதலாம் இராஜேந்திர சோழன் (1014-1044) யதோத்காரி பெருமாள் கோவிலைக் கட்டினான்.

திரிலோசன சிவாச்சாரியார் எழுதிய சித்தாந்தசாராவளியில் முதலாம் இராஜேந்திர சோழன் வடக்கே படையெடுத்து வெற்றி கொண்ட போது சைவர்களைப் பெருமளவில் அழைத்து வந்து காஞ்சி நகரில் குடியேற்றினான் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. 1218ல் பாண்டிய மன்னன் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (1216-1238) சோழ நாட்டின் மீது படையெடுத்தான். அப்போது



ncs_t.indb 181 3/1/2019 8:35:41 AM

குறிப்பு

மூன்றாம் குலோத்துங்க சோழனை ஆதரித்த ஹொய்சால மன்னா் இரண்டாம் வீர நரசிம்மன் (1220-1238) பாண்டியா் படையெடுப்பை முறியடித்தான். கல்வெட்டுக்களின் கூற்றுப் படி ஹொய்சாலா்களின் இராணுவப் படைத்தளம் 1230 ஆண்டு வரை காஞ்சி நகரில் அமைந்திருந்தது. அதன் பின்னா் தெலுங்கு சோழா்கள் காஞ்சியைக் கைப்பற்றினா். 1258ல் முதலாம் ஜாதவா்ம சுந்தர பாண்டியன் காஞ்சியைக் கைப்பற்றினான். 1311 வரை பாண்டியா்கள் வசம் இருந்த காஞ்சி சம்புவரையா்களால் தனி நாடாக அறிவிக்கப்பட்டது. அதனிடையில் மாலிக் கபூரின் படையெடுப்பும் வயனாட்டின் ரவிவா்மன் குலசேகரன் மற்றும் கக்கட்டியா் இரண்டாம் பிரதாப ருத்ராவின் பிரவேசமும் குறிப்பிடப்பட்டுள்ளன.

வைணவா்களின் சமய கோட்பாடுகளில் காஞ்சி புனிதப்பயணத்திற்கான ஏழு தீா்த்தங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்த நகரில் அமைந்துள்ள வரதராஜப் பெருமாள் கோவில் ஏகாம்பரேஸ்வரா் கோவில் காமாட்சியம்மன் கோவில் மற்றும் குமரக்கோட்டம் கோவில் அனைத்தும் தமிழ் நாட்டில் அமைந்துள்ள இந்துக்களின் முக்கிய தலங்களுள் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. விஷ்ணுவின் 108 திருத்தலங்களில் 14 தலங்கள் காஞ்சியில் அமைந்துள்ளன.

இதே போல சைவா்களுக்கும் காஞ்சி ஒரு முக்கிய புனித தலமாகக் கொள்ளப்படுகிறது. பௌத்தா்களும் சமணா்களும் அவா்களுடைய மதக்கல்வி நிறுவனங்களைக் காஞ்சியில் நடத்தி வந்தனா். காஞ்சி ஒரு முக்கிய மையமாக விளங்கியது.

**உங்களுடைய முன்னேற்றத்தைப் பரிசோதியுங்கள்**

3. காஞ்சியின் அரசா்களைப் பட்டியலிடுக
4. காஞ்சி புனிதத் தலம் என்று எந்த மதத்தினரால் கருதப்படுகிறது?

## 13.4 தஞ்சாவூா் (தஞ்சை)

தமிழ் நாட்டின் நெற்களஞ்சியம் என்று புகழ் பெற்றது தஞ்சாவூா் எனப்படும் தஞ்சை. தென் இந்தியாவில் முக்கியமாகத் தமிழ் நாட்டில் கலை கட்டுமானக் கலை கலாச்சாரம் சமயம் சாா்ந்த மையம் இது. தஞ்சைப் பெரிய கோவில் என்றழைக்கப்படும் பிரகதீசுவரா் ஆலயம் இந்த நகரின் நடுவில் அமைந்துள்ளது. இக் கோவிலும் இதனைச் சுற்றி அமைந்துள்ள பல்வேறு கலைப் பொக்கிஷங்களும் கலை சாா்ந்த நினைவுச் சின்னங்களும் ஐக்கிய நாடுகளின் யுனெஸ்கோவினால் உலக புராதனச்சின்னங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இதைத் தவிர தஞ்சை ஓவியங்களும் சித்திரங்கள் உலகப் புகழ் பெற்றவை.



ncs_t.indb 182 3/1/2019 8:35:41 AM

**குறிப்பு**

தஞ்சையைப் பற்றி சங்க கால இலக்கியங்களில் (கி.மு 3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 4ஆம் நூற்றாண்டு வரை) குறிப்புக்கள் இல்லை எனினும் வரலாற்று அறிஞர்கள் தஞ்சை நகரம் இருந்தற்கான ஆதாரங்களை ஒப்புக் கொள்கின்றனர். கோவில் வெண்ணி எனப்படும் இடம் தஞ்சையிலிருந்து கிழக்கே 24 கி.மீ தூரத்தில் உள்ளது. இந்த இடத்தில்தான் கரிகால சோழனுக்கும் சேரன் பாண்டியன் ஆதரவு வேளிர் குடி மன்னர்களுக்கும் இடையே மாபெரும் போர் நிகழ்ந்தது. இந்த வெற்றி சங்ககாலச் சோழர் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. இந்தப் போரில் புறமுதுகிட்டு முதுகில் காயமுற்ற சேர மன்னன் பெருஞ்சேரலாதன் வடக்கிருந்து உயிரை மாய்த்துக் கொண்டான் என்பது சரித்திரம்.

களப்பிரர்கள் கி.பி 3ஆம் நூற்றாண்டில் சோழர்களை எதிர்த்தார்கள். மேலும் தற்போதைய தஞ்சையைச் சுற்றியுள்ள இடங்களை முத்தரையர்கள் ஆறாம் நூற்றாண்டில் கைப்பற்றி 849 வரை ஆட்சிபுரிந்தனர். 850ல் இடைக்கால சோழ அரசனான விஜயாலயா (841-878) 850ல் இளங்கோ முத்தரையரைத் தோற்கடித்து தஞ்சையைக் கைப்பற்றினான். தஞ்சையில் தேவி நிசும்பாசுடானிக்கு ஒரு கோவிலையும் கட்டினான்.அவனுடைய மகன் முதலாம் ஆதித்த சோழன் தஞ்சை மேலான ஆதிக்கத்தை மேலும் வலுவாக்கினான். ராஷ்டிரகூட மன்னன் இரண்டாம் கிருஷ்ணா (878-914) தஞ்சையைக் கைப்பற்றியதாகச் சொல்லப்படுகிறது. அதற்கான வரலாற்று ஆதாரங்கள் காணப்படவில்லை எனலாம். அச்சமயத்தில் ஆண்டு வந்த சோழமன்னனான முதலாம் பராந்தகன் (907-950) காலத்திலும் பின்னாளில் 1025ல் கங்கை கொண்ட சோழ புரம் உருவாகும்வரை தஞ்சைதான் தலை நகராகத் திகழ்ந்தது. தமிழ்க் கட்டிடக்கலையின் சிறப்பு அம்சமாக முதலாம் இராஜராஜ சோழன் (985-1014) தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டினான். தமிழ்க் கட்டிடக் கலையின் எடுத்துக்காட்டாகவும் இந்த பிரகதீசுவரர் ஆலயம் விளங்குகிறது.

13ஆம் நூற்றாண்டில் சோழர்களின் வீழ்ச்சியின் தொடக்கத்தில் பாண்டியர்கள் இரண்டுமுறை தஞ்சையின் மேல் படையெடுத்து கைப்பற்றினர். முதன்முறை 1218-19 யிலும் இரண்டாம் முறை 1230 ல் இது நடந்தது. மூன்றாம் இராஜராஜன் (1216-56) நாடு கடத்தப்பட்டு அவன் ஹோய்சால மன்னர் இரண்டாம் வீர நரசிம்மன் (1220-35) உதவியை நாடித் தஞ்சை மீட்கப்பட்டது. எனினும் பாண்டிய மன்னன் முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் (1268-1308) காலத்தில் 1279ல் தஞ்சையும் சோழ நாட்டின் மற்ற பகுதிகளும் பாண்டிய நாட்டின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரும் கட்டாயம் ஏற்பட்டது. 1279 முதல் 1311 வரை தஞ்சை பாண்டியர் ஆட்சியில் இருந்து வந்தது. மாலிக் கபூரின் ஆக்கிரமிப்பினால் மீண்டும் தஞ்சை 1378 வரையிலான



ncs_t.indb 183 3/1/2019 8:35:42 AM

குறிப்பு

இடைப்பட்ட காலத்தில் தில்லி சுல்தானியத்தின் கீழ் ஆளப்பட்டது. 1335-1378 வரை செயல்பட்ட

மதுரை சுல்தானியம் 1350 முதல் விஜய நகரப்பேரரசின் கீழ் கொண்டுவரப்பட்டு கடைசியில் 1378ல் தில்லி சுல்தான் ஆட்சி தமிழகத்தில் முடிவு பெற்றது.

**தஞ்சை 1869ல்:** 1365 முதல் 1371 வரையிலான ஸ்ரீரங்கம் படையெடுப்புக்களில் விஜய நகர அரசர் கம்பண உடையார் தஞ்சையை வெற்றி கொண்டார் எனப்படுகிறது. தமிழகத்தில் விஜய நகரப்பேரரசின் மிகச் சிறந்த ஆட்சிப் பகுதிகளுக்குள் தஞ்சையும் ஒன்றாகும்.தமிழகம் முழுவதையும் தன் கட்டுப்பாட்டில் கொண்டுவந்த விஜய நகர மன்னர் கிருஷ்ண தேவராயர் தமிழகப்பகுதிகளை செஞ்சி தஞ்சாவூர் மதுரை ஆகியவற்றைத் தலை நகராகக் கொண்டமூன்று மண்டலங்களாகப் பிரித்தார்.

தேவராயனின் (1443ல்) கல்வெட்டுக்களும் திருமலைக் கல்வெட்டுக்களும் (1455ல்) அச்சுத தேவரின் சாசனமும் (1532 மற்றும் 1539) தஞ்சை நகரின் மேலிருந்த விஜய நகரப்பேரரசின் ஆதிக்கத்தை உறுதிப்படுத்துகின்றன. விஜய நகரப்பேரரசின் ஆற்காடு ஆட்சியாளரான சேவப்ப நாயக்கர் (1532-1560) தஞ்சை நாயக்கர் ஆட்சியைத் (1532-1675) தோற்றுவித்தார். இந்த ஆட்சியானது 143 ஆண்டுகளுக்கு செயல் பட்டது.

தஞ்சையை ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் தஞ்சை நாயக்கர்கள் எனப் பட்டனர். விஜய நகரப் பேரரசுக்கு உதவியாகவும் விசுவாசமாகவும் இருந்து வந்தனர். மதுரை நாயக்கர் பேரரசை எதிர்த்து நின்றபோதும் தஞ்சை நாயக்கர் பேரரசின் சார்பாகச் செயல் பட்டார். தலைக்கோட்டை போரிலும் தஞ்சை நாயக்கரின் படைகள் அனுப்பப்பட்டு உதவி புரிந்தன.

தஞ்சை நாயக்கர்கள்

1. சேவப்ப நாயக்கர் 1532-1560
2. அச்சுதப்ப நாயக்கர் 1560-1614
3. இரகுநாத நாயக்கர் 1600-1634
4. விஜய ராகவ நாயக்கர் 1634-1673)

இதன் பின்னர் 1673ல் மதுரை ஆட்சியரான சொக்கநாத நாயக்கரின் (1662-82) படையெடுப்பில் தஞ்சை வீழ்ந்தது. சொக்க நாத நாயக்கரின் மகனான விஜய ரகுநாத நாயக்கர் இப் போரில் கொல்லப் பட்டதைத் தொடர்ந்து சொக்க நாத நாயக்கரின் சகோதரன் அழகிரி நாயக்கர் (1673-75) தஞ்சையில் பேரரசராக முடிசூட்டப்பட்டார்.

இதன் பின்னர் 1674ல் தஞ்சை மராட்டியர் ஆட்சியின் கீழ் வந்தது. முதலாம் இகோஜி (1675-84)



ncs_t.indb 184 3/1/2019 8:35:42 AM

தஞ்சையில் மராட்டியர் சாம்ராஜ்யத்தை உருவாக்கினார். தஞ்சை 1855 வரையில் மராட்டியர்வசம் இருந்தது. 17ஆம் நூற்றாண்டின் ஒரு பாகமும் 18ஆம் நூற்றாண்டு முழுவதுமாக மராட்டிய சாம்ராஜ்யம் தழைத்தது தமிழகத்தில். 1787ல் அமர்சிங் எனும் தளபதி சரபோஜியின் இளைய ராஜகுமாரர்களைச் சிறைப்பிடித்து அரியணை ஏறினான். 1799ல் ஆங்கிலேயர் உதவியுடன் இரண்டாம் சரபோஜி மீண்டும் பட்டத்திற்கு வந்தார். ஆங்கிலேயர் அவருக்கு தஞ்சாவூர் கோட்டையும் அதன் சுற்றுப்புறமும் மட்டுமே ஆட்சி உரிமை அளித்தனர். சாம்ராஜ்யத்தின் ஏனைய பகுதிகள் ஆங்கிலேயரின் முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. 1855ல் இரண்டாம் சிவாஜி (1832-55) வாரிசு இல்லாமல் இறந்தபோது அந்த சாம்ராஜ்யம் லாப்சுக் கொள்கையின் மூலம் ஆங்கிலேயர் ஆட்சியுடன் இணைக்கப் பட்டது. தஞ்சை ஆங்கிலேயரால் டாஞ்சூர் என்று அழைக்கப் பட்டது. 5 ஆண்டுகள் கழித்து நாகப்பட்டினம் தஞ்சைக்குப் பதிலாக மாவட்டத் தலைமையாக உருவெடுத்தது. தஞ்சை பிராந்தியத்தில் முக்கிய மையமாக மாறியது. இன்றளவும் தஞ்சை-மாவட்டத் தலை நகராகவும் உழவுக்குப் பெருமை சேர்க்கும் காவிரி டெல்டா பகுதியாகவும் பழமையின் சின்னமாகவும் மதுரைக்கு அடுத்தபடி திகழ்கிறது. இன்றும் சோழர்களின் புகழ் பாட தஞ்சை மட்டுமே போதுமானது எனலாம்.

### உங்களுடைய முன்னேற்றத்தைப் பரிசோதியுங்கள்

5. தமிழ் நாட்டில் தஞ்சை எந்த அளவில் முக்கியத்துவம் வாய்ந்தது?
6. பாண்டியர்கள் எத்தனை ஆண்டுகள் தஞ்சையை ஆண்டனர்?

## 13.5 தாராசுரம்

இரண்டாம் இராஜராஜசோழன் 12ஆம் நூற்றாண்டில் கட்டிய ஐராவதேஸ்வரர் கோவில் தாராசுரத்தில் அமைந்துள்ளது. யுனெஸ்கோவினால் உலக புராதனச்சின்னமாக அறிவிக்கப்பட்ட கோவிலாகும் இது. (யுனெஸ்கோ- ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார விஞ்ஞான கலாச்சார அமைப்பாகும்). தாராசுரம் அடைந்த புகழ் இக் கோவிலுக்கு உரியது.

இக் கோவிலில் கலை மற்றும் கட்டிடக்கலை நுட்பம் செழித்துக் காணப்படுகிறது. 85 அடி உயரத்தில் விமானம் அமைக்கப்பட்டுள்ளது. முன் மண்டப அரங்கு பல குதிரைகளால் இழுத்துச் செல்லப்படும் மிகப் பெரிய இரதம் போல் அமைக்கப்பட்டுள்ளது. கல்லில் வடித்த சிறப்பான சித்திரங்கள் இங்கே காணப்படுகின்றன.

மூலவர் ஐராவதேஸ்வரரின் துணைத் தெய்வமான பெரிய நாயகி அம்மனின் சன்னதியும் கோவிலும் தனியாக பக்கத்தில் அமைந்துள்ளது. இக் கோவில் ஐதீகப் படி ஐராவதம் லிங்கத்தை வணங்கியதால் மூலவர்



ncs_t.indb 185 3/1/2019 8:35:42 AM

ஐராவதேஸ்வரர் எனப்படுகிறார். அதே போல அன்னைக்கு தெய்வநாயகி என்ற பெயரை சூட்டிக்கொண்டிருக்கிறாள்.

**குறிப்பு**

வெளிப்பிரகரத்தின் உட்சுவர்களில் காணப் படும் சிற்பங்கள்தாம் இக் கோவிலில் அமைந்த சிற்பத்திறன். இவை ஆண் பெண் உடற்பயிற்சி சாகசங்களைச் சித்தரிக்கின்றன. பல்வேறு விதமான பயிற்சிமுறைகளையும் இந்த சிற்பங்களின் மூலம் வெளிப்படுத்துகின்றன. இவை பெரும்பாலும் தெருக்கூத்து விளையாட்டுக்களைக் காண்பிக்கும் நாடோடி மக்கள் போல காட்சிகள் சித்தரிக்கப்பட்டுள்ளன.

பிரதான மண்டபம் ராஜ கம்பீரம் எனப்படுகிறது.இந்த இரதத்தைக் கட்டி இழுப்பது யானையாகும். மேற்கூரையை அலங்கரிக்கும் வண்ண ஓவியத்தில் இடம் பெற்றிருப்பது மலர்ந்த தாமரைக்குள் காணும் வகையில் சிவ பார்வதியின் சித்திரங்கள். மற்றொரு சித்திரத்தில் இடம் பெற்றிருப்பது ஒரு கிராமத்தில் நடக்கும் பிரசவம் அதில் உதவும் மற்ற கிராமியப் பெண்கள் என்ற காட்சி. இதன் மூலம் நமக்கு அந் நாட்டின் பழக்க வழக்கங்களைப் பற்றி அறிந்து கொள்ள இயலுகிறது.கைலாச மலையைச் சுமந்து செல்லும் இராவணன் சித்தரிக்கப்பட்ட சிற்பங்கள் வேலைப்பாட்டிற்கு ஒரு எடுத்துக்காட்டு.வீணை இல்லா சரசுவதி புத்தர் பிக்ஷாடனர் அர்த்தனாரீஸ்வரர் பிரம்மா மற்றும் சூரியன் இச் சிற்பங்களும் அலங்கரிக்கின்றன.

இக்காலத்தில் சைவம் தழைத்தது. சிவனின் இன்னொரு அவதாரமான சரபேசுவரர் மிகவும் பிரசித்தி பெற்றது. சிங்கத்தின் தலையையும் பறவையின் உடலையும் கொண்டு நரசிம்மரைத் தன் மடியில் வைத்துக் கொண்டுள்ள இந்தச் சிற்பம் முதலில் மண்டபத்தில் வைக்கப் பட்டது. பின்னர் கோவிலில் பிரதிஷ்டை செய்யப் பட்டது.

சுவர்ச் சித்திரங்கள் நாயக்கர் காலத்தில் புதுப்பிக்கப் பட்டன. நுழைவாயிலில் நிற்கும் இரண்டு துவாரபாலகர்கள் சங்கநிதி மற்றும் பத்மநிதி- இளைஞர்களின் ஆர்ப்பரிக்கும் உடற்கட்டுடனும் இளமை ததும்பும் உடல்வாகுடனும் நிற்கும் வீரர்களாகக் காணப்படுகின்றனர்.

முன் மண்டபத்தின் நுழைவாயிலில் அமைந்துள்ள மூன்று படிக்கட்டுக்கள் தட்டப்படும்போது விதவிதமான இசையால் 7 ஸ்வரங்களையும் ஒவ்வொரு இடத்தில் நாம் கேட்டு அனுபவிக்க முடிகிறது. இந்தக் கலை நயம் மிக்க புராதானச் சின்னங்களைப் பாதுகாக்க தொல்பொருள் துறை பல நடவடிக்கைகளை எடுத்தவண்ணம் இருப்பதால் அவை குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்களாக மாறிவிடாமல் தடுக்கப் படுகிறது எனலாம்.

## உங்களுடைய முன்னேற்றத்தைப் பரிசோதியுங்கள்

7. யுனெஸ்கோவினால் உலக புராதனச்சின்னமாக அறிவிக்கப்பட்ட கோவிலாக எந்தக் கோவில் கருதப்படுகிறது?
8. ஐராவதேஸ்வரர் கோவிலின் நுழைவாயிலில் எந்தச் சிலைகள் நம்மை வரவேற்கின்றன?



ncs_t.indb 186 3/1/2019 8:35:42 AM

## 13.6 திறன் அடைவுகளைப் பரிசோதிக்கும் விடைகள்

குறிப்பு

1. சிம்மவிஷ்ணுவின் மகன் முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி600-630) காலத்தில் ஏராளமான கலைக் கூடங்கள் உருவாக்கப்பட்டன.
2. மாமல்லன் என்ற பட்டப்பெயரைக் கொண்ட நரசிம்மவர்மன் உருவாக்கிய கலைக் கோவில்கள் மாமல்லபுரம் என்ற பெயரில் அழைக்கப்பட்டன.
3. காஞ்சீபுரம் பல்லவர் இடைக்கால சோழர் பிற்காலசோழர் பிற்கால பாண்டியர்கள் தில்லி சுல்தானியம் விஜய நகர சாம்ராஜ்யம் கர்நாடகப் பேரரசு மற்றும் ஆங்கிலேயர்கள் இவர்களால் ஆளப்பட்டது.
4. வைணவ மதக் கோட்பாடுகளின்படி காஞ்சீபுரம் 7 தீர்த்தங்களில் ஒன்றாகக் கருதப் படுகிறது. இதனால் அது பக்தி மார்க்கத்தில் முக்கிய இடத்தை வகிக்கிறது.
5. தஞ்சாவூர் தமிழ் நாட்டின் மிக முக்கிய நகரம். சோழர்காலக் கோவில்களில் காணப்படும் கலைப்பொக்கிஷங்கள் யுனெஸ்கோவினால் உலகப் புராதனச்சின்னங்களாக அறிவிக்கப்பட்ட அனைத்து சின்னங்களும் தஞ்சையைச் சுற்றிலும் உள்ள இடங்களாகும்.
6. 1279 முதல் 1311 வரை தஞ்சை பாண்டியர் ஆட்சியின் கீழ் இருந்து வந்தது.
7. 12ஆம் நூற்றாண்டில் இரண்டாம் இராஜராஜ சோழனால் கட்டப்பட்ட ஐராவதேஸ்வரர் கோவில் யுனெஸ்கோவினால் உலக புராதனச்சின்னமாக அறிவிக்கப்பட்ட கோவிலாகும்.
8. நுழைவாயிலில் நிற்கும் இரண்டு துவாரபாலகர்கள் சங்கநிதி மற்றும் பத்மநிதி இளைஞர்களின் ஆர்ப்பரிக்கும் உடற்கட்டுடனும் இளமை ததும்பும் உடல்வாகுடனும் நிற்கும் வீரர்களாகக் காணப்படுகின்றனர்.

## 13.7 கட்டுரைச் சுருக்கம்

- நாம் பிறந்த மண்ணின் பாரம்பரியமும் கலாச்சாரமும நமக்குப் பெருமை சேர்ப்பதுடன் நம்மைப் பூரிப்படைவும் செய்கிறது
- புராதனச் சின்னங்கள் மூலம் அவற்றை உருவாக்கிய ராஜ வம்சத்தினரின் பொருளாதார கலாச்சாரப் பின்னணி புலப்படும். நம்மில் பெருமிதமும் உண்டாக்கும்.
- வரலாற்று ஆராய்ச்சியாளர்களைப் பொறுத்த வரையில் புராதனச் சின்னங்களைக் கொண்டு கட்டிடக் கலை வளர்ச்சி கலைகளின் சிறப்பு போன்றவைகளின் வாயிலாக அந்தந்த சந்ததியினரின் கலைக்கான அர்ப்பணம் மற்றும் பங்களிப்பு புலப்படும்.

குறிப்பு

- மாமல்லபுரச் சிற்பங்களின் வாயிலாக மகேந்திரவர்மனின் கலை நயம் கலைத் திறன் மற்றும் வருங்காலத்திற்கென விட்டுச் சென்ற அவனுடைய வரலாற்றுச் சிறப்புப் பெற்ற கொடை நமக்குத் தெளிவாகப் புலப்படும்.
- தென் ஆந்திராவில் தலைநகரமைத்து ஆண்டு வந்த பல்லவர்கள் 6ஆம் நூற்றாண்டில் வடக்கிலிருந்து தொடர்ந்து வந்த ஆக்கிரமிப்பைத் தடுக்கவென்று தெற்கில் தலை நகரை அமைத்ததால் காஞ்சீபுரம் பெருமை பெற்றது.
- சோழர்காலக் கோவில்களில் காணப்படும் கலைப்பொக்கிஷங்கள் யுனெஸ்கோவினால் உலகப் புராதனச்சின்னங்களாக அறிவிக்கப்பட்ட அனைத்து சின்னங்களும் தஞ்சையைச் சுற்றிலும் உள்ள இடங்களாகும்.
- 12ஆம் நூற்றாண்டில் இரண்டாம் இராஜராஜ சோழனால் கட்டப்பட்ட ஐராவதேஸ்வரர் கோவில் வாயிலாகத்தான் தாராசுரம் புகழ் பெற்றது

## 13.8 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பாடப் பயிற்சி

### சிறிய விடைகளுக்கான வினாக்கள்

1. மாமல்லபுரம் யாருடைய ஆட்சிக் காலத்தில் பெருமை பெற்றுத?
2. தஞ்சாவூர் வளர்ச்சியில் சோழர்களின் பங்கு என்ன?
3. பல்லவர்களுக்குப் பிறகு காஞ்சீபுரம் எந்த வழிகளில் பல்வேறு ஆட்சிகளின் கீழ் நடாத்தி வரப்பட்டது?

### பெரிய விடைகளுக்கான வினாக்கள்:

1. மகாபலிபுரத்தின் கட்டிடக்கலைச் சிறப்பை விளக்கவும்
2. 1869 ல் தஞ்சாவூர்- தமிழக வரலாற்றில் இடம்பெற்றிருந்த நிலை என்ன?
3. ஐராவதேஸ்வரர் கோவிலில் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு சிற்பங்களைக் குறித்து விளக்கமாகக் கூறவும்.



ncs_t.indb 188 3/1/2019 8:35:42 AM

# அலகு 14 தமிழரின் கலாச்சார பாரம்பரிய அழியாச் சின்னங்கள்

குறிப்பு

## அமைப்பு

14.0 அறிமுகம்
14.1 கற்றலின் நோக்கங்கள்
14.2 கங்கை கொண்ட சோழபுரம்
 14.2.1 கட்டிடக் கலை
14.3 சித்தன்னவாசல்
14.4 பிள்ளையார்ப்பட்டி
14.5 குடுமியான்மலை
14.6 மதுரை
14.7 இராமேஸ்வரம்
14.8 திறன் அடைவுகளைப் பரிசோதிக்கும் வினா-விடை
14.9 கட்டுரைச் சுருக்கம்
14.10 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பாடப் பயிற்சி

## 14.0 அறிமுகம்

தமிழகத்தை ஆண்டு வந்த பல்வேறு மன்னர்கள் வருங்காலச் சந்ததியினருக்காக விட்டுச் சென்ற அழியாச் செல்வங்கள் இந்த கலைக் கோவில்களும் பண்பாட்டைப் பறைசாற்றும் கலை நயம் மிக்க இடங்களும்தான். இவற்றின் மூலம் பண்டைய தமிழரின் பாரம்பரியம் கலை கலாச்சாரம் பக்தி பொருளாதாரம் வாழ்க்கைமுறை இவை யாவும் நமக்கு கண்கூடாகக் காட்சி அளிக்கும் வரலாற்றுச் சாட்சிகள். இந்த வரலாற்றுச் சான்றுகள் மூலம் நாம் அடைந்த அழியாப் புகழ் மற்றும் நம் கலாச்சாரத் தொன்மை இவற்றை நேரிடையாகப் பதிவு கொள்ள இயலுகிறது. இந்தச் சின்னங்கள் வெறும் கட்டிடங்கள் அல்ல. அவை எல்லாம் சரித்திரம் பேசும் பாடம் புகட்டும் வரலாற்று உண்மைகள். கலைக்களஞ்சியங்கள்

அக்கால மன்னர்களின் கலை நயம் அவர்களின் ஆட்சிச் சிறப்பு பெருமை ஆண்டுவந்த எல்லைகள் வென்று வந்த நாடுகள் தினவெடுத்த தோள்களின் வலிமை வல்லமை சமுதாயக் கண்ணோட்டம் மக்கள் நலனில் ஆர்வம். இயல் இசை நாடகம் இலக்கியம் இவை எல்லாம் சேர்ந்து வந்த வரலாற்று ஓட்டத்தில் கடைந்து எடுத்த அமிழ்தம்தான் இந்த கலைக்கூடங்கள். விலை மதிப்பற்றவை தமிழர் பண்பாட்டின் நிரந்தர கலைப் பொக்கிஷங்கள்.



ncs_t.indb 189 3/1/2019 8:35:42 AM

வருங்கால சந்ததியினருக்கு அக்கால மன்னர்களின் செய்திகளையும இந்த பொக்கிஷங்கள் தெரிவிக்கின்றன.



சரித்திர உண்மைகளைக் காட்டிலும் அதிக அளவில் நாம் இதன் மூலம் பயிலுவது கலை நயம் மற்றும் சிறப்புமிக அமைந்துள்ள கலைக்கூடங்கள் மற்றும் சிற்பங்கள் கட்டிடக் கலை மற்றும் சிற்பக் கலைக்கு ஒரு அளவுகோலாகவும் எடுத்துக்காட்டாகவும் அமைந்துள்ளது அளப்பரியது.

முந்தைய அலகுகளில் நீங்கள் மகாபலிபுரம் காஞ்சிபுரம் தஞ்சாவூர் மற்றும் தாராசுரம் ஆகிய கலைக் கூடங்களைப் பற்றிக் கற்றீர்கள்.

இந்த அலகு உங்களுக்கு கங்கைகொண்ட சோழபுரம் சித்தன்னவாசல் பிள்ளையார்ப்பட்டி குடுமியான்மலை மதுரை மற்றும் இராமேஸ்வரம் குறித்த கலை மற்றும் பண்பாடு நயங்களை விளக்குகிறது.

## 14.1 கற்றலின் நோக்கங்கள்: இந்த அலகின் மூலம் நீங்கள் அடைவது:

- தமிழ் நாட்டின் கலாச்சார பாரம்பரியத்தைப் பற்றி ஒரு கண்ணோட்டம்
- பல்வேறு இனங்களின் பல்வேறு இடங்களில் காணப்பட்ட பாரம்பரியம் மற்றும் கலாச்சாரம குறித்த விவாதம்
- தமிழர் கலாச்சாரத்திற்கு பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு இனங்களின் காணிக்கை

## 14.2 கங்கை கொண்ட சோழபுரம்:

தமிழ் நாட்டில் சோழர்களின் ஆட்சி சுமார் 250 ஆண்டுகளுக்கு நடைபெற்றது. அவர்களுடைய காலத்தில் சோழர்கள் வடக்கே அதிக அளவில் வெற்றியை நிலைநாட்டி உச்சக்கட்டத்தில் இருந்தார்கள். போர்களின் மூலம் கிடைத்த செல்வங்கள் விண்ணை எட்டின. ஒரு போரில் இராசேந்திர சோழன் கங்கை நீரைத் தங்கக் குடத்தில் கொண்டு வந்து அதைப் பொன்னேரியில் “சோழகங்கை” என்று கலந்து கொண்டாடினான். இராசேந்திர சோழன் “கங்கை கொண்ட சோழன்” என்ற பட்டப் பெயர் பெற்றது இந்த வைபவத்தில் தான்.

கங்கைகொண்ட சோழபுரம் ஒரு கலைத்திறன்மிக்க அலாதியான படைப்பாகும். இந்த எழில்மிக்க கோவில் தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயத்திற்கு அடுத்தபடியாக அமைந்துள்ள சோழர்காலக் கலைச்சின்னமாகும். இராசேந்திர சோழன் இந்த ஆலயத்தை பிரகதீஸ்வரர் ஆலயத்திற்கு இணையாக வாழ்நாளிற்கு அப்பாற்பட்ட சின்னமாக அமைக்க ஆசைப்பட்டதில் வியப்பில்லை.

கங்கைகொண்ட சோழபுரம் தஞ்சாவூரில் கி.பி.11ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இராசேந்திரசோழனால் கட்டப்பட்டது. இவர் ராஜராஜசோழனின் மகனாவார்.



ncs_t.indb 190 3/1/2019 8:35:42 AM

**குறிப்பு**

கி.பி.1025 ஆம் ஆண்டில் வெற்றி வாகையுடன் வடக்கிலிருந்து திரும்பி வந்த இராசேந்திர சோழன் இந்த "கங்கை கொண்ட சோழேச்சரம்" கோவிலை உருவாக்கி அதில் தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய சிவ லிங்கம் ஒரு கலைச்சின்னமாக விளங்குகிறது.

"கங்கை கொண்ட சோழேச்சரம்" மற்றும் சோழகங்கை இராசேந்திர சோழனின் வெற்றியைக் கொண்டாடும் நினைவுச்சின்னங்களாகும்.

கங்கைக் கரையில் சோழர்களின் புலிக் கொடியைப் பறக்கவிட்ட தமிழரின் வீர சாகஸம் கங்கைகொண்ட சோழபுரத்தின் வெற்றிச்சின்னத்தின் மூலம் வெளிப்படுகிறது. தஞ்சையை மிஞ்சி சுமார் 256 வருடங்களுக்கு சோழ நாட்டின் புதிய தலை நகராக விளங்கிய இந்த நகரம் கலிங்கத்துப்பரணி ஒட்டக்கூத்தர் ஜெயம்கொண்டார் மூவருலாவில் வெகுவாகப் புகழப்படுகிறது. இந்த நகரம் இடைக்கால சோழர்களின் கலை நயத்தைக்காட்டும் மிகப் பிரும்மாண்டமான எழில் ஓவியங்காளாகத் திகழ்கின்றன.

சிவபெருமானின் 4 மீட்டர் உயரமுள்ள சிலையினை அடக்கியுள்ள இறைப்புனித இடமானது இரண்டு சுவர்களால் சூழப்பட்டது. அரசகுலத்தினருக்கான தனிப்பட்டவணங்குமிடம் இந்த இரண்டு சுவர்களுக்கிடையில் காணப்பட்டது. இந்த வாயிலில் அழகிய சரஸ்வதி எழுந்தருளியுள்ளாள்.

சாளுக்கியரின் கலை நயம் இந்தக் கோவில்களில் "சூர்யபிதா" "நவக்ருஹா" போன்றவை மூலம் வெளிப்படுகின்றன.

இக் கோவிலின் நீளம் 600 அடியும் அகலம் 450 அடியுமாகும். சுவர்கள் எல்லாம் கற்களால் உருவாக்கப் பட்டவை.

சோழ சாம்ராஜ்யத்தின் வீர தீரச் செயல்களை செப்புப் பட்டயங்களின் மூலமாக கோவிற் சுவர்களின் மேல் பறைசாற்றப்பட்டுள்ளன.

இந்தக் கோவில் பெருமளவில அன்னியர் படையெடுப்பினால் சீர்குலைந்தாலும் அடிப்படைக் கலை நயமும் கட்டிடக் கலைச் சிறப்பும் வெகுவாகப் பாதிக்கப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கங்கை கொண்ட சோழேச்சரம் சிற்பக்கலைஞர்களுக்கும் சிற்பிகளுக்குமான ஒரு நினைவு அஞ்சலி எனக் கொள்ளலாம். இதன்மூலம் அவர்கள் ஒரு பிரும்மாண்டமான கலை வாழ்க்கைச் சாசனத்தை விட்டுச் சென்றிருக்கிறார்கள் வருங்காலத்தினருக்காக.

## 14.2.1 கட்டிடக் கலை

இந்தக் கட்டிடக் கலை நயம் அனைவரையும் வியப்பிலாழ்த்தும் வகையில் அமைந்துள்ளது. 9 அடுக்கு விமானம் 185 அடி உயரத்தில் அமைக்கப் பட்டுள்ளது. கிழக்குத்திசையை நோக்கியுள்ள இந்தக் கோவில் எண்ணற்ற சிற்பங்களையும் ஓவியங்களையும் உள்ளடக்கியது. 54.86 மீட்டர் உயரம் கொண்ட இந்தக் கோவில் கட்டிடம் தஞ்சை பிரகதீசுவரர் ஆலய அமைப்பை

ஒத்து நிற்கின்றது. இந்தக் கோவிலில் காணப்படும் அனைத்துக் கலைகளும் சோழர்காலத்தைச் சேர்ந்தவை எனினும் வடக்கின் சாயல் கோபுர விமானங்களில் செதுக்கப்பட்ட சிற்பங்களிலும் ஓவியங்களிலும் நுண்ணியதாகத் தென்படும்.

**குறிப்பு**

சோழர்காலக் கட்டிடக்கலை எளிமையானதானாலும் நுண்ணியமாக கருங்கற்களின் மேல் செதுக்கப் பட்டவையாகும். இந்தக் கோவிலில் செழுமையான மற்றும் நுண்ணியமான கலை நயமிக்க சிற்பங்களும் ஓவியங்களும் சோழ மரபில் வந்த கலை நுட்பம் எனலாம். கங்கைகொண்ட சோழபுரத்தில் சோழ காலச் சிற்பங்கள மனதைக் கவரும் வண்ணம் சுவர்களையும் மேற்கூரைகளையும் அலங்கரிக்கின்றன. சிற்பக்கலைஞர்களின் செய் நேர்த்தியினை நாம் உணரும் வண்ணம் நடனமாடும் நடராசர் மற்றும் அமைதி தவழும் சரசுவதி சிற்பங்கள் காட்சி அளிக்கின்றன. எனினும் அனைத்து சோழர் கோவில்களிலும் காணப்படும் சிற்பங்களின் சிறப்பு இங்கேயும் காணப்படுகிறது. பலரின் கவனத்தைக் கவரும் சிவ-பார்வதி அர்த்த நாரீசுவரர் மற்றும் கணேசர் சிலைகள் இதன் பிரதிபலிப்புகளாகக் கொள்ளலாம். இந்தக் கோவிலில் சோழ நாட்டின் கலை நயத்தில் உருவான பிரும்மாண்டமான வெண்கலச்சிலைகளும் இடம் பெற்றுள்ளன.

இந்தக் கோவில் முதலாம் இராசேந்திர சோழன் காலத்தில் தொடங்கிய கலை மற்றும் கட்டிடக் கலை சோழகால கற் சிற்பங்களைச் சித்தரிக்கும் ஒரு வாழும் வரலாறு எனலாம். இந்தக் கலைக் களஞ்சியத்திலும் அருகாமையிலுள்ள கிராமங்களிலும் ஆந்திரா கர்நாடகம் வங்காளம் போன்ற இடங்களிலிருந்து வென்று குவித்த போர் விருதுகள் சிற்பவடிவில் கண்களைக் கவர்கின்றன.

முக்கியமாக சோழர் காலக் கோவில்களிடையே இந்தக் கோவில் ஒரு சிறப்பு அந்தஸ்தைப் பெற்றுள்ளது அதன் காரணம் எழில் மிகு சிற்பங்களும் அழகிய வேலைப்பாடும்தான் எனலாம்.

### உங்களுடைய முன்னேற்றத்தைப் பரிசோதியுங்கள்

1. கங்கைகொண்டான் என்ற பட்டப்பெயர் இரசேந்திர சோழனுக்கு எதனால் சூட்டப்பட்டது?
2. கங்கைகொண்ட சோழபுரம் யாரால் எப்போது கட்டப் பெற்றது?

## 14.3 சித்தன்னவாசல்

இது மலையைக் குடைந்து உண்டாக்கப் பட்ட குகைக் கோவில். சுமார் 230 அடி உயரமான மலை நடுவே வட-தென் திசையாக அமைந்துள்ள இந்தக் கலைக் கோவில் தொல் பொருள் ஆராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட புராதன நினைவுச்சின்னங்களைக் கொண்டது. சமணர்களின் குகை இருப்பிடங்களை (ஏழடிப்பட்டம்) இந்த மலைக் கோவிலின் அடிவாரத்திலிருந்து அணுக வேண்டும். கோவிலை அடைய சில நூறு படிக்கட்டுக்கள் அமைக்கப்

குறிப்பு

பெற்றிருக்கின்றன. கட்டிடக்கலை வடிவமைப்புக்களும் நுட்பங்களும் சித்தன்னவாசல் குகையிலமைந்துள்ள சிற்பங்கள் மற்றும் ஓவியங்கள் மூலம் வெளிப்படுகின்றன. சித்தன்னவாசல் கிராமம் கி.மு.முதலாம் நூற்றாண்டிலிருந்து கி.பி பத்தாம் நூற்றாண்டு வரையிலுள்ள கால கட்டத்திலான வரலாற்றில் இடம் பெற்றுள்ளது. அப்போது சமணர்களின் ஆதிக்கம் அதிகரித்த காலம்.

குகைக் கோவில் பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி 580-630) காலத்தில் சரித்திரத்தில் இடம் பெறுகிறது. அப்போது பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மன் சமண மதத்தில் இணைந்திருந்த காலம். சமணத்திலிருந்து சைவத்திற்கு மதம் மாறிய நிகழ்ச்சி பின்னாளில் நடைபெற்ற ஒன்றாகும். எனினும் கல்வெட்டுக் குறிப்புக்களில் குகைக்கோவிலின் புனர் வடிவமைப்பு பாண்டிய மன்னன் மாரன் சேந்தன் (கி.பி.654-670) அல்லது அரிகேசரி மாரவர்மன் (கி.பி.670-700) காலத்தில் ஏற்பட்டதாகச் சொல்லப் படுகிறது. சமணரின் ஏழடிப்பட்டங்கள் சமணர் கால வழிபாட்டு ஸ்தலமாக கி.பி 9ம் நூற்றாண்டு வரை இருந்து வந்தன எனச் சொல்லப்படுகிறது. ஆயினும் இந்த புராதனச் சின்னங்கள் அமைந்துள்ள புதுக்கோட்டைப் பகுதிகளில் பெருங்கற்கால புதை தாழிகள் கண்டெடுக்கப் பட்டுள்ளதாகவும் அறிகிறோம்.

அங்கே வரையப்பட்டுள்ள ஓவியங்களில் அழகிய தாமரைப் பூக்களைக் கொண்ட தாமரைக் குளம் குளத்திலிருந்து தாமரைகளைப் பறிக்கும் மக்கள் கூட்டம் இரண்டு நாட்டியக் கலைஞர்கள் வெள்ளை நிற அல்லி ஆம்பல் மலர்கள் மீன்கள் வாத்துக்கள் எருமை மாடுகள் ஆனைகள் அனைத்தும் இடம் பெற்றுள்ளன. இதைத்தவிர 9ஆம் மற்றும் 10 ஆம் நூற்றாண்டின் கல்வெட்டுக்களும் இதில் இடம் பெற்றுள்ளன. அர்த்தமண்டபத்தின் மேற்கூரையை அலங்கரிக்கும் 7ஆம் நூற்றாண்டின் சுவர் சித்திர வேலைப்பாடுகளும் சிறப்பானவை எனலாம். இந்த குகைக் கோவில் முதலில் கட்டப்பட்டபோது கர்ப்பகிரகமும் அர்த்தமண்டபமும் மட்டுமே இருந்தன. பாண்டியரால் கட்டப் பெற்ற முகமண்டபம் இடிந்துவிட்டபடியால் 20ஆம் நூற்றாண்டில் புதுக்கோட்டை மன்னர் ஆங்கிலேய ஆட்சித்தலைவரின் ஆலோசனையின் பேரில் ஒரு புதிய முகப்பைக் கட்டினார். குடுமியான்மலை மண்டப இடிபாடுகளிலிருந்து கொண்டு வந்த சதுரமான நுழைவாயில் இங்கே உபயோகப் படுத்தப்பட்டது.

## 14.4 பிள்ளையார்ப்பட்டி

பிள்ளையார்ப் பட்டி பிள்ளையார் கோவில் மலையைக் குடைந்து உருவாக்கிய பழங்கால குகைக் கோவிலாகும். சிவகங்கை மாவட்டத்தில் இருக்கும் இந்தக் கோவில் பிள்ளையாருக்கான சிறப்புக் கோவில். கற்பக விநாயகர் எனப் பெயர் பெற்றிருக்கும் பிள்ளையாருடன் சிவன் மற்றும் கடவுளர்களும் இந்தக் கோவிலில் வீற்றிருக்கிறார்கள். கல்வெட்டுக்களில் காணப்பட்ட ஆகம எழுத்துக்கள் மூலம் இந்தக் கோவில் கி.மு 1091-1238 காலத்தைச் சேர்ந்த



ncs_t.indb 193 3/1/2019 8:35:42 AM

ஒன்றாகும் என்று தெரிகிறது. இந்தக் கோவில் முற்காலப் பாண்டியர்களால் கட்டப் பெற்றது. குகையில் பிள்ளையார் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இதே போல திருவீசர் (சிவன்) சிலையும் பாறையில் செதுக்கப்பட்ட சிற்பமாகும்.

குறிப்பு

இந்தக் குகைக் கோவில் சுமார் 2500 வருடங்களுக்கு முற்பட்டது. சுமார் 14 கற்சிலைகள் (கி.மு500 முதல் கி.பி.1284 வரையிலான) இவற்றின் மூலம் பிள்ளையார்ப்பட்டியின் பண்டைய காலப் பெயரான எக்கட்டூர் திருவீண்கைக்குடி மருதங்குடி இராஜநாராயணபுரம் என்று தெரியவருகிறது.

பிள்ளையார்ப் பட்டி பிள்ளையாரும் சிவ லிங்கமும் கல்லில் வடிக்கப்பட்டன. இதை வடித்த சிற்பி எக்கட்டூர் கூன் பெருபரனன் 2 முதல் 5 ஆம் நூற்றாண்டு வரை உபயோகத்திலிருந்த தமிழ் மொழியில் தன்னுடைய பெயரைப் பொறித்துள்ளார். 4ஆம் நூற்றாண்டில் இந்தச் சிற்பங்கள் வடிக்கப் பட்டிருக்கவேண்டும் என்று நம்பப்படுகிறது.

இந்தக் கோவிலில் வினாயகர் சன்னதி குகையில் உள்ளது. பிள்ளையார் வடக்குப் பார்த்து 6 அடி உயரமான உருவத்தில் வலம்புரி வினாயகராகக் காட்சி அளிக்கிறார். இங்கே (திருமணம் நல்கும்) கார்த்தியாயினி (சந்ததி நல்கும்) நாகலிங்கம்(சகல சௌபாக்கியங்களையும் நல்கும்) பசுபதீஸ்வரர்.

### உங்களுடைய முன்னேற்றத்தைப் பரிசோதியுங்கள்

3. சித்தன்னவாசல் புதிய தாழ்வாரம் எதற்காக யாரால் கட்டப்பட்டது?
4. பிள்ளையார்ப்பட்டி கோவில் எங்கே அமைந்துள்ளது?

## 14.5 குடுமியான்மலை

புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள இந்த குடவரைக் கோவில் தெய்வம் சிககிரீஸ்வரர் (சிவன்) குகைக் கோவில் மேலக்கோவில் என்று அழைக்கப் படுகிறது. இது ஒற்றைக் கல் கொண்டு வடித்த கோவிலாகும். கி.மு 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்தக் கோவிலின் திருமூலத்தானம் மற்றும் மண்டபம் 8 ஆம் நூற்றாண்டில் அகழ்ந்து எடுக்கப் பட்டது.

சிவன் பார்வதி கடவுளர்களை வணங்கும் நிலையிலுள்ள 63 நாயன்மார்களின் உருவங்கள் ஒரு கற்பாறையில் வடிக்கப் பட்டுள்ளது. சமணர்களின் கல்வெட்டுக்களும் இங்கே தென் மேற்காக உள்ள மலைச்சரிவில் பரவிக் கிடப்பதால் இந்தக் கோவில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிலிருந்தே சரித்திரத்தில் இடம் பெற்றுள்ளது என்று நம்புகிறோம்.

ஏழு தந்திகளுடைய வாத்தியமான பரிவாதினி யின் இசைக் குறிப்புக்கள் குறித்து குகைக்கோவிலின் வலது பக்கத்தில் கல்வெட்டுக்கள் காணப் படுகின்றன. இதைத் தவிர நாயக்கர் கால சிற்ப வேலைப்பாடுகளும் மகாமண்டபத்தில் இடம் பெற்றுள்ளன.

## 14.6 மதுரை



பண்டையகாலத்தில் மதுரை கதம்பவனம் என்று பெயர் பெற்று கானகமாக இருந்தது. கதம்ப மரத்தின் கீழே இந்திரன் சுயம்பு லிங்கத்திற்குப் பூஜை செய்வதைப் பார்த்த ஒரு வழிப்போக்கன் அரசன் குலசேகர பாண்டியனிடம் தெரிவித்தான். அரசன் அங்கே மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலைக் கட்டி அதைச் சுற்றிலும் தாமரை வடிவில் அமைத்த நகரம்தான் மதுரை.

இன்று மாவட்டத்தின் தலை நகராக விளங்கும் மதுரை சரித்திரப் புகழ் வாய்ந்த ஒன்றாகும். மதுரை தெய்வீக அருள் கொண்ட நகரமாகக் கருதப்படுகிறது. ஈசனின் திருவிளையாடல்கள் அரங்கேற்றப்பட்ட நகரம் மதுரை.முச்சங்கம் போற்றிப் புகழ் பரப்பித் தமிழை வளர்த்த நகரம் மதுரை. கற்புக்கரசி கண்ணகி எரித்த நகரம் மதுரை. இயல் இசை நாடகம் இலக்கியம் அனைத்தும் இன்று தமிழருக்கு மதுரையினால் கிடைத்த பயன். வைகைக் கரையோரத்தில் நிமிர்ந்து நிற்கும் இந்த மதுரை “கிழக்கத்திய ஏதென்ஸ் நகரம்” என்ற பெயர் பூண்டது. மதுரையின் தொடக்கம் சங்ககாலத்திலாம். சங்கப் பலகையும் பொற்றாமரைக் குளமும் தமிழுக்கும் தமிழருக்கும் என்றென்றும் இணைபிரியா சொந்தங்கள்! சங்ககாலம் தமிழகத்தின் பொற்காலமாக இன்றும் கருதப்படுகிறது.

சிவபெருமான் மதுரையின் பெயர் சூட்டலுக்கு வந்து மதுராபுரி என்று பெயரிட்டு வாழ்த்தியதாக ஐதீகம். மதுரை நகரம் இந்தியப் பெருங்காவியங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக இராமாயணம் கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம் சிலப்பதிகாரம் போன்றவைகளில் மதுரைக் குறிப்புக்கள் காணப் படுகின்றன.

பாண்டிய மன்னர்களின் தலை நகராக இருந்தது மதுரை. கிமு 302 ல் மெகஸ்தனிஸ் மதுரைக்கு வந்தார். இதைத் தொடர்ந்து மார்கோபோலோவும் இபின் பதூதாவும் மதுரையைக் குறித்து தத்தம் பயணக் குறிப்புக்களில் பதிவு செய்துள்ளனர்.

சோழர்கள் கி.பி.10 ஆம் நூற்றாண்டில் மதுரையைக் கைப்பற்றினர். மீண்டும் 13ஆம் நூற்றாண்டில் மதுரை மீண்டும் பாண்டியர் வசமானது. பாண்டியர்களின் நல்லாட்சியில் மதுரை தழைத்தது.

சிலப்பதிகாரத்தின் நிலைக் களன் மதுரை. பாண்டிய மன்னன் தீர்ப்பில் தவறியதற்காக உயிர் நீக்கிறான். கண்ணகி தன் கற்பின் கனலால் மதுரையைத் தீக்கிரையாக்குகிறாள்.

1311ல் தில்லி சுல்தானின் தளபதி மாலிக் கபூர் மதுரை நகரைச் சூறையாடி செல்வங்களை தில்லிக்குக் கவர்ந்து சென்றான். பல்வேறு படைஎடுப்புக்களினால் மதுரை தன் மங்கலம் இழந்தது. இதைத் தொடர்ந்து 1323ல் பாண்டிய நாடு தில்லி சுல்தானுக்குக் கீழ் கொண்டுவரப்பட்டது.



ncs_t.indb 195 3/1/2019 8:35:43 AM

குறிப்பு

1335ல் மதுரை சுல்தானாகத் தன்னைப் பிரகடனப் படுத்திக் கொண்டான் ஜலாலுத்தீன் அசன்ஷா என்னும் தில்லி சுல்தானின் ஆளுநர். மதுரை தன் பொலிவை இழந்து தன் மக்களின் அவலத்தைக் கண்ணீருடன் கண்டு சுமார் 46 ஆண்டுகள் தவித்தது.

விஜய நகரப் பேரரசின் வாரிசான குமார கெம்பணா 1371ல் மதுரையை மீட்டு இழந்த பொலிவை நல்கினார்.

1530ல் நாயக்கர்கள் மதுரையில் ஆட்சியை நிறுவினர். திருமலை நாயக்கர் (1623-1659) இவருடைய காலத்தில் மதுரையின் வளர்ச்சி விண்ணை எட்டியது. மீனாட்சிஅம்மன் கோவில் ராஜகோபுரம் திருமலை நாயக்கர் மஹால் புது மண்டபம் போன்றவை இவர் ஆட்சியில் மதுரைக்குக் கிடைத்த விலை மதிப்பற்ற பொக்கிஷங்கள்

1781ல் மதுரை கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியின் கீழ் வந்தது. மதுரையின் முதல் ஆட்சியராக வந்தார் ஜார்ஜ் ப்ரொக்டெர்.

தமிழ் நாட்டில் மதுரை இன்று ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்கிறது. இந்தியாவில் அதிக அளவில் மக்கள் வசிக்கும் 25 நகரங்களில் மதுரையும் ஒன்று. மதுரையைச் சுற்றிலும் மலை வாசஸ்தலங்கள் இருப்பதால் சுற்றுலா நகரமாகவும் உள்ளது. மதுரை மல்லிகை உலகப் பிரசித்தி பெற்றது.

பண்டைய காலத்திலிருந்தே மதுரையில் ரோமானியருடன் வாணிபம் மற்றும் கி.மு3ஆம் நூற்றாண்டு காலத்தில் மதுரையில் மக்கள் வசித்து வந்ததற்கான ஆதாரங்கள் மணலூர் அருகே நடந்த அகழ்வாராய்ச்சியின் மூலம் தெரியவருகிறது.

மதுரை பல்வேறு எழுச்சிகளையும் வீழ்ச்சிகளையும் சந்தித்துள்ளது. இது தமிழுக்கும் தமிழருக்கும் என்றும் அண்மையில் இருக்கும் என்பது திண்ணம்.

### உங்களுடைய முன்னேற்றத்தைப் பரிசோதியுங்கள்

5. குடுமியான்மலை குடவரைக் கோவிலின் சிறப்பு என்ன?
6. மதுரை நகரம் எப்போது விஜய நகர மன்னர்களின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது?

## 14.7 இராமேஸ்வரம்

இராமேஸ்வரம் பாம்பன் தீவின் ஒரு பகுதியாக உள்ள இந்துக்களின் புண்ணியத்தலமாகக் கருதப்படுகிறது. இலங்கையின் மன்னார் தீவிலிருந்து 40 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. காசிக்குச் சென்று வழிபாடுகளைச் செய்யும் இந்துக்கள் இராமேஸ்வரத்திற்கு வந்து அந்த வழிபாடுகளை முடித்துக்



ncs_t.indb 196 3/1/2019 8:35:43 AM

கொள்வது ஒரு புனிதப் பயணமாகக் கருதப்படுகிறது. நான்கு புண்ணிய தலங்களுள் ஒன்றாக இராமேஸ்வரம் கொள்ளப்படுகிறது.

**குறிப்பு**

காசிக்குப் புண்ணியப் பயணம் செய்யும் இந்துக்கள் இராமேஸ்வரத்திற்கும் பயணம் மேற்கொண்டு அந்த யாத்திரையை முழுமை செய்கிறார்கள். அதே போல சார் தாம் (4 தலங்கள்) பத்ரிநாத் பூரி துவாரகை என்ற வரிசையில் இராமேஸ்வரம் சைவ வைணவர்களுக்கு முக்கிய தலமாக விளங்குகிறது

இந்துக்கள் 4 திசைகளில் உண்டான தலங்களைத் தரிசித்து தத்தம் இறைக் கடன்களைத் தீர்க்க "சார் தாம்" (நான்கு புண்ணியத்தலங்கள்) யாத்திரை மேற்கொள்கின்றனர்.

| | | |
|---|---|---|
| பத்ரிநாத் | பத்ரிநாதர் கோவில் | வடக்கில் |
| பூரி | ஜகன்னாதர் கோவில் | கிழக்கில் |
| துவாரகை | துவாரகாதீசன் கோவில் | மேற்கில் |
| இராமேஸ்வரம் | ராமனாதசுவாமி கோவில் | தெற்கில் |

இந்தப் பயணம் புண்ணியப் பயணமாகக் கொள்ளப் படுகிறது. சைவ வைஷ்ணவ வேறுபாடு இல்லாமல் இந்தப் பயணம் நடக்கிறது.

வரலாற்றில் மராட்டியர்கள் தஞ்சையை ஆண்டபோது 1745 முதல் 1837 வரை பல சத்திரங்களை மயிலாடுதுறை மற்றும் இராமேஸ்வரம் போன்ற இடங்களில் அமைத்து அவற்றைக் கோவில்களுக்குக் காணிக்கையாக்கினர்.

இராமேஸ்வரத்தைச் சுற்றி 64 தீர்த்தங்கள் முக்கியமாகக் கருதப்படுகிறது. இவற்றில் 22 குளங்கள் ராமனாதசுவாமி கோவிலுக்கு அருகில் உள்ளன. முக்கியமான தீர்த்தங்கள் கீழ்வருமாறு

1. அக்னி தீர்த்தம்
2. வில்லூண்டி தீர்த்தம்
3. அனுமான் தீர்த்தம்
4. சுக்ரீவ தீர்த்தம்
5. லஷ்மண தீர்த்தம்

ராமனாதசுவாமி கோவில் 12 ஜ்யோதிர்லிங்கங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்தக் கோவில் 275 பாடல் பெற்ற தலம் என்று பெயர் பெற்றது.

12ஆம் நூற்றாண்டில் பாண்டியர்களால் எழுப்பப்பட்ட 25 அடி உயர நிர்மாணங்கள். தூண்கள் நாயக்கர் பாணியில் மதுரை மீனாட்சி கோவிலில் உள்ள மாதிரி எழுப்பப்பட்டுள்ளன.

17ஆம் நூற்றாண்டில் சேதுபதி வம்சம் இந்தக் கோவிலுக்காக அதிக அளவில் செலவு செய்து சிதிலமடைந்த சொக்கட்டான் மண்டபம் போன்றவை பழுது பார்க்கப்பட்டன.

இலங்கை அரசன் பராக்ரம பஹு (1153-1186) இந்தக் கோவிலின் கர்ப்பக்ருகத்தை அமைத்தார்.

குறிப்பு

இராமாயண நாயகன் இராமன் இராமேஸ்வரத்திலிருந்து ஒரு பாலம் அமைத்து அதன் மூலம் இலங்கை சென்று இராவணனிடமிருந்து சீதையை மீட்ட காவியம் நடந்த இடம் இங்குதான்.

மக்கள் அதிக அளவில் மீன் பிடித்தலிலும் சுற்றுலாத் தொழிலிலும் ஈடுபட்டுள்ளனர்.

### உங்களுடைய முன்னேற்றத்தைப் பரிசோதியுங்கள்

7. இந்துக்களுக்கு இராமேஸ்வரம் எந்த அளவில் முக்கியமான தலம்?
8. பராக்ரம பஹு என்பவர் யார்? இராமேஸ்வரத்தின் வளர்ச்சியில அவர் பங்கு என்ன?

## 14.8 திறன் அடைவுகளைப் பரிசோதிக்கும் விடைகள்

1. இராசேந்திர சோழன் வட நாட்டில் வெற்றி பெற்று தங்கக் குடத்தில் கங்கை நீரைக் கொண்டு வந்து பொன்னேரியை சோழகங்கா என்று புனிதமாக்கினார். இதனால் அவர் கங்கை கொண்டான் எனப்பட்டார்
2. கங்கைகொண்டசோழபுரம் 11ஆம் நூற்றாண்டில் தொடக்கத்தில் இராசேந்திர சோழனால் கட்டப் பெற்றது. இராசராசசோழனின் மகனும் அடுத்த மன்னனும் ஆவார்.
3. பாண்டியரால் கட்டப் பெற்ற முகமண்டபம் இடிந்துவிட்டபடியால் புதுக்கோட்டை மன்னர் ஆங்கிலேய ஆட்சியரின் ஆலோசனையின் பேரில் ஒரு புதிய முகப்பைக் கட்டினார்.
4. பிள்ளையார்ப்பட்டி பிள்ளையார் கோவில் தமிழ் நாடு, சிவகங்கை மாவட்டத்தில் உள்ளது.
5. 63 நாயன்மார்கள் சிவ பார்வதியை வழிபடும் காட்சியினை அருளும் சித்திரக்கல்வெட்டு இந்த குடுமியான்மலை குடவரைக்கோவிலின் சிறப்பு அம்சம் ஆகும்.
6. 1371ஆம் ஆண்டு தில்லி சுல்தான் துக்ளக்கின் வீழ்ச்சிக்குப் பின் மதுரை விஜய நகரப் பேரரசின் ஆளுகையின் கீழ் வந்தது
7. இந்துக்களுக்கு இராமேஸ்வரம் ஒரு முக்கியமான புண்ணிய தலம். காசிக்குப் புண்ணியப் பயணம் செய்யும் இந்துக்கள் இராமேஸ்வரத்திற்கும் பயணம் மேற்கொண்டு அந்த யாத்திரையை முழுமை செய்கிறார்கள். அதே போல சார் தாம் (4 தலங்கள்) பத்ரிநாத் பூரி துவாரகை என்ற வரிசையில் இராமேஸ்வரம் சைவ வைணவர்களுக்கு முக்கிய தலமாக விளங்குகிறது.



ncs_t.indb 198 3/1/2019 8:35:43 AM

8. பராக்ரம பஹு (1153-1186) இலங்கை அரசர். இராமேஸ்வரம் ராமனாதசுவாமி கோவிலின் கர்ப்பகிரகத்தை அமைத்துக் கொடுத்த பண்பாளர் இவர்.



## 14.9 கட்டுரைச் சுருக்கம்

- கலாச்சார பண்பாட்டு மையங்கள் வாழும் வரலாறு எனலாம். பல்வேறு அரசர்கள் பலவிதமான காலகட்டங்களில் நமக்காக விட்டுச்சென்ற கலைக் கோவில்கள் மற்றும் வரலாற்று சாட்சியங்கள்.
- அக்கால மன்னர்களின் கலை நயம் அவர்களின் ஆட்சிச் சிறப்பு பெருமை ஆண்டுவந்த எல்லைகள் வென்று வந்த நாடுகள் தினவெடுத்த தோள்களின் வலிமை வல்லமை சமுதாயக் கண்ணோட்டம் மக்கள் நலனில் ஆர்வம். இயல் இசை நாடகம் இலக்கியம் இவை எல்லாம் சேர்ந்து வந்த வரலாற்று ஓட்டத்தில் கடைந்து எடுத்த அமிழ்தம்தான் இந்த கலைக்கூடங்கள். விலை மதிப்பற்றவை தமிழர் பண்பாட்டின் நிரந்தர கலைப் பொக்கிஷங்கள்.
- கங்கை கொண்ட சோழேச்சரம் சிற்பக்கலைஞர்களுக்கும் சிற்பிகளுக்குமான ஒரு நினைவு அஞ்சலி எனக் கொள்ளலாம். இதன்மூலம் அவர்கள் ஒரு பிரும்மாண்டமான கலை வாழ்க்கைச் சாசனத்தை விட்டுச் சென்றிருக்கிறார்கள் வருங்காலத்தினருக்காக.
- பிள்ளையார்ப் பட்டி பிள்ளையார் கோவில் மலையைக் குடைந்து உருவாக்கிய பழங்கால குகைக் கோவிலாகும். சிவகங்கை மாவட்டத்தில் இருக்கும் இந்தக் கோவில் பிள்ளையாருக்கான சிறப்புக் கோவில். கற்பக வினாயகர் எனப் பெயர் பெற்றிருக்கும் பிள்ளையாருடன் சிவன் மற்றும் கடவுளர்களும் இந்தக் கோவிலில் வீற்றிருக்கிறார்கள்.
- மதுரை சரித்திரத்திலும் இன்றளவும் ஒரு பிரதான நகரம். வரலாற்று சாட்சியங்களுடன் இறையுணர்வு சான்றுகளும் அடங்கிய ஒரு பக்தி நகரம். அதிக அளவில் எழுச்சிகளையும் வீழ்ச்சிகளையும் கண்ட ஒரு தூங்கா நகரம்.
- இராமேஸ்வரம் ஒரு புண்ணிய தலம். சைவ வைணவரின் முக்கிய சமய சடங்குகளின் மையம்.

## 14.10 சுய மதிப்பீடு வினாக்கள் மற்றும் பாடப் பயிற்சி

### சிறிய விடைகளுக்கான வினாக்கள்:

1. கங்கைகொண்ட சோழபுரம் எப்படி கட்டப் பெற்றது?
2. பிள்ளையார்ப்பட்டி பிள்ளையார் கோவிலின் கட்டிடக்கலை நுட்பம் குறித்து எழுதுக

3. இராமேஸ்வரம் கோவில் கட்டுமானப் பணியில் பங்கேற்ற இலங்கை மன்னர்கள் குறித்து எழுதுக

## பெரிய விடைகளுக்கான வினாக்கள்

**குறிப்பு**

1. சித்தன்னவாசல் கோவிலின் கட்டிடக்கலை நுட்பம் குறித்து விளக்கவும்
2. மதுரை மாநகரின் முக்கியத்துவம் குறித்து விளக்கவும்
3. குடுமியான்மலை குடவரைக் கோவில் பற்றி விளக்கவும்



ncs_t.indb 200 3/1/2019 8:35:43 AM

எம்.ஏ. [வரலாறு]

# 321 12

# கி.பி 1336 ஆண்டு வரையிலான தமிழக வரலாறும் பண்பாடும்

முதற் பருவம்





## அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் A+(CGPA: 3.64) தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப் பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது

காரைக்குடி - 630003

தொலைநிலைக்கல்வி இயக்ககம்



ISBN 978-93-5338-511-8